# தொல்காப்பியம்
## உரைவளம்
# பொருளதிகாரம்

## செய்யுளியல் பகுதி-1

பதிப்பாசிரியர்
ஆ. சிவலிங்கனார்

# தொல்காப்பியம்-
# பொருளதிகாரம்

## செய்யுளியல் உரைவளம்

பகுதி-1

தொகுப்பும்குறிப்பும்:
ஆ. சிவலிங்கனார்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
டி. டி. டி. ஐ. அஞ்சல், தரமணி, சென்னை-600 113.

# தொல்காப்பியம்-உரைவளம்-
# வெளியீட்டுத் திட்டம்

வெளியீடு

## BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title | . | Tolkappiyam-Celyuliyal Part-I |
| Subject | : | Compilation of the Commentaries of Tolkappiyam Celyuliyal |
| Editor | : | A. Sivalinganar |
| Publisher & Copy right | : | International Institute of Tamil Studies C.I.T. Campus, Adyar, Chennai-113 |
| Publication No | : | 245 |
| Language | : | Tamil |
| Date of Publication | : | 1997 |
| Edition | : | First |
| Paper used | : | 16kg T.N.P.L. Super Printing |
| Size of the book | : | 21×14 cms |
| Printing Types used | : | 10pts. |
| No. of Copies | : | 1200 |
| No. of Pages | : | 232 |
| Price | : | Rs. 50/- |
| Printers | : | Chitra Printography, Chennai-600 014. |

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
தரமணி, சென்னை-600 113.

டாக்டர் ச. சு. இராமர் இளங்கோ
இயக்குநர்

# அணிந்துரை

'திங்களொடும் செழும்பரிதி தன்னோடும் விண்ணோடும்
உடுக்களோடும்

மங்குல் கடல் இவற்றோடும் பிறந்த தமிழுடன்
பிறந்தோம் நாங்கள்!'

என்று பாவேந்தர் பாரதிதாசன் தமிழனத்தின் பெருமையைப் பாடுவார்.

தமிழினத் தொன்மைக்குக் கட்டியங்கூறும் தொல்காப்பியம், எழுத்ததிகாரம் சொல்லதிகாரம் முதலியனவற்றிற்கு மட்டுமன்றி பொருளுக்கும் இலக்கணம் வகுத்த பெருமை உடையது. இதற்கு வெளிவந்த உரைகளே இதன் ஆழத்தையும், அகலத்தையும் வெளிக் கொணரும். எனவே தொல்காப்பியத்தின் பெருமையை எடுத்தியம்பும் வகையில் உரைவளம் எழுதும் திட்டப்பணிக்காகப் பேராசிரியர். அ. சிவலிங்கனார் அவர்கள் இந்நிறுவனத்தில் 1980-ஆம் ஆண்டு நியமிக்கப்பட்டார். அவருடைய முதல் திட்டப் பணி நூலான 'தொல்காப்பியச் சிறப்புப் பாயிர உரைவளம்' 27-9-80-இல் அப்போதைய, மதுரைக் காமராசர் பல்கலைக் கழகத் துணைவேந்தர் முனைவர் வ.சுப. மாணிக்கம் அவர்களால் வெளியிடப் பெற்றது.

தொடர்ந்து எழுத்ததிகாரத்திற்கும், சொல்லதிகாரத்திற்கும் அவர் எழுதிய உரைவளம் வெளிவந்தது. பொருளதிகாரத்தில், 1991-லும் கற்பியல் 1993-லும் பொருளியல் 1994-லும் களவியல் 2935-லும் 1996-ல் அவருடைய புறத்திணையியல் பகுதி-1, பகுதி-2, ஆகியன வெளிவந்தன.

தொல்காப்பிய உரைவளத் திட்டத்தின் 27-ஆவது வெளியீடாகச் செய்யுளியல் முதல் பகுதி எனும் இந்நூல் இப்போது வெளிவருகிறது.

பேராசிரியர் அ. சிவலிங்கனார் அவர்கள் நுண்மான் நுழை புலம் பெற்ற பெரும் புலவர். பழம்பெரும் தொல்காப்பிய உரையாசிரியர்களான இளம்பூரணர், நச்சினார்க்கினியர் ஆகியோரது உரைகளையும். சோம. இளவரசு அவர்களது உரையையும் தொகுத்து அவற்றுடன் தம்முடைய உரையினையும் இணைத்து இந்நூலினை அமைத்துள்ளார். தொல்காப்பியத்தில் ஆய்வினை மேற்கொண்டு முனைவர் பட்டம் பெற்ற முனைவர். சி. இலக்குவனார் அவர்களின் ஆய்வுக் குறிப்புகளையும் தக்க இடத்தில் மேற்கோள் காட்டியுள்ளார்.

இவரது தொல்காப்பியப் புலமையைப் பாராட்டும் முகத்தான் 4, 5, 6-8-97-களில் நடைபெற்ற 'தொல்காப்பியம் இலக்கிய கோட்பாடுகள்' தேசியக் கருத்தரங்கின்போது நிறுவனம் அவருக்குத் 'தொல்காப்பியச் செம்மல்' என்ற விருது வழங்கிப் பாராட்டிச் சிறப்பித்தது.

இந்நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருகின்ற தமிழ் ஆட்சிமொழி பண்பாடு மற்றும் இந்து சமய அற நிலையத்துறை அமைச்சர் நிறுவனத் தலைவர் முனைவர். மு. தமிழ்க்குடிமகன் அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சி-பண்பாட்டுத் துறைச் செயலாளர், திருமிகு. வை. பழனிச்சாமி, இ.ஆ.ப. அவர்களுக்கும் நிறுவனத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூலின் படிகளை மெய்ப்புத் திருத்தியும், நூலின் இறுதியில் அமைந்துள்ள சூத்திர முதல் குறிப்பு அகராதி, சொல்லகராதி ஆகியவற்றைச் செய்தும் தந்த புலவர் அண்ணாமலை அவர்களுக்கும், இந்நூலினைக் கவினுற அச்சடித்துத் தந்த 'சித்ரா' அச்சகத்தார்க்கும் எங்கள் நன்றி.

இயக்குநர்

# பொருளடக்கம்

பக்கம்

அணிந்துரை
பொருளடக்கம்
சுருக்க விளக்கம்
செய்யுளியல்
செய்யுள் உறுப்பு 9
1. மாத்திரை, எழுத்துவகை 28
3. அசை-நேர், நிரை 39
நேர்பு நிரைபு 45
தனிக்குறில் மொழிமுதலில் அசையாகாமை 58
குற்றியலிகரம் மெய்யின் இயல்பினது 62
முற்றியலுகரம் சிதைக்கப் படாமை 67
இருவகை யுகரமும் ஒற்றடுத்தல் 74
அசை சீராமாறு 77
4. சீர்- 85
இயற்சீரும் ஆசிரிய உரிச்சீரும் 91
உரியசையின்பின் நிரை 97
உரியசையின் பின் நேர் 100
இயலசைப்பின் உரியசை 103
அளபெடை அசை நிலையாதல்.... 106

| | | |
|---|---|---|
| | வெண்பாவுரிச்சீர் | 123 |
| | வஞ்சிச்சீர் | 127 |
| | வஞ்சிப்பாவில் பிறசீர் | 142 |
| | புறனடை | 144 |
| | அசையும் சீராதல் | 158 |
| | அசைச்சீர் இயற்சீர்பெறல் | 161 |
| 5. | அடி - அடியாமாறு | 177 |
| | அடியில் தளை, தொடை | 179 |
| | புறனடை | 181 |
| | அடியால் பாட்டு | 185 |
| | அடியின் எழுத்துவரையறை - குறளடி | 187 |
| | சிந்தடி | 187 |
| | நேரடி | 187 |
| | நெடிலடி | 188 |
| | கழிநெடிலடி | 188 |
| | சீருக்கு எழுத்து வரையறை | 194 |
| | சீர் மரபு | 200 |
| | எண்ணப்படா எழுத்து | 207 |
| | வஞ்சியடி | 209 |
| | வஞ்சியடிச் சீரின் சிறுமை | 211 |
| | அசை கூன் ஆதல் | 216 |
| | சீர் கூன் ஆதல் | 219 |
| | சூத்திர நுவல் பொருள் | 224 |
| | சூத்திர முதற்குறிப்பு அகராதி | 226 |
| | சொல்லகராதி | 227 |
| | பயன்படுத்தப்பெற்ற நூல்கள் | 232 |

# சுருக்க விளக்கம்

அகம்—அகநானூறு
ஆய்ச்சி—ஆய்ச்சியர் குரவை
இடை—இடையியல்
இல. வி—இலக்கண விளக்கம்
இளம்—இளம்பூரணர்
எழுத்—எழுத்ததிகாரம்
ஐங், ஐங்குறு—ஐங்குறுநூறு
கலி, கலித்—கலித்தொகை
கானல்—கானல்வரி
குறள்—திருக்குறள்
குறுந்—குறுந்தொகை
கைந்—கைந்நிலை
சிலப்—சிலப்பதிகாரம்
சிற்றெட்—சிற்றெட்டகம்
சூ—சூத்திரம்
சூளா—சூளாமணி
செய்—செய்யுளியல்
சொல்—சொல்லதிகாரம்
தொல்—தொல்காப்பியம்
தொன்—தொன்னூல் விளக்கம்
நச்—நச்சினார்க்கினியர்
நற்—நற்றிணை
நாலடி—நாலடியார்

நெடுநல்—நெடுநல்வாடை

பதிற்று—பதிற்றுப்பத்து

பட்டினப்—பட்டினப்பாலை

பரிபா—பரிபாடல்

பு.வெ.மா. — புறப்பொருள் வெண்பாமாலை

புறம்—புறநானூறு

பெரும்பாண்—பெரும்பாணாற்றுப்படை

பேரா—பேராசிரியர்

பொருந—பொருநராற்றுப்படை

மதுரைக்—மதுரைக்காஞ்சி

மலைபடு—மலைபடுகடாம்

முத்து—முத்துவீரியம்

முத், முத்தொள்—முத்தொள்ளாயிரம்

முருகு—திருமுருகாற்றுப்படை

யா.வி—யாப்பருங்கல விருத்தி

வீர—வீரசோழியம்

# தொல்காப்பியம் - பொருளதிகாரம்
# (உரைவளம்)

## செய்யுளியல்

### செய்யுள் உறுப்பு

310, *மாத்திரை யெழுத்தியல் அசைவகை எனாஅ
யாத்த சீரே அடியாப் பெனாஅ
மரபே தூக்கே தொடைவகை எனாஅ
நோக்கே பாவே அளவியல் எனாஅ
திணையே கைகோள் [1]பொருள்வகை எனாஅ
கேட்போர் களனே காலவகை எனாஅ
பயனே மெய்ப்பா டெச்சவகை எனாஅ
முன்னம் பொருளே துறைவகை எனாஅ
மாட்டே [2]வண்ணமோ டியாப்பியல் வகையின்
ஆறு தலையிட்ட அந்நா லைந்தும்
அம்மை அழகு தொன்மை தோலே
விருந்தே இயைபே புலனே இழைபெனாஅப்
பொருந்தக் கூறிய எட்டொடுந் தொகைஇ
நல்லிசைப் புலவர் செய்யு ளுறுப்பென
வல்லிதிற் கூறி வகுத்துரைத் தனரே. (1)*

---

* சூத்திரத்தின் முன்னர் உள்ள எண் தொல்காப்பியப் பொருளதிகாரத் தொடர் எண். பின்னர் உள்ள எண் செய்யுளியல் தொடர் எண்.

1. கூற்றுவகை—பாடம், பேராசிரியர், நச்சினார்க்கினியர்.

2. வண்ணமொடு—பாடம்.

**ஆங்கில மொழி பெயர்ப்பு - இலக்குவனார்**

**Unit of time, the nature of letter, the Kind of Syllable, binding foot, line, Connction, technique, note, rhyme, grace, tune, limit, genus, idealism, kind of speech, auction, place, division of time, effect, 'Meyppadu,' what is left to be understood, intention, subject theme, interlink and melody, these twenty six—'ammai', 'alaku', thommai'. 'thol' 'Virunthu', 'iyalpu', 'pulan', 'ilaipu' and these eight—are said to be the elements of the composition by great renowned poets, who have classified and described them distislinctively.**

பிற்கால இலக்கண நூல்கள் :

**யாப்பருங்கல விருத்தி. 1.**

எழுத்தசை சீர்தளை அடிதொடை தூக்கொடு
இழுக்கா நடையது யாப்பெனப் படுமே.

**யாப்பருங்கலக் காரிகை. 1.**

கந்த மடிவில் கடிமலர்ப் பிண்டிக்கண் ணார்நிழற்கீழ்
எந்தம் அடிகள் இணையடி யேத்தி எழுத்தசைசீர்
பந்தம் அடிதொடை பாவினம் கூறுவன் பல்லவத்தின்
சந்தம் மடிய அடியால் மருட்டிய தாழ்குழலே

**தொன்னூல் விளக்கம் 202**

எழுத்தசை சீர்தளை அடிதொடை யாறும்
வழுத்திய செய்யுள் மருவுறுப் பெனவே.

**இலக்கண விளக்கம் 710**

செய்யுள் என்பது தெரிவுறக் கிளப்பின்
முன்னர்க் கூறிய முறைமைத் தாகி
எழுத்தசை சீர்தளை அடிதொடை என்ற
மூவிரண் டுறுப்பும் மேவரச் சிவணிப்
பாவும் இனமும் எனவிரு பாற்றே.

## செய்யுளியல்

**இளம்பூரணர்**

இவ்வோத்து என்ன பெயர்த்தோ வெனின், செய்யுளியலென் னும் பெயர்த்து. செய்யுளிலக்கணம் உணர்த்தினமையாற்

பெற்ற பெயர். மேலுணர்த்தப்பட்ட பொருண்மை யெல்லாவற் றிற்கும்[1] இஃதிடமாதலின் அவற்றின்பிற் கூறப்பட்டது.

310. மாத்திரை யெழுத்தியல்...........தனரே.
என்பது சூத்திரம்.

இதன் றலைச்சூத்திரம் என்னுதலிற்றோ வெனின், செய்யு ளுறுப் பெல்லாந் தொகுத்துணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) மாத்திரை முதலாகச் சொல்லப்பட்ட முப்பத்து நான்குஞ் செய்யுட்கு உறுப்பென்றவாறு.

பிற்கூறிய எட்டும்[2] மேற்கூறிய இருபத்தாறினோடும்[3] ஒரு நிகரன அன்மையின், வேறு தொகை கொடுக்கப்பட்டது. அவை யாமாறு தத்தஞ் சூத்திரத்துட் காட்டுதும். (1)

## பேராசிரியர்

313. மாத்திரை யெழுத்திய.........தனரே.

என்பது சூத்திரம். இவ்வோத்து என்ன பெயர்த்தோ வெனின், செய்யுளிய லென்னும் பெயர்த்து; செய்யுளிலக்கணம் உணர்த்தினமையான் அப்பெயர்த்தாயிற்று. எனவே, ஓத்து நுதலியதூஉஞ்[1] செய்யுளிலக்கணமுணர்த்த லென்பது பெற்றாம். மேற் பாயிரத்துள்,

> "வழக்குஞ் செய்யுளு மாயிரு முதலி
> னெழுத்துஞ் சொல்லும் பொருளும்." (பாயிரம்)

ஆராய்வலென்று புகுந்தமையால்,[2] எழுத்தினுஞ் சொல்லினும் வழக்கிற்குஞ் செய்யுட்கும் வேண்டுவனவிராய்க் கூறிப் பொருளதி காரத்துள்ளும் இதுகாறும் பெரும்பான்மையும் வழக்கிற்கு வேண்டுவனவே கூறி வந்தான். அப்பொருள் பற்றிச் செய்யுள்

---

1. மேல் உணர்த்தப்பட்ட பொருண்மை யாவன அகத்திணை யியல் முதலாக உவமவியல் ஈறாகவுள்ளனவற்றில் உணர்த்தப்பட்ட பொருள் இலக்கணங்கள்.
2. அம்மை முதலிய எட்டு.
3. மாத்திரை முதல் வண்ணம் ஈறாகவுள்ளன.

1. நுதலியதூஉம்—கூறக் கருதியதும்.
2. பாயிரம் செய்தார் வேறாயினும் நூலாசிரியரே செய்தது போலக் கூறுதல் உரையாசிரியர் மரபாதலின், தொல் காப்பியர் ஆராய்வல் எனப் புகுந்தாராகக் கூறினார்.

கூறுமாதலின் இவ்வதிகாரத்துட் செய்யுளிலக்கண மெல்லாந் தொகுத்துக் கூறுகின்றது இவ்வோத்தென்பது. எனவே, முற் கூறிய எழுவகை யோத்தும் வழக்கிற்குஞ் செய்யுட்கும், பொது வென்பதூஉம் இது செய்யுட்கே உரித்தென்பதூஉம் பெற்றாம். மற்றிதனை யாப்பதிகாரமென வேறோ ரதிகாரமாக்கி உரைப் பாரூமுளர். அங்ஙனங் கூறின் வழக்கதிகாரமெனவும் வேறு வேண்டுமென மறுக்க; அல்லதூஉம், எழுத்துஞ் சொல்லும் பொருளுமென மூன்றற்கும் மூன்றதிகாரமாக்கி அதிகார மொன் றற்கு ஒன்பது ஓத்தாகத் தந்திரஞ்[3] செய்ததனோடு மாறு கோளாம், இதனை வேறதிகாரமென்பார்க் கென்பது.

மற்று, ஓத்து நுதலியதெல்லாம் நுதலுவதன்றே ஓத்தினுள் வைத்த சூத்திரம்; அதனான், இதன் முதற்சூத்திரம் என்னுத லிற்றோவெனின்,—இவ்வோத்தினுளுணர்த்தப்படுகின்ற செய்யுட் குறுப்பாவன இவை யெனவே, அவற்றது பெயரும் முறையுந் தொகையும் உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்:— இக்கூறப்பட்ட முப்பத்து நான்கும் பேரிசைப் புலவர் செய்யப்படுஞ் செய்யுட்கு உறுப்பாமென அவ்வாறு செய்தல் வன்மையாற் கூறினார் புலவர் என்றவாறு.

அப்பெயர், பெயர்; அம்முறை, முறை; அத்தொகை, தொகை. தொகை 'ஆறு தலையிட்ட வந்நா லைந்தும்', எனவும், 'எட்டு' எனவும் இருவகையால் தோன்றக் கூறியது, ஏனைய[4] போலாமல் எட்டுறுப்பும்[5] ஒரோர் செய்யுட்கு ஒரோவொன்றேயும் வருமென்பதறிவித்தற்கும் அவைதாம் அச்செய்யுள் பல தொடர்ந்த வழியே பெரும்பான்மையும் உறுப்பாமென்பதறிவித் தற்கும் அவ்வாறு கூறினார் என்க. எனவே, ஒழிந்த உறுப்பு இருபத்தாறும் ஒன்றொன்றனை இன்றியமையா வென்பது பெற்றாம்.

*இனி மாத்திரையென்பது, எழுத்திற்கோதிய மாத்திரை களைச் செய்யுள் விராய்க்கிடக்கும் அளவையென்றவாறு. மாத்திரையது மாத்திரையினை ஈண்டு மாத்திரை யென்றான்.[6] அது 'மாத்திரையளவும்'(14) என்றதனாற் பெற்றாம். எழுத்தியல்

---

3. தந்திரம்—நூல்.
4. ஏனைய—மாத்திரை முதலாக வண்ணம் ஈறாகவுள்ளன.
5. எட்டுறுப்பு—அம்மை முதலாக இழைபு ஈறாகவுள்ளன.
6. மாத்திரையின் அளவை ஈண்டு மாத்திரையென்றான்.

* மாத்திரை முதலியவற்றின் விளக்கங்களுக்கு மூவர் உரையாளர்தம் வேறுபாடுகளை யறிக.

வகையென்பது, மேற்கூறிய எழுத்துக்களை இயற்றிக் கொள்ளுங் கூறுபாடு. அசைவகை யென்பது, அசைக் கூறுபாடு; அவை; இயலசையும் உரியசையுமென இரண்டாம். யாத்தசீ ரென்பது, (360) பொருள் பெறத் தொடர்ந்து நிற்குஞ் சீரென்றவாறு; எனவே, அசைபல தொடர்ந்து சீராங்கால் அவ்வசையுந் தத்தம் வகையாற் பொருள் பெற்று நிற்றலும், அவ்வாறன்றிச் சீர் முழுதும் ஒரு சொல்லாங்கால் அவ்வசை பொருள் பெறாது நிற்றலும் அடங்கின. தேமா என்று அசை பொருள் வேறு பெற்றன;[7] சாத்தன் எனப்பொருள் வேறுபெறாது நின்ற அசையாற் சீர்யாத்து நின்றது.[8] பொருள் பெற நின்ற எழுத்தும் அசையுஞ் சிறப்புடைய வென்பாருமுளர். அற்றன்று, பொருள்பட நிற்பன எழுத்து யாண்டுமின்மையானும்,[9] பொருள் பெற நின்ற அசையானாகிய தேமாவென்னுஞ் சீரும் அவ்வசைச் சிறப்பினாற் சிறப்புடைச் சீரெனவும் படுமாதலானுமென்பது. அடியென்பது, அச்சீர் இரண்டும், பலவுந் தொடர்ந்தாவதோர் உறுப்பு. யாப்பென்பது, அவ்வடிதொறும் பொருள் பெறச் செய்வதோர் செய்கை. மரபென்பது, காலமுமிடனும் பற்றி வழக்குத் திரிந்தக்காலுந் திரிந்தவற்றுக்கு ஏற்ப வழுப்படாமைச் செய்வதோர் முறைமை. மற்றுச் சொல்லோத்தினுட் கூறிய மரபிற்கும், மரபியலுள் உரைப்பனவற்றுக்கும், இதற்கும் வேற்றுமையென்னை யெனின்:— இது செய்யுட்கே உரித்து; அவை வழக்கிற்குஞ் செய்யுட்கும் பொதுவென்பது; அல்லதூஉம் அவற்றது வேறுபாடு முன்னர் அகத்திணையியலுள் கூறி வந்தாம்.[10] தூக்

---

7. தேமா—நேர் நேர். இது இரண்டசையுள்ள சீர். இனிய மா என்னும் பொருள். தே மா என்னும் அசைகளுக்குப் பொருள் உண்டு.

8. சாத்தன்—இது சாத், தன் எனப் பிரிக்க நேர் நேர் ஆகும் பிரிக்கப்பட்ட இரண்டு அசைகளும் பொருள்படுவனவல்ல. சாத்தன் எனச் சேர்ந்து சீராம்போதே பொருள்படும்.

9. தனி யெழுத்துகள் யாண்டும் பொருள் பெறுவதில்லை.

10. பேராசிரியர் அகத்திணையியல் உரை கிடைக்கப் பெறவில்லை.

* பேராசிரியர் உரையிடையில் பிறைக்கோட்டில் வரும் எண்கள் அவர் கொண்ட சூத்திர எண்கள்.

கென்பது, பாக்களைத் துணித்து நிறுத்தல். தொடை வகை யென்பது, தொடைப் பகுதி பலவுமென்றவாறு; அவை வரை யறையுடையனவும் வரையறை யில்லனவுமென இருவகைய. இப் பகுதியெல்லாம் அடியாற் கோடலின் அடிக்கும் இஃதொக்கும். நோக்கென்பது மாத்திரை முதலாகிய உறுப்புக்களைக் கேட் டோர்க்கு நோக்குப் படச்[11] செய்தல். பாவென்பது, சேட்புலத் திருந்த காலத்தும் ஒருவன் எழுத்துஞ் சொல்லுந் தெரியாமற் பாடமோதுங்கால் அவன் சொல்லுகின்ற செய்யுளை விகற்பித்து இன்னசெய்யுளென்று உணர்தற் கேதுவாகிப் பரந்துபட்டுச் செல் வதோர் ஓசை. அளவியலென்பது[12] அப் பா வரையறை திணை. யென்பது அகம்புறமென்று அறியச் செய்தல். கைகோளென்பது அவ்வத்திணை யொழுக்க விகற்பம் அறியச் செய்தல்; அது களவுங் கற்பும் கூற்று வகையென்பது, அச்செய்யுள் கேட்டாரை இது சொல்லுகின்றார் இன்னாரென உணர்வித்தல். 'இவை' என்பது பாடமாயின், எண்ணிய மூன்றனையுந் தொகுத்தவாறே பிறிதில்லை. கேட்போர் என்பது, இன்னார்க்குச் சொல்லு கின்றது இதுவெனத் தெரித்தல். களனென்பது[13] முல்லை குறிஞ்சி முதலாயினவும் இரவுக்குறி பகற்குறி முதலாயினவும் உணரச் செய்தல். மற்றுத் தன்மை முன்னிலை படர்க்கையுமாம். காலவகையென்பது,[14] சிறுபொழுது பெரும் பொழுதென்னுங் காலப்பகுதி முதலாயின. பயனென்பது, சொல்லிய பொருளாற் பிறிதொன்று பயப்பச் செய்தல். மெய்ப்பாடென்பது சொற் கேட்டோர்க்குப் பொருள் கண்கூடாதல்.[1] எச்சவகை யென்பது, சொல்லப்படாத மொழிகளைக் குறித்துக் கொள்ளச் செய்தல்; அது கூற்றினுங் குறிப்பினும் வருதலின் 'வகை' என்றான். முன்னமென்பது[2] உயர்ந்தோரும் இழிந்தோரும் ஒத்தோரும் தத்தம் வகையான் ஒப்பச் சொல்லுதற்குக் கருத்துப்படச்

---

11. நோக்குப்பட—பயன்பட.

12. அடி வரையறை என்பர் நச்.

13. களன் என்றது இயற்கைப் புணர்ச்சியும் இடந்தலைப் பாடும் முதலிய உணரச் செய்தலை என்பர் நச்.

14. கால வகை—முக்காலத்தும் திணை நிகழ்ச்சிக்கண்ணே பொருள் நிகழ்ச்சி யுணரக் கூறல் நச்.

1. கண்கூடாதல்—புலப்படுதல்.

2. முன்னம்—கூறுவோரையும் கூறக் கேட்டோரையும் குறிப்பான் எல்லாரும் கருதும்படிச் செய்வது.

செய்தல். பொருளென்பது, புலவன் தான் தோற்றிக் கொண்டு செய்யப்படுவதோர் பொருண்மை. துறைவகை யென்பது, முதலும் கருவும் முறை பிறழ வந்தாலும் இஃது இதன்பாற்படு மென்று ஒருதுறைப் படுத்தற்கு ஏதுவாகியதோர் கருவி. அச் செய்யுட்குளதாகச் செய்தல்; அவையும் பலவாதலின் 'வகை' என்றானென்பது. மாட்டென்பது, பல்வேறு பொருட் பரப்பிற்றா யினும் அன்றாயினும் நின்றதனொடு வந்ததனை ஒரு தொடர் கொளீஇ முடித்துக் கொள்ளச் செய்தல்.[3] வண்ணமென்பது, ஒரு பாவின்கண்ணே நிகழும் ஓசை விகற்பம். எனாவென்பன, எண்ணிடைச் சொல்.

யாப்பியல் வகையின் ஆறுதலையிட்ட அந்நாலைந்து மென்பது, யாப்பிலக்கணப் பகுதியாகிய இருபத்தாறு மென்ற வாறு. இவை யாப்பிற்கு[4] இன்றியமையாத இலக்கணப் பகுதிய வென விதந்தோதவே, இனிக்கூறும் உறுப்பெட்டும் இன்றியமை யாமை இல்லையென்றவாறு.

''அம்மை யழகு தொன்மை தோலே
விருந்தே யியைபே புலனே யிழைபெனா அப்
பொருந்தக் கூறிய வெட்டொடுந் தொகைஇ.''

என்பது, இக்கூறப்பட்ட எண்வகை வனப்பொடு முன்னர்க் கூறிய இருபத்தாறுந் தொகுப்ப முப்பத்து நான்கு உறுப்பா மென்றவாறு. மற்றிவற்றை வனப்பென்று கூறற்குக் காரணம் அவற்றைக் கூறும் வழிச் (547) சொல்லுதும்.

நல்லிசைப் புலவர் செய்யுளென்பது, இவ்வுறுப்பனைத்துங் குறையாமற் செய்யப்படுவன நல்லிசைப் புலவர் செய்யுஞ் செய்யு ளெனப்படு மென்றவாறு. நல்லிசைப் புலவர் செய்யுள் எனவே, எழுநிலத்தெழுந்த செய்யுளுள்ளும் (391) அடி வரையறையுடைய வற்றுக்கே இவ்விலக்கணமென்பதூஉம் (476) திணையே கைகோளெனக் கூறும் உறுப்பு முதலாயினவெல்லாம் ஏனை அறுவகைச் செய்யுட்கும்[2] (476—7) உறுப்பாகாவென்பதூஉம்,

---

3 பொருள்கோளைக் குறிக்கும்.

4. யாப்பு என்றது ஒரு தனிச் செய்யுளை.

1. எழுநிலம் - பாட்டு, உரை, நூல், வாய்மொழி, பிசி, அங்கதம், முதுசொல் என்பன. இவற்றுள் பாட்டு ஒழிய மற்றவற்றுக்கு அடிவரையறையில்லை.

2. ஏனை அறுவகைச் செய்யுள்—பாட்டு ஒழிந்த மற்றையன.

அவையொழிந்த உறுப்பினுள்[3] ஏற்பன பெறுமாயினும் ஆண்டு[4] வரையறையின்மையிற் கூறானென்பதூஉம், அவை செய்தாரெல் லாம் அவற்றானே நல்லிசைப் புலவரெனப் படாரென்பதூஉம் பெற்றாம்.[5]

இனி, நூலும் உரையுஞ் செய்தார் நல்லிசையுடையரென்பது. அவற்றை நூலினான் உரையினானென இதற்கு இடையின்றி வைத்தமையிற் பெறுதுமென்பது.[6]

வல்லிதிற் கூறி வகுத்துரைத்தனர் நல்லிசைப் புலவ ரென்பது, அவற்றை நூலினான் இனியிங்ஙனங் கூறிய நல்லாசிரி யரிலக்கணமே கூறியொழிந்தார், எல்லாவற்றானும் எல்லா மமையச் செய்யுஞ் சுவடுடையராகி அவ்வத்துறை போயினார் தாமும் என்றவாறு; எனவே, இவ்வுறுப்பமையச் செய்தனவே செய்யுளெனப்படுவனவென்று சிறப்பித்தவாறு.

---

3. அவையொழிந்த உறுப்பு—திணை முதலாக வண்ணம் வரையுள்ளன ஒழிந்த மற்றைய மாத்திரை முதலாக வுள்ள உறுப்புகள்.

4. ஆண்டு—உரை முதலிய ஆறிடங்களில்.

5. நூல், உரைமுதலிய ஆறும்செய்தாரெல்லாம் அவற்றைச் செய்து விட்ட காரணத்தாலேயே நல்லிசைப் புலவர் எனப்படார். எல்லாவுறுப்பும் அமையச் செய்தாரே நல்லிசைப் புலவர் எனப்படுவர் என்பது கருத்து.

6. நூலும் உரையும் செய்தவரும் நல்லிசைப் புலவராவர் என்பதை உணர்த்தவே ஆசிரியர் பாட்டிலக்கணம் கூறி வந்தவர், (சூ. 475 வரை) இடையீடில்லாமல் தொடர் பாகவே (476ல்) நூலினான உரையினான எனக் கூறினார்.

பாட்டு நூல் உரை முதலிய ஏழனுள் பாட்டு செய் வாரே நல்லிசைப் புலவர் ஆவார் என்பதும் ஏனைய வற்றுள் நூலும் உரையும் செய்வாரும் அவராவார் என் பதும் கூறியவதனால் மற்றைய நான்கும் செய்வாரே நல்லிசைப் புலவராகார் என்பதும் பேராசிரியர் கருத் தாம். நச்சினார்க்கினியரும் இக்கருத்தினரே; காண்க.

மற்று, 'கூறி' எனவும் 'உரைத்தனர்' எனவும் இருகாற் சொல்லியதென்னை யெனின்:— அச் செய்யுளானே கூறி அவற்றுப் பொருளுரைத்தாரென்றவாறு; என்றார்க்கு. செய்யுட் குற்றம் ஈண்டோதாரோவெனின், ஓதல் வேண்டுமே?'[1] இவ்விலக் கணத்துப் பிறழ்ந்துங் குன்றியும் வருவனவெல்லாம் வழுவென்பது அறிய வைத்தானல்லனே[2] ஆசிரியனென்பது.

மற்றுச் செய்யுளுறுப்பு ஈண்டோதினார், செய்யுள் யாண்டோ துபவெனின், அறியாது கடாயினாய்,— உறுப்பென்பன உறுப் புடைப்பொருளின் வேறெனப்படா; பொருள் எனப்படுவன உறுப்பே, அவற்றது ஈட்டத்தினை முதலென வழங்குப வாகலான் உறுப்பினையே சொல்லி யொழிந்தார்; முதற் பொருளதிலக்கண மென உறுப்பிலக்கணத்தினையே வேறுபடுத்துக் கூறலாவதின் மையானும் உறுப்புரைப்பவே அவ்வுறுப்புடைய பொருள் வழக்கி யலாற் பெறலாமாகலானுமென்பது.

* மற்று, யாத்தசீரே யடியாப்பென்றதென்னை? தளையென்ப தோர் உறுப்புப் பிறர் வேண்டுபவாலெனின்[3]— இருவருஞ் சீரது[4] தொழிலே தளையென வேண்டுப; தளைத்தலிற்[5] றளையாத லானும் வேறு பொருளென வேண்டாரென்பது; என்றார்க்கு' அசையின்றிச் சீருமில்லை; சீரின்றி அடியுமில்லையாம் பிற வெனின், அற்றன்று; உறுப்பும் உறுப்புடைச் செய்யுளும்போல அவை கொள்ளப்படுந் தளையென வேறொன்றின்மையிற் கொள்ளான்; என்னை? அது குறளடியென வேறுறுப்பாயினமையி

---

1. ஓதல் வேண்டுமே?— ஓதல் வேண்டுமோ, வேண்டுவ தில்லை ஏன் எனின்.
2 வழு என்பதைக் குறிப்பான் அறிய வைத்துக் கூறினான் அல்லனோ அதனால் இங்குக் கூற வேண்டுவதில்லை.
3. சீர்களை இணைப்பது தளையாதலின் அது கூறப்படா மைக்குக் காரணம் என்னை என்பது வினா.
4. இருவரும் சீர்— இரண்டாக வரும் சீர்.
5. தளைக்தல்—கட்டுதல், இணைத்தல்.

* இப்பகுதிக்கு விளக்கம் வருமாறு:-

**அடிக்குறிப்பு :**

---

தளை என்பதோர் உறுப்பை மற்றையாசிரியர் கூறத் தொல் காப்பியர் அது கூறாமல் யாத்தசீர் என்பதன் பின்னர்த்

தளைகூறாமல் அடி கூறித் தளையை விட்டதேன்?— என்பது வினா?

ஒரு சீரோடு வரும் சீர் தளைக்கப்படுதலின் தளையாகும். சீரொடு சீர் சேர்தல் சீரது தொழிலாதலின் தளை என்பது ஒன்று வேறு கூறப்படா வேண்டா என்பது அவ் வினாவிற்கு விடை என்பது ஒரு சாரார் கூறுவது. அப்படியானால் அசையோடு அசை சேர்வது சீர்; சீரொடு சீர் சேர்வது அடி ஆதலின் சீர் அடி என வேறு வேறு கூறப்பட வேண்டாவே. கூறப்பட்டமையின் சீரொடு சீர் சேரும் தளையும் கூறப்பட வேண்டும். அதனால் அவ் விடை பொருத்தம் இல்லை.

வேறு விடை யாது எனின் விடை வருமாறு :-

மாத்திரை முதலிய உறுப்புகள் செய்யுளில் வெளிப்படையில் தெரிவன; அவற்றையுடைய செய்யுளும் வெளிப்படை. அவ்வாறே அசை, அசையால் வரும் சீர், சீரால் வரும் அடி முதலியன செய்யுளில் வெளிப்படையில் தெரிவன, அவ்வாறு தளை இன்னது எனச் சுட்டிக் காட்டுமாறு வெளிப்படையில் தெரியவில்லை. அதனால் தளை கொள்ளப்படவில்லை.

இருசீர் இணைந்து குறளடி என அடியுறுப்பின் வகையாகக் கொள்ளப்படுதலின் தளை கொள்ளப்படவில்லை. தளை கொள்ளப்பட வேண்டின் குறளடி என்பது கூறப்பட லாகாது

ஈரசை கூடியது சீர் எனப்படுதலின் இருசீர் கூடியதைத் தளை என்று கொள்ளலாமே என வினவின், நாற்சீர் கொண்டது ஓரடி என்னும்போது ஒன்றாகவும் மற்றை இருசீரை ஒன்றாகவும் இருதளை கொண்டால் ஓரடிக் கண் நாற்சீர் வந்தவற்றை நாற்சீராக அறுத்துக் காண இயலாது. செய்யுளில் உள்ள அடியைச் சீர்சீராக அறுத்துக் கொள்ளலாம்; ஆனால் சீரை அசைஅசையாக அறுத்துச் சொல்லப்படாது என்பதற்காகவே ஆசிரியர் யாத்தசீர் என்றார்.

தளை வேண்டும் என்றால் அசையாற் சீரும் சீரான் தளையும் தளையான் அடியும் வரும் எனக் கூறுதல் வேண்டும். அவ்வாறு கூறாமல் சீரான் அடிவகுப்பது குற்றமாம். சீரான் அடிவகுத்தலின் தளை தேவையில்லை.

மீண்டும் ஒரு வினா.

சீரும் சீரும் சேரும்போது கூறலாம் தளை வெளிப்படையாகத் தெரியாமையின் தளை விடுபட்டதாயின் அடியும் அடியும் அடுக்கும்போது தொடையும் வெளிப்படையாகத் தோன்றவில்லையாதலின் தொடை எனும் உறுப்பும் கொள்ளப்படலாகாது, கொண்டது ஏன்?— இது வினா.

தொடை வெளிப்படையாகத் தெரியவில்லை என்றாலும் அடிகளில் வரும் எழுத்தும் சொல்லும் பொருளும் வெளிப்படையாகத் தெரிவனவற்றில் தொடைகள் (தொடைவிகற்பங்களும்) வகுக்கப்படுதலின் அவை வெளிப்படையாகவே தெரிதலின் தொடை கூறப்பட்டது. அதனால் அது தனி உறுப்பாகும்.

துணை வினா ஒன்று.

சீரும் சீரும் சேரும்போது முதற்சீரின் இறுதி அசையும் வரும் சீரின் முதல் அசையும் கொண்டு தளை கூறப்படுதலின் அசையால் தளை வரும் எனக்கூறலாமோ என்பது வினா. சீரும் சீரும் கூடின் குறளடி முதலியவாகக் கூறலின் தளை கூறலாகாது. அன்றியும் அசையும் அசையும் கூடின் சீர் என்றே சொல்லப்படும்.

துணைவினா இரண்டாவது.

இருசீர் வருவது குறளடி எனின் தளையான் அடிவராமையின் தளை தேவையில்லை; நாற்சீரடியில் குறளடி என்பதில் லாமையால் அதில் தளை கொள்ளலாமே? என்பது வினா.

ஆசிரியர் நாற்சீரடியையே நாலெழுத்து முதல் ஆறெழுத்து வரையுள்ள நாற்சீரடிகள் குறளடி எனப் பெறும் எனக் கட்டளை கூறினார். ஆனால் இருசீரான் வரும் குறளடிக்குக் கட்டளை கூறவில்லை. ஓரடிக்குக் கட்டளை கூறி இருசீரடிக்குக் கட்டளை கூறாமை மயங்கக் கூறலாம். அதனால் கொள்ளலாகாது.

'தன் ஒத்த நூலின் முடிபு தன்னூற்கும் ஆகும்' என்ற விதிப்படிக் காக்கைபாடினியார் தளை கூறியதை இங்கு நாம் வைத்துக் கூறிக் கொள்ளலாமே எனின், அவ் விதியையே பின்பற்றித் தொல்காப்பியர் கொள்கை

னென்பது; தளையென்று இதனைக் கோடுமேல் அதனைக் குறளடியென லாகாதென்பது; அல்லதூஉம், ஈரசை கூடி ஒரு சீராயினவாறு போல இருசீர்க் கூடியவழி அவ்விரண்டடையையும் ஒன்றென்று கோடல் வேண்டும்; கொள்ளவே, நாற்சீரடியினை இடை துணித்துச் சொல்லுவதன்றி நான்கு பகுதியானெய்திக் கண்டம்படச் சொல்லுமாறில்லை யென்க. 'யாத்தசீர்' என்ற தனானே அசைதொறுந் துணித்துச் சொல்லப்படா சீரென் பதூஉம், அச்சீரான் அடியானவழிச் 'சீரியைந் திற்றது சீரெனவே' படு (323) மென்றதனாற் சீரெல்லாந் துணித்துச் சொல்லப்படுமென்பதூஉங் கூறினான் இவ்வாசிரியனென்பது; அற்றன்றியும், அவ்வாறு தளை கொள்வார், சீரானடி வகுப் பதூஉங் குற்றமென மறுக்க, மற்றுத் தொடை கூறியதென்னை? அடியிரண்டு தொடுத்தற் றொழிலல்லது இன்மையினெனின், அற்றன்று; தொடுத்தற் றொழின்மாத்திரையானே தொடை யென்றா னல்லன்; அவ்வடிக்கண் நின்ற எழுத்துஞ் சொல்லும் பிறபொருளாகலான் அவற்றானே தொடை கொண்டமையின் வேறுறுப்பென்றா னென்பது. அஃதேல், சீருஞ் சீரும் இயைந்த வழி அவையிடமாக நின்ற அசையால் தளை கொள்ளாமோ வெனின்:— கோடுமன்றே; அதனை அடியென்னாமாயினென முற்கூறியவாறே கூறி மறுக்க; அல்லதூஉம், அவ்விரண்டசையுங் கூடிச் சீராமன்றோவெனினென்பது, மற்று நாற்சீரடியுள் இரு சீரியைந்த வழிக் குறளடி யென்னா மாகலின் அதனைத் தளை யென்னாமோவெனின், அங்ஙனங் கொள்ளின் இருசீரடிக்

---

யாகிய தளை கொள்ளாமையைக் காக்கை பாடினி யார்க்கும் ஏற்றி அவர்க்கும் தளை தனித்து உறுப்பாகக் கூறல் கருத்தன்று என்னலாம். சிறு காக்கை பாடினி யாரும் தளை கொண்டிலர் என்னலாம். பிற்காலத்து ஆசிரியரே தளை கொண்டனர் என்னலாமோ எனின், சிறுகாக்கை பாடினியார் தொல்காப்பியர் காலத்தவர் அல்லர். ஏன் எனின் தொல்காப்பியர் காலத்தவரான பனம்பாரனார் தமிழக எல்லை கூறியபோது தெற்கெல் லையாகக் குமரியாறு கூறியவாறே காக்கை பாடினி யாரும் கூறினார். ஆனால் சிறுகாக்கை பாடினியார் தெற்கெல்லை கடல் கூறினார். அதனால் குமரியாறு இருந்த காலத்தவரில்லை சிறுகாக்கை பாடினியார். பிற்காலத்தவராவார். அதனால் கிறுகாக்கை பாடினி யார் தளை வேண்டினார் என்க.

கட்டளை வேண்டாதானாம்; ஆகவே, ஒருவழிக் கொண்டு ஒருவழிக் கொள்ளாமை 'மயங்கக் கூறல்' (663) என்னுங் குற்றமாமென்பது; அல்லதூஉம், அங்ஙனமன்றி வருமாயின் அடிக்கெல்லாம் பொதுவகையால் தளையுறுப்பெனப்படாது எழுத்தும் அசையும்போல யாண்டும் வருவனவெல்லாம் உறுப்பெனப்படுவனவென்றற்கு,

"இணை நூன் முடிபு தன்னூன் மேற்றே."

என்பதனாற் காக்கைபாடினியார் ஓதிய தளையிலக்கணம் ஈண்டுங்கோடல் வேண்டுமெனின் அதுவே கருத்தாயின் அவர்க்கும் இவர் முடிவே பற்றித் தளைகளையல் வேண்டும்; அல்லதூஉம், அவர்க்கு இளையவரான காக்கைபாடினியார் தளை கொண்டிலரென்பது இதனாற் பெற்றாம். தளை வேண்டினார் பிற்காலத்து ஓராசிரியரென்பது; என்னை?

"வடக்குந் தெற்குங் குணக்குங் குடக்கும்
வேங்கடங் குமரி தீம்புனற் பௌவமென்
றிந்தான் கெல்லை யகவயிற் கிடந்த
நூலதி னுண்மை வாலிதின் விரிப்பின்."

எனக் கூறி வடவேங்கடந் தென்குமரியெனப் பணம்பாரனார் கூறியவாற்றானே எல்லை கொண்டார் காக்கைபாடினியார்; ஒழிந்த காக்கை பாடினியத்து,

"வடதிசை மருங்கின் வடுகுவரம் பாகத்
தென்றிசை யுள்ளிட் டெஞ்சிய மூன்றும்." (651)

எனத் தென்றிசையுங் கடலெல்லையாகக் கூறப்பட்டதாகலான் அவண் குமரியாறுள்ள காலத்தா ரல்லரென்பதூஉம், குறும்பனை நாடு அவர்க்கு நீக்கல் வேண்டுவதன்றென்பதூஉம் பெற்றாம்; பெறவே, அவர் இவரோடு ஒருசாலை மாணக்கரல்லரென்பது எல்வார்க்கும் உணரல் வேண்டுமென்பது.

மற்றிது முறையாயவாறென்னையெனின், —மாத்திரை எழுத்தினது குணமாதலானும், அசையும் சீரும் அடியும் தூக்கும் பாவும் வண்ணங்களுமென்ற இன்னோரன்னவெல்லாம் மாத்திரை நிமித்தமாகத் தோன்றுவனவாதலானும் அது முன் (314) வைத்தான். அக்குணத்திற்குரிய எழுத்தினை அதன்பின் வைத்தான். அவ்வெழுத்தான் அசையும், (315) அசையாற் சீரும் (324), சீரான் அடியும், (346) அவ்வடி பெற்ற வழி அதனை ஆக்கு மாறறியக் கூறும் யாப்பும் (390) அவ்வடி யகத்தன

சொல்லும் பொருளு மாகலான் அதன்பின் மரபும் (392) வைத்தான். அவ்வடியிரண்டினைத் தொடுக்குங்கால் அவற்றை ஓரடியென ஒரு தொடர்ப்படாமைத் துணிப்பது தூக்காகலான் (399) அதனைத் தொடைக்குமுன் (400) வைத்தான்.

அவ்வடியிரண்டு தொடுத்தவழியுங் கொள்ளப்படும் நோக்கென்பதறிவித்தற்கு (416) அதனைத் தொடைப் பின் வைத்தான். அவ்வடி இரண்டும் பலவுந் தொடர்ந்த வழி முழுவதுங் கிடப்பது பாவாகலான் அதனை அதன்பின் (417) வைத்தான். அப்பாத் துணிந்த துணிவினை எண்ணுதலான் அளவினை (496) அதன்பின் வைத்தான். திணையுந் திணைக் குறுப்பாகிய (497) ஒழுகலாறும் அவ்வொழுக்கத்தவாகிய கூற்றும் (506) அதன்பின் வைத்தான். கேட்போருங் (508) கேட்கும (513) இடனும் (510) அதுபோலப் புலப்படாத காலமும் (514) இவற்றாற் பயனும(ப்) (515) பயன (துபாத்) து(ய்ப்ப) வரும் மெய்ப்பாடும் (516) இவற்றினெல்லாம் ஒழிந்த நின்ற எச்சமும் (518) அவ்வெச்சத் தோடுங் கூட்டி யுணரப்படும் முன்னமும் (519) அம்முறைமையான் அதன்பின் வைத்தான். அவற்றிற்கெல்லாம் பொதுவாகிய பொருளை (520) அதன்பின் வைத்தான். அப்பொருட் பிறழ்ச்சியை ஒருங்படுக்குந் துறையை அதன்பின் (521) வைத்தான். மேல் (523) எச்சமும் மாட்டு மின்றியும் வருமென்பவாகலான் மாட்டினைத் துறை வகையின் பின்வைத்தான். அவற்றுள் எச்சத்தினை முன் ஓதினான். அது செய்யுட்கணின்றி வருஞ் சிறுபான்மை யாதலானென்பது. வண்ணம் பாவினது பகுதியுறுப்பாதலான் அதனை அவற்றுப் பின் (524) வைத்தான். வனப்பினை (525) எல்லாவற்றுக்கும் பின் (547) வைத்தான். அவற்றை ஒன்றொன்றாக நோக்குங்கால் அவ்வெட்டுமின்றியுஞ் செய்யுள் செய்பவாகலி னென்பது. மற்றிவ்வுறுப்பினையெல்லாம் ஆசிரியன் குறியென்றுமோ உலகு குறியென்றுமோ வெனின். அவ்விரு திறத்தானும் [என்பன] அறிந்து கொள்ளப் படுமென்றொழிக[1]. இவற்றை உயிருடையத னுறுப்புப்போலக் கொளின் உயிர் வேறுகூறல் வேண்டுவதாம், அவ்வாறு கூறாமையிற் கலவையுறுப்புப் போலக் கொள்க.

---

1. ஆசிரியன் இட்ட பெயர், உலகத்து இலக்கணம் வல்லார் இட்ட பெயர் எனும் இரு திறத்தினாலும் செய்யுள் உறுப்புகள் அறிந்து கொள்ளப்படும் ஆசிரியன் என்றது தொல்காப்பியரை. இவ்வுறுப்புகளுள் ஆசிரியன் இட்டன யாவை உலகு இட்டன யாவை எனத் தெளிய் இயலாமையின் "அவ்விரு திறத்தானும் அறிந்து கொள்ளப் படும் என்று ஒழிக" என்றார்.

## நச்சினார்க்கினியர்

1. மாத்திரை எழுத்தியல்........... தனரே.

என்பது சூத்திரம். இவ்வோத்து செய்யுளது இலக்கணம் உணர்த்தினமையிற் செய்யுளியல் என்னும் பெயர்த்து; எனவே இவ்வோத்து நுதலியது செய்யுளிலக்கணமாயிற்று.

பாயிரத்துள் 'வழக்குஞ் செய்யுளும் ஆயிரு முதலின்எழுத்துஞ் சொல்லும் பொருளும் ஆராய்வல்' என்றமையான் இதற்கு முன்னர்க் கூறிய அதிகாரங்களிலும் இவ்வதிகாரத்தும் எல்லாம் வழக்கிற்குஞ் செய்யுட்கும் வேண்டுவன கூறி, அவ்விரண்டும் பற்றிச் செய்யுள் நிகழும் ஆதலால் அச்செய்யுட்குரிய இலக்கணத்தையெல்லாம் இவ்வோத்தினுள் தொகுத்துக் கூறுகின்றார் என்றுணர்க. இங்ஙனங் கூறவே, முற்கூறிய ஓத்துக்களோடு இயைபுடைத்தாயிற்று.

இவ்வோத்தினுள் இத்தலைச் சூத்திரம்:- இவ்வோத்தினுள் மேற்கூறுகின்ற செய்யுட்கு உறுப்பாவன இவையென்று அவற்றது பெயரும் முறையும் தொகையும் கூறுகின்றது.

(இதன் பொருள்) மாத்திரை யென்றது எழுத்திற்கு உரித்தாக எழுத்ததிகாரத்தோதிய மாத்திரைகள் தத்தம் அளவின் இறந்து[1] பாவின் ஓசை வேறுபாடுகளை யுணர்த்தி விராஅய் நிற்கும் நிலையை; மாத்திரையென்றது மாத்திரையளவை என்பதூஉம், எழுத்தியல் என்றது எழுத்தியல் வகையை என்பதூஉம் மேலைச் சூத்திரத்தாற் பெறுக.

எழுத்தியல் வகையென்றது எழுத்ததிகாரத்துக் கூறிய எழுத்துக்கள் செய்யுட் கியலும் வகையை.

அசைவகை யென்றது இயலசையும் உரியசையும் என இரு வகையாம் அசைக் கூறுபாட்டினை.

யாத்தசீர் என்றது பொருள் பெறத் தொடர்ந்து நிற்குஞ் சீரை; எனவே அசையும் தனித்தனியே பொருள் பெறுவனவும் தனித்தனிப் பொருளின்றிச் சீராயவழிப் பொருள் பெறுவனவும் என இருவகையாம்; தேமா, சாத்தன் எனவரும்.[1]

---

1. இறந்து—மிகுந்து

1. விளக்கம் பேரா. உரை அடிக்குறிப்பிற் காண்க.

அடியென்றது அச்சீர் இரண்டும் பலவுந் தொடர்ந்ததோர் உறுப்பை.

யாப்பென்றது அவ்வடிதொறும் பொருளேற்று நிற்பச் செய்வதோர் செய்கையை.

மரபென்றது காலந்தொறும் இடந்தொறும் வழக்குத் திரிந்தவாற்றுக்கேற்ப வழுப்படாமற் செய்வதோர் முறைமையை.

தூக்கென்றது பாக்களைத் துணித்து நிறுத்தலை.

தொடை வகை யென்றது எழுத்துச் சொற் பொருள்களை எதிரெதிர் நிறீஇத் தொடுக்கின்ற தொடைப் பகுதிகளை.

நோக்கென்றது மாத்திரை முதலிய உறுப்புக்களையுடைத் தாய்க் கேட்போர்க்கு நோக்குதல்படச் செய்தலை. நோக்குதல்—பயன் கோடல்.

பாவென்றது இவ்வுறுப்புக்களை யுடைத்தாய்ச் சேட்புலத் திருந்து சொல்லும் பொருளுந் தெரியாமல் ஒருவன் கூறிய வழியும் இஃது என்ன செய்யுளென்றறிவதற்கு ஏதுவாகிப் பரந்துபடச் செய்வதோர் ஓசையை.

அளவியல் என்றது அடிவரையறையை.

திணையென்றது அகத்திணையும் புறத்திணையும் அறியச் செய்தலை.

கைகோள் என்றது அவ்வத்திணை யொழுக்கம் அறியச் செய்தலை.

கூற்றுவகை யென்றது அச்செய்யுட் கேட்டோரை இது கூறுகின்றோரின்னோரெனே அறிவித்தலை.

கூற்றிவை என்பது பாடமாயின் அஃது எண்ணிய மூன்றினையுந் தொகுத்ததாம்.

கேட்போர் என்றது இன்னார்க்குக் கூறுகின்றது இதுவெனத் தெரித்தலை.

களனென்றது இயற்கைப் புணர்ச்சியும் இடந்தலைப் பாடும் முதலியன உணரச்செய்தலை.

காலவகை யென்றது முக்காலத்தும் திணை நிகழ்ச்சிக் கண்ணே பொருள் நிகழ்ச்சியுணரக் கூறலை.

பயனென்றது சொல்லிய பொருளாற் பிறிதொன்று பயப்பச் செய்தலை.

மெய்ப்பாடென்றது சொற்கேட்டோர்க்குப் பொருள்கட் புலனாதலை.

எச்சவகை யென்றது சொல்லப்படாத ஒழிபும் தழீஇக் கொள்ளச் செய்தலை; அது கூற்றும் குறியும் என வருதலின் வகையென்றார்.

முன்னமென்றது கூறுவாரையும் கூறக் கேட்டோரையும் குறிப்பான் எல்லாரும் கருதும்படிச் செய்தலை.

பொருள் என்றது புலவன் தான் தோற்றிக் கொண்டு செய்வதோர் பொருண்மையை.

துறைவகை யென்றது முதலுங் கருவும் முறைபிறழ்ந்தாலும் இஃது இதன்பாற்படுமென்று ஒருதுறைப்படுத்தற் கேதுவாயதோர் கருவியுளதாகச் செய்தலை.

மாட்டென்றது அகன்றும் அணுகியுங் கிடந்த பொருள்களைக் கொண்டுவந்து தொடராகக் கூட்டி முடித்தலை.

வண்ணம் என்றது ஒரு பாவின்கண் ணிகழும் ஓசை விகற்பத்தை.

எனாஅ என்ற எல்லாம் எண்ணிடைச்சொல். ஏகாரங்கள் எண்ணுப் பொருட்டு[1].

யாப்பியல் வகையின் ஆறுதலையிட்ட அந்நாலைந்தும் என்றது யாப்பிலக்கணப் பகுதியால் அவ்வண்ணத்தொடுகூடிய இருபத்தாறும் எ-று.

'அம்மை... வகுத்துரைத்தனரே' என்றது அம்மை முதலிய எண்வகை வனப்பொடும் முற்கூறிய இருபத்தாறுந் தொகுத்து முப்பத்து நான்குறுப்பாக்கி இம்முப்பத்து நான்கும் நல்லிசைப் புலவர் செய்யப்படுஞ் செய்யுட்கு உறுப்பாமென்று கூறி, அங்ஙனம் இலக்கணமே கூறிவிடாதே அவற்றைத்தாஞ் செய்தல்

1. பொருளன என்றிருத்தல் வேண்டும்; ஏகாரங்கள் பன்மையாதலின்

வன்மையினமைந்து சுவடுபட வகுத்த[2] அவ்வத்துறையெல்லாம் போயினார் என்றவாறு.

செய்யுளுறுப்பெனக் கூறி வல்லிதின் வகுத்துரைத்தனரென மாறுக. இருபத்தாறு என்றும் எட்டு என்றும் இருவகையால் தொகை கூறியது. இருபத்தாறும் தனிநிலைச் செய்யுட்கு ஒன்றொன்றனை[3] இன்றியமையாவாய் வருதலும் அவ்வெட்டும் பல செய்யுட்டொடர்ந்த தொடர்நிலைச் செய்யுட்கே பெரும் பான்மையும் உறுப்பாய் வருதலும், தனிநிலைக்கண் ஒரோவொன் றாயும் வருதலும் அறிவித்தற்கு என்க. இவ்வுறுப்புக் குறையாமற் செய்யுட் செய்வார் நல்லிசைப்புலவர் என்பதூஉம், அடிவரையறை கூறியவற்றிற்கே இவ்விலக்கணமென்பதூஉம், அடிவரையறை யில்லா நூல் முதலிய ஆறற்கும் திணை முதலிய உறுப்பு ஆகா என்பதூஉம், அவற்றுள் நூலும் உரையும் ஒழிந்த நான்கும் செய்தார் இசைப்புலவர் ஆகார் என்பதூஉம் உணர்க. இனி நூலும் உரையும் செய்தாரும் நல்லிசைப்புலவர் என்பது பின்னர் அவற்றிற்கிலக்கணம் கூறும் வழி யுணர்க. உறுப்பெனவே உறுப் புடைச் செய்யுளும் அதன்கண் அடங்கும். உறுப்பினது கூட்டம் முதலாதலின்.[2]

இவ்வாசிரியர் தளயை உறுப்பாகக் கொள்ளாதது என்னை யெனின் :- தளையாவது சீரினது தொழிலாய்ப் பாக்களின் ஓசையைத் தட்டு இருசீ ரிணைந்ததாகும்; அவ்வாறிணைந்த இருசீரினையும் ஆசிரியரெல்லாம் இருசீர்க் குறளடியென அடியாகவே வகுத்துக் கொண்டார். ஆதலின் தளையென வேறோர் உறுப்பின்றாம். அன்றியும், தளையான் அடிவகுப் பாரும் உளராயினன்றே அதனை உறுப்பென்று கொள்ள வேண்டுவது; அங்ஙனம் வகுத்துக் கொள்ளாமையின் உறுப் பென்னாது சீரது தொழிலாய் ஓசையைத் தட்டு நிற்பதொன் றென்றே கொண்டார். அதனை யுறுப்பென் பார்க்குச் சீரான்

---

2. வகுத்தனர் என்றிருத்தல் வேண்டும்.
3. ஒன்றொன்றனை—ஒவ்வொன்றையும்

1. நூல், உரை, வாய்மொழி, பிசி, அங்கதம், முதுசொல் எனும் ஆறு.
2. முதல் என்பது சினையின் (உறுப்பு) கூட்டம் ஆதலின் சினையின் கூட்டமே முதல் ஆதலின் மாத்திரை முதலிய உறுப்புகளைக் கூறவே முதலாகிய செய்யுளும் கூறிய தாக அடங்கும்

அடி வகுத்தல் குற்றமாகும். தொல்காப்பியரோடு ஒருசாலை மாணாக்கராகிய காக்கைபாடினியாரும் உறுப்பென்னார்; பின் தோன்றிய காக்கைபாடினியார் முதலியோர் கொள்வர்; அது பொருந்தாது.

இச்சூத்திரத்துட் கூறிய முறையே முறையாமாறு வருகின்ற சூத்திரங்களின் பொருட்கிடையான் உய்த்துணர்க. வனப்பெட்டும் தனித்தனி வருமாறு தம்முள் இயையுடையமையும் ஆண்டுணர்க. இவ்வுறுப்பினை ஆசிரியன் குறியும் உலகத்தார் குறியுமாகக் கொள்க.[1] இவற்றை உயிரில்லாத கலவையுறுப்புப்போற் கொள்க.[2]

## சிவலிங்கனார்

உலக ஒழுக்கங்களைச் செய்யுளில் கூறுங்கால் எப்படிக் கூறி அமைக்க வேண்டும் என்பதை வற்புறுத்தவே தொல்காப்பியம் இயற்றப்பட்டது. எழுத்து, சொல், பொருள்களால் ஆவது செய்யுள் ஆதலின், எழுத்து பற்றி ஒன்பது இயல்களும், சொல் பற்றி ஒன்பது இயல்களும் பொருள்பற்றி ஒன்பது இயல்களும் ஆக எழுத்ததிகாரம் சொல்லதிகாரம் பொருளதிகாரம் என மூன்று பகுதியாக இயற்றப்பட்டது. பொருளதிகாரத்தில் அகத்திணை யியல் முதல் உவமையியல்வரை ஏழு இயல்களைக் கூறிய தொல் காப்பியர் அவை யாவும் கொள்ளும் செய்யுளைப்பற்றிக் கூறத் தொடங்கினார். எழுத்துச் சொற்பொருள்களாற் செய்யப்படுவது செய்யுளாம். அவையமைந்த செய்யுள் பற்றிய இயல் ஆதலின் இவ்வியல் செய்யுளியல் என்னும் பெயர்த்தாயிற்று.

எழுத்துச் சொற்பொருள்கள் பற்றி அல்வவ்வதிகாரத்துள் விளங்கக் கூறினாலும் அவற்றையே செய்யுள் உறுப்புகள் எனக் கொண்டு இச்சூத்திரத்து முப்பத்து நான்கு எனத் தொகை கொடுத்து அம்முப்பத்து நான்கினாலும் வருவது செய்யுள் என்றார் ஆசிரியர்.

---

1. ஆசிரியன் குறி—ஆசிரியன் இட்ட பெயர். உலகத்தார் குறி—உலகத்துப் புலவர் இட்ட பெயர்.

2. உயிர் உறுப்புகள் ... உயிருள்ளனவற்றுக்குரிய — கை, கால் முதலிய உறுப்புகள் கலவையுறுப்பு— ஒரு வீட்டுக்கு அமைந்த கல், சேறு, சீர் அமைப்பு முதலியன. இப்படியே பலபொருள் கலந்து அமைக்கப்படும் பொருள் களுக்கும் கொள்க. உயிரில்லாக் கலவையுறுப்புப் போல் செய்யுள் உறுப்புகளைக் கொள்க.

"மாத்திரை...... உரைத்தனரே"

இதன் பொருள் மாத்திரை முதலாக இழைபு ஈறாகக் கூறப்பட்ட முப்பத்து நான்கும் செய்யுட்கு உறுப்பாம் என்றவாறு.

## 1 மாத்திரை, 2 எழுத்துவகை

**311. அவற்றுள்**
**[1]மாத்திரை வகையும் எழுத்தியல் வகையும்**
**[2]மேற்கிளந் தனவே மென்மனார் புலவர். (2)**

ஆ,மொ. இல ,

**Of These,**

**The measurement of unit of time and the kingds of letters are above mentioned (in the book on letters) — So Say the Poets.**

**(The word 'eluththu' denotea both the Sound and written form of the letter. So the English word 'letter' is used here to denote the sound of the letter also).**

பி.சி.நூ.

இல.வி. 3712

எழுத்து மேல்கிளந்த இயல்பிற்றாகும்

யா, வி. 2

உயிரே மெய்யே உயிர்மெய் என்றா
குறிலே நெடிலே அளபெடை என்றா
வன்மை மென்மை இடைமை என்றா
சார்பில் தோன்றும் தன்மைய என்றா
ஐஔ மகரக் குறுக்கம் என்றாங்கு
ஐமூ வெழுத்தும் ஆமசைக் குறுப்பே

யா. கா. 4

குறில்நெடில் ஆவி குறுகிய மூவுயிர் ஆய்த மெய்யே
மறுவறு மூவினம் மைதீர் உயிர்மெய் மதிமருட்டும்...
அறிஞர் உரைத்த அளவும் அசைக்குறுப் பாவனவே.

---

1. மாத்திரையளவும்—பாடம். பேரா.நச்.
2. மேற்கிளந் தன்ன— பாடம். பேரா.நச்.

## இளம்பூரணர்

311, அவற்றுள்...........புலவர்.

(இள்-) என்-னின். மேற்சொல்லப்பட்டவற்றுள் மாத்திரை வகையு மெழுத்தியல் வகையு மேல் எழுத்ததிகாரத்துச் சொல்லப் பட்டனவென்று சொல்லுவர் புலவரென்றவாறு.

ஈண்டு வேறுபாடில்லை யென்றவாறு. அவையாவன குற்றெழுத் தொரு மாத்திரை; நெட்டெழுத்து இரண்டு மாத்திரை; உயிரளபெடை மூன்று மாத்திரை; குற்றியலிகரமுங் குற்றியலுகரமும் ஆய்தமு மெய்யும் ஒரோவொன்று அரை மாத்திரை. ஒற்றளபெடை ஒரு மாத்திரை; ஐகாரக் குறுக்கம் ஒரு மாத்திரை; மகரக் குறுக்கங் கால்மாத்திரை; ஏறிய உயிரி னளவே உயிர்மெய்க்களவு.

எழுத்தியலாவது—உயிரெழுத்து, மெய்யெழுத்து சார்பெழுத் தென மூன்று வகைப்படும். உயிரெழுத்து, குற்றெழுத்து, நெட் டெழுத்து, அளபெடையென மூவகைப்படும்.[1] மெய்யெழுத்து வல் லினம்,மெல்லினம், இடையினம் என மூவகைப்படும். சார்பெழுத்து குற்றியலிகரம் குற்றியலுகரம் ஆய்தமென மூவகைப்படும். மெய்யினுட் சிலவும் ஆய்தமும் அளபெடுக்கப் பெறும்.

குற்றெழுத்து அ.இ, உ, எ,ஒ. நெட்டெழுத்து. ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ. அளபெடை ஆஅ, ஈஇ, ஊஉ ஏஎ, ஐஇ, ஓஒ, ஔஉ. வல்லினம் கசடதபற, மெல்லினம் ஙஞணநமன, இடையினம் யரலவழள.குற்றியலுகர மாவது நெட்டெழுத்தின் பின்னரும் மூன் றெழுத்து முன்னான மொழியினும் வல்லெழுத்தை ஊர்ந்து வந்த உகரம். நாகு—நாக்கு;காசு—காச்சு; காடு—காட்டு;காது—காத்து;

---

1, இளம்பூரணர் அளபெடையெழுத்து எனத் தனியாக வேண்டுவர். அ-குற்றெழுத்து; ஆ-நெட்டெழுத்து;

ஆஅ-அளபெடையெழுத்து என்பது காண்க: இது பற்றி 'நீட்டம் வேண்டின் அவ்வள புடைய கூட்டி யெழூஉதல் என்மனார் புலவர்' (நூன் மரபு)

என்னும் சூத்திரத்திற்கு அவர் எழுதியவுரையான் அறியலாம்.

காபு— காப்பு; காறு— காற்று என இந்நிகரன. குற்றியலிகர மாவது இவ்வுகரந்திரிந்தது; கேண்மியா மகர மூர்ந்தது. பிறவு மன்ன. ஆய்தமாவது குற்றெழுத்திற்கும் வல்லெழுத்திற்கும் இடை வரும். அஃதாவது எஃகு எனவரும். ஒற்றளபெடை யாவதுமெல்லினமும் வயலளவும் ஆய்தமும் அளபெடுக்கும். அவை மங்ங்கலம், மஞ்ஞ்சு எனவரும்.

இனி உயிருமெய்யுங் கூடி உயிர் மெய்யெழுத்தாம். அவை ககர முதல் னகரவீறாகிய இருநூற்றெழுபத்தாறும் இன்னும் ஐகாரக் குறுக்கமும் மகரக்குறுக்கமும் என்பவுமுள. ஐகாரக் குறுக்கம் அளபெடையுந் தனியு மல்லாத வழிக் குறுகும். மகரக் குறுக்கம் ணகர, னகர ஒற்றின் பின்வரும். புணர்மொழிக்கண் வகரத்தின் மேனின்ற மகரங் குறுகும்.

(2)

**பேராசிரியர்**

314. அவற்றுண்..................புலவர்.

இது, நிறுத்தமுறையானே முதற்கண்ணின்ற மாத்திரையும் எழுத்தியலு முணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்: மாத்திரைகள் பல தொடர்ந்து செய்யுட் கண்விராய் நிற்கும் அள்வையும் எழுத்துக்களியற்றப்பட்டு எழுத் ததிகாரத்தின் வேறுபட்ட தொகையுமென்[1] இரண்டினமும் மேல் எழுத்தோத்தினுட் கூறப்படாதனவல்ல, அவையே. அவற்றை ஈண்டு வேண்டுமாற்றாற் கொள்க என்பான் மேற்கிளந்தவகை யிற் பிறழாமற் கொள்க என்றானென்பது.

'அன்ன' எனவே, இம் 'மாத்திரையளவும் எழுத்தியல் வகை யும்' வேறென்பதூஉம், வேறாயினும் ஆண்டுக் கூறியவற்றொடு வேறுபடாமைக் கொள்க வென்பதூம். உரைத்தானாம்; எனவே, எல்லா வழியும் வரையாது[2] எய்தற்பாலவாகிய மாத்திரைகள்,

---

1. எழுத்ததிகாரத்தில் எழுத்து முப்பத்து மூன்று எனத் தொகை கூற இச்செய்யுளியலில் பதினைந்து எனத் தொகை கூறுவது. இரண்டு இனம்—மாத்திரை, எழுத்து.

2. வரையாது—நீக்காது.

ஒரோவழி வரையப்படுமாயினும் அவை முற்கூறாத வேறுசில மாத்திரையுமல்ல, ஈண்டுப் பதினைந்து எழுத்தென்று கூறிப்[3] பயங்கோடுமாயினும் ஆண்டை முப்பத்து மூன்றெழுத்தின் வேறு படப் பிறந்தன சிலவெழுத்துமல்லவென்பான் 'மேற்கிளந்தன்ன' என்றானென்பது, மாத்திரையென்றொழியாது 'மாத்திரையள வும்' என்றதனான் அம்மாத்திரையை விராய்ச் செய்யும் அளவை ஈண்டுக் கூறினானென்பது கருத்து.

மற்று, எழுத்தியல் வகையினை மாட்டேற்றான் முப்பத்து மூன்றெனக் கொள்வதன்றிப் பதினைந்தென்று கொள்ளுமா றென்னையெனின், எழுத்தோத்தினுட் குறிலு நெடிலும் உயிரு மெய்யும் இனமூன்றுஞ் சார்பெழுத்து மூன்றுமெனப் பத்தும் இயல்புவகையான்[1] ஆண்டுப் படுத்தோதினான்,[2] உயிர் மெய்யும் உயிரளபெடையும் தத்தம் வகையாற் கூடுமாறும்,[3] ஐகார ஔகாரம் போலி வகையாற் குறுகுமாறும்,[4] யாழ் நூலகத்து ஒற்றிசை நீளுமாறும்,[5] ஆண்டுத் தோற்றுவாய் செய்தான்; செய் யவே, அவை ஈண்டுக் கூறும் எழுத்தியல் வகையோடொக்கு மென்று உய்த்துணர்ந்து கொள்ளவைத்தானென்பது. இவற் றோடு மகரக் குறுக்கமுங் கூட்டிப் பதினாறெழுத்து என்பாரு முளர். அதனாற் பயனென்னையெனின் [பாட்டுடைத் தலைவன்

---

3. பதினைந்து எழுத்து—"மற்று எழுத்தியல்...........உய்த் துணர்ந்துகொள்ள வைத்தான் என்பது" என்று பின்னர் எழுதுவதிற் காண்க.

1. இயல்பு வகை—பிறக்கும் இலக்கண வகை,

2. ஆண்டுப் படுத்தோதினான்—எழுத்ததிகாரத்துச்சேர்த்து ஓதினான்

3. உயிர்மெய் க்+அ—க எனக் கூடும். அளபெடை பலாஅ என ஆகார நெடிலும் அகரக் குறிலும் கூடும்.

4. ஐயர்—அய்யர் என்று வருவதில் 'ஐ'க்கு இரண்டு மாத் திரையுள்ளது. 'அய்' என்று போலியாக வந்தபோது ஒன்றரை மாத்திரையாகக் குறுகியது. ஔவை— அவ்வை என்பதும் அப்படியே. ஐகார ஒலிகளுக்கு குறுக் கங்கள் போலி என்பது பேராசிரியர் கருத்து.

5. அளபிறந் துயிர்த்தலும் ஒற்றிசை நீடலும், உளவென மொழிப இசையொடு சிவணிய, நரம்பின் மறைய என் மனார் புலவர் (எழுத்து, நூன்மரபு.)

கேட்டுக்குக் காரணமாமென்பர்.[6] மற்று உயிர்மெய்த்தொடரகத்து ஐந்தனையும் மேல் எழுத்தென்றிலனாகலான் ஈண்டு எழுத்தியல் வகையுள் எழுத்தாக்கி அடக்குமாறென்னையெனின்] ஈண்டு 'அன்ன' எனவே, ஆண்டு இரண்டெழுத்தின் கூட்டமெனவும்[7] மொழியெனவும் போலியெனவும்[8] கூறினானாயினும் அவற்றை எழுத்தியல்வகையெனப் பெயர் கொடுப்பவே ஆண்டு நின்ற வகையானே ஈண்டு எழுத்தெனப்படு மென்பதாயிற்று.

இதன் கருத்து :— 'இயல்' என்றதனான் இயற்றிக்கொள்ளும் வகையான் எழுத்து இனையதென்றானாம்.

'வகை' என்பதனான் முப்பத்து மூன்றினைக் குறிலும் நெடிலு மென்றற்றொடக்கத்துப் பெயர் வேறுபாட்டாற் பத்துவகைப்பட இயற்றுதலும் கூட்டவகையா னிரண்டும் போலிவகை யானிரண் டும் யாழ்நூல் வேண்டுவகையா னொன்றுமென ஐந்துவகையா னியற்றுதலுமென இருவகையுங் கொள்ளப்படும்; அல்லதூஉம், செய்யுட்கள் அவ்வெழுத்துவகையான்இன்னோசையவாக விராய்ச் செய்தலுங் கொள்க. மற்றளபெடையை மேல் மொழி யென்றான் ஈண்டெழுத்தென்றானாகலின் இதனை ஓரெழுத்தென்று கோடுமோ இரண்டெழுத்தென்று கோடுமோவெனின்,

''நெட்டெழுத் திம்ப ரொத்தகுற் றெழுத்தே.''

(தொல்—எழுத்—41)

என்று கூறியவாற்றான், ஆண்டு இரண்டெழுத்தெனக் கொள்ளக் கிடந்ததாயினும் முன்னர்ப்போக்கி,

'அளபெடை யசைநிலை யாகலு முரித்தே.'' (329)

என்றவழி, எழுத்து நிலைமையும் எய்துவிக்குமாகலான் எதிரது நோக்கி ஈண்டு ஓரெழுத்தென்று கோடுமென்பது.* இனி

---

6. ''அதனாற்பயன்...........காரணம் என்பர்''—விளக்கம் இல்லை.

7. உயிர்மெய்-உயிரும் மெய்யும் சேர்ந்த இரண்டெழுத்தின் கூட்டம்.

8. ஐ, ஔ தனி மொழியாக வரும். அய், அவ் எனப் போலி யாக வரும். அளபெடை மொழியில் வருவது. ஆதலின் ஐ, ஔ, அளபெடை என்பன மொழி எனப்பட்டன.

* ''மற்றளபெடையை......ஓரெழத்தென்று கோடும் என் பது''—எழுத்ததிகாரத்து அளபெடையை மொழியில் வரு வதால் மொழி என்றார் தொல்காப்பியர். இச்சூத்திரத்

அவற்றுட் குறிலும் நெடிலும் குற்றுகரமும் அசைக்குறுப்பாம்; மற்று,

"ஒற்றொடு வருதலொடு மெய்ப்பட நாடி." (315)

என்பதனான் ஒற்றும் அசைக் குறுப்பாகாவோவெனின் அச்சூத்திரத்தானன்றே அவை குறிலும் நெலும் அடுத்து வந்தும் வேறுபடாது நேர்நிரையாதலெய்தியது நோக்கி அவை அசைக்குறுப்பாகாவென்றதென்க.*

மற்று இடை நின்று நிரையாதலை விளக்காவோவெனின்,[1]- அன்னதோர் விதியுண்டாயினன்றே இவை இடைபுகுந்து விலக்க வேண்டுவதென மறுக்க. நெடிலும் அளபெடையிரண்டும் உயிரும் உயிர்மெய்யும் வல்லினமும் மெல்லினமும் இடையினமும் ஐகாரக்

---

தில் எழுத்தியல்வகை என எழுத்தில்அடக்கிக் கூறினார். மொழியில் வரும்போது 'பலாஅ' என்று (லா, அ என) இரண்டெழுத்தாகிறது. அதனால் அளபெடையை இரண்டெழுத்து என்று கொள்வதா எழுத்து என்பதால் ஓரெழுத்து என்று கொள்வதா என்பது வினா. விடை:— அளபெடை, நெட்டெழுத்தின் பின்னர் இனம் ஒத்த குற்றெழுத்து வரும் என்று கூறியதால் இரண்டெழுத்தென்று கொள்ளப்படுமானாலும், செய்யுளில் அளபெடையில் வரும் இனமொத்த குற்றெழுத்துத் தனி அசையாகவும் வரும் என்பதால் அளபெடை எழுத்தை ஓரெழுத்தாகக் கொள்ளல் வேண்டும். செய்யுளில் அலகிடும்போது அளபெடையறிய வரும் அ டையாள எழுத்தைத் தனியசையாகக் கூறலின் அளபெடை ஓரெழுத்தேயாம்.

* அ-நேரசை; அல்-ஒற்றடுத்த இதுவும் நேரசை.

கட-நிரையசை; கடல் ஒற்றடுத்த இதுவும் நிரையசை-எனவே ஒற்றுத் தனியாக அளபெடை எழுத்துப்போல அசையாவதில்லை.

1. 'கன்று' என்பதில் 'க'ன்' என்னும் ஒற்று இடையில் நின்று. 'கன்' என்பது நிரையாகும் என்பதை விலக்குதல் வேண்டாவோ எனின், ஒற்று அவ்வாறு நின்று (முன்னர் உள்ள எழுத்தோடு சேர்ந்து) நிலையாகும் என்னும் விதியிருந்தாலல்லவோ அவ்வாறு ஆகாது என விலக்க வேண்டும்.

குறுக்கமும் ஒளகாரக் குறுக்கமுமெனப் பத்துந் தொடைக்கு உறுப் பாம். குறிலும் நெடிலும் அளபெடையிரண்டும் இனம் மூன்றும் ஆய்தமும் வண்ணத்திற்கு உறுப்பாம். இங்ஙனமே வேறுபடவந்த பயனோக்கி எழுத்தினை இயற்றிக் கோடலின் 'எழுத்தியல் வகை' என்றானென்பது. அஃதெல், ஒற்றுங் குற்றிகரமும் ஈண் டோதிய தென்னையெனின், - ஒற்று அளபெடையான் அசை நிலையுஞ் சீர்நிலையுங் கோடலின் ஈண்டு ஒற்றுக் கூறினான். குற்றிகரமும் உயிராயினும் ஒற்றுப்போல எழுத்தெண்ணி அடி வகுக்குங்கால் எண்ணப்படா தென்றற்குக் கூறினானென்பது; அஃதேல்,

''ஒற்றெழுத் தியற்றே குற்றிய லிகரம்.'' (320)

என்பவாகலின், அதனை ஈண்டுத்தழாஅற்க வெனின், அக் கருத்தினால் அவ்வாறும் அமையுமென்பது; அற்றன்று, இதனை மேற்புள்ளி பெறுமென்றிலனாதலான் புள்ளிபெறுமென்றற்கும்,

''ஒற்றெழுத் தியற்றே குற்றிய லிகரம்.'' (320)

என்றானென்பது.[2]

இனி ஒரு சாரார் மாத்திரையென்றது எழுத்தல்லோசை யாகிய குறிப்பிசை கொண்டானென்பர்.

அக்குறிப்பிசை உருவாகவருஞ் சான்றோர் செய்யுள் யாண்டுங் காணாகையின் நாம் அது வேண்டாமாயினாம். சிறுபான்மை ஒரோவழி வரினும் அத்துணையானே அஃது இன்றியமையாத உறுப்போடு எண்ணப்படாதென மறுக்க. உறுப்பன்று என்றார்க் குக் குறிப்பிசை யாண்டுப் பெறுதுமெனின்,[1]

---

2. குற்றியலிகரம் மெய்யெழுத்தியல்பினது என்றலின் குற் றியலிகரம் மெய்யெழுத்தில் அடங்குமாதலின் இங்கு அத னைக் கூறவேண்டா என்பது வினா. விடை:- அவ்வாறு கொண்டால் அமையும் என்றாலும், மெய்யெழுத்தியல் பினது என்பது மெய்புள்ளி பெறுவது போலக் குற்றிய லிகரமும் புள்ளி பெறும் இயல்பினது என்னும் பொருளுக் கும் பொருந்தும் ஆதலின் கூறவேண்டும் என்பது.

1. குறிப்பிசையை உறுப்பன்று என்றார்க்குக் குறிப்பிசை எனபது ஒன்று உண்டு என்பது எவ்விடத்தில் பெறு வோம் எனின்.

''அசையுஞ் சீரு மிசையோடு சேர்த்தி.'' (323)

என்புழிப் பெறுதுமென்பது.

* இனி, 'எழுத்தியல் வகையும் மேற்கிளந் தன்ன'

என்பதனையும் எழுத்திலக்கணத்திற் றிரியாமற் செய்யுள் செய்க வென்றவாறென்ப வெனின், அஃதே கருத்தாயிற் சொல்லோத்தி னுள்ளும் எழுத்திலக்கணமாகிய மயக்கமும் நிலையும் முதலாகிய இலக்கணத்தில் திரியாமற் சொல்லாராய்தல் வேண்டுமெனவும் இவ்வதிகாரத்துள்ளும் 'எழுத்தியல் வகையுஞ் சொல்லியல் வகையும் மேற்கிளந் தன்ன' எனவுஞ் சூத்திரஞ் செய்வான்மன் ஆசிரிய னென மறுக்க.

மற்று, மாத்திரையளவைக்கு இலக்கணங் கூறுமினெனின்,— அதுவும்

''அசையுஞ் சீரு மிசையொடு சேர்த்தி.' (323)

என்புழி, வல்லோராறெனப் பாவொடு பொருந்தக் கொளக் கூறுதுமென்பது; அல்லதூஉம், மாத்திரையினை அளவைப்பட நிறுத்துக என்பதோ ரிலக்கணமாதலின் இங்ஙனம் வரையறை யுடைத்தாக நோக்கிச் செய்யுஞறுப்பென்றானாமென்பது.

மற்று, மாத்திரையினை அளவைப்பட நிறுத்தாக்காற் படுங் குற்றம் என்னையெனின், - அற்றன்று;

'வரகு வரகு வரகு வரகு' என்னும் அடியினை,

'பனாட்டுப் பனாட்டுப் பனாட்டுப் பனாட்டு'

---

* இனி......மறுக்க:- 'எழுத்தியல் வகையும் மேற்கிளந் தன்ன' என்பதற்கு, ''எழுத்தியல் வகையும் மேல் எழுத் ததிகாரத்திற் சொல்லப்பட்ட இயல்பையுடையன'' என்று பொருள் கொள்ளாமல், ''எழுத்திலக்கணத்தில் திரியாமல் செய்யுள் செய்க என்றவாறு'' எனப் பொருள் கொண்டால் என்னை என்ற வினாவுக்கு விடை, சொல் லதிகாரத்திலும் எழுத்தின் இலக்கணமாகிய மயக்கமும் நிலையும் திரியாமல் சொல் ஆய்தல் வேண்டும் என்று கூறுதல் வேண்டும். இவ்வதிகாரத்தும் எழுத்தியல் வகையும் சொல்லியல் வகையும் மேற்கிளந்தன்ன எனக் கூறுதல் வேண்டும். அவ்வாறு கூறாமையின் அது பொருளாகாது.

என நிறுத்தின் அது மாத்திரை வகையாற் சிதைவு பட்ட தாம்,[1]

'அம்ம வாழி கேளாய் தோழீ''

என்றாற் பின்னர் நின்ற இருசீரும் நெடிலாதல் இன்னா தென்றுந் தோழியெனப் பின்னர் நின்ற சீரைக் குறுக்கினவழி இன்னோசைத்தாமென்றும் அவ்வாறே செய்யுள்செய்ப.[2] பிறவுங் கொச்சகக் கலியுள்ளும் ஒழிந்தனவற்றுள்ளும் இவ்வாறே கண்டு கொள்க.[2]

## நச்சினார்க்கினியர்

2. அவற்றுள்....................புலவர்.

இது நிறுத்தமுறையானே மாத்திரையும் எழுத்தியலும் உணர்த்துகின்றது.

(இ—ள்) அவற்றுள் மாத்திரை அளவும்-முற்கூறியவற்றுள் மாத்திரையைச் செவி கருவியாக உணர்ந்து கொள்ளும்நிலையும், எழுத்தியல் வகையும்-முற்கூறிய முப்பத்து மூன்றெழுத்தும்[1] யாப்பிலக்கணத்திற்குப் பதினைந்து பெயரவாய் நடக்குங் கூறுபாடும், மேற்கிளந்தன்ன என்மனார் புலவர்-எழுத்தோத்திற் கூறிய இலக்கணத்தில் பிறழாமை வருமென்று கூறுவர் புலவர் எ-று.

---

1. 'வரகு' என்பதும் நிரை நேர்; 'பனாட்டுப்' என்பதும் நிரைநேர் என்றாலும் 'வரகு' என்பது மூன்று மாத்திரையும், 'பனாட்டுப்' என்பது ஐந்து மாத்திரையும் பெறுதலின் வரகு வரகு வரகு வரகு எனவரும் அடியினை நிரைநேர் என ஒன்றையே கருதி பனாட்டுப் பனாட்டுப் பனாட்டுப் பனாட்டு என அடியாக நிறுத்தின் மாத்திரை வேறுபடும். இதுவே குற்றம்.

2. 'அம்ம வாழி கேளாய் தோழீ' என்பதில் பின்னின்ற 'கேளாய்' என்பதும் 'தோழீ' என்பதும் நெடிலும் நெடிலுமாக உள்ளன. அவ்வடியை ஓசைபடக் கூறும்போது 'தோழீ' என்னும் விளிப்பொருள் தரும் சீரில் 'ழீ' என்னும் நெடில் ஓசையினிமை தாராமையின் அதைத் 'தோழி' எனக் குறுக்கி இன்னோசை படச் செய்யுள் செய்வர்.

ஈண்டு அளவென்றது எழுத்திலக்கணத்தில் எழுத்திற்குக் கூறிய மாத்திரைகள் தத்தம் ஓசைகளைப் புலப்படுத்தி நிற்கு மாறு தொடர்பு படுத்தி விராஅய் நிற்பச் செய்யும் நிலையை. அளந்து கோடலை; என்றது "அளபிறந் துயிர்த்தலு மொற் றிசை நீடலும்" (தொல்-எழுத்-நூன்-33) என்னுஞ் சூத்திரத் தானும் "குறுமையு நெடுமையு மளவிற் கோடலின்" (ஷை மொழி-17) என்னுஞ் சூத்திரத்தானும் செய்யுட்குரிய ஓசை தரு மெனக் கூறிய நெட்டெழுத்துக்களும் ஒற்றெழுத்துக்களும் தத்தம் பாவின்[2] ஓசையை

வேறுபடத் தந்து நிற்கும் என்றதாம். இவ்விரண்டு சூத்திரத் தோடும் மாத்திரையளவை மாட்டெறிந்தார்.[1] 'இவன் அளந்த அளவு[2] நன்று' என்றாற்போல, அளவு தொழின்மேல் நின் றது. இதனாலல்லது செய்யுள் வேறுபாடு உணரலாகாமையிற் சிறப்புறுப்பாக ஏனையுறுப்புக்களின் முன்னே கூறினார்.

(எ-டு) "வருவர்கொல் வயங்கிழாஅய் வலிப்பல்யான் கேளினி" (கலி-பாலை-10)

எனவும்;

"கடியவே கனங்குழாஅய் காடென்றா ரக்காட்டுள்"

(ஷை)

எனவும் குற்றெழுத்துக்களெல்லாம் நெட்டெழுத்தினை மாத்திரை மிகுத்து விராஅய் நின்றவாறு காண்க.[3]

"குரங்குளைப் பொலிந்த கொய்சுவற் புரவி" (அகம்-4) "பிடியூட்டிப் பின்னுண்ணுங் களிறெனவும் உரைத்தனரே" (கலி-பாலை-10) எனக் குற்றெழுத்துக்களெல்லாம் இடையில்

---

1. உயிர் 12, மெய் 18, சார்பு 3.

2 தாம் தாம் வந்துள்ள செய்யுளின்

1. மேற்கிளத்தன்ன என மாட்டெறிந்தார்.

2. அளவு—அளந்த தொழில்

3. வயங்கிழாஅய், கனங்குழாஅய் என்பனவற்றில் அள பெடையாக வந்த 'அ'கரக்குற்றெழுத்துகள் 'ழா' என்ற நெட்டெழுத்தின் இரண்டு மாத்திரையை மூன்று மாத்தி ரையாக மிகுத்துக் கலந்து வந்தன.

நின்ற ஒற்றெழுத்துக்களை மாத்திரைமிகுத்து விராஅய் நின்ற வாறு காண்க.[4]

இதுவும் எழுத்திற் சூத்திரங்களிரண்டும் ஆணை கூறிற்று.[5]

இனி எழுத்து முப்பத்து மூன்றனுட் சில எழுத்துக்களை உயிர் என்னும் பெயர் கொடுத்து அவற்றைக் குறிலும் நெடிலும் அளபெடையும், குற்றியலிகரமும், குற்றியலுகரமும், ஐகாரக் குறுக்கமும், ஔகாரக் குறுக்கமும் எனப் பெயர் வேறுபாடு கொடுத்து அதனோடு எட்டாக்கியும், சில எழுத்துக்களை மெய் என்னும் பெயர் கொடுத்து அவற்றை மெல்லினமும் வல்லினமும் இடையினமும், ஆய்தமும், ஒற்றளபெடையும் எனப் பெயர் வேறுபாடு கொடுத்து இதனோடு ஆறாக்கியும், இவையிரண்டுங் கூடியவற்றை உயிர்மெய் என வேறோர் பெயராக்கியும் மேற் கூறியவாறே பதினைந்து பெயரவாய் ஈண்டு நடக்கு மென்றற்கு 'எழுத்தியல்வகை' யென்றார்.

இவ்வெழுத்தினை எழுத்தினுட் கூறிய சூத்திரங்களோடு மாட்டெறிந்தார். அவை 'ஔகார விறுவாய்' (தொல்—எழுத்—நூன்-8) 'அ,இ,உ,எ, (ஷை-3) 'ஆ,ஈ,ஊ,ஏ' (ஷை-4) 'நீட்டம் வேண்டின்' (ஷை-6) 'அவைதாங், குற்றியலிகரம்' (ஷை-2) 'ஓரள பாகு மிடனுமாருண்டே' (ஷை-மொழி-24) 'வல்லெழுத்தென்ப' (ஷை-எழுத்-19) 'மெல்லெழுத்தென்ப' (ஷை-20) 'இடையெழுத் தென்ப' (ஷை-2) உயிர்மெய்யல்லன' (ஷை-மொழி-27) என்பன வாம். அளபெடையிரண்டும் எழுத்தாந்தன்மை மேலே பெறுதும்.

இவற்றுட் குறிலும் நெடிலும் குற்றுகரமும் அசைக்குறுப்பாம்.

ஒற்றடுத்த அசைகள் வேறுபடாமையின் ஒற்று அசைக் குறுப் பாகா; ஒற்றளபெடைக் குறுப்பாம்.

---

4. 'குரங்ங்குளை' என்பதில் ரகரமும் குகரமுமாகிய குற் றெழுத்துகள் தமக்கிடையில் நின்ற நகர ஒற்றை மாத்தி ரையில் மிகுமாறு ங்ங்எனச்செய்து கலந்து வந்தன. உண் ணுங்ங்களிறு என்பதிலும் அவ்வாறு காண்க.
5. இச்சூத்திரமும் எழுத்ததிகாரத்திற் கூறப்பட்ட, அள பிறந்துயிர்த்தலும்'(நூன் மரபு 33) என்பதும்,குறுமையும் நெடுமையும் (மொழிமரபு 17) என்பதும் ஆகிய இரண்டு சூத்திரங்களும் ஆசிரியர் தம் ஆணையாகக் கூறியன வாம்.

நெடிலும் அளபெடை யிரண்டும், உயிரும் உயிர்மெய்யும், மூவினமும், ஐகார ஔகாரக் குறுக்கமும் தொடைக் குறுப்பாம்.

குறிலும்,நெடிலும் அளபெடை யிரண்டும், மூவினமும், ஆய்தமும் வண்ணத்திற் குறுப்பாம்.

இவற்றை இயற்கையெழுத்துஞ் சார்பெழுத்தும் என இரண்டாகவும் வகுப்பர்.

(2)

**சிவலிங்கனார்**

'அவற்றுள்..............புலவர்'

இதன் பொருள் : மேற்சொல்லப்பட்ட செய்யுள் உறுப்புகள் முப்பத்து நான்கனுள் மாத்திரை அளவும் எழுத்துகளை இயற்றி (அமைத்து)க் கொண்ட வகையும் ஆகிய இரண்டும் இச்செய்யுளியலில் எழுத்ததிகாரத்திற் சொல்லப்பட்ட வற்றின் வேறுபாடுடையன போல் தோன்றினாலும் ஆங்குச் சொல்லப்பட்டனவற்றின் வேறுபட்டனவல்ல; அவையேயாம் என்று சொல்லுவர் புலவர் என்றவாறு .

அதாவது, ஐகார ஔகாரங்கள் இரண்டு மாத்திரை பெறும் என்றாலும், செய்யுளில் அதனிற் குறையும் என்பதும்; எழுத்துக்கள் யாவும் தனித்தனி மாத்திரையளவுடையன என்றாலும், மெய்யெழுத்துகள் தனித்து அசைநிலை யடைவதின்றி முன்னருள்ள எழுத்தோ டிணைந்தே வரும் என்பதும்; அளபெடை எழுத்துக்குத் தனித்து மாத்திரை கூறப்படினும், எழுத்துநிலையில் நெடில் தனி எழுத்தாகவும் அதன் அளவாகிய குறில் தனி எழுத்தாகவும் இயற்றிக் கொள்ளப்படுதலும்; ஆய்தம் ஒருகால் மெய் போலவும் ஒருகால் உயிர்போலவும் (அசைப்படுத்துங்கால்) கொள்ளப்படுதலும் ஆகிய மாறுபாடு கூறப்படினும் மாத்திரையளவும் எழுத்து வகைகளும் எழுத்ததிகாரத்துக் கூறப்பட்ட இலக்கணங்களில் மாறுபடுவனவல்ல என்பதாம்.

## 3. அசை இயலசை நேர், நிரை

**312. குறிலே நெடிலே குறிலிணை குறில்நெடில்**
**ஒற்றொடு வருதலொடு மெய்ப்பட நாடி**
**நேரும் நிரையு மென்றிசிற் பெயரே. (3)**

ஆ. மொ. இல.

The Short (Letter,) The long (letter), two short (letters) short and long (letters) either with the consonats on with out them make 'ner' and 'niral' respectively.

பி. இ. நூ.

யா. வி. 6, 8

நெடில் குறில் தனியாய் நின்றும் ஒற்றடுத்தும்
நடைபெறும் நேரசை நால்வகை யானே.

குறில்இணை குறில்நெடில் தனித்தும் ஒற்றடுத்தும்
நெறிமைறயின் நான்காய் வருநிரை யசையே.

யா. கா.

குறிலே நெடிலே குறிலிணை ஏணைக் குறில்நெடிலே
நெறியே வரினும் நிறைந்தொற்றடுப்பினும் நேர்நிரையென்று
அறிவேய் புரையு மென்தோளி உதாரணம் ஆழி வெள்வேல்
வெறியே சுறா நிறம் விண்டோய் விளாம் என்று வேண்டுவரே.

வீரசோழியம் 107.

குறிலும் நெடிலும் எனுமிவை நேரசை; குற்றெழுத்துப்
பெறின்முன் இவையே நிரையசையாம்; பிழைப்பில்லை
பின்பு ஒற்று இறினும்...

இல. வி. 714.

நெடிலும் குறிலும் தனித்தும் ஒற்றடுத்தும்
நடைபெறும் நேரசை நான்கும்; நீங்காக்
குறிலிணை குறில்நெடில் தனித்தும் ஒற்றடுத்தும்
நெறிவரு நிரையசை நான்கு மாகும்.

தொ. வி. 204

அசையே நேர்நிரை யாமிரு வகைய
நெடில்தனிக் குறில்மெய் நிகழ்குறி நேராம்
இணைக்குறில் குறில்நெடில் இவைநிரை யசையே

முத்துவீரியம் யாப்பு. 1, 2 யா. வி. 6, 8 காண்க.

## இளம்பூரணர்

312. குறிலே நெடிலே.............பெயரே.

என்பது நிறுத்தமுறையானே அசையாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) குறிலும் நெடிலுங் குறிலிணையுங் குறினெடிலுந் தனியேவரினும் ஒற்றொடுவரினும், ஆராயுங் காலத்து நேரசையும் நிரையசையுமா மென்றவாறு.

* இதுவு மொரு நிரனிரை; முந்துற்ற நான்குமொரு பொருளாய்ப் பின்னிரண்டாகி வரினும், முற்பட்டவையும் இரண்டாகப் பகுத்தலான். கோ, ழி, வேந், தன் என நான்கு நேரசையும், வெறி சுறா, நிறம், குரால், என நான்கும் நிரையசையும்,*

(30)

---

* இதுவும் ஒரு நிரல்நிரை—இப்படி அமைவதும் ஒருவகையான நிரல்நிரையாம். சூத்திரப் போக்குக் குறில், நெடில், குறிலிணை, குறில் நெடில் எனும் நான்கும் ஒற்றொடு வருதலை நாடின் அவை நேரும் நிரையும் ஆம் என்றிருத்தலின், குறிலொற்றும் நெடிலொற்றும் குறிலிணையொற்றும் குறில் நெடில் ஒற்றும் என்னும் நான்குமே நேராகவும் நிரையாகவும் வரும் என்றும் அவை பின்னர் முதலிரண்டும் நேரும் பின்னிரண்டும் நிரையும் என இருவகையாகி வரும் என்றும் கொள்ளக் கிடக்கின்றது. என்றாலும் முதலில் உள்ள குறிலும் நெடிலும் குறிலிணையும் குறில்நெடிலும் ஆகிய நான்கும் ஒற்றடுத்து வராத நிலையிலும் குறிலும் நெடிலும் நேராகவும் குறிலிணையும் குறில் நெடிலும் நிரையாகவும் பகுக்கப்படும் ஆதலின் இதுவும் ஒரு நிரல்நிரை என்றார். குறிலும் நெடிலும் ஒற்றடாது வரினும் ஒற்றடுத்து வரினும் நேர்; குறிலிணையும் குறில் நெடிலும் தனித்து வரினும் ஒற்றடுத்து வரினும் நிரை.

* நிரையசையும் ஆம் என்க.

## பேராசிரியர்

315. குறிலே நெடிலே..............பெயரே.

இது, நிறுத்த முறையானே அசைவகை யுணர்த்துதல் நுதலிற்று.

இதன்பொருள்:- குறிலும் நெடிலும் தனித்து வந்தும், குறில் [இரண்டு] இணைந்து வந்துங் குறிற்பின்னர் நெடில் இணைந்து வந்தும் அவை ஒற்றடுத்தும் முறையானே நேர்நிரை யாகை யானே நேரசையும் நிரையசையுமென்றாம் என்றவாறு.

''குறிலே நெடிலே யொற்றொடு வருதலொடு.'' எனவும்,

''குறிலிணை குறினெடி லொற்றொடு வருதலொடு.''

எனவும், வேறு நிரனிறீஇப் பொருளுரைக்க. 'மெய்ப்பட நாடி' என்பது பொருள்பெற ஆராய்ந்து; எனவே, இப் பெயர் ஆட்சிகாரணமேயன்றிக் குணங்காரணமாகலுமுடைய வென்ற வாறு.[1] உயிரில் லெழுத் தல்லாதன (356) தனித்து நிற்றலின் இயலசையென்னும் பொருள்பட நேரசையென்றாயிற்று.[2]

அவை இரண்டு நிரைதலின் இணையசை யென்னும் பொருள் பட நிரையசை யென்றாயிற்று;[3] அல்லதூஉம், 'மெய்ப்பட நாடி' என்றதனான் அவ்வாய்பாடே அவற்றுக்குங் காரணமென்பதூஉங்

---

1. ஆட்சி காரணமாவது யாப்பிலக்கண நூலார் நேர்நிரை என வாய்ப்பாடு கொண்டு கூறியாள்வது.
குணம்காரணமாவது ஓசையமைதி.

2. உயிரெழுத்து-அ முதல் ஔ வரையுள்ளன. அல்லாதன மெய், குற்றியலுகரம் குற்றியலிகரம் ஆய்தம் என்பன. இம்மூன்றும் உயிர் இல்லா எழுத்துகள். எனவே உயிர் இல் எழுத்து அல்லாதன என்றது உயிரெழுத்தையும் உயிர்மெய் எழுத்தையும் ஆம் இவ்விரண்டே தனித்து நிற்பன. மற்றை மூன்றும் மெய் உயிரைச் சார்வதும் குற்றியலிகரம் குற்றியலுகரம் ஆய்தம் தனித்து நில்லாது சார்ந்து வருதலும் உள. இயலசை-இயல்பாக அமையும் அசை. நேர்மையான அசை.

3. நிரை-வரிசை. இரண்டெழுத்து வரிசையாக இணைதலின் நிரையசை

கொள்க. 'உடம்பொடு புணர்த்தல்' (665) என்பதனால் உதாரண முங் கூறியவாறு[4]. அவை நேர்நிரையெனச் சொல்லிக் கண்டு கொள்க அ,ஆ, எனவும், அல், ஆல் எனவும்; பல, பலா எனவும்; புகர், புகார்எனவும், பிறவும் இவ்வாறு வருவனவெல்லாங் கொள்க.

மற்று, குறினெடிலென எழுத்தாக ஓதிய தென்னை? சொல் லாயவழி அசையாகாவோ வெனின்,- அவை ஒற்றொடு வருத லென்றதனானே, சொல்லாதலும் நேர்ந்தானாகவே அவை இரு வாற்றானும் அசையாமென்பது சீரின் றன்மைக்கண் வந்தது.[5]

'உள் ளார் தோ ழி' என நேரசை நான்கும் வந்தன.

'வரி வரால் கலா வலின்' என நிரையசை நான்கும் வந்தன.

(3)

## நச்சினார்க்கினியர்

3. குறிலே நெடிலே..................பெயரே.

இது நிறுத்த முறையானே அசை கூறுகின்றது.

(இ-ன்) குறிலும் நெடிலும் தனித்து வந்தும், குறிலிரண்டு இணைந்து வந்தும், குறிற்பின்னர் நெடிலிணைந்து வந்தும், பின்னர் இந்நான்கும் ஒற்றொடு வருதலோடே பொருள்பெற ஆராய்ந்து நிரனிறை வகையான் நேரசையும் நிரையசையும் என்று பெயர் கூறினார் ஆசிரியர் எ-று.

---

4. உடம்பொடு புணர்த்தல்: ஒன்றன் இலக்கணம் சொல் லும் போதே வேண்டிய ஓர் இலக்கணத்தையும் பெறு மாறு அமைத்தல். இச்சூத்திரத்தில் நேரசை நிரையசை யாமாறு கூறினும் உதாரணம் கூறவில்லை. என்றாலும் நேர் நிரை என்று வாய்பாடு கூறியதனால் அவ்வாய் பாடே உதாரணமாம் எனப் பெற வைத்துள்ளமை காண லாம். நேரசைக்கு நேர் என்பதும் நிரையசைக்கு நிரை என்பதுமே உதாரணங்களாம்.

5. எழுத்தாலும் அசைவரும் சொல்லாலும் அசைவரும் என் பதற்காக ஒற்றொடு வருதலை ஆசிரியர் கூறினார். 'க' இது எழுத்தசை. கல் இது ஒற்றொடு வந்தது; சொல் லசை. சீரின் தன்மைக்கண் அசையாம் என்பது எனக் கொள்க.

குறிலும் நெடிலும் தம்முள் மாத்திரை யொவ்வாவேனும் அவற்றின் மாத்திரையை நோக்காது எழுத்தாந்தன்மை நோக்கி இரண்டற்கும் ஒரோ வோரலகு பெறுமென்றார். இது குறிலிணைக்குங் குறினெடிற்கும் ஒக்கும்.*

நேரசை நிரையசை என்ற பெயர், ஆட்சியும் குணமும் காரணமாகப் பெற்ற பெயர். இரண்டெழுத்தானாகாது ஓரெழுத்தானாதலின் நேரியதன்றே; அதனான் நேரிய அசை நேரசை என்றாயிற்று. 'உயிரிலெழுத்தும் எண்ணப் படாஅ' (தொல், செய்-44) என்றலின் எண்ணப்படாத ஒற்றுக்கள் பயன்படாது அசைந்து நிற்றலின் அசையென்னும் பெயரும் எய்திற்று. இரண்டெழுத்து நிரைதலின் இணையசையென்னும் பொருள்பட நிரையசையென்றாயிற்று.

(எ-டு) அ, ஆ, அல், ஆல் எனவும்; பல, பலா, புகர், புகார் எனவும் வரும்.

ஒற்றுக்கள் எழுத்தாய் நின்று அலகு பெறுதற்குரிய வல்லவென்பது மொழி மரபின் கண்ணே 'மொழிப்படுத் திசைப்பினும்' (20) என்பதன்கட் கூறிய வாற்றான் உணர்க.*

குறில் நெடில் என எழுத்தாக ஓதிற்றேனும் 'நெட்டெழுத் தேழே யோரெழுத் தொருமொழி (ஷை-10) என்றதனால் நெடில் சொல்லாந் தன்மையும் 'குற்றெழுத் தைந்து மொழிநிறை பிலவே' (ஷை-11)என்றதனாற் குறிலும் சிறுபான்மை சொல்லாந் தன்மையும் பெறுதும்; அன்றியும் ஒற்றுக் கூறினமையாலும் பெறுதும்.

---

* அ, ஆ என ஒரு மாத்திரையும் இரண்டு மாத்திரையும் பெறினும் தனித்தனி ஓர் எழுத்தெனப்படுதலின் மாத்திரையை நோக்காது எழுத்தை நோக்கி நேர் என ஓர் அலகு பெறும் என்றார். பல, பலா என்பனவும் மாத்திரையால் இரண்டும் மூன்றுமாக வேறுபடினும் எழுத்தெண்ண இரண்டு எனப்படுதலின் நிரை என ஓரலகு பெறும் என்றார்.

* மொழிப்படுத் திசைப்பினும் தெரிந்துவே றிசைப்பினும் எழுத்தியல் திரியா என்மனார் புலவர்.

(இதன், நச். உரை)

'உள் ளார் தோ ழி' என நேரசை நான்கும் 'வரி வரால் கலா வலின் என நிரையசை நான்கும் வந்தன.

## சிவலிங்கனார்

குறிலே.................பெயரே.

இ-ள்: தனிக்குறிலும் தனிக்குறில் ஒற்றும், தனிநெடிலும் நெடில் ஒற்றும் நேரசையாம். குறில்இணையும் குறிலிணை யொற்றும், குறில்நெடிலும் குறில் நெடில் ஒற்றும் நிரையசை யாம்.

உதாரணம்: க, கல், ஆ, ஆல், பல, பலன், பலா, பலாம்.

### உரியசை-நேர்பு நிரைபு

313. இருவகை [1]உகரமோ டியைந்தவை வரினே
நேர்பு நிரைபும் ஆகும் என்ப
* குறிலிணை உகரம் அல்வழி யான (4)

ஆ. மொ. இல.

They say that is the two Kinds of 'u' join them in their formation, they become 'nerpu' and 'niraipu'

Except the joining of 'u' with the short letters in pair.

## இளம்பூரணர்

313. இருவகை உகரமோ..............யான.

இதுவுமது.

(இ-ள்) மேற்சொல்லப்பட்ட இரண்டசையுங் குற்றியலுகரமு மல்லாத முற்றியலுகரமும்[1] பொருந்திவரின், நேர்பசையு நிரை பசையு மெனப் பெயராகும்; அவ்வழிக் குற்றெழுத்தொடு பொருந் தின உகரமல்லாத விடத்தென்றவாறு.[2]

காது, காற்று, கன்று; காவு, சார்வு, கல்லு என்பன நேர்பசை. வரகு, அரக்கு, மலாடு, பனாட்டு, கதவு, புணர்வு, உருமு, வினாவு என்பன நிரைபசை, தொகுத்து நோக்குழி நேர், நிரை

---

1. உகரமொடு—நச். பாடம்.

* இவ்வடியைத் தனிச்சூத்திரமாகக் கொள்வர் பேராசிரியர், நச்சினார்க்கினியர்.

1. குற்றியலுகரமும் அஃதல்லாத முற்றியலுகரமும் என்க.
2. அது, விழு போல வருவன அல்லாதவிடத்து. இவை நிரையாகிவிடும்.

நேர்பு, நிரைபு என்பன தாமே யுதாரணமாம். அஃதேல் நேர் பசை நிரைபசையெனக் காக்கைபாடினியார் முதலாகிய ஒரு சாராசிரியர் கொண்டிலரா லெனின், அவர் அதனை யிரண்டசை யாக்கி யுரைத்தாராயினும் அதனை முடிய நிறுத்தராது, வெண்பா வீற்றின்கண் வந்த குற்றுகர நேரீற் றியற்சீரைத் தேமா புளிமா என்னும் உதாரணத்தான் ஓசையூட்டிற் செப்பலோசை குன்று மென்றஞ்சி, காசு பிறப்பென உகரவீற்றா னுதாரணங் காட்டின மையானும், சீருந்தளையுங் கெடுவழிக் குற்றியலுகரம் அலகு பெறாதென்றமையானும், வெண்பா வீற்றினு முற்றுகரமுஞ் சிறு பான்மை வருமென உடன்பட்டமையானும், நேர்பசை நிரைபசை யென்று வருதல் வலியுடைத்தென்று கொள்க. அவை செய்யுளீற் றின்கண் வருமாறு;

'பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவனடி சேரா தார்.'[3] (குறள்-10)

'வேண்டுதல்வேண் டாமை இலான்அடி சேர்ந்தார்க்
கியாண்டும் இடும்பை இல.'[4] (குறள்-4)

'இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.'[5] (குறள்-5)

'தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லான்
மனக்கவலை மாற்றல் அரிது.'[6] (குறள்-7)

எனவரும். பிறவுமன்ன.

அலகிடுங்கால் நேரசை ஓரலகு; நிரையசை யிரண்டலகு; நேர்பசை மூன்றலகு; நிரையசை நான்கலகு பெறும்.

(4)

## பேராசிரியர்

316. இருவகை யுகரமோ................மென்ப.

இது சொல்லாத அசைக்கூறுஞ்[1] சொல்லுகின்றது.

---

3. தார்—நேர்
4. இல—நிரை
5. மாட்டு—நேர்பு
6. அரிது—நிரைபு.
1. அசைக்கூறு—அசைவகை.

இதன் பொருள் :- இருவகை யுகர மென்பன; குற்றுகர முற்றுகரங்கள்; அவற்றோடு மேற்கூறிய நேரசையும் நிரையசையும் ஒரு சொல் விழுக்காடுபட இயைந்துவரின் நிறுத்த முறையானே நேரசையோ டொன்றி வந்த குற்றுகரமும் அதனோடு ஒன்றி வந்த முற்றுகரமும் நேர்பசையெனப்படும்; நிரையசையோ டொன்றி வந்த குற்றுகரமும் அதனோடொன்றி வந்த முற்றுகரமும் நிரைபசை எனப்படும் என்றவாறு.

''இயைந்து'' என்றான், இருவகை உகரமும் [இரு] பிளவு படாது ஒன்றாகி வரல்வேண்டும். அங்ஙனம் அசையாங்கா லென்றற்கு இருவகை உகரமும் ஒருகாலத்து ஒன்றன்பின் வாரா,[2] வேறு வேறு வருமென்பது. இருவகை உகரமும் இறுதிக் கண் நின்று அசையாக்கு மென்பதென்னை பெறுமாறெனின்,- குற்றுகரம் ஈற்றுக்கணல்லது[3] வாராமையானும்,

''நிற்ற லின்றே யீற்றடி மருங்கினும்'' (321)[4]

என்பதனாலும் பெறுதுமென்பது; அல்லதூஉம், நுந்தை யென்னும் முதற்கட் குற்றுகரம் இறுதிக்கண் நேரசையல்லது நிரையசை அடுத்து வருதலின்மையானும்[5] அது பெறுது மென்பது. முன்னர் நேரசை நான்கும் நிரையசை நான்குமென எண்வகையான் அசை கூறி அவற்றுப் பின் இருவகை யுகரமும் வருமெனவே, அவை குற்றுகரத்தோடு எட்டும் முற்றுகரத்தோடு எட்டுமாகப் பதினாறு உதாரணப் பகுதியவாய்ச் சென்றதேனும், அவற்றுட் குற்றெழுத்துப் பின்வரும் உகரம் நேர்பசையாகா தென்பது [6]

---

2. ஒரே சொல்லில் அடுத்து வாரா.

3. மொழியிறுதிக்கண் அல்லது,

4. அடியிறுதியிலும் முற்றுகரம் வாராது. புல்லு, அருளு என்பனபோல்வரின் அவை இயல்பான முற்றுகரம் அல்ல. புல், அருள் என்பனவற்றில் வந்த விகார உகரம்.

5. நுந்தை என்பதிலுள்ள நு என்னும் குற்றியலுகரம் தனக்கு முன்னர் நேரசையோ அல்லது நிரையசையோ சேர்ந்து நேர்பசையாகவோ நிரைபசையாகவோ வருதல் இன்மையானும்.

6. எனவே பதினைந்தேயாம். அது, கரு முதலியன குற்றெழுத்துப் பின் வந்த உகரம். அவை நிரை எனப் படுமேயன்றி நேர்பசையாகா.

"குறிலிணை யுகர மல்வழியான." (317)

என்புழிச் சொல்லுதும்; ஒழிந்தன குற்றுகர நேர்பசை மூன்றும் நிரைபசை நான்குமாயின.

உதாரணம்: வண்டு, நாகு, காம்பு எனவும், வரகு, குரங்கு மலாடு, மலாட்டு எனவும் இவை குற்றுகரம் அடுத்து நேர்பும் நிரைபும் வந்தவாறு.

இனி, முற்றுகரம் இரண்டசைப்[7] பின்னும் வருங்காற் குறி லொற்றின் பின்னும் நெடிற்பின்னுமென நேரசைக்கு இரண்டல்ல தாகாது. நிரையசைக்கண்ணும் குறிலிணைப் பின்னும குறினெடிற் பின்னுமல்ல தாகாது, உதாரணம்; மின்னு, நாணு எனவும், உருமு, குலாவு எனவும் வரும். வாழ்வு, தாழ்வு என நெடி லொற்றின் பின்னும் முற்றுகரம் வந்ததாலெனின்,— அவை ஆகா வென்பதூஉம் இக்காட்டிய நான்குமே ஆவனவென்பதூஉம் முன்னர்,

"நிற்ற லின்றே யீற்றடி மருங்கினும்." (321)

என்புழிச் சொல்லுதும்.

இனி, ஒரு சாரார் நேர்பசை நிரைபசையென்பன வேண்டா வென்ப; என்னை? குற்றுகர முற்றுகரங்களை வேறாக்கி அலகிட அமையாதே? 'ஞாயிறு' எனக்குற்றுகரங் குறிலிணையாய் அலகு பெறுமாறெனக் குற்றங் கூறுப. முற்றுகரமும் 'தேமா' என நேரசையாயிற்றுப்போல 'மின்னு' என்ற வழியும் வேறலகு பெற அமையுமென்பது;[8] அற்றன்று, குற்றுகரத்தினைக் குற்றெழுத்தென்பது வேறு. குற்றுகரம் வேண்டாதாரும், என்றார்க்கு வேண்டினானையுங் குற்றங் கூறுவரவர்; என்னை?

---

7. நேரசை, நிரையசை.

8. இனி...அமையும் என்பது: "ஞாயிறு என்பதில் 'று' என்பது 'யிறு' எனக் குறிலிணையாய் அலகு பெறும் ஆகலானும், முற்றுகரமும் 'மின்னு' என நின்ற வழியும் தேமா என நேரசையாயிற்றுப்போல வேறு தனி அலகு பெற அமையும் ஆதலானும் குற்றுகர முற்றுகரங்களை வேறாக்கி (வேறு தனியெழுத்தாக்க) அலகிட அமையாதோ? நேர்பசை நிரைபசை என்பன வேண்டா என அவற்றை வேண்டுவாரைக் குற்றம் கூறும்" என்று தொடர்களை மாற்றிக் கொள்க. அலகு பெறுமாறு—அலகு பெறும் ஆகலான்.

குற்றியலுகரம் அரை மாத்திரைத்தாகலின் ஒற்றுப்போல ஓரசையுள் ஒடுக்கி அலகிடப்படும். அற்றன்றேற் குற்றெழுத் தாக்கி அலகு வைக்கவே அமையுமென்பதாம். அவர் கருத்து[9] அதற்கு விடை :- குற்றுகரம் ஒற்றுப் போன்று ஒடுங்கி நில்லாது; என்னை? தன்னான் ஊரப்பட்ட ஒற்றுந் தானுமாகி அரை மாத் திரைத்தாகியும் ஒடுங்கி இசையாது அகன்று இசைக்கும். அதனால் ஒற்றென்றலும் ஆகாது.[10] பின்னும் ஒரு மாத்திரைத்து ஆகாமையிற் குற்றெழுத்தெனலுமாகாது;[11] மற்று, அதனான் அதனை ஒற்றென அடக்கார்; குற்றெழுத்தென ஏற்று அலகு கொள்ளார் இனி அதனைச் செயற்பாலதோர் அசை யாக்குத லென்பது.[12] அவை வண்டு, கொண்டி என ஓசை யொவ்வாமை செவி கருவியாக உணர்ந்து கொள்க,[13] அஃதேல்,

---

9. அற்றன்று......அவர் கருத்து -: குற்றியலுகரம் என்பது ஒற்று விரும்பாதவர் குற்றுகரத்தைக் குற்றெழுத் தென்றே கொள்வர். அதனான் நேர்பசை நிரைபசை வேண்டா என்பாரும் உளர். குற்றியலுகரத்தை வேண டாதவர் அதை வேண்டியவர்க்குப் பின்வருமாறு குற்றம் கூறுவர். 'குற்றியலுகரம் அரை மாத்திரையுடையது. ஆதலின் அரை மாத்திரையுடைய மெய்யெழுத்துபோலக் கொண்டு அதனை முன்னர் உள்ள எழுத்துடன் ஒடுக்கி (அதற்கு அலகின்றி) அலகிடப்படும். (கன்று என்பதில் 'று' மெய்யெனக் கொண்டு கன்று என்பது நேர் என்றே அலகிடப்படும்) அவ்வாறலகிடல் இல்லையாதலின் அது பொருந்தாது.'' என்பது அவர்க்குக் கூறும் குற்றம். அதனால் குற்றுகரத்தைக் குற்றெழுத்தாக்கிட அலகிட அமையும்.

10. நாடு என்பதில் 'டு எனும் குற்றுகரம் 'நாட்' என்பது போல ஒற்றாகாமல் நா, டு எனத் தனி நின்று அலகிடப்படலின் மெய்யெழுத்தாகாது.

11. நாடு என்பதில் 'டு' குற்றியலுகரமாக அரை மாத்திரை பெறுலின் ஒரு மாத்திரை பெறாமையின் ஒரு மாத்திரை யுடைய குற்றெழுத்தும் ஆகாது. அதனால் அதற்கு அலகும் கொள்ளமாட்டார்.

12. எப்படியும் அக்குற்றியலுகரத்தை அசைப்படுத்தியாக வேண்டி அதனை நேர்பசை நிரைபசை எனத் தனியாக வேண்டியமைத்தார்.

13. வண்டு என்பதில் 'டு' அரை மாத்திரையாவதையும், கொண்டி என்பதில் 'டி' ஒரு மாத்திரையாவதையும் ஒலித்துச் செவி கருவியாக உணர்க.

'ஞாயிறு வலியது' என்றவழிக் குறிலிணையுகரமெனக் குற்றெழுத் தாக்குவது எற்றுக்கெனின், அளபெடையை ஓசையிற் சிதையாது. 'நிலப்படையுள் அலகு சிதைத்தாற்போலக் குற்றுகரத்தைக் குற்றெழுத்துப்போல அலகு பெறுமென்பது இலக்கணமில் லதோர் வழுவமைதி தானாயதனை இலக்கணமாக ஓர்த்துக் கொண்டு இலக்கண வகையாற் குற்றுகரமாதலை விலக்குவாரும் உளரோவென மறுக்க.[14] அஃதாக, முற்றுகரம் ஒரு மாத்திரை யாதலிற் குற்றெழுத்தாக்கி நேரும் நிரையும் ஆகப் பெறாவோ வெனிற் பெறா; என்னை?

"வண்டு வண்டு வண்டு வண்டு."

என நின்றவழிப் பிறந்த அகவலோசை,

"மின்னு மின்னு மின்னு மின்னு."

என நின்ற வழியும் பெறப்படுமாதலின், இதுவும் அது பட்டதே பட்டு அவ்வசையே பெறு மன்றானென்பது;அல்லதூஉம், வெண்பாட்டீற்றடி "பண்டு" எனக் குற்றுகர வீற்றான் இற்றவழி 'கோலு' என முற்றுகர வீற்றான் இறுமாயினும் ஒத்தவோசையாம்.

இனி, உகரவீறல்லாத தேமா வென்பதனான் வெண்பா முடியாவென்பர்; அதனாலுங் குற்றுகரத்தின் செய்கை முற்று கரத்திற்கும் வேண்டி நேர்பு நிரைபுகொண்டானென்பது. அற் றன்றியுங் குற்றுகரஞ் சார்ந்து தோன்றுமாறு போல அம்முற்று கரமும் வருமொழி காரணமாக நிலைமொழி சார்ந்து தோன்றுத

---

14. அஃதேல், ஞாயிறு...மறுக்க: குற்றுகரம் தனி எழுத்தாகி அலகு பெறும் என்பது இலக்கணம் இல்லை. ஆனால் வலியது என்பதில் து என்பது யகரத்துடன் சேர்ந்து யது என நிரை என அலகு பெறும். இவ்வாறு அலகு பெறு வது இலக்கண வழுவமைதியாம். இவ்வழுவமைதியையே இலக்கணமாகக் கொண்டு குற்றுகரம் ஆகவுள்ளதை குற்றுகரமில்லை என்று விலக்குவார் உளரோ? விலக்கு வாரில்லை. குற்றுகரம் அலகிடப்படுவது எதுபோல் எனின் ஓசை வேறுபாடில்லாத அளபெடையினைத் தனி யெழுத்துபோல அலகிடல் போல என்க.

நிலப்படையுள் அலகு சிதைத்தாற்போல:-நிலப்படையுள் என்பது அளபெடையுள் என்றிருத்தல் வேண்டும்.

லொப்புமை நோக்கியும் அதனைக் குற்றுகரம் போல ஓரசைக்கு[15] உறுப்பாம் என்றானென்பது.[16]

'எழுத்தள வெஞ்சினுஞ் சீர்நிலை தானே
குன்றலு மிகுதலு மில்லென மொழிப. (355)

என்பதனான் அவை அவ்வாறாதல் அறிந்துகொள்க. இவையும்[17] ஆட்சியுங் குணமுங் காரணமாகப் பெற்றபெயர்.
ஆட்சி.

"நிரையவ ணிற்பி னேரு நேர்பும்." (387) எனவும்,

"நேரீற் றியற்சீர் நிரையு நிரைபும்." (386) எனவும்,

வருமென்பது.[18] இருவகை யுகரமும் அடைந்து வந்த இயலசை யிரண்டும் நேர்பும் நிரைபுமென்றாலும் நேரும் நிரையுமென்னும் (ஒத்த) பொருண்மையவே யாகலான் அவற்றது[19] பெயரான் இவற்றையும்[20] பெயர் கொடுத்தான்[21] ஆகுபெயராக்கியென்பது.[22]

---

15. ஓரசை - நேர்பு, நிரைபு
16. "அற்றன்றியும்....என்றான் என்பது":- குற்றியலுகரம் மொழியிறுதிக்கண் உள்ள வல்லெழுத்தைச் சார்ந்து வருதல்போல குற்றொற்றின் பின்னும் நெடிற்பின்னும் குறிலிணைப் பின்னும் குறில் நெடிற்பின்னும் முற்றுகரம் இயல்பாய் வராமல் வருமொழி நோக்கிப் புணர்ச்சி விதியைச் சார்ந்து வருதலின் குற்றியலுகரம் போலச் சார்புடையதாயிற்று. மின், நாண், உரும், குலா என்பன மின்னு, நாணு, உருமு, குலாவு என வருவது இருமொழி புணர்ச்சியில் என்க.
17. நேர்பு அசையும் நிரைபு அசையும்
18. ஆசிரியர் தொல்காப்பியராலேயே ஆளப்பட்டு வரும் என்பது.
19. அவற்றது பெயரான்—நேர் நிரை என்பவற்றின் பெயரான்.
20. இவற்றையும் - நேர்பு நிரைபு என்பவற்றையும்.
21. பெயர் கொடுத்தான் - நேர்பு நிரைபு என்றே பெயர் கொடுத்தான்.
22. நேர்பு நிரைபு என்பன இரண்டசைகளாக வருதலின் ஈரசைச் சீராகாது நேர் நிரை என ஓரசைச்சீரையே உணர்த்தலின், நேர்பு நிரைபு என்பன ஆகுபெயராம்.

எனவே, நேர் நிரையின்பின் உகரம் வருதலின் நேர்புநிரைபெனக் குணங்காரணமாகவும்[23] பெற்றாம்.

317. குறிலிணை................யான.

இஃது, எய்தியது ஒருமருங்கு மறுத்ததாம்; எய்தாதது எய்துவித்ததூஉமாம்; வழுவமைத்ததெனினும் அமையும். தனிக்குறிலானாகிய நேரசைப் பின்னும் இருவகை யுகரம் வந்து நேர்பசையாதலை விலக்கினமையின் எயதியது ஒரு மருங்கு மறுத்ததாம். குற்றுகரங் குற்றெழுத்துப் போன்று அலகு பெறு மென்றமையின் எய்தாதது எய்துவித்து வழுவமைத்ததாம்.

இதன் பொருள்:- இருவகை உகரமும் இருகுறிலாகி இணைந்தவழி நேர்பசையாகாது என்றவாறு.

கரு, மழு என முற்றுகரம் நேர்பசையாகாது நிரையசையாயிற்று; என்றார்க்கு, குற்றுகரம் விலக்கியதென்னை.[1] குறிலினை வந்தவழிக் குற்றுகரமாகாதென்பது.[2]

"நெட்டெழுத் திம்பருந் தொடர்மொழி யீற்றுங்
குற்றிய லுகரம் வல்லா றூர்ந்தே." (தொல்-எழுத்-36)

என்றதனாற் பெறுதும். பிறவெனின், அதுநோக்கிக் கூறினானல்லன்; 'ஏற்புழிக்கோடல்' என்பதனான், ஞாயிறு வலியது என ஓரசைப்பின்னர் வந்தவழி இது குற்றுகரமேயா மன்றே ஆண்டும் அது குறிலிணை யுகரமெனவே படுமென்பது; பட்டக்கண்ணுங் குற்றுகரமேயென வழுவமைத்தவாறு.[3] குறிலிணையெனக் குற்று

---

23. நேர் நிரை என்பனவற்றின் பின் உகரம் சேர்ந்து நேர்பு நிரைபு என வருதலின் குணம் காரணம் என்றார்.

1. சூத்திரவுரையில் இருவகையுகரமும் எனக் குற்றுகரத்தையும் முற்றுகரத்தையும் கொண்டு உரை எழுதினாலும் ஆசிரியர் குற்றுகரத்தை நீக்கி முற்றுகரம் மட்டுமே கூறினார் என்று கொண்டு இவ்வினா எழுப்பினார்.

2. அது, கரு, உறு முதலியன தனிக்குறிலைச் சார்ந்துவந்த உகரம் ஆதலின் குற்றுகரம் ஆகாது ஆதலின் உதாரணம் காட்டவில்லை.

3. "நெட்டெழுத்திம்பர்......வழுவமைத்தவாறு:" நெட்டெழுத்திம்பரும்' என்னும் சூத்திரத்தாலேயே குற்றிய லுகரம் தனிக்குறிலைச் சார்ந்து குறிலிணை யுகரமாக வாராது என்பது பெறப்படும். இச்சூத்திரத்தில் விலக்க

கரத்தையும் 'உடம்பொடு புணர்த்தல்' (665) என்பதனாற் குற்றெழுத்தென வேண்டினானென்பது பெற்றாம்.[4] இங்ஙனங் குற்றுகரங் குறிலிணையாகியுங் குற்றுகரமாகி எழுத்தள வெஞ்சினும் அமையுமெனவே நுந்தை யென்னும் முதறகட் குற்றுகரமுங் குற்றெழுத்துப் போன்று அலகுபெறும் எழுத்தளவெஞ்சினுமென்பது கொள்க. இஃது 'ஒன்றின முடித்த றன்னின முடித்தல்' (665) என்னு முத்திவகை.

## நச்சினார்க்கினியர்

4. இருவகை...................என்ப.

இது கூறாத அசைக்கூறுங் கூறுகின்றது.

(இ-ள்) இருவகை உகரமொடு-குற்றுகர முற்றுகரங்களோடே அவை இயைந்துவரின்-மேற் கூறிய நேரசையும் நிரையசையும் பிளவுபடாது ஒரு சொல் விழுக்காடு பட இயைந்துவரின், நேர்பும் நிரைபும் ஆகும் என்ப-நிறுத்தமுறையே நேரசையோடியைந்த

---

வேண்டா என்பது வினா. விடை:- அச்சூத்திரம் நோக்கி இச்சூத்திரத்தில் குற்றியலுகரத்தை குறிலிணையாக வாராது என விலக்கவில்லை. ஞாயிறு என்பதில் 'ஞா' எனும் நேரசைப் பின்னர் 'யிறு' எனக் குறிலிணைந்து வந்ததும், வலியது என்பதில் 'வலி' என்னும் நிரையசைப்பின்னர் 'யது' எனக் குறிலிணைந்து வந்ததும் நோக்கி அவை (யிறு, யது) குற்றியலுகரமேயாயினும் நேர்பசை நிரைபசைகளுக்கு ஆகா என்று விலக்கினார் ஆசிரியர். ஞாயிறு என்பதில் 'ஞா' நேரசையாக 'யிறு' என்பது தனித்துக் குற்றியலுகரம் எனக் கூறப்படாதாயினும் ஞாயிறு என்னும்போது குற்றியலுகரமாதலின் 'யிறு' எனத் தனித்துப்பேசும் போது குற்றுகரமில்லை. அதையும் குற்றுகரம் எனக் கொண்டு கூறலின் வழு அவ்வழுவையும் குற்றுகரம் போலக்கொண்டு விலக்கலின வழுவமைதி.

4. கரு என்பது இரண்டு குறிலிணைந்தது. இக்குறிலிணைக்கு இரண்டு மாத்திரை. ஞாயிறு என்பதில் 'யிறு' என்பது இரு குறிலிணைந்ததாயினும் மாத்திரை ஒன்றரை. கரு எனும் முற்றுகரம்போலவே 'யிறு' எனும் குற்றுகரத்தையும் இரண்டு மாத்திரையுடையதுபோல ஆசிரியர் வேண்டினார்.

குற்றுகரமும் அதனோடியைந்த முற்றுகரமும் நேர்பசை எனப் படும். நிரையசையோடு இயைந்த குற்றுகரமும் அதனோடி யைந்த முற்றுகரமும் நிரைபசை எனப்படும், எ-று.

நேரின்பின் உகரம் வருதலின் நேர்பு; நிரையின் பின் உகரம் வருதலின் நிரைபு என ஆட்சியும் குணமும் காரணமாகப் பெற்ற பெயராதல் மேற்கூறியவற்றுட் காண்க.

(எ-டு)வண்டு, நாகு, காம்பு, மின்னு, நாணு, தீர்வு;[1] நேரசை மூன்றன் பின்னும் இருவகை உகரமும் வந்து நேர்பசையாயிற்று.

குறிற் பின்வரும் இருவகையுகரமும் நேர்பசையாகாமை மேற் கூறுகின்றார்.

வரகு, குரங்கு, மலாடு, மலாட்டு, இரவு, புணர்வு, உலாவு என நிரையசை நான்கின் பின்னர்க் குற்றுகரமும், நிரையசை மூன்றின் பின்னர் முற்றுகரமும் வந்து நிரைபசை யாயிற்று குறினெடில் ஒற்றின்பின் வந்த முற்றுகரம் உளவேற் காண்க.[2]

'குற்றிய லுகரமு மற்றென மொழிப'(தொல்-எழுத்-புணரி-3) என்ற விதியாற் குற்றுகரம் புள்ளிபெற்று நின்றும் புள்ளி பெற்ற ஒற்றுப் போன்று ஒடுங்கி நில்லாது தன்னான் ஊரப்பட்ட மெய் யுந்தானும் அரைமாத்திரைத்தாய் நின்றதேனும், அகன்றிசைத்த லின்[3] ஒற்றென்றலுமாகாது; ஒரு மாத்திரை பெற்ற உயிர்போல அகன்றிசையாமையின்[4] உயிரென வேறோரலகு கொடுத்தலு

---

1. நெடிலொற்றின் பின்வரும் முற்றுகரத்தைப் பேராசிரியர் மறுப்பர்.

2. மலாட்டு என உதாரணம் காட்டுவர் பேராசிரியர்.

3. அகன்றிசைத்தால் - வரகு என்பதில் இறுதி உகரம் தனித்து ஒலித்தல். அதாவது வரகு என்பதை வரக் என இசைக்குமிடத்து 'க' என்பது 'வர' என்பதுடன் சேர்ந் திசைக்கிறது. ஆனால் வரகு என்னும்போது வர,கு என அகன்றிசைக்கிறது.

4. ஒரு மாத்திரையுடைய முற்றுகரம் போலத் தெளிவாகப் பிரிந்து குற்றுகரம் இசைக்கவில்லை. வரகு என்பதில் குகரத்தை ஒலிக்கும்போது அதற்குரிய ஒருமாத்திரை யில்லாமல் அரைமாத்திரையாக இசைப்பது காண்க. எனவே, குகரம் ஒருமாத்திரையளவாகத் தெளிவுபட இசைக்கவில்லையாதலின் அஃது அகன்றிசைக்கவில்லை.

மாகாது இதனைச் செயற்பாலது வேறோரசையாக்குதலென நோக்கி நேர்பசை நிரைபசை என வேண்டினார் ஆசிரியர். பின்னுள்ளோர் அலகு பெறுமென்று கொண்டாரேனும் அவர்க்கும் அலகுபெறாவென்றுங் கொள்ள வேண்டியவாறும், தேமா, புளிமா வொழியக் காசு, பிறப்பு எனக் குற்றுகர வீறாக வேறுதாரணங் கொள்ள வேண்டியவாறும் உணர்க; எனவே குற்றுகரம் அலகு பெறாவாயிற்று. வண்டு கொண்டி என ஓசை ஒவ்வாமை செவி கருவியாக உணர்க.

ஒரு மாத்திரை பெற்ற முற்றுகரம் நேர்பசை நிரைபசை யாமோவெனின்:- வண்டு வண்டு வண்டு வண்டு என்புழிப் பிறந்த அகவலோசை மின்னு மின்னு மின்னு மின்னு என்புழியும் பெறப் படுதலானும், வெண்பாட்டீற்றடி வண்டு எனக் குற்றுகர வீற்றா னின்றுழியுங் கோலு என முற்றுகர வீற்றானின்றுழியும் ஒத்த வோசையவாம் ஆகலானும் அவ்வசைகளாயின. இஃது 'எழுத்தள வெஞ்சினும்......மொழிப' (செய்-43) என்ற விதியாற்பெறுதும்.

(4)

5. குறிலிணை..............யான.

இது தனிக்குறிலானாகிய நேரசைப் பின்னும் இருவகை உகரம் வந்து நேர்பசையாதலை விலக்கினமையின் எய்தியது விலக்கியதூஉமாம். குற்றுகரங் குற்றெழுத்துப் போன்று அலகு பெறுமென்றமையின் எய்தாதது எய்துவித்து வழு வமைத்ததூஉமாம்.

(இ-ள்) குற்றெழுத்தோடிணைந்த குற்றியலுகரமும் முற்றிய லுகரமும் அல்லாதவிடத்தே முற்கூறிய நேர்பசையாவன; எனவே குற்றெழுத்தோடிணைந்த குற்றியலுகரமும் முற்றியலுகரமும் வந்துழி நிரையசையாம், எ-று.

இனி, 'உடம்பொடு புணர்த்தல்' என்பதனாற் குறிலிணை யெனக் குற்றுகரத்தையும் குற்றெழுத்தென வேண்டினமை பெற் றாம்.

(எ-டு) ஞாயிறு வலியது என ஓரசைப்பின்னர் வருகின்ற குறிற் பின் வந்த குற்றுகரம் குற்றெழுத்துப் போன்று குறிலிணை யுகரமாய் அலகுபெற்ற தேனும் குற்றுகரமே யென்று இலக்கண மல்லதோர் வழூவமைத்தவாறு.

இங்ஙனம் குற்றுகரம் எழுத்தளபு எஞ்சுமெனவே, 'குற்றிய லுகர முறைப்பெயர் மருங்கி, னொற்றிய நகரமிசை நகரமொடு

முதலும்' (எழுத்-மொழி-34) என விதித்த நுந்தையென்னு முதற் கட் குற்றுகரம் எழுத்தளபெஞ்சிக் குற்றெழுத்துப் போன்று அலகு பெறுதலுங் கொள்க. கரு, மழு இவை முற்றுகர நிரையசையாம்.

## சிவலிங்கனார்

இருவகை..................யான.

இ-ள்: நேர் நிரை என்பன குற்றியலுகரம் முற்றியலுகரம் ஆகிய இரண்டோடும் வரின் அவை நேர்பசை நிரைபசை எனப் படும். அவையிரண்டும் தனிக்குற்றெழுத்தோடு சேராதவிடத்தே அவ்வாறாம்.

உ-ம்: கன்று, காடு, காட்டு, அம்மு, காமு, ஆய்வு நேர்பசை.

உலகு, உணக்கு, இராது, பனாட்டு, உலவு, உரிஞ்ஞு, உலாவு, விடாய்வு, நிரைபசை

314. இயலசை முதலிரண்[1] டேனவை உரியசை. (5)

ஆ. மொ. இல.

The first two are 'iyal asai' and others 'uri asai.'

## இளம்பூரணர்

314. இயலசை..................உரியசை.

என்-னின். மேற்சொல்லப்பட்ட அசைக்குப் பிறிதோர் குறி யிடுதல் நுதலிற்று.

(இ-ள்) முற்பட்ட நேரசையும் நிரையசையும் இயலசையென குறிபெறும். நேர்பசையும் நிரைபசையும் உரியசையெனக் குறி பெறும் என்றவாறு

(5)

## பேராசிரியர்

314. இயலசை..................உரியசை.

இது, மேற்கூறிய அசை நான்கினையும் இருகூறு செய்து அவற்றுக்கு எய்தாதது எய்துவிக்கின்றது, இனி, ஆட்சியுங் குணனுங் காரணமாக வேறு வேறு பெயர் கொடுக்கின்றது இச்சூத்திரம் மெனவும் அமையும்.

---

1. ஏனைய-நச். பேரா. பாடம்.

இதன் பொருள்: முதற்கணின்ற நேரும் நிரையும் இயற்றிக் கொள்ளப்படாது, இயற்கை வகையான் நின்றாங்கு நின்று தளைப் பனவாம்.[1] ஒழிந்தன விரண்டும் இயற்றிக் கொள்ளப்பட்டு இய லசையாதற்கு உரியவாம் என்றவாறு.

எனவே, எய்தாதது எய்துவித்தது; தானே இயலசை உரி யசை யென்று ஆளுமாகலானும் இயற்கையால் இயறலின் இய லசை யெனவும் அவை செய்யுந் தொழில் செய்தற்கு[2] உரியவாக லான்[3] உரியசை எனவும், ஆட்சியுங் குணனுங் காரணமாகப் பெயரெய்துவித்ததூஉமாயிற்று.

அங்ஙனம் இயற்றிக் கொள்ளுமாறு சீர்கூறும் வழிக் கூறுதும். (6)

## சிவலிங்கனார்

இயலசை—இயல்பில் அமைந்த அசை

உரியசை— அலகிடற்கு நேரசை நிரையசையாக உரிமை யாக்கப்பட்ட அசை. உரிச்சீர் என்பது போலக் கொள்க. வெண்பாவுக்குரிமையாக்கப்பட்ட சீர் வெண்பாவுரிச்சீர் என்பது போலக் கொள்க.

## நச்சினார்க்கினியர்

6. இயலசை................ வுரியசை.

இது முற்கூறிய அசையை இருகூறு செய்து அவற்றிற்கு எய்தாதது எய்துவிக்கின்றது.

(இ-ள்) இயலசை முதலிரண்டு—முதற்கண் நின்ற நேரும் நிரையும் இயற்றிக் கொள்ளப்படாது இயற்கை வகையான் நின்றாங்கு நின்று தளைத்தலின் இயலசையென்றும், ஏனைய உரியசை— ஒழிந்த இரண்டும் இயற்றிக் கொள்ளப்பட்டுந்

---

1. தளைப்பன—அசைகளைச் சேர்ப்பன.

2. அவை செய்யும் தொழில்—நேர் நிரை என்னும் அவை செய்யும் அலகிடல் தொழிலுக்கு

3. உரியவாதலின்—நேர்பு நிரைபு எனும் தாமும் உரிய வாதலின்

தொழில் செய்தற்குரியவாதலின் உரியசை என்றும் பெயராம் எ-று.

அங்ஙனம் இயற்றுதல் சீருள் காண்க. (6)

## சிவலிங்கனார்

இயலசை.............. வுரியசை

இ-ள்: நேர் நிரை என்பன இயலசை; நேர்பு நிரைபு என்பன உரியசை.

இயல்பில் அமைந்த அசை இயலசை; அசைக்கு உரிமையாக்கப்பட்ட அசை உரியசை; பொருளுக்கு உரிமையாக்கப்பட்ட சொல் உரிச்சொல் எனவும், திணைக்கு உரிமையாக்கப்பட்ட பொருள் உரிப்பொருள் எனவும் பட்டமை போல.

### தனிக்குறில் மொழி முதலில் அசையாகாமை

315. தனிக்குறில் முதலசை [1]மொழிசிதைந் தாகாது (6)

ஆ மொ.இல.,

The short letter standing first in a syllable cannot be considered a syllable singly destroying the formation of the word.

பி இ.நூ:

யாப்பருங்கலக்காரிகை,

"விட்டிசைத் தல்லால் முதற்கண் தனிக்குறில்
நேரசையென்று ஒட்டப் படாது."

## இளம்பூரணர்

315. தனிக்குறில்.............. தாகாது

என்-னின். இதுவும் அசைக்குரியதோர் மரபுணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) தொடர்மொழிக்கண் மொழி சிதைந்து தனிக் குறில் நேரசை யாகா தென்றவாறு.

---

1. மொழி சிதைத் தாகாது—பாடம் பேரா. நச்

மொழி சிதைத்தலாவது— ஒற்றுமைப் பட்டிருக்கின்றதனைப் பிரித்தல். அஃதாவது புளிமா என்றவழி நிறைநேராக அலகிடாது[1] முதனின்றதனை நேரசையாக்கி யிடை நின்றதூஉ மிறுதி நின்றதூஉம் நிரையசையாதல்.[2] அவ்வழிப் புளியென்னுஞ் சொல்லைப் பிரிக்க வேண்டுதலின் நிரையசையாகவே கோடல் வேண்டு மென்றவாறு. இனி, மொழிசிதையாக்கால் நேரசையாம். அது விட்டிசைத்து நிற்றல். "அஉமறியா[3]...னாட்டை நீ" (யாப். வி. மேற்) எனவும், "அஆ[4] இழந்தானென் றெண்ணப் படும்." (நாலடி—9) எனவும் வருவன முதலெழுத்து நேரசை யாம்.

**பேராசிரியர்**

319. தனிக்குறின்.............. தாகாது.

இஃது, எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தனுதலிற்று; உகிரி மயிரி என நின்றவழி, குறிலிணையேயன்றி மூன்றெழுத்து நிறைந்தமையின் நிரையசையாகா. தனித்தனி நேரசையாகலும், மூன்று குற்றெழுத்தினுள் இரண்டு குறிலிணையாக ஒன்று நேரசையாவதும் முதற்கண்ணே கொல்லோவெனவும் எய்திய தனை விலக்கி விட்டிசைத்த வழித் தனிக்குறில் நேரசையா மென்பது எய்துவித்தமையின்[1]

---

1. புளி, மா என நிரை நேராக அலகிடாது.
2. இடைநின்றது ளி; இறுதி நின்றது மா. பு,ளிமா என நேரசை நிரையசையாதல்.
3. அ, உ எனப் பிரித்துத் தனித்தனி யிசைக்க.
4. அ, ஆ எனப்பிரித்துத் தனியிசைக்க.

1. 'உகிரி' இது மூன்றும் நிரையாகா; அதனால் தனித்தனி யாக உ,கி,ரி என நேர் நேர் நேர் ஆகுமோ என்பது ஓர் ஐயம்; அல்லது உகிரி என்பதில் உ,கிரி என முதல் எழுத்தை நேரசையாக்குவதா உகி,ரி என இறுதி எழுத்தை நேரசையாக்குவதா என்பது ஓர் ஐயம் இவை மேற்சூத்திரங்காறும் கூறியவற்றால் தெளிவுபடாமை யின் எய்திய ஐயமாம். அவ்வையத்தை விலக்கியது இச் சூத்திரம். 'உகிரி' என்பதை மொழி முதலில் உள்ள உ என்னும் குற்றெழுத்தைப் பிரிக்காமல் 'உகி' என இணைத்து நிரையாக்குதல் வேண்டும். பின்னர் 'ரி' என்பதை நேராக்குதல் வேண்டும் விட்டிசைத்த போதே முதலில் தனிக்குறில் நேரசையாக்கப்படும்.

இதன் பொருள்: தனிக்குறிலானாகிய நேரசை முதற்கண் மொழி சிதைத்துச் செய்யப்படாது என்றவாறு.[2]

இங்ஙனம் முதற்கண் வரையறுப்பவே இடையும் இறுதியும் மேலோதியவாற்றான் நேராசையாமென்பது. மொழி சிதைத்த லென்பது, விட்டிசையாத மொழியை விட்டிசைத்து மொழிதல்; எனவே, விட்டிசைத்த மொழியாயின் அது மொழி சிதைத்த தெனப்படாது இயல்பாமென்பது பெற்றாம். கரு மழு என முதற் கண் மொழி சிதைத்து நேரசையாகாமையும் குறிலிணையெனப் பட்டு நிரையசையாயினவாறும் கண்டு கொள்க.

''அஆ விழந்தான்.'' (நாலடி—9) எனவும்
''அஉ வறியா வறிவி லிடைமகனே
நொ அலைய னின்னாட்டை நீ.'' எனவும்,

இவை விட்டிசைத்தலின் மொழி சிதையாது தனிக்குறில் முதற்கண் நேரசையாயினவாறும், அவை குறிநெடிலும் குறிலிணையு மெனப்பட்டு நிரையசையாகாதவாறும் கண்டு கொள்க.

இனி, விட்டிசைக்கும் இடந்தான் மூன்றென்பது உரையிற் கொள்க. அவை;

''அஆ விழந்தான்.'' எனக் குறிப்பின்கண் வருதலும்,
''அஉ வறியா'' எனச் சுட்டின்கண் வருதலும்,
''நொ அலையல்.'' என ஏவற்கண் வருதலுமென

விட்டிசைக்கு மிடந்தான் மூன்றெனப்பட்டது. முதலசை யென்பது, நேரசை யென்பாருமுளர்.[3] அது விதந்தோதல் வேண்டா, தனிக்குறிலான் அசையாமெனப் பட்டது நேரசையே யென்பது பெறுது மாகலான். மற்றும்,

---

2. தனிக்குறில் அசை, முதல் மொழி சிதைத் தாகாது என மொழி மாற்றினார் பேராசிரியர். இதில் முதல் என்பது மொழி முதலாம்.

3. தனிக்குறில் மொழிசிதைத்து முதலசை யாகாது என மாற்றி முதலசையாவது நேரசை என்பர் பிறர் நேர் நிரை என நேர் முதலிற்கூறப் படுதலின் நேர்முதல் அசையாயிற்று என்பர் அவர். நச்சினார்க்கினியர் கருத்து இதுவே காண்க.

"இஉக் குறுக்கம்." என்றவழி

விட்டிசைத்து மொழிசிதையா தாகலான் அவ்விரண்டெழுத்துங் கூட்டி நேர்பசை யென்னாமோவெனின்,— அவை பிளவுபட நிற்றலின் இயைந்திலவென மறுக்க. (7)

## நச்சினார்க்கினியர்

7. தனிக்குறின்.. ............ தாகாது.

இஃது எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தது.

(இ-ள்) மொழி சிதைத்து—பொருள் தந்து ஒற்றுமைப் பட்டு நிற்பதோர் சொல்லைப் பொருளைக் கெடுத்து; தனிக்குறில்—முதலெழுத்தைத் தனிக்குறிலாக்கின; முதலசை யாகாது அது நேரசையாகாது, எ-று.

எனவே, பொருள் தந்து ஒற்றுமைப்பட்டு நில்லாது விட்டிசைத்து நின்றுழி நேரசையாம் என்றவாறாயிற்று. புளிமா என்றவழிப் புளியென்று ஒற்றுமைப் பட்டு நின்ற சொல்லைச் சிதைத்து முதல் நின்ற பகர உகரத்தை நேரசையாக அலகிடப் படாது.

இனி விட்டிசைத்து நேரசையாங்கால் ஏவல், குறிப்பு, தற்சுட்டு, வினா, சுட்டு என ஐந்து பொருளின்கண் விட்டிசைத்து நேரசையாம்.

எ-டு,

'வெறிகமழ் தண்புறவின் வீங்கி யுகளும்
மறிமுலை யுண்ணாமை வேண்டிப்— பறிமுன்கை
அஉ அறியா வறிவி லிடைமகனே
நொஅலைய னின்னாட்டை நீ'

என்பது ஏவல். அஉ என்பது அகரந்தன்னையே சுட்டுதலின் தற்சுட்டு.

'அஆ[1] விழந்தானென் றெண்ணப் படும்' (நாலடி—9) என்பது அருட்குறிப்பு.

அஅவனும், இஇவனும், உஉவனும் என்பது சுட்டு.

எஎவன் என்பது வினா.

'உரையிற்கோடல்' என்பதனான் ஐந்திடத்தும்[2] வீட்டிசைத்தல் கொள்க; 'அ, இ, உ, எ, ஒ என்னுமப்பா லைந்தும்' (தொல்- எழுத்- நூன்-3) என வரும்.

இவை[3] மொழி சிதைத்துத் தனிக்குறிலாய் நேரசையாயின வாறு காண்க.

## சிவலிங்கனார்

தனிக்குறில்.............. ஆகாது.

இ-ள்: மொழி முதலில் உள்ள தனிக்குறில் நேரசையாகாது, அடுத்த எழுத்து மெய்யாயின் நேரசையாம் குறிலோடு நெடில் இருப்பின் சேர்ந்து நிரையாம் என்றவாறு.

உ-ம்: உலகு என்பது உ, லகு எனப் பிரியாது உல,கு எனப் பிரியும்.

### குற்றியலிகரம் மெய் இயல்பினது

316. ஒற்றெழுத் தியற்றே குற்றிய லிகரம். (7)

ஆ.மொ.இல.,

The shortened 'i' stands in the nature of consonant.

---

1. அ ஆ: ஐயோ பாவம் என்னும் இரக்கக் குறிப்புணர்த்தலின் அருட்குறிப்பு.

2. ஐந்திடத்தும் என்றது ஐந்து குற்றெழுத்திடத்தும் என்னும் பொருளுடையது.

3. இவை—ஐந்து குற்றெழுத்துகள் அ இ உ எ ஒ.

"அ இ உ
எ ஒ என்னும் அப்பா லைந்தும்
ஓரள பிசைக்கும் குற்றெழுத் தென்ப"

என்னும் சூத்திரத்தில் அ இ உ என்பன ஒரு சீராகவும் எ ஒ என்பன ஒரு சீராகவும் வந்தன. இச்சீர்களில் உள்ள குற்றெழுத்துகளைத் தனித்தனி நேரசைகளாகக் கொள்ளலின் சீர்களை மொழி என்றார்.

## இளம்பூரணர்

316. ஒற்றெழுத்............... லிகரம்.

(இ-ள்) குற்றியலிகரம் ஒற்றெழுத்து இயல்பிற்று என்றவாறு,

அடியினதிடைக்கண் ஒற்றுமைப்பட்ட சொல்லின்கண் நேரசை என்று... எனவே அலகுபெறாதென்ற வாறாம்.

"பேதை யென்ப தியாதென வினவின்
ஓதிய இவற்றை உணராது மயங்கி
இயற்படு பொருளாற் கண்டது மறந்து
முயற்கோ டுண்டெனக் கண்டது தெளிதல்."

இதன்கட் குற்றியலிகரம் அலகு பெறாதவாறு காண்க.[1]

(7)

## பேராசிரியர்

320. ஒற்றெழுத்............... லிகரம்.

இஃது எய்தாதது எய்துவித்து ஐயம் அறுத்தது.

இதன் பொருள்:- மேற்கூறிய[1] எழுத்திலக்கண வகையானும் ஈண்டோதும் அசைக்குறுப்பா மாற்றானும் எல்லாங் குற்றியலிகரம் ஒற்றெழுத்தியற்றேயாம் என்றவாறு.

தேற்றேகாரம் அடுத்துக் கூறியவாறு. எனவே எழுத்தோத்தினுள்,

---

1. என்பது+யாது=என்ப தியாது. 'தி' என்பதின் இகரம் குற்றியலிகரம் என்ப நேர் நேர்; 'தியாதென' என்பதில் 'தி' என்பதில் 'தி' எனும் குற்றியலிகரத்துக்கு அலகு இல்லை. அதனால் அது நேர் நிரை எனப்படும். இப் பாடல் ஆசிரியப் பாடல். 'என்ப' என்னும் நேர் நேருக்கு வருமொழியிலும் நேர் வருதல் வேண்டும். 'தியா' என் பதில் 'தி' என்பதற்கு அலகு கொடுப்பின் நிரையாகித் தவறுபடும். அதனால் அலகு நீக்கி 'யா' என நேர் வந்த தாகக்கொள்ளல் வேண்டும். அதனால் நேரொன்றா சிரியத்தளையாகிச் சிறக்கும்.

1. எழுத்ததிகாரத்து மொழி மரபு இரண்டாம் சூத்திரத்தில் கூறிய

"மெய்யீ றெல்லாம் புள்ளியொடு நிலையல்" (தொல்-எழுத்-104)

எனக் கூறி,

"குற்றிய லுகரமு மற்றென மொழிப." (தொல்-எழுத்-105)

எனக் குற்றுகரத்திற்குப் புள்ளிபெறுதலுங் கூறினான்; அது போலக் குற்றிகரமும் புள்ளிபெற்று நிற்றல் உடைத்தெனவும், ஈண்டுக் குற்றுகரம் நேர்பும் நிரைபுமாகியவாறு போலத் தானும் ஓர் அசையாகுங்கொல்லென்று ஐயுறுவது வேண்டா, ஒற்று நின்றாங்கு நின்று இயலசை உரியசைகளைச் சார்ந்து வருதலும் ஒற்றுப்போல எழுத்தெண்ணப் படாமையுமுடைத்தது என்ற வாறுமாயிற்று. எனவே ஒற்றெழுத்தியற்றாயினுங் குற்றுகரம் இகரக் குறுக்கம் போலாது செய்யுட்கு உபகாரப்பட்டதோர் அசை வேறுபாடு தோன்ற நிற்குமென்றவாறாயிற்று மற்று எண்ணப் படாதென்றது ஈண்டுக் கூறல் வேண்டுமோ?

"உயிரில் லெழுத்து மெண்ணப் படாஅ." (356)

என்புழிப் பெறுதுமாலெனின், அது குற்றுகரத்திற்கே கூறிய தென்பது ஆண்டுச் சொல்லுதும்.

(உ-ம்) "மியாயிக[2] மோமதி யிகுஞ்சின் னென்னும்."

(தொல்-சொல்-276)

"அருளல்ல தியாதெனிற்[3] கொல்லாமை." (குறள்-254)

என இவை இயலசை சார்ந்து ஒற்றியற்றாகிக் குற்றிகரம் வந்தவாறு. நாகியாது வரகியாது எனக் குற்றிகரம் உரியசை

---

2. மியாயிக—இதில் 'மி' என்பது குற்றியலிகரம். யாஎன்னும் நேரசையோடு சார்ந்து தனக்கு அலகு இன்றி வந்தது. மியாயிக— நேர் நிரை. இதில் குற்றியலிகரம் இயலசை யாகிய நேரசை சார்ந்தது.

3. அருளல்ல— நிரைநேர் நேர் (புளி மாங்காய்) இதன், முன் வெண்பாவாதலின் நேர் முதலான வருமொழி வருதல் வேண்டும். 'தியாதெனின்' என்பதில் தி எனும் குற்றியல் இரகத்துக்கு அலகு நீக்க யா எனும் நேரசை வந்ததாம், இதில் குற்றியலிகரம் இயலசையாகிய நேரசையைச் சார்ந்தது.

சார்ந்து ஒற்றியற்றாகி வந்தவாறு.[4] அது நிரையும் நிரைபுஞ் சார்ந்து ஒற்றியற்றாமாறு இல்லை போலும்.[5] ['மியாயிக' என்பது பாதிரி; 'அருளல்ல தியாது' என்பதும் நாகியாது என்பதும் போரேறாம்; வரகியாது என்பது கடியாறாம்; பிறவுமன்ன.[6]] இவற்றை யெல்லாம் 'ஒற்றெழுத்தியற்றே' என்பதனாற் புள்ளி யிட்டெழுதுக[7], இது சொல்லிய காரணம்: குற்றுகரம் அரைமாத் திரைத்தாகியும் ஒற்றியற்றாகாது நேர்பும் நிரைபும் ஆகியவாறு போல அதற்கு இனமாகிய குற்றிகரமும் அரைமாத்திரைத்தாகி வேறோரசையாங்கொல்லென்று ஐயுறாமற் காத்தவாறு.

மற்று ஆய்தத்தினையும் ஒற்றியற்றென்னாமோ வெனின், அஃது எழுத்தோத்தினுள்,

''எழுத்தோ ரன்ன.'' (தொல்-எழுத்-141)

என்பதனாற் பெற்றாமென்பது. மற்று,

''முந்தியாய் பெய்த வளைகழலும்.'' (யா.வி- ப-43)

''நினக்கியான் சொல்லிய தின்ன தின்று.' (யா.வி)

என இவை ஒற்றியற்றாகாது எழுத்தியற்றாயினவென்று காட்டுவாருமுளர். 'முந்தியாய்' என்பது இகரவீறு மாமாகலின் அது காட்டல் நிரம்பாது; அல்லதூஉம், அவை சான்றோர் செய்யுளல்லவென மறுக்க. இனி ஒற்றும் எழுத்துமென உம்மையோ டெண்ணலுமாகாது;[8] இவ்வோத்தினுள்.

''உயிரில் லெழுத்து மெண்ணப் படாஅ'' (356)

என ஒற்றினையும் எழுத்தென்றானாகலின். (8)

---

4. நாகியாது—நேர்பு நேர் நேர்; வரகியாது— நிரைபு நேர் நேர்.

5. தொடர் விளக்கமில்லை.

6. மியாயிக— நேர் நிரை— பாதிரி என்பது அதன் வாய் பாடு. நாகி யா து— நேர் நேர் நேர்— வாய்பாடு போரேறு. 'அருளல்ல தியாது' என்பதைப் போரேறு என்ற வாய்பாடு என்றது பொருந்தவில்லை. வரகியாது —நிரை நேர் நேர்—வாய்பாடு கடியாறு,

7. குற்றியலிகரத்து மேல் புள்ளியிட்டு எழுதுக. 'அருளல்ல' தியாது நாகியாது.

8. எண்ணுபவர் பிற்கால நச்சினார்க்கினியருமாவார். அவர் உரை காண்க.

## நச்சினார்க்கினியர்

8. ஒற்றெழுத்.........விகரம்

இது குற்றியலிகரம் அலகு பெற்றும் அலகு பெறாதும் வரும் என்கிறது.

(இ-ள்) குற்றியலிகரம் ஒற்றியற்று எழுத்தியற்று—குற்றிய லிகரமாவது ஒற்றியல்பினையுடைத்து; அதுவேயன்றி எழுத்தியல் பினையும் உடைத்து எ-று.

என்றது அலகு பெறாத வழி ஒற்றாம்; அலகு பெற்ற வழி யெழுத்தாம் என்றவாறு.

(எ-டு) 'குழலினி தியாழினி தென்ப' (திருக்குறள்-66) என ஆசிரியத்தளையாயும், 'அருளல்லதியாதெனின்' (ஷை-256) எனக் கலித்தளையாயும் வருதலிற் குற்றியலிகரம் அலகு பெறாது ஒற்றி யற்றாயிற்று[1] "நினக்கி யாரே மாகுது மென்று. வனப்பு நினக்கியா னுரைப்பக் கேண்மதி" என இக்குற்றியலிகரங்கள் அலகு பெறு தலின் எழுத்தியற்றாயிற்று.[2]

இங்ஙனம் சான்றோர் செய்யுள் வருதல் பெருவரவிற்று. ஒற்றினையும் எழுத்தென்று ஓரோரிடத்துக் கூறினாரேனும்,

---

1. "குழலினி தியாழினி; இது விளமுன் நிரைவந்த நிரை யொன்றாசிரியத்தளை. குறள் வெண்பாவில் அத்தளை விரவுதல் தவறு. ஆதலின் 'தி' என்பதை அலகிடாது நீக்கி நேர் வந்ததாகக் கொள்ளின் விளமுன் நேர்வந்த இயற்சீர் வெண்டளையாகி அமையும். 'அருளல்ல தியா தெனின்' என்பது காய்முன் நிரை வந்த கலித்தளையாம். வெண்பாவில் கலித்தளை விரவலாகாது. ஆதலின் குற்றியலிகரத்தை அலகிடாது நீக்க, காய்முன் நேர் வந்து வெண்சீர் வெண்டளையாய் அமையும். இவ்விரண் டிலும் குற்றியலிகரம் மெய்யெழுத்துப்போல நின்றது.

2. 'நினக்கி யாரே' இதில் 'கி; எனும் குற்றியலிகரம் தனி எழுத்தாக அலகிடப்பட்டு நினக்கி என ஒரு சீராயிற்று. அதாவது நிரை நேராயிற்று. தனியெழுத்தாகக் கொள்ளாது மெய்யாகக் கொள்ளின் 'நினக்கி' என்பது நிரை என்ற அளவில் நின்ற அசையாகிவிடும். சீராகாது. 'நினக்கியான்' என்றதிலும் நிரை நிரையெனக் குற்றிய லிகரம் அலகிடப்பட்டது.

ஈண்டு ஒற்று எழுத்து எனக் கூறலின் ஒற்றல்லாவெழுத்தை யுணர்த்திற்று. (8)

## சிவலிங்கனார்

ஒற்றெழு.................விகரம்

(இ-ள்) செய்யுளில் வரும் குற்றியலிகரம் மெய்யெழுத்தின் இயல்புடையதாகி அலகு பெறாது, எ-று.

உ-ம் : அருளல்லா தியாதெனின் கொல்லாமை கோறல்
பொருளல்ல திவ்வூன் தினல். (குறள்)

இதில் 'அருளல்ல' என்பது புளிமாங்காய்ச்சீர். காய்முன் நிரை வருதல் வெண்பாவுக்குரியது அன்று. 'தியாதெனின்' என்பதில் தியா என்பது நிரை. ஆதலின் தி எனும் குற்றியலிகரத்தை மெய்போலக்கொண்டு அலகிடாது விட யாயென நேர் வந்தது காணலாம்.

### முற்றியலுகரம் மொழி சிதைக்கப்படாமை

317, முற்றிய லுகரமும் மொழிசிதைத்துக் கொளாஅ
நிற்றல் இன்றே ஈற்றடி மருங்கினும். (8)

ஆ.மொ.இ.,

The full 'u' aiso will nol be considered singly the word wrongly. it will not stand even at the end of a line.

## இளம்பூரணர்

317. முற்றிய லுகரமும்............... மருங்கினும்.

என்-னின்: முற்றியலுகரத்திற் குரிய வேறுபா டுணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) முற்றியலுகரமு மொழிசிதைந்து நேர்பசை நிரை பசை யென்றுரைக்கப்பட்டது; அஃது ஈற்றடி மருங்கிற் றனியசை யாகி நில்லா வென்பதூஉம், ஒற்றுமைப்படாத சொல்லின்கண் தனியசையாமென்பதூஉம், ஈற்றடிக்கண் எவ்வழியானுந் தனி யசை யாகாதென்பதூஉம் உணர்த்தியவாறாம்.

"அங்கண் மதியம் அரவுவாய்ப் பட்டென."

(அகத்திணை. பக்-20)

என்றவழி அரவென்பது மொழிசிதையாமையின் நிரைபசை யாயிற்று.

"பெருமுத் தரையர் பெரிதுவந் தீயும்." (நாலடி. 200) என்ற வழி பெரு முன்னர்க் குறித்துச் சீராக்க வேண்டுமாயின் ஈண்டு மொழி சிதைத்தலின் நிரைபசை யாகாதாயிற்று.

"இனமலர்க் கோதாய் இலங்குநீர்ச் சேர்ப்பன்
புனைமலர்த் தாரகலம் புல்லு." (யாப். வி. மேற்)

"மஞ்சுசூழ் சோலை மலைநாட மூத்தாலும்
அஞ்சொன் மடவாட் கருளு." (யாப். வி. மேற்)

என்பதனாற் கொள்ளற்க[1]; இவை புல்லு அருளு எனவருமா லெனின்;[2] "நிற்றலின்றே யீற்றடி மருங்கினும்" என்பதனான் ஈற்றாடியிறுதியினு மிடையடியிறுதியினு முற்றியலுகரம் நில்லா தெனவும் பொருளாம்; இதனானேஅவ்வாறு வருதலுங் கொள்க.[3] முற்றியலுகரமு மென்ற வும்மை இறந்தது தழீஇய எச்சவும்மை."[4]

(8)

## பேராசிரியர்

321. முற்றிய லுகரமு............... மருங்கினும்

இதுவும், ஐயம் அறுத்தது; இருவகை யுகரமொடு நேரும் நிரையும் இயையின் அவை நேர்பும் நிரைபுமாமென்றான், அவற்றுண் முற்றுகரம் ஈறாகி நிற்குஞ் சொல் உலகத்து அரிய

---

1. புல்லு, அருளு எனவரும் இறுதி முற்றுகரங்களைத் தனி அசைகளாகக் கொண்டு (தேமா, புளிமா என) நேர் நேராகவும் நிரை நேராகவும் கொள்ளற்க. நேர்பு நிரைபு என ஓரசைகளாகக் கொள்க.

2. புல்லு என்பது தேமாவாகவும் அருளு என்பது புளிமா ஆகவும் வரும் எனின். அதாவது அடியிடையிலும் வரும் எனின்.

3. அவ்வாறு அடியிடையில் வருதலும் கொள்க.

4. குற்றியலுகரமும் மொழி சிதைத்துக் கொளா என்பதைத் தழுவுதலின்.

வாயினவாதலிற் புணர்ச்சிக்கண் வந்த உகரமே ஈண்டு நேர்பும் நிரைபுமாவனவெனவும், அப்புணர்ச்சிக் கண்ணும் நிலைமொழித் தொழிலாகிய உகரமும்[1] நிலைமொழியீறுகெட்டு நின்ற உகரமுமே[2] கொள்ளப்படுவனவெனவும், வருமொழித் தொழிலாகிய ஒற்று நிலைமொழியாகிய நேர் நிரைபிற்கு உறுப்பாவன[3] கண்டு வருமொழியுகரம் ஈண்டும் அதுபோல அவற்றிற்குறுப்பாங் கொல்லென்று ஐயுற்றானை[4] ஐயுறற்கவெனவுங் கூறினமையின்.

இதன்பொருள்:— முற்றியலுகரம் மொழிசிதைத்துக் கொளாஅ— இருவகையுகரமு மியைந்தவை வருங்கால் வருமொழியைச் சிதைத்துப் பிரித்து அவற்றினின்று வாங்கிக் கொடுக்கப்படா; நிற்றலின்றே யீற்றடி மருங்கினும்— அங்ஙனம் வாங்கிக் கொடுக்கப்படாவாயின், நேரசை நிரையசைப் பின்னர் முற்றுகரம் ஈறாகி வருஞ்சொல்லும் உலகத்தரிய வாயின் முற்றுகரத்தால் நேர்பும் நிரைபும் ஆமாறென்னை யென்றார்க்கு அடியிறுதிக்கணல்லது முற்றுகரம் புணர்ச்சி வகையான் இடைநில்லாதன வாயின கண்டா யென்பதுணர்த்தியவாறு.

'இன்று' என ஒருமை கூறினமையின், எடுத்தோதிய முற்றுகரமே கொண்டு இலேசினாற் றழீஇய குற்றுகரங் கொள்ளற்க. மற்றிதனை இலேசினாற் கொண்டதென்னையெனின்—நுந்தை யென்னும் ஒருமொழிக்கணன்றி வாராமையின் அதன் சிறுவரவு நோக்கி உம்மையாற் கொண்டானென்பது. முற்றியலுகரம் மொழி சிதைத்துக் கொளா வெனவே, ஒற்றூர்ந்துவரினுந் தனித்து வரினும் உடன் விலக்குண்ணு மென்பது.

---

1. மின்—மின்னு, நாண்—நாணு, உரும்—உருமு முதலியன நிலைமொழித் தொழிலால் வந்த உகரங்கள்.

2. அரா—அரவு, குலா—குலவு போல்வன திரிந்தன. குலவும் என்னும் மகரவீறு குலவு சீர் என மகரம் கெட்டு உகர வீறாய் வருதல் போல்வன.

3. நாண் + தளை = நாணு + தளை = நாணுத்தளை. 'த' என்பது வருமொழிப் புணர்ச்சியால் வந்தது. அதையும் 'நாணுத்' என நிலைமொழியின் உறுப்பாகவே சேர்த்து நேர்பு என்று கூறப்படும்.

4. 'நாண் உடை அரிவை' என்பதில் நாண் என்பதன் பின் வரும் உடை என்பதின் உகரம் ண்' என்னும் மெய்யுடன் சேர்ந்து 'நாணு' என வரின் அந்த உகரம் நேர்பசைக்கு உறுப்பாகுமா என்ற ஐயம் கொண்டானை.

"நாணுடையரிவை" (அகம்—34)

என்றவழி. 'நாண்' என்னும் நேரசைப் பின்னர் 'உடையரிவை' எனத் தனித்துவந்த உகரம் நேர்பசையாகாது. 'வார்முரசு' என்றவழி, வாரென்னும் நேரசைப் பின்னர் முரசென மகரம் ஊர்ந்து வந்த உகரமும் நேர்பசையாகாது.[1] 'வற்றுறு செய்தி' எனவும், 'பரன்முரம்பு' எனவும் வந்த வழி, வற்றெனவும்[2] பரலெனவும் நின்ற நேரசை நிரையசைப் பின்னர் உறுசெய்தி யெனவும் முரம்பெனவும் வந்த உகரங்களும் நேர்பசை நிரைபசை யாகா.[3] 'சின்னுந்தை' 'இராநுந்தை' எனக் குற்றுகரம் வந்த வழியும் நேர்பசை நிரைபசையாகா வென்றவாறு.[4]

"நாணுத் தளையாக வைகி." (அகம்—29)

என்றவழி, ணகாரவீறு புணர்ச்சி வகையாற் பெற்ற உகரம் நிலைமொழித் தொழிலாகலான் அது 'நாகு' என்னுங் குற்றுகரம் போல் ஒற்றுமைப்பட்டு நேர்பசையாயிற்று.[5]

"விழவுத் தலைக் கொண்ட." (அகம்—17)

என்றக்காலும் அவ்வாறு ஆகாரவீறும் உகரம்பெற்று நிரைபசையாயிற்று.[6]

"மின்னுமிளிர்ந் தன்ன கனங் குழை." (அகம்—158)எனவும்

"முழவு முகம் புலரா." (அகம்—206, நற்—220)

எனவும் வருவனவும் அவை. 'நாணுத்தளை' என்றாற் போல வரும் ஒற்றுப்பேறு முன்னர்ச் சொல்லுதும். 'நீர்க்கு, நிழற்கு' என்ற உருபும்[7] நிலைமொழித் தொழிலாதலான் அவையும் நேர்பசை நிரைபசையா மென்பது இதனாற் பெற்றாம். 'நிற்ற லின்று' என ஒருமை கூறி முற்றுகரமே கொண்டமையிற் குற்று

---

1. வார்மு என வாராது.
2. 'வற்' எனவும் எனக் கொள்க.
3. வற்று, பரன்மு எனப் பிரிக்கப்பட்டு நேர்பசை நிரைபசை யாகா.
4. 'சின்னுந்தை' என்பது 'சின்னு' எனவும் 'இராநுந்தை' என்பது 'இராநு' எனவும் நேர்பசை நிரைபசையாகா.
5. 'நாணுத்'—நேர்பசை.
6. 'விழவுத்'—நிரைபசை.
7. 'கு' நான்காம்]வேற்றுமையுருபு.

கரமாயின் இடையும் இறுதியும் நின்று நேர்பும் நிரைபுமாம் என்றவாறாம்; அவை: 'ஆட்டுத்தாள்', 'சேற்றுக் கால்' எனவும்,

''எய்போற் கிடந்தானென் னேறு.'' (பு.வெ.வாகை 22)

எனவும் இடையும் இறுதியும் குற்றுகரம் நேர்பசையாயிற்று. 'களிற்றுத்தாள்' எனவும்,

''வேலாண் முகத்த களிறு.'' (குறள்-500) எனவும்,

இடையும் இறுதியுங் குற்றுகரம் நிரைபசையாயினவாறு.

'மருங்கினும்' என்ற உம்மையான் அடியீற்றேயன்றி மொழியீற்றும் அவற்று இறுதி கெடநின்ற மொழிக்கண் இடைநின்ற உகரம் இறுதியாகி உரியசை யாகுவனவும் உளவென்பது கொள்க. அவை 'மேவுசீர்'[8] எனவும், 'கோலுகடல்'[9] எனவும் 'உலவுகடல்'[10] எனவும், 'விரவுகொடி'[11] எனவும்,

'கலனளவு[12] நலனளவு''[13] எனவும்,

''சுரும்புலவு[14] நறுந்தொடையலள்'' எனவும் வரும்.

இவை ஈற்று நின்ற மகரங் கெட்டு உகரவீறாயின. இவற்றுள் நிரைபசை யுகரங்களை ஆகாரவீற்றுப் புணர்ச்சியுகர மென்னாமோ வெனின்,[15]—என்னாமன்றே; வருமொழியொற்று மிகாமையி னென்பது, 'உலவுக் கடல்', 'விரவுத்தளை' எனின் அவ்வாறே யமையுமென்பது. 'மருங்கு' என்றதனான் ஈற்றடிக்

---

8-14; மேவும்சீர், கோலும் கடல், உலவும் கடல், விரவும் கொடி, நலனளவும், நலனளவும், சுரும்புலவும் என்பன மகரம் கெட்டு முற்றுகர வீறாயின.

15. உலா, விரா, அளா, என்பன ஆகார வீறாதலின் அவை உலவு விரவு அளவு என வருதலின் அவ்வுகரங்கள் ஆகார வீற்றுப் புணர்ச்சி விதியால் வந்தன என்னமோ எனின் என்னாம் ஆகார வீறாயின் உலவுக் கடல் என்பதுபோல வருமொழி வல்லொற்று மிகுதல் வேண்டும். மிகாமையின் என்னாம் உலவுக்கடல் என மிகின் ஆகாரவீற்றுப் புணர்ச்சி என்னலாம்.

16. 'புல்' என்பதே 'புல்லு' என மருவி வந்தது. புணர்ச்சி விதியால் வந்ததன்று 'கதவம்' என்பது கதவு என மருவி வந்தது.

கண்ணும் இறுதிக்கண்ணே முற்றுகரம் விலக்குண்டதெனக் கொள்க வென்றார்க்கு,

''புனைமலர்த் தாரகலம் புல்லு'' (யா. வி-ப- 58) எனவும்

''கண்ணாரக் காணக் கதவு.'' (முத்தொள்—42) எனவும்

வருமாலெனின் அவை மரூஉ வழக்கென்க,[16]

(9)

**நச்சினார்க்கினியர்**

9. முற்றிய லுகரமும்............. மருங்கினும்.

இது குற்றியலுகரத்திற் கினமாகிய முற்றுகரத்திற்கு இலக்கணங் கூறுகின்றது.

(இ-ள்) முற்றிய லுகரமும் மொழி சிதைத்துக் கொளாஅ— முற்றியலுகரமும் வருமொழியைச் சிதைத்துப் பிரித்து அவற்றினின்றும் வாங்கிக் கொடுக்கப்படா; எனவே நிலைமொழித் தொழிலாகிய உகரமும் நிலை மொழியீறு கெட நின்ற உகரமே கொள்க, நிற்றல் இன்றே ஈற்றடி மருங்கினும்— அதுதான் இடையினன்றி ஈற்றடியிடத்திலும் இயலசையாய் நிற்றலின்று; எனவே உரியசையாயே நிற்கும், எ-று.

'நாணுடையரிவை' (அகம்—34) என்புழி வருமொழியின் உகரம் வந்தேறியது முற்றுகரமாகாதென்றுணர்க. இனி, 'நாணுத்தளையாக வைகி' 'இரவுத்துயின் மடிந்த தானை' (அகம் —24) 'சுறவுக்கொடி' (சிந்—முத்—493) 'விழவுத்தலைக் கொண்ட' (அகம்—17) 'மின்னு நிமிர்ந்தன்ன' (நற்றிணை-51) இவை நிலைமொழித் தொழிலாகிய உகரம் பெற்றன. நீர்க்கு, நிழற்கு என நின்ற நான்கனுருபு நிலைமொழித் தொழிலுகரமாம். உலவு கடல், விரவு கொடி எனின் அதுவாம். 'சுரும்புலவு நறுந்தொடையலள், கலனளவு நலனளவு' இவை நிலைமொழியீற்று மகரங்கெட நின்ற உகரம் முற்றுகரமாயின. இனி 'இனத்துள்ள தாகு மறிவு' (திருக்குறள்—454) 'இன்னா தினியார்ப் பிரிவு' (ஷை—1158) 'கருமமே கல்லார் கண் தீர்வு' 'பேரறிவாளர் துணிவு' 'பாடறியாதானையிரவு' 'போற்றாதார் முன்னர்ச் செலவு' (நான்மணிக்—10) 'புன்கணுடைத்தாற் புணர்வு' (திருக்குறள்—1152) 'புனைமலர்த்தாரகலம் புல்லு' அஞ்சொன்மடவார்க் கருளு' 'கோலு' இவை யடியிறுதிக்கண் உரியசையாய் நின்றவாறு காண்க.

'நிற்றலின்றே' என்றதற்கு ஈற்றடிக்கண் நிற்றலில்லை யென்று கூறின் அவை முடியாவாம்.[1] இவை அசைக்கும் ஓசைக்கும் உறுப்பாம்.

உகரமும் என்ற உம்மையாற் குற்றுகரமும் 'சேற்றுக்கால் நீலம்' எனப் பிரித்துக் கெடாமனின்றவாறும் 'எய்போற் கிடந்தா னென்னேறு'(பு—வெண்—வாகை—22) என இறுதிக்கண் உரியசை நின்றவாறுங் காண்க. நாகுண்டு என்பது குற்றுகரமாகாது.[2]

(9)

## சிவலிங்கனார்

முற்றியலுகரமும்......மருங்கினும்.

(இ-ள்) முற்றியலுகரமும் உம்மையாற் குற்றியலுகரமும் மொழிசிதைத்து அலகிடப்படா; அடியிறுதியிலும் சிதைந்து நிற்றல் இல்லை. எ-று.

உ-ம் : அங்கண் மதியம் அரவுவாய்ப் பட்டென—இதில் அரவு வாய் எனப் பிரிப்பின் சொற்சிதையாமையின் அதன் நிரைபு நேர் என அசைகூட்டலாம்.

''பெருமுத் தரையர் பெரிதுவந் தீயும்'' (நாலடி-200) இதில், முத்தரையர் என்பது பெரு என்பதுடன் சேர்த்துச் சீராக்க வேண்டிப் பெருமுத் தரையர் எனச் சிதைக்கப்பட்டதனால் பெருமு என்பதை முற்றியலுகர வீறாகக் கொள்ளல் கூடாது.

---

1. அவை பொருட்பொருத்தமுற முடியா. 'போற்றாதார் முன்னர்ச் செலவு' என்பதில் செலவு என்பது உகரம் இன்றிச் 'செல' என முடிதல் இல்லை. புணர்வு என்பதும் புணர் என நிற்பின் பொருந்தாது. எனவே முற்றுகரம் ஈற்றடி மருங்கும் நிற்றல் இன்று என்பதற்கு முற்றுகரம் நிற்றல் இன்று எனக் கொள்ளல் தவறு. நேரசை நிரை யசையாக நிற்றல் இன்று எனக் கொள்வதே பொருந்தும். அதனால் நேர்பசை நிரைபசையாக நிற்கும் என்பது பெறப்படும்.

2. நாகு+உண்டு=நாகுண்டு. இதில் நாகு என்பது நேர் பசையாகாது. ஏன் எனின் 'நா, குண்,டு' எனப் பிரிக்கப்படுதலின் நாகு என்பது குற்றியலுகரம் ஆகாது. அதில் உள்ள உகரம் உண்டு என்பதன் உகரமாம்.

"சேற்றுக்கால் நீலம்"— இதில் சேற்று என்பதைக் குற்றிய லுகரமாகக் கொண்டு கால் என்பதுடன் நேர்பு நேர் என வந்த தாகக் கொள்ளலாம்.

"என்து ணையை ஏற்க நன்றே"—இதில் துணையை என்பதின் துவ்வை என் என்பதுடன் சேர்த்து என்து எனக் குற்றியலுகரமாக்கல் கூடாது. இது மொழி சிதைத்ததாம்.

## இருவகை யுகரமும் ஒற்றடுத்தல்

**318. குற்றிய லுகரமும் முற்றிய லுகரமும்**
**ஒற்றொடு தோன்றி நிற்கவும் பெறுமே, (9)**

ஆ. மொ. இல.

Tne short 'u' and the fuli 'u, may stand having the consonants being appended.

## இளம்பூரணர்

318. குற்றிய லுகரமும்.........பெறுமே.

என்-னின், எய்தியது விலக்கல் நுதலிற்று.

(இ-ள்) இருவகை யுகரமும் ஒற்றொடு தோன்றித் தனியசை யாகி நிற்கவும் பெறுமென்றவாறு.

உம்மை[1] யிறந்தது தழீஇயிற்று.

உதாரணம்:

"படுகிளி யாவும் பசுங்குரல் எனல்
கடிதின் மறப்பித்தா யாயின் இனிநீ
நெடிதுள்ளல் ஓம்புதல் வேண்டும்."

இதன்கட் குற்றியலுகரம் ஒற்றொடு வருதலான் நேரசையா யிற்று.[2]

---

1. நிற்கவும் என்பதன் உம்மை.

2. 'நெடிதுள்ளல்' என்பதில் நெடிது என்பது 'நெடிதுள்' என ஒற்றடுத்து வந்தமையால் 'துள்' என்பது நேரசை யாயிற்று. குற்றுகரம் ஒற்றடுத்து நேரசையாயிற்று. இவ்வுதாரணம் தவறு. இது குற்றியலுகரமன்று.

''கண்ணும் படுமோ என்றிசின் யானே.' (நற்றிணை-61)
இதன்கண் முற்றியலுகரம் ஒற்றொடு வருதலான் நேரசை யா யிற்று.[3] (9)

## பேராசிரியர்

322. குற்றிய லுகரமு..............பெறுமே.

இஃது எய்தாதது எய்துவித்தது; இயலசைகளை,

''ஒற்றொடு வருதலொடு மெய்ப்பட நாடி.'' (315)

என்றான், உரியசைக்கு அது 'கூறாதான்' ஈண்டுக் கூறுகின்றமையின்.

இதன் பொருள்:- மேற்கூறி வருகின்ற குற்றுகர முற்றுகரங்கள் ஒற்றொடு நிற்கவும் பெறும் அவ்வொற்றுத் தோன்றிய ஒற்றாயின் என்றவாறு.

எனவே, நிலைமொழி ஒற்றுடையவாயின் அவை நேர்பும் நிரைபுமாகா.[2] வருமொழி வல்லெழுத்துமிகினே யாவதென்றவாறு[3] அஃதென்னை பெறுமாறெனின்,

''வல்லொற்றுத் தொடர்மொழி வல்லெழுத்து வருவழி.''[4]
(தொல்-எழுத்-409)

---

3. கண் என்பது 'கண்ணு' என முற்றுகரம் பெற்றது. அது மகர ஒற்றொடு வந்து கண்,ணும் எனப் பிரிக்கப்பட்டு நேரசையாயிற்று.

* இசூத்திரத்திற்குப் பேராசிரியர் உரையே பொருந்தும்.

1. நேர்பு நிரைபு அசைகள் ஒற்றொடு வரும் என்பது கூறாதான்.

2. நிலைமொழி ஒற்றுடன்வரின் குற்றுகர முற்றுகர வீறாகா விக்குள், கடவுள் என்பன மெய்யீறே. உகரவீறல்ல.

3. சுக்கு+கோடு=சுக்குக்கோடு, வல்லெழுத்துமிக்க 'சுக்குக் என்பது நேர்பு அசையாம்.

4. வன்தொடர்க் குற்றியலுகரம் வருமொழியில் வல்லெழுத்து முதலில் வருமாயின் அவ்வல்லெழுத்து மிக்கு முடியும். அப்படி மிக்கு முடிந்தாலும் அது வன்தொடர்க் குற்றியலுகரமேயாம். உதாரணம் சுக்குக்கோடு என்பது, இது இச்சூத்திரப் பொருளும் உதாரணமும் ஆம்.

என்றதனான், முன்னர் நிலைமொழித் தொழிலாகிய முற்றுகரம் வருமெனக் கூறிய அதிகாரத்தானே ஒற்றுத் தோன்றி னென்றா னாகலானும் பெறுதும்; நிலைமொழியுகரம் பெற்று வருமொழி ஒற்றெய்துவது கண்டாகலா னென்பது.[5]

(உ-ம்) "சேற்றுக்கா னீலஞ் செருவென்ற வேந்தன் வேல்"
(யா-வி-ப-236)

"நெருப்புச்சினந் தணிந்த நிணந்தயங்கு கொழுங்குறை."
புறம்—125)

"கனவுக்கொ னீகண்டது." (கலி—90)

என இவை இருவகை யுகரமும் ஒற்றடுத்து உரியசையாயின வாறு[6]. உம்மை, எதிர்மறையாகலான் ஒற்றின்றி வருதலே[7] பெரும்பான்மை. இங்ஙனம் வருமொழி யொற்றுமிகின் அவை கொண்டு நேர்பும் நிரைபுமாமெனவே, 'உண்ணும்' எனவும் 'நடக்கும்' எனவும் நிலைமொழி ஒற்று நின்றவழித் தேமாவும் புளிமாவுமாவதல்லதுநேர்பசையம் நிரை பசையுமாகாதென்பதாம். 'விக்குள் கடவுள்' என்பனவும் அவை. (10)

## நச்சினார்க்கினியர்

10 குற்றிய லுகரமும்.............பெறுமே.

இஃது உரியசைகள் ஒற்றுப்பெற்று நிற்குமென எய்தாத தெய்துவித்தது.

(இ-ள்) குற்றியலுகரமும் முற்றியலுகரமும்— முற்கூறிய குற்றியலுகரமும் முற்றியலுகரமும், ஒற்றொடு தோன்றி நிற்கவும் பெறுமே— வருமொழி வல்லெழுத்து வரும்வழி வல்லொற்றோடு தோன்றி நிற்கவும் பெறும், எ-று.

---

5. அரா என்பது உகரம் பெற்று அரவு என்றாகிப் பின் கொடி என்பதுடன் புணரும்போது ககர ஒற்றுப் பெற்று அரவுக் கொடி என வருவது கண்டதுண்டு ஆகலான்.
6. சேறு—சேற்று+கால்=சேற்றுக்கால்

   நெருப்பு+சினம்=நெருப்புச்சினம்

   கனவு+கொல்=கனவுக்கொல்
7. ஒற்றின்றி நேர்பசை நிரைபசையாக வருதலே.

(எ-டு) 'சேற்றுக்கால் நீலம்,' 'நாணுத்தளையாக வைகி' 'நெருப்புச சினந்தணிந்த' 'கனவுக் கொல்' நீகண்டது' என இரு வகை உகரமும் ஒற்றடுத்து உரியசையாயினவாறு காண்க.

உம்மை எதிர்மறை யாதலின் ஒற்றடாது வருதலே பெரும் பான்மை யென்றுணர்க. நிலைமொழி ஒற்றுமிக்கு உண்ணும், நடக்கும் என்பன தேமா புளிமாவாயே நிற்கும்; விக்குள், கடவுள் என்பனவும் அவை. [10]

## சிவலிங்கனார்

குற்றியலுகரமும்............பெறுமே.

இ-ள் : குற்றியலுகரமும், தம்முன்னர் மெய்யெழுத்து வரவும் பெறும். வரினும் நேர்பசை நிரைபசையாம், எ-று.

உ-ம்: "சேற்றுக்கால் நீலம்"

"கனவுக்கொல் நீண்டது"— இவ்வொற்றுகள் புணர்ச்சி விதியால் வருவன. இயல்பில் வருவனவல்ல.

### அசை, சீர் கொள்ளுமாறு

319. அசையுஞ் சீரும் இசையொடு சேர்த்தி
வகுத்தனர் [1]உணர்த்தல் வல்லோர் ஆறே. [10]

ஆ.மொ.இல.,

it is the method of experts to divide the syllable and foot on the basis of sound.

பி.இ நூ:

இ.வி. 752.

அசையும் சீரும் அடியும் எல்லாம்
இசைய வருபொருள் இயைபு நோக்காது
ஓசையே குறிக்கொண்டு ஒடுங்கவும் விரியவும்
அலகிடல் வகையுளி யாகும் என்ப.

---

1. உணர்த்தலும்—பாடம். நச்,பேரா.

## இளம்பூரணர்

319. அசையுஞ் சீரும்.........ஆறே.

என்-னின். வகையுளி யுணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) அசையையுஞ் சீரையும் ஓசையோடு சேர்த்திப் பாகு பாடுணர்த்தல் வல்லோர்கள் நெறி யென்றவாறு.

அஃதாவது பொருளொடு சொல்லை யறுத்தவழித் தளையுஞ் சீருஞ் சிதையின் அவ்வழி ஓசையை நோக்கிஅதன்வழிச் சேர்த்துக என்றவாறு.

அது வருமாறு :

''மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்.'' (குறள்-3)

என்றவழி வாழ்வாரெனப் பொருணோக்கிச் சீராமாயின் ஓசை கெடும். அதன்கண் 'வாழ்' என்பதனை முதனின்ற சீரோடொட்டக் கெடாதாம். பிறவு மன்ன.

இத்துணையுங் கூறப்பட்டது அசைவகை. (10)

## பேராசிரியர்

323. அசையுஞ் சீரு...............ராறே.

இது, மேற்கூறப்பட்டனவற்றுக்கும் இனிவருஞ் சீர்க்குமெல் லாம் புறனடை.

இதன் பொருள்;— அசைகளையும் சீர்களையும் ஓசையொடு சேர்த்தி வேறுபடுத்து உணர்த்துதலும் அச்செய்யுளிலக்கணத் துறைபோயினாரது நெறி என்றவாறு.

---

1. நீடு வாழ்வார் என வருதல் வேண்டும். வாழ்வார் என்பது பொருளமைந்த சொல். நீடு என்பது தேமா. மாமுன் நிரை வருதல் வேண்டும் வெண்பாவுக்கு, வாழ் என நேர் வருதல் தவறு. அதனால் 'வாழ்வார்' எனும் சொல்லைப் பொருளமைதி நோக்காது ஓசை நோக்கி 'வாழ்' எனவும் 'வார்' எனவும் பிரித்து 'வாழ்' என்பதை 'நீடு' என்பதுடன் சேர்த்து 'நீடுவாழ்' எனக் கொள்ளின் கூவிளம் என ஆகி, விளமுன் நேர் வருவது வெண்பா வுக்குரியதாதலின் 'வார்' எனும் நேரசையுடன் யாப் பமைதி பெறுதல் காண்க.

மேல் (313) மாத்திரை யென்பதோர் உறுப்புரைத்தான்: இன்னோசையும் அதனான் அசை சீர்களது ஓசையை அளந்து கூறுபடுத்து இன்னாவோசையு முணர்த்துக. எழுத்தியல் வகைக்கும் இஃதொக்கும்.

''குருத்துக் குறைத்துக் கொணர்ந்து நமது
கருப்புச் செறுப்புப் பரப்பு.'' (யா-வி-ப-33, 181)

எனின், வெண்பாவீற்றடி இன்னோசைத்தன்றாம்;[1]

''கருப்புக் கொழுந்து கவர்ந்து.''

என முடிக்கின் இன்னோசைத்தாய் வெறுத்திசையின்றா மென்பது.

''நிலமிசை நீடுவாழ் வார்.'' (குறள்-3)

இதனுள், வாழ்வார் என்னும் மொழியை வகுத்து,[2] வாரென நேரசைச் சீராக்கி வகுப்பவே அசையினை இசையொடு[3] சேர்த்திற்றாம். இனி, 'நீடுகொடி' என்பதனை 'மாவருவாய்' என்ற அசையுஞ் சீரும் இசையிற் சேர்த்துகவென்பாரு முளர்.[4] இவற்றைப் பிற நூலார் வகையுளி யென்ப.

இச்சூத்திரத்துள், 'வகுத்தனருணர்த்தல்' என்றமையின் இனி, வெண்பாவினுள் வெண்சீரொன்றி வந்த வழியும் வேற்றுத்தளை விரவும் இடனுடைய அவையும் இசையொடு சேர்த்தி வேறுபாடுணர்த்துக.

''மாசேர்வாய் மாசேர்வாய் மாசேர்வாய் மாசேர்வாய்'' என்பது; பன்னிரண்டெழுத்தடி.

''மாசேர்வாய் மாசேர்வாய் மாசேர்வாய் மாவருவாய்.'' என்பது பதின்மூன்றெழுத்தடி.

---

1. இவ்வுதாரணம் சீர்தளைகளால் தவறில்லையாயினும் வல்லோசையால் குறைபாடுடையதாதலின் இவ்வாறு எழுதினார்.
2. வகுத்து—பிரித்து
3. இசையொடு— இசைக்கு ஏற்ப
4. 'நீடு கொடி'—இதனை நேர்பு நிரை என்னாமல், நீ, டுகொ,டி எனப் பிரித்து அதன் வாய்பாடாக மா வருவாய் என்று கொண்டு அசையும் சீரும் பாடலில் இசையுமானால் சேர்த்துக என்பாரும் உளர்.

''மாசேர்வாய் மாசேர்வாய் மாவருவாய் மாவருவாய்'' என்பது, பதினான்கெழுத்தடி; இவை மூன்றும்.

''அளவுஞ் சிந்தும் வெள்ளைக் குரிய.'' (370)

என வெண்பாவிற்கு ஓதிய அளவடியேயாயினும் இக்காட்டிய அலகிடுகையாற் கலித்தளை தட்டுத்[5] துள்ளலோசையும் பிறக்கும்.

''மாசேர்வாய் மாசேர்வாய் பாதிரி பாதிரி.'' எனவும்,

''மாசேர்வாய் பாதிரி பாதிரி காருருமு.'' எனவும்,

''மாசேர்வாய் பாதிரி காருருமு காருருமு.'' எனவும்,

முன்காட்டிய மூன்றனையுமே இவ்வாறு அலகிட்டு ஓசையூட்டக் கலித்தளை தட்டாது வெண்பாவடியேயாம். இவ்விரு கூறும் ஓசையொடு சேர்த்துணர்த்துக. பதினான்கெழுத்தின் இறந்த பதினைந்து நிலனும் பதினாறு நிலனும் பதினேழு நிலனுமென இம்மூன்றும் வெண்சீர் வந்தொன்றியக்காலும் இயற்சீர் வந்தொன்றாக்காலும் ஒருஞான்றும் செப்பலோசை பிறவா;[6] அவையும் ஓசையோடு சேர்த்தி வகுத்துணர்த்துக; அவை வருமாறு;

''புலிவருவாய் மாசேர்வாய் மாசேர்வாய் மாவருவாய்'' (எ-ம்)

''மாவருவாய் மாவருவாய் மாவருவாய் மாவருவாய்.'' (எ-ம்)

''புலிவருவாய் மாவருவாய் மாவருவாய் மாவருவாய்.'' (எ-ம்)

இவை வெண்சீரொன்றியுங் கலித்தளை தட்டின. இனி, இவற்றை இயற்சீர் கொடுத்துச் சொல்லுங்காலுஞ் செப்பலோசை சிதையும்; என்னை?

''காருருமு காருருமு காருருமு பாதிரி.'' எனவும்,

''காருருமு காருருமு காருருமு காருருமு.'' எனவும்,

---

5. கலித்தளை தட்டு என்பது பொருந்தாது. காய்முன் நிரைவருவதே கலித்தளை. ஆனால் கலிக்குரிய துள்ளலோசை வருகிறது. அவ்வோசை வராமல் காக்கப் பின் வருமாறு அலகிடுவதே சிறக்கும்.

6. வெண்பாவுக்குரிய வெண்சீரும் மாமுன் நிரை விளமுன் நேர் வரும் இயற்சீரும் வந்தாலும் இயற்சீர் மாமுன்நேர் விளமுன் நிரை என ஒன்றாது வந்தாலும் செப்பலோசை பிறவா.

''நரையுருமு காருருமு காருருமு காருருமு.'' எனவும்,

இவை இயற்சீரான் வந்தும் வேறோர் சந்தப்பட்டுச் செப்பலோசை சிதையநிற்குமென்பது' அசையுஞ் சீரும் இசையொடு சேர்த்தி வகுத்துணர்த்துக. இன்னோ ரன்ன பிறவும் பெரிதும் எஃகுசெவியும் நுண்ணுணர்வும் உடையார்க்கன்றி உணரலாகா.

''ஞாயிறு புலிவருவாய் புலிவருவாய் மாசேர்வாய்.''

என்றக்கால், 'ஞாயிறு' 'புலிவருவாய்' என இயற்சீரின் பின்னர் நிரையசை வந்து.

''சீரியை மருங்கி னோரசை யொப்பி
னாசிரியத் தளையென் றறியல் வேண்டும்.'' (368)

என்பதனான், ஆசிரியத் தளையாயினும் அஃது ஆண்டுக் கலித்தளைப்பாற் படுமென்பது,

''அசையுஞ் சீரு மிசையொடு சேர்த்தி.''

என்பதனான் உணரப்படும்.

இனி, ''ஞாயிறு புலிசேர்வாய் புலிசேர்வாய் மாசேர்வாய்''

என்புழி ''புலிசேர்வாய்'' என நேரொன்றியதேனும் அது கலித்தளை யென்பது,

''அசையுஞ் சீரு மிசையொடு சேர்த்தி'' என்பதனான் உணரப்படும். இன்னோரன்ன பலவுமுள: அவையெல்லாம் வரையறுத்து இலக்கணங் கூறப்படா, அவற்றை அவ்வாறு வேறுபடுத்துணர்த்துதல் அவ்வத் துறைபோயினார் கடனென அடங்கக் கூறல் வேண்டி,

''அசையுஞ் சீரு மிசையொடு சேர்த்தி
வகுத்தன ருணர்த்தலும் வல்லோ ராறே.''

என்றானென்பது.

உம்மையான் அடியினை வகுத்துணர்த்துதலும் கொள்க; அது:

''நுதல திமையா நாட்ட மிகலட்டுக்
கையது கணிச்சியொடு மழுவே.'' (அகம்-கடவுள்)

என்புழி, 'இகலட்டு' என்னுஞ்சீர் 'எழுத்து முதலாக வீண்டிய வடியிற், குறித்த பொருளை முடியநாட்டப்' பின்வந்த தாகலின் யாப்பென்னும் உறுப்பினுள் அடங்காது 'இகலட்டுக் கையது' என, மேலடியோடு பொருள் கூடியும், இசையொடு சேர்த்தி வகுத்துணர்த்தியதேயாம். இன்னும் இவ்விலேசானே எழுத்தல்

லோசையும் அசையொடுஞ் சீரொடுஞ் சேர்த்தி வகுத்துணர்த் தலுங் கொள்க; அவை,

''சுஃஃஃ[1] றென்னுந் தண்டோட்டுப் பெண்ணை.''

என்றாற் போல்வன.

இனி, அகவலோசை மூன்றெனவும், செப்பலோசை மூன்றெனவும், 'அசையுஞ்சீரும் இசையொடு சேர்த்தி' என வகுத்துணர்த்துவாருமுளர். அவை, இயலசை மயங்கிய இயற்சீரும்[2], உரியசை மயங்கிய இயற்சீரும்[3], வெண்சீரும்[4] பற்றி ஓசை வேறுபட்டுத் தோன்றுமென்க. அங்ஙனமாயினும் அவை மும்மூன்றாக்கி வரையறுக்கப்படாமையின் ஈண்டு அவை கூறானென்பது.

இனி. ஒருசாரார், அசையுஞ்சீரு மிசையொடு சேர்த்தி வகுத்துணர்த்தல்' என்பதனை இவ்வாறு முரைப்ப; என்னை? ஒரு செய்யுளுட் கிடந்த அசை சீர்களை ஈண்டுக் காட்டிய தேமா புளிமாவென்பன முதலாகிய உதாரணங்களோடு சேர்த்தி அவ்விரண்டனையும் ஒக்கும் வகையான் ஓசையூட்டிக் காட்டுப; அற்றன்று, இவ்வுதாரணஞ் சீரென்று வலித்திருந்தார்க்காம்[5] அது செய்து காட்டல் வேண்டுவது. எல்லாச் சொல்லிற்கும் ஏற்ற வாற்றான் 'அசையுஞ் சீரும் இசையொடு' எனப் பொதுவகையாற் கூறினமையின் அதுகாட்டின் நிரம்பாதென்பது.[5]

---

1. சுஃஃஃறு என்பது ஓசைக்காக வந்தது. அஃது எழுத்துகளால் ஆன சொல் அன்று. அது எழுத்து அல் ஓசை எனப்படும்.
2. இயலசை—நேர், நிரை அவை மயங்குதல் என்பது. மாமுன் நிரையாகவும் விளமுன் நேராகவும் வருதல். அது இயலசை மயங்கிய இயற்சீர் எனப்படும்.
2. உரியசை மயங்கிய இயற்சீரும் என்பதற்கு நேர்பு நேர் முன்நிரையும் நிரைபு நேர் முன் நேரும் மயங்கி வருதல் எனக் கொள்க.
4. வெண்சீர்—வெண்பாவுக்குரிய மூவசைக் காய்ச்சீர்
5. பாடலில் வரும் சீர்களுக்கு மட்டுமே என வலிமையாகக் கொண்டவர்க்காம்.
6. அசையும் சீரும் என்றமையால் சீர் அசை என்பனவற்றுக்கும் கூறியதாகக் கொள்ளல் வேண்டும். சீர் மட்டும் கொண்டால் கூறிய இலக்கணம் அசைக்கு ஏலாமையின் நிரம்பாது, அதாவது முழுமையாக இலக்கணம் சொன்னதாகாது.

இனி, "கடியாறு கடியாறு கடியாறு கடியாறு."

என்பதனைத் துள்ளலாகச் சொல்லிக் கலியடியெனவும், கடியாறு என்பது நேர்பீறா மென்பதாயினும் அது வெண்சீரே ஈற்றசை நிரையசை யியற்றாய் நின்றதெனச் சொல்லி அதற்கு இலக்கணம்,

"வெண்சீ ரீற்றசை நிரையசை யியற்றே." (341)

எனப் பொருளுரைத்து, மற்றதனைக் கலித்தளையெனவுங் காட்டுப; அற்றன்று; 'கடியாறு' என்னுஞ் சீரின் உறழ்ந்த ஆசிரிய வடியும் அதுவே வாய்பாடாக வருமாகலின். மற்றதன் கண் துள்ளலோசை பிறந்ததாலெனின், — அவற்றுக்கண் ஒரோ மாத்திரை கொடுப்பத் துள்ளலோசை பிறந்ததாயினும் அசையுஞ் சீரு மிசையொடு சேர்த்திச் சொல்லுக' எனவே அங்ஙனம் மாத்திரை நீட்டிச் சொல்லாது அகவலோசைபடச் சொல்லுக வென்பது இதனாற் பெற்றாமாகலின் அது பொருளன்றென்பது*

## நச்சினார்க்கினியார்*

11. அசையும் சீரும்................ராறே.

இது முற்கூறியவற்றிற்கும் இனிவருஞ் சீர்க்குமெல்லாம் புறனடை.

(இ-ள்) அசையும் சீரும் இசையொடு சேர்த்தி—அசைகளையும் ஓசையோடு சேர்த்தி, வகுத்தனர் உணர்த்தலும் வல்லோர் ஆறே- வேறுபாடு உணர்வித்தலும் செய்யுள் இலக்கணத்துறை போயினாரது நெறி, எ-று.

முற்கூறிய மாத்திரையென்னும் உறுப்பின் ஓசையை யளந்து இன்னோசையும் இன்னாவோசையும் அறிந்து உணர்த்துக, எ-று.

(எ-டு) 'தருக்கிப் புணர்ந்து தணந்த தமது, பொருப்புப் புடைத்துப்புடைத்து' என்றால் வெண்பாவீற்றடி இன்னோசைத்

---

* இச்சூத்திரத்துக்குப் பேராசிரியர் கூறும் கருத்துக்கள் யாவும் ஓசையினை அடிப்படையாகக் கொண்டவையாதலின் அவர் கூறியவாறே கொள்வதல்லது சீர்தளை அமைதி கொண்டு அவர் கூறுவன பொருந்தா என்ன வேண்டுவதில்லை.

* இவர் உரை பேராசிரியர் உரையே.

தாகாமையின் 'பொருப்புத் தழைந்த பொழிந்து' என மெல்லின வோசை சேர்க்க இன்னோசைத் தாயிற்று.

'நிலமிசை நீடுவாழ் வார்' (திருக்குறள்-3) இதனுள் வாழ்வரென்னும் ஓசையை வகுத்து, வார் என நேரசைச் சீராக்க அசையான் இன்னோசைத்தாயிற்று.

இனிக் கட்டளையடியையும்[1] சீர்வகையடியையும் இசையொடு சேர்த்தி இன்னோசை யுணர்க. 'அளவுஞ் சிந்தும் வெள்ளைக் குரிய' (செய்—58) என்ற பதினான்கெழுத்தளவும் வருங் கட்டளை வெண்பாவும் வெண்சீரே யொன்றிக் கலித்தளை தட்டு இன்னோசை பெறாதாம்.

மாசேர்வாய் மாசேர்வாய் மாசேர்வாய் மாசேர்வாய் என்றால் துள்ளலோசையும் பிறக்கும். இதனை மாசேர்வாய் பாதிரி காருருமுக் காருருமு எனின் இன்னோசைத்தாய்ச் செப்பலோசை பிறந்தது.

இனிச் சீர்வகை யடிக்கும் 'யாதானு நாடாமா லூராமால்' என்றாற் சீர்வகைத் துள்ளலோசையும், 'என்னொருவன்' என்றாற் சீர்வகைச் செப்பலோசையும் பிறக்குமாறு இசையொடு சேர்த்தியுணர்க.

இனி "ஞாயிறு புலிவருவாய் புலிவருவாய் மாசேர்வாய்" என்றால் ஞாயிறு என்ற இயற்சீர்ப்பின் நிரையொன்றி ஆசிரியத் தளையாயிற்றேனும் கலித்தளைப்பாற்படுதலும்; ஞாயிறு புலிசேர் வாய் புலிசேர்வாய் மாசேர்வாய் என்றவழிப் புலிசேர்வாய் மாசேர் வாயென நேரொன்றிற்றேனும் கலித்தளைப்பாற்படுதலும் இசையொடு சேர்த்தியுணர்க. இவ்வாறே பிறவும் வகுத்துணர்த்து தல் அத்துறை போயினார்க்கே தெரிவதாம்.

இனி உம்மையான் அடியுமிவ்வாறே வகுத்துணர்த்துக. 'நுதலதிமையா நாட்ட மிகலட்டுக், கையது கணிச்சியொடு மழுவே' (அகம்—கடவுள் வாழ்த்து) என்புழி இகலட்டு என்னுஞ் சீர் குறித்த பொருளை முடிய நாட்டும் யாப்பென்னும் உறுப் பினுள் அடங்காது 'இகலட்டுக் கையது' என மேலிலடியோடு பொருள் கூடிற்றேனும் இசையொடு சேர்த்தி வகுத்ததாயிற்று.

இன்னும் அதனானே எழுத்தல் கிளவியாகிய சுஃறென்னுந் தண்டோட்டுப் பெண்ணை' என்பதனை அசையொடுஞ் சீரொடும் சேர்த்துணர்த்தலுங் கொள்க.

---

1. கட்டளையடி—எழுத்தெண்ணிக் கூறும் அடி.

இனி அகவன் முதலிய நான்கோசையினையும் ஒன்று மூன்றாக்கி வகுத்தல் தொல்காப்பியனார் கருத்தன்றாயிற்று; என்னை? இயலசை மயங்கிய இயற்சீரும் உரியசை மயங்கிய இயற்சீரும் வெண்சீரும் பற்றி யோசை வேறுபடத் தோன்றலின் அவை பன்னிரண்டென்னும் வரையுளடங்காவென்பது பற்றி.

இன்னும் 'இசையொடு சேர்த்தி' என்றதனானே 'ஔஉளபாகு மிடனுமா ருண்டே' (தொல்—மொழிமரபு-24) என்ற ஐகாரமும் பொருள் சிதைந்திசையொடு சேர்தல் கொள்க.

'வண்கொன்றையை மருட்டுங் காண்,' புகழ்தலானப் பெரு வண்மையனே' இவை முதலிடை கடைகளிற் சிதைந்தும் வரு மென்று கொள்க. (11)

**சிவலிங்கனார்**

அசையும்.....................ராரே

(இ-ள்) அசைகளையும் சீர்களையும் ஓசையோடு பொருத்தி சீர்களை வகுத்துணர்த்தலும் செய்யுள் வல்லார் நெறியாம், எ-று. அதாவது சொற்களைச் சிதைத்தும் சீர்கொள்ளலாம் என்றவாறு.

உ-ம்: மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார். (குறள்-3)

இதில் வாழ்வார் எனும் சொல் சீர்பொருத்தத்துக்கேற்ப நீடுவாழ் வார் எனப் பிரித்தமை காண்க. நீடுவாழ் சீராகவும் வார் அசை யாகவும் ஆயின.

**சீர் - சீராமாறு**

320. ஈரசை கொண்டு மூவசை[1] புணர்த்துஞ்
சீரியைந் திற்றது சீரெனப் படுமே, (11)

ஆ.மொ.இல.,

A 'sir' is said to be one which consists either two syllables or three syllables.

பி.இ.நூ.

யா. வி. 10 ஷை சூத்திரமே.

இ. வி. 715

இயற்சீர் உரிச்சீர் பொதுச்சீர் என்று
மயக்கற வகுத்த சீர்மூன் றாகும்.

---

1. புணர்ந்தும்—பேரா—பாடம்

## இளம்பூரணர்

320. ஈரசை கொண்டு..............படுமே.

என்-னின், நிறத்தமுறையானே சீராமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) இரண்டசைகொண்டு புணர்த்தும், மூன்றசை கொண்டு புணர்த்தும், ஓசை பொருந்தி யிற்றது சீரெனப்படும் என்றவாறு.

'தாமரை புரையுங் காமர் சேவடி."[1]

(குறுந்—கடவுள் வாழ்த்து)

என்றவழி நான்கு சொல்லாகி ஓசையற்று நின்றவாறு கண்டு கொள்க.

"எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு."[2]

(குறள்)

என்றவழி மூன்றசையினாற் சீராகியவாறும் அவ்வள வினான் ஓசையற்று நின்றவாறுங்[3] கண்டுகொள்க. (11)

## பேராசிரியர்

324. ஈரசை கொண்டு..............படுமே.

இது முறையானே அசையுணர்த்திச் சீராமாறுணர்த்துவான் தொடங்கி அவை இத்துணைப் பகுதிய வென்பதூஉம் அவற்றுப் பொதுவிலக்கணமும் உணர்த்துதல் நுதலிற்று.

இதன்பொருள்:— இரண்டசையானும் மூன்றசையானும் ஓரோர் சொற்கள் சீரியைந்திறுவன சீரென்று சொல்லப்படும் என்றவாறு.

---

1. நேர்நிரை, நிரைநேர், நேர்நேர், நேர்நிரை என ஈரசைச் சொற்கள் காண்க.
2. செய்ந்நன்றி என்பதுவரையுள்ள சீர்கள் மூவசைச் சீர்கள்.
3. ஓசையற்று நிற்றல்—ஓசை கொண்டு நிற்றல்.

'சீரியைந் திறுதல்' என்பது, வழக்கியல் செய்யுளாமாற்றால் யாப்பினும் பொருள் பெறப் பகுத்துப் பதமாகியவற்றுச் சேறல்.[1]

உதாரணம்: சாத்தன் கொற்றன் எனவும், உண்டான் தின்றான் எனவும் இரண்டசை கொண்டு சீராயின. 'கானப் பேர்', 'சாய்க்கானம்', 'கூதாளி' எனவும், உண்ணாதன தின்னா தன எனவும் இவை மூவசை புணர்ந்து சீராயின. இவை செய் யுளுள் வருமாறு:—

"உலக முவப்ப வலனேர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாஅங்கு." (முருகு-1-2)

என ஈரசைச்சீர் வந்தன.

"யானூடத் தானுணர்த்த யானுணரா விட்டபின்
றானூட யானுணர்த்தத் தானுணர்ந்தான்."
(முத்தொள்-104)

"வசையில்புகழ் வயங்கு வெண்மீன்
றிசைதிரிந்து தெற்கேகினும்." (பட்டின-1-2)

என இவை மூவசைச்சீர் வந்தன; பிறவுமன்ன.

மற்றுச் சீரென்ற தென்னையெனின்,— பாணிபோன்று இலயம்பட நிற்றலான் அது சீரெனத் தொழிற்பெயராம்;[2]

"சொற்சீர்த் திறுதல்' (435) என்புழித்
தொழிற்படுத் தோதினமையின்.

இனி, 'இயைதல்' என்பது, அசைவகை ஒன்றொன்றனொடு தொடர்ந்தவழியல்லாற் சீர்க்கு அலகுபெறலாகாதென்றவாறு; எனவே, அவ்வாறு இலயம்பட நின்றனவாயினும் புணர்ச்சி யெய்து[3] மென்பதாம். மற்று, 'இற்றது' என்றதென்னை? சீரென்பது தொழிற் பெயராதலால், அது 'சீரியைந்து' எனவே

---

1. உலக வழக்கமே செய்யுளாம். ஆதலினால் அதற்கேற்ப யாப்பில் சொற்களைப் பொருள் விளங்குமாறு பிரித்துச் சொல்லாம்படி அமைதல்.

2. சீர்த்தல் உடையது சீர் எனத் தொழிற்பெயர். சீர்த்தல் என்பது சீர் என முதல் நிலைத் தொழிற்பெயராய் நின்றது. பாணி—பாணித்தல்.

3. புணர்ச்சி யெய்தும்— அடுத்த சீரோடு சேர்தல் பொருந்தும்.

பெறுதுமெனின்,[4]—அங்ஙனங் கொள்ளிற் சீரியைந்த தொடரெல்லாங் கூடி ஒருசீராவான் செல்லுமாகலின் இடையிடை இற்று வரல் வேண்டுமென்றற்கு அங்ஙனங் கூறினானென்பது; இதனானே ஒரோவழிப் புணர்ச்சி விகாரம் எய்தாமையுங் கூறினானாம்.

"வண்டுபடத் ததைந்த கண்ணி." (அகம்—1)

என்புழி, வல்லெழுத்து மிக்க புணர்ச்சி வகையானே சீரியைந்தன.[5]

"பேர்ந்து சென்று சார்ந்து சார்ந்து." (யா-வி-ப-380)

என்றவழி, ஒன்றோடொன்று தொடர்ந்ததேனும் 'இற்றது' என்பதனான் இறுதிபட[6] நின்றமையின்

"எல்லா விறுதியு முகர நிறையும்." (தொல்-எழுத்-408)

என்றதனாற் குற்றுகர முற்றுகரமாகாது நாலெழுத்தடியாயிற்று.[7] இதனை எழுத்தடி யென்றலே வலியுடைத்து; வல்லொற்றுத் தொடர்மொழிக் குற்றுகரத்தால் நாலெழுத்தடி வேறுண்மையின். 'ஈரசை கொண்டும் எனவும்,

---

4. சீர் என்பது சீர்த்தல் எனத் தொழிலுணர்த்தும் பெயர் ஆதலால் 'சீரியைந்து' எனவே சீர்த்தல் பொருந்தி என முடிவது என்பதை உணர்த்தலின் 'இற்றது' என்பது தேவையில்லை; அதனால் இற்றது என்றது ஏன்எனின்'

5. வண்டுபடத் ததைந்த என்பதில் தகர ஒற்று, புணர்ச்சி வகையான் வந்து சீர்த்தல் இயைந்தது.

6. இறுதிபட—தனித்தனிச் சீர் என முடிவுபட.

7. 'பேர்ந்து சென்று சார்ந்து சார்ந்து' என்பதில் தனித் தனிச் சீராக இற்றிருந்தாலும், எல்லாச் சொல்லிறுதியிலும் குற்றுகரம் முற்றுகரமாக நிறையும் என்பதற்கேற்பப் 'பேர்ந்து' முதலிய குற்றுகரங்கள் முற்றுகரமாகாமல் குற்றுகரமாகி மெய்போல அலகு பெறாமல் நிற்றலின் பே,செ,சா,சா என நாலெழுத்தாலமைந்த ஓரடி எனப்படும். வன்தொடர்க் குற்றியலுகரம் அவ்வாறு நாலெழுத்தடியாக வரும் என்பது உண்மையின் மென் தொடர்க் குற்றியலுகரம் அவ்வாறு வந்தது என்க.

'மூவசை புணர்ந்தும்' எனவும் கூறினமையான் ஒருசீர் பல சொல் தொடர்ந்துவரினும்[8] அவை ஒன்றுபட நிற்றல் வேண்டு மென்றவாறாம். எனவே, உலகத்துச் சொல்லெல்லாம் ஈரசை யானும் மூவசையானுமன்றி வாராவென்பது பெற்றாம். இதனானே ஒரு சொல்லைப் பகுத்துச் சீர்க்கு வேண்டுமாற்றான் வேறு சீராக்கிய வழியும் அச்சீர் வகையானே வேறு சொல்லிலக் கணம் பெறுமென்பதுங் கொள்க; அது,

''மம்மர் நெஞ்சினேன் றொழுதுநின் றதுவே.'
(அகம்—56)

என்புழி, நின்றது என்னுஞ்சீர் குற்றுகரவீற்றுச் சொல் லன்றே, அதனைப் பிரித்து 'அதுவே' என வேறு சீராக்கவே அது முற்றுகரமாகி வேறுபடுதல் கண்கூடாக் கண்டு கொள்க. என்றார்க்கு, 'எனப்படும்' என்றதென்னையெனின், ஓரசையே சீர்நிலை[9] பெறுமென்றுமாயினும்[10] அவை சீரென முன்னோதப் படா வென்றற்கென்பது. மற்று நாலசையானும் ஐந்தசையானும் உண்ணாநின்றன அலங்கரியா நின்றானெனச் சொல் வருவன உளவாலெனின்,—அங்ஙனம் வருஞ் சொற்கள் சிலவாகலானும் அவைதாமும் இரண்டு சொல்விழுக்காடாய்ப் பிளவுபட்டு நிற்றலின் ஒருசீரெனப்படாமையானும் அவை சீராக வருஞ் செய் யுளின்மையானும் என மறுக்க.

இனி வஞ்சிப்பாவினுள் வந்த ஆசிரியவடியினை நாலசைச் சீர் காட்டல் வேண்டுவார் இருசீரடியாக உரைப்பினும் அவை தூங்க லோசையில வாகலானும் அவை சீரியைந்திறுத லின்மையானுங் கொள்ளா னென்பது. ஈண்டு 'எனப்படும்' என்பதே பற்றி நாலசைச்சீர் கொண்டாரும் உளர்;[11] ஐயசைச்சீர் கொண்டாரைக் கண்டில மென்க.

---

8. ஒரு சீர் ஒரு சொல்லால் வருவது மட்டுமன்றி நெற் சோறு, பால் பழம் போலப் பல சொற்களால் வருவதும் ஒன்றுபட நிற்கும் சீராம்.

9. நின்றது என்பதிலுள்ள குற்றுகரம் (து) அதுவே என் பதில் முற்றுகரமானது.

10. என்றும் ஆயினும்— என்று சொல்வோமாயினும்

11. பிற்காலக் காக்கை பாடினியாரும் காரிகையாசிரியரும்.

**நச்சினார்க்கினியர்**

12. ஈரசை கொண்டும்.............. படுமே.

இது நிறுத்த முறையானே சீருணர்த்துவான் தொடங்கி அவற்றின் பகுதியும் அவற்றது பொதுவிலக்கணமும் உணர்த்திற்று.

(இ-ள்) ஈரசை இயைந்து கொண்டும்— ஈரசை தன்னில் இயைந்து பொருள் கொண்டும், மூவசை இயைந்து கொண்டும்— மூவசை தன்னிலியைந்து பொருள் கொண்டும், இற்றது சீரெனப்படும்— அற்று நிற்பது சீரென்று சிறப்பித்துச் சொல்லப் படும், சீர்புணர்த்தும் சீரெனப்படும்— அவ்வாறன்றி அச்சீர்தான் ஒருசீரோடொருசீர் தொடரப் பிறர் கூட்டப்பட்டு நின்றாலுஞ் சீரென்று சொல்லப்படும் என்றுங் கொள்க, எ-று.

'இயைந்து' என்றதனையும் 'கொண்டு' என்றதனையும் ஈரசைக்கும் மூவசைக்குங் கூட்டிக் 'கொண்டு' என்பதற்குப் பொருள் கொண்டு என்று பொருளுரைக்க. நடுவு நின்ற 'சீர்' என்றதனைப் 'புணர்த்தும்' என்றதனோடு மாறிக் கூட்டுக.

இயைந்து என்றதனான் ஒரு சீர்க்கட் பலசொற்றொடர்ந்து வரினும் அவை யொன்றுபட்டு நிற்றல் வேண்டுமென்றுணர்க. எனவே, சொல்லெல்லாம் ஈரசையும் மூவசையுமாயல்லது வாரா வென்பதூஉம், இனிப் புணர்ந்து என்றதனான் அச்சீர்கள் அவ்வாறற்று நிற்குமேனும் பிறர் தொடர்புபடுத்தும் வழிப் புணர்ச்சி விகாரமெய்தாமல் தம்முள் தொடர்ந்து நிற்றலுமுடைய என்பதூஉங் கொள்க.

(எ-டு) 'போந்து சென்று சார்ந்து சார்ந்து, மதனுடை நெஞ்சமொடு நடுநா ளென்னாது' இவை புணர்ச்சி விகாரமெய் தாமல் இசையற்றுத் தொடர்ந்தன. 'கடித்துக் கரும்பினைக் கண்டகர நூறி' இது வல்லெழுத்துப் புணர்ச்சி யெய்திற்று.

இன்னும் அதனானே ஒரு சொல்லைப் பகுத்துச் சீர்க்கு வேண்டுமாற்றான் வேறு சீராக்கிய வழியும் அச்சீர்வகையான் வேறு சொல்லிலக்கணம் பெறுதும். அது 'மம்மர் நெஞ்சினேன் தொழுது நின்றதுவே' என்புழி நின்றது என்னுங் குற்றுகர வீற்றுச் சொல்லினைப் பிரித்து அதுவே என வேறொரு சீராக்க முற்றுகரமாகி வேறுபடுதல் கொள்க.

பிறர் தொடர்புபடுத்தின செய்யுள் 'உலக முவப்ப வலனேர்பு' (திருமுருகாற்றுப்படை) 'யாதானு நாடாமால்' (திருக்குறள்)

எனவும் 'வசையில் புகழ் வயங்கு வெண்மீன்' (பட்டினப்பாலை) எனவும் ஈரசைச் சீரும் மூவசைச்சீரும் வந்தன. (12)

## சிவலிங்கனார்

ஈரசைகொண்டும்............படுமே,

(இ-ள்) இரண்டசைகளால் ஓசை நிறைந்தும் மூன்றசைகளால் ஓசை நிறைந்தும் முடிவது சீர் எனப்படும், எ-று.

உ-ம் : "மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்" (குறள்-3)

இது ஈரசைச் சீர்களாலானது.

யாதானு நாடாமா லூராமா லென்னொருவன்
சாந்துணையும் கல்லாத வாறு (குறள்)

கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின் (குறள்-2)

இது ஈரசைச் சீர்களும் மூவசைக் சீர்களும் வந்தன.

### இயற்சீரும், ஆசிரிய உரிச் சீரும்

**321. இயலசை மயக்கம் இயற்சீர் ஏனை
உரியசை மயக்கம் ஆசிரிய உரிச்சீர் (12)**

ஆ **மொ.** இல.,

'Iyal sir' is made of 'iyal asal' and the other 'asiriya urichir made of 'uriyasai'.

பி. இ. நா.

யா. வி. II

ஈரசை கூடியசீர் இயற்சீர் அவை
ஈரிரண் டென்ப இயல்புணர்ந் தோரே

யா. கா. 6

ஈரசை நாற்சீர் அகவற்குரிய

இல வி. 716

ஈரசை கூடியசீர் இயற்சீர் அது
ஈரிரண் டாம்அவை அகவற்கு இசைத்தலும்.

வீரசோழியம். யாப்பு 2.

அசை யிரண்டு ஒன்றின் முற்சீர்.

தொ.வி. 204.

நேரே நிரையே அசைச்சீர் இரண்டென
நேர்நேர் நிரைநேர் நிரைநிரை நேர்நிரை.
ஈரசை இயற்சீர் ஈரிரண்டு,

மு.வி.யா.3

நேர்நேர் தேமா நிரைநேர் புளிமா
நிரைநிரை கருவிளம் நேர்நிரை கூவிளம்.
ஆகு நாற்சீரும் அகவற்குரிய

## இளம்பூரணர்

321. இயலசை மயக்கம்.................உரிச்சீர்,

என்-னின். ஈரசைச்சீர் பாகுபடுமாறு உணர்த்துதல் நுதலிற்று,

(இ-ள்) மேற்சொல்லப்பட்ட அசைகளில் இயலசை மயங்கி வந்தன இயற்சீர் எனப்படும்; உரியசை மயங்கி வந்தன ஆசிரிய உரிச்சீரெனப்படும் என்றவாறு.

மயங்குதலாவது ஒருங்குவருதல், நேர் நிரை நேர்பு நிரைபு; என்னு நான்கினையும் தம்மினுறழ்ப் பதினாறு அசைச்சீராம். அவற்றுள் இயலசையாகிய நேரும் நிரையுந் தம்மின் உறழ நான்கு சீராம். அவை இயற்சீர் எனப்படும்.

உதாரணம்:

"தேமா, புளிமா, கருவிளம், கூவிளம்," என வரும்.[1]

இனி உரியசையாகிய நேர்பு நிரைபு மென்றவற்றைத் தம்மினுறழ நான்கு சீராம். அவை ஆசிரிய உரிச்சீர் எனப்படும்.

உதாரணம்:

"ஆற்றுநோக்கு, ஆற்றுவரவு, வரகுசோறு, வரகு தவிடு" எனவரும்.[2]

---

1. நேர்நேர், நிரைநேர், நிரைநிரை, நிரைநேர்
2. நேர்பு நேர்பு, நேர்பு நிரைபு, நிரைபு நேர்பு, நிரைபு நிரைபு.

## பேராசிரியர்

325. இயலசை மயக்க................வுரிச்சீர்.

இது நிறுத்த முறையானே இயலசையும் உரியசையும் வேறு வேறு தம்முண் மயங்கிவரும் ஈரசைச் சீருணர்த்துகின்றது.

இதன் பொருள்:- நேர்நேர் நிரைநேர் நிரைநிரை நேர் நிரை என்பன நான்கும் இயற்சீர்; நேர்பு நேர்பு நிரைபு நேர்பு நிரைபு நிரைபு நேர்பு நிரைபு என்பன நான்கும் ஆசிரிய வுரிச்சீர் என்றவாறு.

இவற்றுள் இயற்சீரைத் தேமா புளிமா கணவிரி பாதிரி எனவும், வாய்க்கால் வாய்த்தலை துலைவாய் துலைமுகம் எனவும் (யா-வி) பிறவும் இன்னோரன்ன வேறுவேறு காட்டுப.[1] இனி வருவனவற்றிற்கும் இஃதொக்கும். ஆசிரிய வுரிச்சீரை வீடு பேறு வரகுசோறு முடவுமருது பாறுகுருகு எனவுங் காட்டுப; அவற்றுக்குச் செய்யுள்;

"அவரே, கேடில் விழுப்பொரு டருமார் பாசிலை
வாடா வள்ளியங் காடிறந் தோரே. (குறுந்—216)

என்புழி,

"கேடில் விழுப்பொரு டருமார் பாசிலை.".

என நான்கு இயற்சீரும் வந்தன.

"வெளிற்றுப்பனந் துணியின் வீற்றுவீற்றுக் கிடப்ப,"
(புறம்-35)

"வண்புகழ் நிறைந்து வசிந்துவாங்கு நிமிர்தோள்."
(முருகு-106)

"பூண்டுகிடந்து வளரும் பூங்கட் புதல்வன்."
"நறவுண் மண்டை நுடக்கலி னிறவுக்கலித்து." (அகம்—96)

எனவரும் இவற்றுள் வீற்றுவீற்று எனவும், வசிந்து வாங்கு எனவும், பூண்டுகிடந்து எனவும், இறவுக் கலித்து எனவும் நான்காசிரியவுரிச் சீரும் வந்தவாறு கண்டு கொள்க.

இஃது, ஆட்சியுங் குணனுங் காரணமாகப் பெற்ற பெயர். ஆட்சி:

"இயற்சீ ரிறுதிமு னேரவ ணிற்பின்." (331)

---

1. வேறுவேறு வாய்பாடுகள் காட்டுவர்.

எனவும் பிறாண்டும் ஆளுப. குணம்; இயற்சீராகலானும் நான்கு பாவிற்கும் இயன்று வருதலானுங் குணங்காரண மாயிற்று. இயல்பு வகையான் ஒரோவொன்றாகி நின்ற சொற்கள் வருதல் பெரும்பான்மையாகலானும், நான்கு பாவிற்கும் பொது வாகி இயன்று வருதலானும் இயலசையான் வரும் ஈரசைச் சீராகலானும் இவற்றை ஒரு பாவிற்குரிமை கூறுதல் அரிதாக லானும், இவற்றை இயற்சீரென்றான் எனவே, சொல்லின் முடியுமிலக்கணத்தால்[1] நான்கு பாவிற்கும் உரியவென்பதூஉம் ஈண்டுப் பெற்றாம்; அல்லதூஉம், அவற்றைத் தளை கூறும்வழி மூன்று பாவிற்கும் உரிமைகூறிக் கலிப்பாவிற்கும்வஞ்சிப்பாவிற்கும் நேரீற்றியற்சீர் வாராவென, ஒழிந்தசீர்[2] வருமென்பதுடன்—பட்டமையானும் நான்கு பாவிற்கும் இயன்றுவரும் என்பது பெற்றாம். ஆசிரியவுரிச்சீரென்றதூஉம் அவ்வாறே ஆட்சியுங் குணனும் நோக்கிய பெயர். ஆட்சி;

"வெண்பா வுரிச்சீ ராசிரிய வுரிச்சீர்." (335)

எனவும் பிறாண்டும் ஆளுப. உரியசை மயக்கமாகலானும் ஆசிரியத்திற்குரிமையானும் இக்குறி குணங் காரணமாயிற்று. மற்றிவை இயற்சீர்போல ஒரோர் சொல்லாய் நிற்றல் யாண்டும் [நிற்றலி] (இ)ல்லை பிறவெனின், அற்றன்று; தோன்று வாக்கு, இரங்குவாக்கு[3] என்றாற் போல்வன உளவென்பது. இனி, இவ் வியற்சீர் தாமும் சீரெனப்படும்; அதுபோல இவையும்,

"எல்லாத் தொகையு மொருசொன் னடைய."

(தொல்-சொல்-சூ. 420)

---

1. சொல் ஒன்றைச் சொல்ல அச்சொல்லிலேயே ஒன்றன் இலக்கணமும் பெற வைப்பது சொல்லின் முடியும் இலக் கணம். இயற்சீர் என்று சொன்னால் அதன் பொருள் நான்கு பாவிலும் இயலும் சீர் எனப் படுதலின் அதுவே, இயற்சீராவது நான்கு பாவிலும் இயலும் சீர் என்னும் இலக்கணமும் பெறுமாறுளது.

2. ஒழிந்த சீர்— நிரையீற்றுச் சீர்கள் அவை நேர்நிரை, நிரைநிரை என்பன. இவையிரண்டும் கலியிலும் வஞ்சி யிலும் வரும் என்று உடன்பட்டமையின் இவை இயற்சீர் எனப்படுதலின்இயற்சீர் நான்குபாவிலும் வரும் என்பது

3. தோன்றுவாக்கு—தோன்றுதல், இரங்கு வாக்கு—இரங்குதல் இவையிரண்டும் தனித்தனிச் சொற்கள்.

என்பதனான், ஒரு சொல்லாயினவெனினும் அமையும். மற்று ஒழிந்த இயற்சீருங் கூறாது ஆசிரியவுரிச்சீர் ஈண்டு வைத்த தென்னையெனின்,[4]—இவ்விரு பகுதியவற்றை இயற்சீரென்றும் (331) ஆசிரியவுரிச்சீரென்றும் (335) ஆளுமாகலின் என்றவாறு. (13)

## நச்சினார்க்கினியர்

13. இயலசை மயக்கம்............. வுரிச்சீர்

இது முறையானே இயலசையும் உரியசையும் வேறுவேறு தம்முண் மயங்கிவரும் ஈரசைச்சீர் உணர்த்திற்று.

(இ-ள்) இயலசை மயங்கினவற்றை இயற்சீரென்றும் உரியசை மயங்கினவற்றை ஆசிரியவுரிச்சீரென்றும் கூறுக, எ-று.

மயக்கம் என்றது தம்மொடு தாம் மயங்குதலும் தம்மொடு பிறிது மயங்குதலுமாம்.

(எ-டு) நேர்நேர், நிரைநிரை, எனத் தம்மொடுதாம் மயங்கின; இரண்டினையும் பிரித்து நேர்நிரை, நிரைநேர் எனப் பிறிதொரு மயக்க இந்நான்கும் இயற்சீராயிற்று.

இந்நான்கு வழியுமல்லது வேறு கூட்டமின்மையும் உணர்க.

இவற்றைத் தேமா, புளிமா, பாதிரி, கணவிரி, எனவும்; கருவிளம் கூவிளம் எனவும் காட்டுப;[1] பிறவாறுங் காட்டுப.

நேர்புநேர்பு, நிரைபு நிரைபு எனத் தம்மொடுதாம் மயங்கின, இரண்டினையும் பிரித்து நேர்பு நிரைபு, நிரைபு நேர்பு எனப் பிறிதொடு மயக்க இந்நான்கும் ஆசிரியவுரிச்சீ ராயிற்று இவற்றை வீடுபேறு, தடவுமருது, பாறுகுருகு, வரகுசோறு எனக் காட்டுப.

---

4. ஒழிந்த இயற்சீர், காய்ச்சீர், கனிச்சீர்கள். மூவகைச் சீர்களாகிய அவையும் நேர், நிரை என்னும் இயலசை களால்ஆதலின் இயற்சீர் எனப்படும். அதனால் அவற் றைக் கூறாதது ஏன் என்பது வினா விடை—ஈரசைச்சீர் களையே இயற்சீர் என்றும் ஆசிரியவுரிச்சீர் என்றும் ஆசிரியர் ஆளுவர். மூவகைச் சீர்களை அப்பெயர்களால் ஆளுதல் இல்லை ஆதலின்.

1. பாதிரி, கணவிரி என்பனவற்றுக்குப் பதில் கூவிளம் கரு விளம் எனவும் காட்டுப.

செய்யுள் 'அவரே, கேடில் விழுப்பொருள் தருமார் பாசிலை' (குறுந்தொகை-216) என நான்கியற்சீரும் வந்தன. வெளிற்றுப் பனந்துணியின் வீற்று வீற்றுக் கிடப்ப, எனவும், 'நறவுண் மண்டை' 'நுடக்கலி னிறவுக்கலித்து' (அகம்—96) எனவும், 'பூண்டு கிடந்து வளரும் பூங்கட் புதல்வன்' எனவும், 'வண்புகழ் நிறைந்து வசிந்துவாங்கு நிமிர்தோள்' (திருமுருகாற்றுப்படை) எனவும், வந்தவற்றுள் வீற்று வீற்று எனவும் இறவுக்கலித்து எனவும், பூண்டு கிடந்து எனவும், வசிந்து வாங்கு எனவும் நான்காசிரியவுரிச்சீரும் வந்தன.

நான்கு பாவிற்கும் இயற்றலானும், இயல்பு வகையான் ஒரே சொல்லாய் வருதல் பெரும்பான்மை யாகலானும் இயற்சீ ரெனவும், ஆசிரியத்திற்கு உரிமையான் உரிச்சீரெனவும் ஆட்சியுங் குணமுங் காரணமாகப் பெற்ற பெயர்.

'இயற்சீ ரிறுதிமுன்' (செய்—19) எனவும் 'வெண்பாவுரிச்சீ ராசிரிய வுரிச்சீர் (ஷை—23) எனவும் பிறாண்டும் ஆள்ப. (13)

## சிவலிங்கனார்

இயலசை.............. வுரிச்சீர்.

இ-ள். நேர் நிரை எனும் இயலசைகள் மயங்கி வருவன இயற்சீர் எனப்படும்; நேர்பு நிரைபு எனும் உரியசைகள் மயங்கி வருவன ஆசிரியவுரிச்சீர் எனப்படும், எ-று.

நேர் நேர், நேர் நிரை, நிரைநேர், நிரை நிரை—இயற்சீர்.

''மலர்மிசை ஏகினான்'' என்னும் குறளில் காண்க.

நேர்பு நேர்பு, நேர்பு நிரைபு, நிரைபு நேர்பு, நிரைபு நிரைபு—ஆசிரியவுரிச்சீர்.

''வெளிற்றுப் பனந்துணியின் வீற்றுவீற்றுக் கிடப்ப''
(புறம் 36)

வீற்று வீற்று- நேர்பு நேர்பு.

''பூண்டு கிடந்து வளரும் பூங்கட் புதல்வன்'' (அகம் 96)

பூண்டு கிடந்து-நேர்பு நிரைபு.

''வண்புகழ் நிறைந்து வசிந்துவாங்கு நிமிர்தோள்''
(திருமுருகு. 106

வசிந்து வாங்கு—நிரைபு நேர்பு.

''நறவுண் மண்டை நுடக்கலி னிறவுக்கலித்து (அகம். 96)
இறவுக்கலித்து—நிரைபு நிரைபு.

## உரியசைப்பின் நிரை

**322.** முன்நிரை இறினும் அன்ன வாகும். **(13)**

**ஆ.மொ.இல.,**

Even though ,nirai' appears first (after It) **it it the same.**

## இளம்பூரணர்

322. முன்நிரை.................வாகும்.

என்-னின். இதுவும் ஆசிரியவுரிச்சீ ராமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) நேர்பசை நிரைபசைப் பின், நிரை யிறுதியும் ஆசிரிய வுரிச்சீரா மென்றவாறு.

உதாரணம்:

''யாற்றுமடை, குளத்துமடை.''[1] **(13)**

## பேராசிரியர்

326. முன்னிரை .........வாகும்,

இஃது, இயலசையும் உரியசையும் (325) மயங்கி ஆவன கூறுகின்றது.

இதன் பொருள் :-

''உரியசை மயக்க மாசிரிய வுரிச்சீர்.'' (325)

என மேனின்ற அதிகாரத்தரன் அவ்வுரியசைப்பின்னர் நிரையசையுறினும் அவ்வுரியசை மயக்கமாகிய ஆசிரியவுரிச்சீராம் என்றவாறு.

அவை நேர்புநிரை நிரைபுநிரை என வரும். இவற்றை ''நீடுகொடி நாணுத்தளை குளிறுபுலி விரவுக்கொடி எனவும் பிறவாற்றானுங் காட்டுப; அவையெல்லாம் அறிந்து கொள்க.

---

1. யாற்றும்டை- நேர்பு நிரை, குளத்துமடை— நிரைபு நிரை

1. உறினும் பேரா. பாடம். வரினும்-நச்பாடம்.

மற்று, இயலசையும் உரியசையும்விரவி இயற்சீராவன இலவோ வெனின், உள; அவையன்றே மேற்சொல்கின்றனவென்பது. அஃதேல், இவ்விரண்டும் இயற்சீராகவோவெனின் — 'அன்ன' என்று மாட்டெறிந்த கருத்தினான் அதுவும் அமையுமென்பது; என்றார்க்கு, இவற்றை ஆசிரியவுரிச்சீரென்றல் குற்றமாம் பிற வெனின்,— பெரும்பான்மையும் ஆசிரியத்திற்கும் அதற்கினமாகிய வஞ்சிக்கும் உரியவாகலானும், ஒழிந்த இரண்டு பாவின் கண்ணுஞ் சிறுவரவினவாகலானும், வெண்பாவினுள் கட்டளையடிக்கண் வாராவென்பது.

"கலித்தளை மருங்கிற் கடியவும் படாஅ." (336)

என வரைந்தமையாற் பெறுதுமாகலானும் இவற்றை ஆசிரிய வுரிச்சீரென்றலே வலியுடைத்தென்பது. 'அன்ன' என்பதனை இயற்சீரொடு மாட்டுங்கால் ஈற்றது அதிகாரம் பட இறுதி நின்ற நிரையீற்றியற்சீ ரிரண்டனோடுங் கொள்ளப்படும்; கொள்ளவே அம்முறையானே நீடுகொடி என்பதனைப் பாதிரி போலவும், குளிறுபுலி என்பதனைக் கணவிரி போலவும் தளை கொள்ளப்படு மென்பதாம்.

அவை செய்யுள் வருமாறு :

"ஓங்குமலைப் பெருவிற் பாம்புஞாண் கொளீஇ." (புறம்-55)

"உவவுமதி யுருவி னோங்கல் வெண்குடை." (புறம்-3)

"ஓங்குதிரை வியன்பரப்பின்." (மதுரை-1)

"நிலவுமணல் வியன்கானல்." (புறம்-17)

என இவை ஆசிரியத்துள்ளும் வஞ்சியுள்ளும் வந்தவாறு:

"தூங்குசிறை யன்னந் துயில்வதியுஞ் சோணாட்டே."

எ-ம்,

"ஏடுகொடி யாக வெழுது கோ." (முத்தொள்-50)

எனவும் இவை வெண்பாவினுள் கட்டளையடியல்வழிச் சிறு பான்மையான் வந்தன. மற்றிவையுங் கட்டளையடியென்னாமோ வெனின்,—அற்றன்று; அது தளைவகை கொள்ளுந்துணை இன்னோசைத் தன்றென்பது,

"அசையுஞ் சீரு மிசையொடு சேர்த்தி" (323)

என்பதனானுணர்க. இப்பகுதியறியாதார்[1] அடியுறழ்ந்ததனாற்[2] பயனென்னையென்றிகழ்ப. (14)

## நச்சினார்க்கினியர்

14. முன்னிரை............... வாகும்.

இஃது இயலசையும் உரியசையும் மயங்கிச் சீராமாறு கூறுகின்றது.

(இ-ள்) 'உரியசை மயக்க மாசிரிய வுரிச்சீர்' (செய்—13) என்ற அதிகாரத்தான் அவ்வுரியசை முன்னர் நிரையசை வரினும் அவ்வுரியசை மயக்கமாகிய ஆசிரியவுரிச்சீராம். எ-று.

அவை நேர்புநிரை, நிரைபுநிரை.

(எ-டு) நீடுகொடி நாணுத்தளை, உரறுபுலி விரவுகொடி என வரும்.

செய்யுள். 'ஓங்குமலைப் பெருவிற் பாம்புஞாண் கொளீஇ' (புறம்—55) 'நாணுத்தளை யாக வைகிமாண் வினைக்கு', 'களிற்றுக் கணம் பொருத கண்ணகன் பறந்தலை' (புறம்-64). 'உலவுமதி யுருவி னோங்கல் வெண்குடை' (ஷ—3) 'ஓங்குதிரை வியன்பரப்பின்' (மதுரைக் காஞ்சி) 'பன்னுதமிழ்ப் பாவலர்க்கு' 'களிற்றுநிணத் துகிலுடுத்த 'பிணர்மோட்டுப் பேய்மகளிர்' 'நிலவு மணல் வியன்கானல்' எனவும் ஆசிரியத்திலும் வஞ்சியிலும் வந்தன.

'தூங்குசிறை யன்னந் துயில்வதியுஞ் சோணாட்டு' எனவும் 'ஏடு கொடியாக வெழுதுகோ' எனவும் வெண்பாவினுட் கட்டளையடியல் வழிச் சிறுபான்மை வந்தன. கட்டளையடியன்மை இசையொடு சேர்த்தி யுணர்க.

இவை இயலசையோடு மயங்கினமையிற் பாதிரி கணவிரி போலக் கொள்க. (14)

---

1. இசைப் பகுதியறியாதார்

2. அடியுறழ்தல்—ஆசிரியப்பாவில் வஞ்சியடி மயங்குதல்.

## சிவலிங்கனார்

முன்னிரை.............. வாகும்.

இ-ள்: உரியசை முன்னர் நிரையசை சேர்ந்து வரினும் உரியசை மயக்கம் எனக்கொண்டு ஆசிரியவுரிச்சீராகும், எ-று.

நேர்புநிரை நிரைபுநிரை என்பன அவை.

உ-ம்: நீடுகொடி, நாணுத்தளை;

உரறுபலி, விரவுத்தலை.

### உரியசைப்பின் நேர்

323. நேரவண் நிற்பின் இயற்சீர்ப் பால. (14)

ஆ மொ.இல.

If 'ner' stands there, it becomes 'iyal sir.'

## இளம்பூரணர்

323. நேரவண்............... பால.

என்-னின். இது இயற்சீர்க் குரியதோர் வேறுபாடு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) உரியசைப் பின்னர் நேரசை வரின், அது இயற்சீரென வருமென்றவாறு.

உதாரணம்:

"ஆற்றுக்கால், குளத்துக்கால்.'[1]

எனவரும். (14)

## பேராசிரியர்

327 நேரவ............... பால.

இஃது, இயலசை உரியசை மயக்கத்துப் பிறப்பன இரண்டியற்சீர் உணர்த்துகின்றது.

---

1. ஆற்றுக்கால்—நேர்பு நேர், குளத்துக்கால்—நிரைபுநேர்

இதன்பொருள்:- முன்னர் உரியசைப் பின்னர் நிரையசை வரின் ஆசிரியவுரிச்சீரா மென்றான். அவ்வதிகாரத்தால் உரியசை யிரண்டன் பின்னும் நேரசைவரின் அவையிரண்டு சீரும் ஆசிரியப்பாலவாம் என்றவாறு.

அவை: நேர்புநேர் நிரைபுநேர் என வரும்.

உதாரணம்:- சேற்றுக்கால், வேனுக்கோல் களிற்றுத் தாள், முழவுத்தோள் என வரும். நீத்துநீர் குளத்துநீர் எ-ம், போதுபூ விறகுதீ எனவுங் காட்டுப. பிறவுமன்ன. இவை இயற்சீர் நான்கி னுள்ளும் எப்பாற் படுமெனின், — அதிகாரத்தால் நீடுகொடி குளிறுபுலி என்பனபோல இறுதியினின்ற பாதிரி கணவிரி பாற் படும் முறையானென்பது.[1] எனவே, போதுபூ பாதிரியாகவும், விறகுதீ கணவிரியாகவும் இயற்றப்படுமென்பது. இவ்வாறு கூறவே, இவை பாதிரி கணவிரிபோல அசைதிரிந்து[2] நிரையா மென்பது கொள்ளற்க. நேர்பு நிரைபு முதலாக நிரையீறாகிய சீர் தளைகொண்டாங்குக் கொள்ளப்படும் இவையுமென்பதாம். 'தளைகோ ளொக்கும்' எனவே ஏழு தளையுள்ளும் இவற்றை ஒன்றொன்றனுள் அடங்குமென்று அடக்கற்க; என்னை? இவை வேறுவேறு பட்ட அசையான் வேறுவேறு சீராயினமையி னென்பது. அசைச்சீர்க்கு உரிச்சீரிலக்கணமின்மையின் இதற்கு இஃதொப்ப வாராதென்றுணர்க.[3]

"நீத்துநீர்ப் பரப்பி னிவந்துசென் மான்றேர்."

---

1. நீடுகொடி என்பது நேர்புநிரை யாயினும் பாதிரிபோல நேர்நிரை என்பதன் பாற்படும். குளிறுபுலி என்பது நிரைபுநிரையாயினும் கணவிரி போல் நிரைநிரை என்பதன்பாற்படும்.

2. அசைதிரிந்து—நேர்பு என்பது நேர் எனத் திரிந்தும், நிரைபு என்பது நிரை எனத் திரிந்தும்.

3. நேர், நிரை எனும் அசைகளே சீராகவரின் அவற்றுக்கு நேர்பு, நிரைபு என்னும் உரியசைச் சீர்களின் இலக் கணம் பொருத்தம் இல்லாமையின் அசையே சீராக வரும்போது நேர்பசை நேரசை யொக்கும் எனவும் நிரைபசை நிரையசையொக்கும் எனவும் கொள்ளற்க என்பது.

என்புழி, போதுபூவும் விறகுதீயும் வந்தவாறு கண்டு கொள்க;[4] இவற்றை ஆசிரியவுரிச்சீர்ப்பின் வைத்ததென்னை யெனின். — இவையும்[5] அவைபோல[6] ஈண்டொருங்கியைதல் பெரும்பான்மை யென்பது அறிவித்ததற்கென வுணர்க.

(15)

## நச்சினார்க்கினியர்

15. நேரவண்.............. பால.

இஃது இயலசை உரியசை மயக்கத்துப் பிறப்பன இரண்டியற் சீருணர்த்திற்று.

(இ-ள்) அவண் நேர்நிற்பின் இயற்சீர்ப்பால— மேனின்ற அதிகாரத்தான் உரியசையிரண்டன் பின்னும் நேரசைவரின் அவையிரண்டும் இயற்சீர்ப்பாலவாம், எ-று.

அவை நேர்புநேர், நிரைபுநேர்.

(எ-டு) சேற்றுக்கால், வேணுக்கோல், களிற்றுத்தாள், முழவுத்தோள் எனவரும்; நீத்துநீர், குளத்துநீர் எனவும் போதுபூ மேவுசீர், விறகுதீ, உருமுதீ எனவும் கண்டுகொள்க.[1]

இவையெல்லாம் பாதிரி கணவிரி என்னும் இயற்சீர்ப் பாற் படும்.

---

4. நீத்துநீர்—போதுபூ, நிவந்துசெல்—விறகுதீ.

5. இவை. உரியசைப்பின் நிரையும் நேரும் நிற்பன வற்றை

6 அவை—நேர் நிரைகளின்பின் நேர் நிரைகள் வரும் அச்சீர்கள்போல.

1. சேற்றுக்கால் என்பதை நீத்துசீர் போதுபூ எனக் குற்றுகர வீறான நேர்பு என்பதுடன் வந்த நேர் ஈறாகவும் கொள்க. வேணுக்கோல் என்பதை மேவுசீர் என முற்றுகர வீறான நேர்பு என்பதுடன் வந்த நேர் ஈறாகவும் கொள்க. களிற்றுத்தாள் என்பது குளத்துநீர் விறகுதீ என்பன போலக் குற்றுகர வீறான நிரைபு என்பதுடன் வந்த நேரீறாகவும், முழவுத்தோள் என் பதை உருமுதீ என்பது போல முற்றுகர வீறான நிரை புடன் வந்த நேரீறாகவும் கொள்க.

போதுபூ, விறகுதீ என்னுமிரண்டன்கட் குற்றுகரம் மேல்வரும் நெடிலோடிணைந்து[2] நிரையாய்ப் பாதிரி கணவிரி போல நிரையாமோவெனின்; ஆகா; - அக்குற்றுகரம் நேர்பு நிரைபுமாயே நின்று நேரு நிரையு முதலாய் நிரையீறாகிய சீர்தளை கொண்டாங்குத் தட்கும்.

செய்யுள்— 'நீத்துநீர்ப் பரப்பி னிவந்துசென் மான்றோர்' எனப் போதுபூவும், விறகுதீயும் வந்தன. (15)

## சிவலிங்கனார்

நேரவண்..............பால.

இ-ள்: நேர்பு நிரைபு முன்னர் நேர் அசைவரின் அவ் விரண்டும் இயற்சீர்ப் பகுதியவாம், எ-று.

நேர்பு நேர், நிரைபு நேர்.

உ-ம்: ஆற்றுக்கால், குளத்துக்கால்.

உரியசைப் பின்னர் நிரைவரின் ஆசிரியவுரிச்சீராம் என்பதும், அவற்றின் பின்னர் நேர்வரின் இயற்சீர்ப் பாலவாம் என்பதும் ஆசிரியர் ஆணை எனக் கொள்க. பின்னர் இனிவரும் விதிகளும் அன்ன.

## இயலசைப்பின் உரியசை

**324. இயலசை ஈற்றுமுன் உரியசை வரினே**
**நிரையசை இயல ஆகு மென்ப. (15)**

ஆ. மொ. இல.,

If 'uri asai' appears at the end of 'iyal asai' it is in the nature of 'nirai asai'

## இளம்பூரணர்

324. இயலசை ஈற்றுமுன்.............. மென்ப.

(இ-ள்) என்-னின், இயலசைப் பின்னர் உரியசைவரின் நிரையசை வந்தாற்போலக் கொள்க வென்றவாறு.

---

2. போ, துபூ எனவும் விற, குதீ எனவும் இணைந்து

எனவே இவையும் இயற்சீ ரென்றவாறாம்.

உதாரணம்:

''மாங்காடு, களங்காடு, பாய்குரங்கு, கடிகுரங்கு.''[1]

எனவரும்.

இத்துணையுங் கூறப்பட்டது ஈரசைச்சீர் பதினாறினும் இயற்சீர் பத்தும் ஆசிரிய வுரிச்சீர் ஆறுமா மென்றவாறு.[2] (15)

## பேராசிரியர்

328. இயலசை யீற்றுமு.............. மென்ப,

இது, மேனின்ற இயற்சீரதிகாரத்தான் ஈரசசைச்சீருள் இயலசை உரியசை மயக்கத்துள் ஒழிந்துநின்ற நான்கு இயற்சீருமுணர்த்துதல் நுதலிற்று.

இதன்பொருள்:- இயலசை இரண்டின் பின்னும் உரியசை இரண்டும் ஒன்று இரண்டு செய்து மயங்கி நான்காகுங்கால் அவ்

---

1. மாங்காடு— நேர்நேர்பு, களங்காடு— நிரை நேர்பு, பாய்குரங்கு— நேர் நிரைபு, கடிகுரங்கு— நிரை நிரைபு, நேர்நேர்பு நேர்நிரைபு என்பனவற்றைப் பாதிரி எனவும் நிறைநேர்பு நிரை நிரைபு என்பனவற்றைக் கணவிரி எனவும் வாய்பாடு கொள்க.

2. ஈரசைச்சீர் பதினாறாறன:

இயலசைச்சீர் நான்கு: நேர் நேர், நேர்நிரை, நிரை நேர், நிரைநிரை.

உரியசைச்சீர் நான்கு: நேர்பு நேர்பு, நேர்பு நிரைபு, நிரைபு நேர்பு, நிரைபுநிரைபு.

உரியசைப்பின் இயலசை நான்கு: நேர்பு நேர், நிரைபு நேர், நேர்புநிரை, நிரைபு நிரை

இயலசைப்பின் உரியசை நான்கு: நேர் நேர்பு, நிரை நேர்பு, நேர் நிரைபு, நிரை நிரைபு.

இயற்சீர்பத்தாவன: நேர் நேர், நேர் நிரை,
நிரை நேர், நிரை நிரை—4
நேர்நேர்பு, நிரை நேர்பு,
நேர் நிரைபு, நிரை நிரைபு—4
நேர்பு நேர், நிரைபு நேர்—2
——
10
——

உரியசைச்சீர் ஆறாவன:—

நேர்பு நேர்பு, நிரைபு நேர்பு, நேர்பு நிரைபு, நிரைபு நிரைபு—4 நேர்பு நிரை, நிரைபு நிரை. 2=6

விரண்டுரியசையும் இயலசை மயக்கமாகிய இயற்சீர் நான்கனுள் நிரையீற்ற பாதிரியுங் கணவிரியும்போல வருஞ்சீரொடு தட்கும் என்றவாறு.

அவை நேர் நேர்பு, நேர்நிரைபு, நிரைநேர்பு, நிரை நிரைபு எனவரும். வருங்கால் நேர்முதற்சீர் இரண்டும் பாதிரி போலவும், நிரைமுதற்சீர் இரண்டுங் கணவிரி போலவும் கொள்ளப்படு மென்றவாறு. எனவே இச்சூத்திரமுஞ் சீராமாறேயன்றிச் சீர்தளைக்குமாறுங் கூறியவாறாயிற்று. இவற்றைப் போரேறு பூமருது. கடியாறு, மழகளிறு எனினும் இழுக்காது.[1] (16)

## நச்சினார்க்கினியர்

16. இயலசை யீற்றுமுன்......................மென்ப.

இது மேனின்ற இயற்சீரதிகாரத்தான் ஈரசைச் சீருள் உரியசை இயலசை மயக்கத்துள் ஒழிந்து நின்ற நான்கியற்சீரும் உணர்த்திற்று.

(இ-ள்) இயலசை ஈற்று முன் உரியசை வரின்—இயலசை இரண்டன் பின்னும் உரியசையிரண்டும் ஒன்றிரண்டு செய்து மயங்கி நான்காங்கால் அவ்விரண்டு உரியசையும்; நிரையசை இயலவாகும் என்ப—இயலசை மயக்கமாகிய இயற்சீர் நான்கனுள் நிரையீற்ற பாதிரியும் கணவிரியும் போல வருஞ்சீரொடு தட்கும் எ-று.

இச்சூத்திரம் தளைக்குமாறு கூறிற்றாம்.

(எ-டு) போரேறு நன்னாணு, பூமருது, காருருகு கடியாறு பெருநாணு மழகளிறு நரையுருமு என வரும்.

(16)

## சிவலிங்கனார்

இயலசை..............................என்ப.

(இ-ள்) நேர் நிரை என்னும் இயலசையிறுதியில் நேர்பு நிரைபு என்னும் உரியசை யிரண்டும் வரின் அவை நிரையசைப் பாற்படும் என்ப, எ-று.

---

1. போரேறு முதலியன வாய்பாடுகள்.

உ-ம்: போரேறு
நன்னாணு } —இது நேர் நேர்பு

பூமருது
காருருமு } —நேர் நிரைபு—இதை

கடியாறு
பொருநாறு } —நிரை நேர்பு

மழகளிறு
நரையுருமு } —நிரை நிரைபு

இந்நான்கையும் நேர் நிரையாகவும் நிரை நிரையாகவும் கொள்க.

## அளபெடை அசைநிலையாதல்

**325. அளபெடை அசைநிலை ஆகலும் உரித்தே.** (16)

ஆ.மொ.இல.,

**'alapedai' may stand as syllable.**

### இளம்பூரணர்

325. அளபெடை.....................உரித்தே.

என்-னின். சீர்க்கண் உயிரளபெடைக்குரியதோர் மரபுணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) உயிரளபெடை அசையாக நிற்கவும் பெறும் என்றவாறு,

உம்மை எதிர்மறையாகலான் ஆகாமை பெரும்பான்மை.

உதாரணம் :

"கடாஅ[1] உருவொடு.....................வல்லதே ஒற்று."
(குறள்-585)

இது அளபெடை யலகு பெற்றது.

---

1. கடாஅ—நிரை நேர் எனப் புளிமாவாகும். அளபெடை அடையாளமாகிய 'அ' என்பது நேரசையாக வந்தது. அதனால் கடா அ உருவொடு என்பது மாமுன் நிரை வந்த இயற்சீர் வெண்டளையாயிற்று.

"இடைநுடங்க வீர்ங்கோதை பின்தாழ வாட்கண்
புடைபெயரப் போழ்வாய் திறந்த—கடைகடையின்
உப்போஒ[2] எனவுரைத்து மீள்வாள் ஒளிமுறுவற்
கொப்போநீர் வேலி உலகு.''

இதன்கண் அளபெடை யசைநிலையாகி[3] யலகுபெறாதாயிற்று. (16)

## பேராசிரியர்

329, அளபெடை.................முரித்தே.

இஃது எய்தியதன்மேற் சிறப்புவிதி; மேல் எழுத்ததிகாரத் தோதப்பட்ட அளபெடையை ஆண்டு மொழியெனக் கூறினான். அவ்வாற்றானே அவை பெரும்பான்மையும் ஈண்டும் ஈரசைச் சீராகலின் ஈண்டுச் சீர்கூறியவாற்றான் எய்திநின்றனவற்றை எழுத்து நிலைமைப்படுத்து அசைநிலையும் வேண்டினமையின்.

இதன் பொருள்:- அளபெடை மேற்கூறிய இயற்சீர் நிலைமையேயன்றி ஓரசையாய் நிற்றலும் உரித்து என்றவாறு.

உம்மையால் சீர்நிலையெய்தலே வலியுடைத்து; 'நிலை' என்றதனான் எழுத்து நிலைமையும் நேர்ந்தானாம்; என்னை? அசையது நிலையைக் குறிலும் நெடிலுங் குறிலிணையுமென எழுத்தான் வகுத்தமையின். அவை மேற்கூறிய ஈரசைச்சீர் பதினாறனுள்ளும் என்னசீர்ப் பாற்பட்டனவெனின், ஆசிரியவுரிச் சீராறும், போதுபூ விறகுதீ என்னும் இரண்டு இயற்சீரும் ஒழித்து ஒழிந்தவியற்சீர் எட்டுமாம். அங்ஙனமாதல் ஒருமொழியகத்தே

---

2. உப்போஒ—இதில் 'ஒ' எனும் அளபெடை அடையாள எழுத்துக்கு அலகுபெறும் தன்மையில்லை. உண்டென்றால் 'உப்போஒ' என்பது தேமாங்காய் என்றாகி வரும் சீரில் முதலில் உள்ள 'என' என்பதனுடன் சேரும்போது காய்முன் நிரையாகிக் கலித்தளையாகிவிடும். வெண்பாவுக்குக் கலித்தளையில்லை. அதனால் 'ஒ' என்பதற்கு அலகு கொடாமல்—அசைநிலையாக்க உப்போ என்பது தேமாவாகி 'என' என்னும் நிரையுடன் மாமுன் நிரையென இயற்சீர் வெண்டளையாகி வெண்பாவுக்குரியதாகும்.

3. அசைநிலை என்பதற்கு அலகு பெறாது வாளா அசையாகி வரும் நிலை என்றார் இளம்பூரணர்.

உடையவென்பது. 'ஆஅ' எனத் தேமாவாயிற்று. 'கடாஅ' (குறள்-585) எனப் புளிமாவாயிற்று. 'யாஅது' என ஈரெழுத்து ஞாயிறாம்; என்னை? கடாஅ என்புழி அளபெடையதாகாரம் பிரித்துக் குறினெடிலாயினாற்போல[1] ஆகாரத்துப் பின்னின்ற அகரமுங்[2] குற்றுகரமுங்[3] குறிலிணை யெனப்பட்டமையின் (317) என்பது. ஒழிந்தனவற்றிற்கும் இஃதொக்கும்* 'ஆஅழி' என்பது ஈரெழுத்துப்[4] பாதிரியாம். 'வடாஅ' என மூவெழுத்துப் புளிமாவாம். படாஅகை என நாலெழுத்துக் கணவிரியாம். 'ஆஅங்கு' என ஈரெழுத்துப் போரேறாம்.[5] 'ஆஅவது' என மூவெழுத்துப் பூமருது. 'புகாஅர்த்து' என்பது[6] கடியாறு. 'விராஅயது'[7] என்பது மழகளிறு. இவை ஓரோர் சொல்லாகி நின்று எட்டியற் சீரானும்[8] அளபெடை வந்தவாறு.

---

1. கடாஅ—இதில் 'டாஅ' எனும் அளபெடை ஆகாரத்தை டா, அ எனப் பிரித்துக் கடா நிரையாகவும் 'அ' நேராகவும் கொள்ளப்பட்டன போல.
2. ஆகாரத்துப் பின்நின்ற அகரம்—'யா அது' என்பதில் யா என்பதன் பின் நின்ற 'அ' எனும் அளபெடையடையாள எழுத்து அது 'து' என்பதுடன் சேர்ந்து நிரையாயிற்று.
3. குற்றுகரம்—யா அது என்பதின் 'து'
4. ஈரெழுத்து என்பது மூவெழுத்து என்றிருத்தல் வேண்டும். நச்சினார்க்கினியரும் மூவெழுத்தென்பார்,

* இங்கு 'ஆஅ' என்பது ஈரெழுத்துத் தேமாவாம்' என்றிருத்தல் வேண்டும். ஆ அ, படாஅ—இவை சீர் நிலையுடையன. நேர் நேர், நிரை நேர் எனவரும். படாஅகை என்பதில் அகரம் கையுடன் இணைந்து நிரைஎன வருதலின் அ என்னும் அளபெடை அடையாள எழுத்து எழுத்து நிலையாயிற்று.

5. ஆஅங்கு—குற்றுகரமும் மெய்யும் எழுத்தென எண்ணப்படவில்லை. 'போரேறு' என்பது மூவசையாயினும் குற்றுகரம் எண்ணப்படவில்லை.
6. புகாஅர்த்து—மூவெழுத்துடையது.
7. விராஅயது—நாலெழுத்துடையது.
8. ஆஅ—நேர் நேர், ஆஅழி—நேர்நிரை, வடாஅ—நிரை நேர், படாஅகை—நிரை நிரை, ஆஅங்கு—நேர்நேர்பு, ஆஅவது—நேர்நிரைபு, புகாஅர்த்து—நிரைநேர்பு, விராஅயது—நிரைநிரைபு.

"தேஎந் தேரும் பூஉம் புறவிற்
போஒரி துள்ளுஞ் சோஒரி நண்ணிக்
குராஅம் பிணையல் விராஅங் குஞ்சிக்
குடாஅரிக் கோவல ரடாஅரின் வைத்த
கானெறிச் சென்றனர் கொல்லோ
மேனெறிச் சென்று பொருள்படைப் போரே."

என இதனுள், இயலசை மயக்கமாகிய இயற்சீர் நான்குமாகி அளபெடை வந்தன.[9] ஒழிந்த இயற்சீரும் மேல் நான்கனுள் அடங்குமாகலின் அளபெடை நான்கென்பாருமுளர். அவை: தனி நிலை முதனிலை இடைநிலை இறுதிநிலை எனப்படுமென்ப, ஒழிந்த இயற்சீரான் அளபெடை வந்த செய்யுளுங் கண்டு கொள்க.

"வாஅழ்க" என மூவசைச்சீரான் வரும் அளபெடை மொழி யுமுள. மற்றுப் 'படாஅகை' எனவும் 'ஆஅழி' எனவும் இவை மூவகைச் சீராகாவோவெனின்,—ஆகா:

"தனிக்குறின் முதலசை மொழிசிதைத் தாகாது."

(319)

என்புழி, முதற்கணல்லது விட்டிசைத்தல் நேர்ந்திலனாக லானுங் குறிலிணைந்தனவும் குறினெடிலிணைந்தனவும் நிரை யாமென்றானாகலானுமென்பது; என்றார்க்கு.

"தூஉமணி கெழூஉமணி."

என நேர்நிரைப்பின் முற்றுகரம் வந்து நேர்பும் நிரைபுமாம் ஆகலின் அவற்றையும் ஆசிரியவுரிச் சீரென்னாமோ வெனின்,[10]— என்னாதவாறு: அங்ஙனம் அளபெடையான் நேர்பசை நிரைபசை கொள்வாரும் அளபெழுந்த குற்றெழுத்து, வருமெழுத்தொடு கூட்டி,

"முதனிலை யளபெடை நேர்நே ரியற்றே
யிடைநிலை யளபெடை நிரைநே ரியற்றே."

---

9. தேஎம், பூஉம்—நேர் நேர்
போஒரி, சோஒரி—நேர் நிரை
குராஅம், விராஅம்—நிரைநேர்
குடாஅரி, நடாஅரின்—நிரை நிரை—இவை இயற்சீர்

10. தூஉமணி எனப் பிரித்து நேர்பு நிரை எனவும், கெழூஉ மணி எனப் பிரிந்து நிரைபு எனவும் நிரை என்னாமோ எனின்.

என்பவாகலின அளபெழுந்த மொழி நேர்பும் நிரைபுமாகா வென்பது. அவ்வாறாயினும் ஒரோர்கால் அளபெடையுகரத்தைக் கூட்டி நேர்பு நிரைபுமென்னாமோ, காசு பிறப்பென்பன தேமா புளிமா வாயினவாறு போலவெனின்—அவை தேமா புளிமா வாகாமையும், தளைவகை யொக்குமத்துணையென்பதூஉம் மேற் கூறப்பட்டதாகலின் அவைபோல இவையும் நேர்பசை நிரைபசை யாகாவென்பது; அல்லதூஉம்,

"நீட்டம் வேண்டி னவ்வள புடைய."
(தொல்-எழுத்-சூ-6)

எனப்பட்டது அளபெடையாகலானும்.
"நாணுத்தளை." (அகம்-29)

என்பது போலாது இயல்பாக வந்து இயைந்த எழுத்தாகலானும்.[11] அவைபோல அளபெடை,

"இருவகை யுகரமொ டியைந்தவை வந்தன,"
(316)

எனப்படாமையானும், நேர்பசை நிரைபசையாகாவென்பது; அற்றன்றியும், அவை நேர்பசை நிரைபசையாதல் ஒருவகையான் நேர்ந்தானெனினும் அவை நாணுத்தளை விரவுக்கொடி யென்னுஞ் சீராதற்கு இழுக்கென்னையெனவும்.

"நிரையிறு காலையு மாசிரிய வுரிச்சீர்."[12]

எனவோதி ஆசிரியவுரிச்சீர் எட்டென்பான்போல விதந்தோதிப் பயந்ததென்னை யெனவும் கூறி மறுக்க[13]

---

11. நாணுத்தளை என்பது நாண் என்பது நாணு எனத் திரிந்து முற்றுகர வீறாக வந்தது. தூஉமணி கெழூஉமணி என்பனவற்றின் உகரம் தூஉ, கெழூஉ என இயல்பாகவே அளபெடையில் வந்த உகரம்.

12. 'முன்நிரை யுறினும் அன்னவாகும்' என்னும் சூத்திரத்தையே இப்படிக் கூறினார்.

13. "அற்றன்றியும்......மறுக்க"— விளக்கம்.

தூஉமணி, கெழூஉமணி என்பனவற்றை நேர்புநிரை. நிரை நிரை என்று ஒருப்பட்டாலும் பின்வரும் இரண்டு காரணங்களால் மறுக்க.

(1) அவ்விரண்டையும் நாணுத்தளை, விரவுக்கொடி என உதாரண வாய்பாடு கூறுவதால் தவறு இல்லை. நேர்பு நிரைபு வாய்பாடாகக் கொள்ளுதல் கூடாது அவ்வளவே.

(2) நேர்பு நிரை, நிரைபு நிரை என்பன ஆசிரியவுரியசைச் சீர்களாக 'முன்நிரை யுறினும் அன்னவாகும்' எனும்

இனி ஒருரை:[14]

"தூஉமணி, கெழூஉமணி."

என்பன அளபெடை அசைநிலையாகியும் ஆகாதும் வருதலின் வெண்சீர்க்கும் இருநிலைமை கோடற்கென்ப. அது நீடுகொடி குளிறுபுலி என்பனவற்றிற்கும் ஒக்குமாதலானும் 'அசையுஞ் சீரும் இசையொடு சேர்த்துங்கால்' அங்ஙனம் அசையாகாமையானும் அது பொருந்தாதென்பது[15] இங்ஙனஞ் சீர்நிலையெய்தி நின்ற அளபெடைகளெல்லாம் வழக்கிற்குஞ் செய்யுட்கும் பொதுவாயின வும், செய்யுட்கே உரியவாகிச் செய்யுள் செய்யும் புலவராற் செய்து கொள்ளப்படுவனவுமென இருவகைய; அவ்விருதிறத்தவும்

"நீட்டம் வேண்டி னவ்வள புடைய."

(தொல்-எழுத்-6)

என்னும் இலக்கணத்துட்பட்டு அடங்கின.

---

சூத்திரத்தில் கூறப்பட்டன. அச்சூத்திரப் போக்கில் அன்ன என்பது ஆசிரியவுரிச் சீராகமட்டுமன்றி இயற் சீராகவும் அதாவது தூஉமணி என்பதை நேர் நிரை எனவும் கெழூஉமணி என்பதை நிரை நிரை எனவும் இயற்சீர்களாகக் கொள்வதற்கும் இடம் இருக்கிறது. அவ்வியற் சீர்களும் ஆசிரியவுரிச் சீர்களாம் எனின் ஆசிரியவுரிச்சீர் எட்டாகும் (இயற்சீர்களை நீக்கின் ஆறாம்.) இப்படி எட்டு எனப் பெறுமாறு சூத்திரம் வைப் பதில் பயன் என்னை? ஒன்றுமில்லை. அதன் பயன்தான் தூஉ, கெழூஉ என்பனவற்றை நேர்பு நிரைபு எனக் கொள்ளாமல் நேர், நிரை எனக் கொள்வதாகும்.

14. இனி ஓர் உரை—இனிப்பிறர் உரைக்கும் ஒரு கருத்து.

15. தூஉமணி...பொருந்தா தென்பது:— வெண்சீர்க்குத் தூஉமணி கெழூஉமணி என்பன ஒருகால் அளபெடை அசைநிலையாக அலகு பெற்றும் அலகு பெறாமலும் வரும் என்பதைக் கூறவே இச்சூத்திரம் கூறப்பட்டது என்பது அவர் கருத்து. நீடுகொடி குளிறுபுலி என்பன வற்றுக்கும் உகரம் அலகு பெறுவதும் பெறாமையும் உண்டு. ஆதலின் அவ்விரண்டு பேற்றியது இச்சூத்திரம் என்பது பொருந்தாது, சீர்களை இசையொடு சேர்த்து அலகிடும்போது அளபெடை அசையாகாமல் எழுத்தாக ஆவதாலும் தூஉமணி கெழூஉ மணி பற்றியது இச் சூத்திரம் என்பது பொருந்தாது.

இனி, அவற்றுள் வழக்குக்குஞ் செய்யுட்கும் பொதுவாகிய தனை இயற்கையளபெடையென்றும், செய்யுட்குப் புலவர் செய்து கொண்டதனைச் செயற்கையளபெடை யென்றும் பெயரிட்டு வழங்கப்படும். அவ்விரண்டனுள்ளும் ஈண்டு 'அளபெடை யசை நிலை யாகலு முரித்து' எனப்பட்டது இயற்கையளபெடையென்று பெயரிட்டு வழங்கப்படும். செயற்கை யளபெடை சீர்நிலையாதல் செய்யுட்கே யுரியவாறுபோல இயற்கை யளபெடை அசைநிலை யாகலுஞ் செய்யுட்கே யுரியதென்பது.

'ஆகலுமுரித்து' என்ற உம்மையான் அவையிரண்டானும் எவ்வாற்றானும் அசைநிலைப்படாது புணர்ச்சி வகையான் வந்த அளபெடைக் கண்ணும் பொருள் புலப்பாட்டிற்கு உரியவாகச் செய்யுள் செய்யுமிடத்தும் அவ்வாறு அசைநிலையாக்கப்படுவ தென்றவாறு.

(உ-ம்) ''பலாஅக் கோட்டுத் தீங்கனிமேற் பாய்ந்த
கடுவன்.''

எனப் பலாஅக்கோடென்புழி,

''குறியதன் முன்னரு மோரெழுத்து மொழிக்கு
மறியத் தோன்று மகரக் கிளவி.''

(தொல்-எழுத்-சூ-226)

எனப் பெற்ற அகரமுண்டன்றே? அதுவும் அளபெடை யெனப்படும்; அதனைப் ''பலாஅ'' என்புழிப் புளிமாவென்னுஞ் சீராக அலகு வையாது நிரையசை நிலைமைத்தேயாக வைக்கப் படுமென்பது.

''நிலம்பாஅய்ப் பாஅய்ப் பட்டன்று நீலமா மென்றோட்
கலம்போஒய்ப் போஒய்க் கெளவை தரும்.''

(யா-வி)

என்புழி, போஒய்ப் போஒயெனச் சேய்மைக் குறிப்புப்படச் செய்யுள் செய்தவழியும் அளபெடை அசைநிலையாயிற்று. இனி, இவற்றை விளியும் பண்ட மாற்றும் நாவல் கூற்றும் முதலாய வற்றுள் வருமென்பாருமுளர். அங்ஙனம் வந்தது பிற்காலத்துச் செய்யுளென்ப; அல்லதூஉம், அங்ஙனம் வரையறைப்படாமை யானும்[16] நாம் முன்னர்க் காட்டினவை[17] ஆண்டு அவற்றுள்[18]

---

16. விளி, பண்டமாற்று முதலியவற்றில் வரும் என்ற வரையறை.
17. முன்னர்க்காட்டிய அளபெடை உதாரணங்கள்.
18. அவற்றுள்—விளி முதலியவற்றுள்

அடங்காமையானும் அவ்வாறும் இகந்து கூறானென்பதூஉம் படும்.

"உப்போஒ வெனவுரைத்து மீள்வா ளொளிமுறுவல்."
(யா-வி)

எனப் பண்டமாற்றின்கண் வந்ததெனக் காட்டுப. பிறவும் இவ்வாறு வருவன அறிந்து அசைநிலைப்பாற்படுக்க வென்றார்க்கு, இவை செய்யுளுள் தம்மோசை சிதையாவாயின் அலகிருக்கையுள் அழித்துப் பயந்ததென்னையெனின்—அஃதன்றே இதனை எழுத்து நிலைப்படுமென்றற்குக் காரணமென்பது. அஃதேல், செய்யுளின் ஓசையை அழிக்கவமையும் பிறவெனின்,—அற்றன்று; அவ்வோசையைச் செய்யுட்கண்ணே அழிப்பது சந்தியிலக்கணத்தின் வழீஇயிற்றாம் இனிப் பிறவற்றுக்கண்ணும் அளபெடையைச் சிதைத்துச் சொல்லின் அச்செய்யுளுட் கருதிய பொருண்மை விளங்காதாம். அது நோக்கிச் செய்யுளின்பத்தைச் சிதையாது ஈண்டு நாம் வேண்டப்பட்ட அலகிருக்கைக்கட் சிதைத்துக் கொள்க வென்றாமென்பது. (17)

## நச்சினார்க்கினியர்

11. அளபெடை......... உரித்தே.

இஃது எய்தியதன்மேற் சிறப்புவிதி.

(இ-ள்) எழுத்ததிகாரத்து "நெட்டெழுத்தேழே யோரெழுத் தொருமொழி, (மொழி—10) என்றதனாற் சொல்லாந் தன்மையெய்திய அளபெடை ஈண்டு ஈரசைச்சீர் கூறிய அதிகாரத்தானும் இயற்சீராந் தன்மையெய்திற்று, அதனையே எழுத்து நிலைமைப் படுத்து அசைநிலையும் வேண்டலின்.

அளபெடை அசைநிலை ஆகலும் உரித்தே—அளபெடை மேற்கூறிய இயற்சீர் நிலைமை பெறுதலே அன்றி ஓரசையாய் நிற்றலும் உரித்து எ-று.

உம்மையாற் சீர்நிலையாதலே வலியுடைத்து. நிலையென்றதனால் எழுத்து நிலையும் நேர்ந்தார். அங்ஙனம் சீர்நிலை பெறுங்கால் முற்கூறிய ஈரசைச்சீர் பதினாறனுள் ஆசிரியவுரிச் சீராறும், போதுபூ விறகுதீ என்னுமிரண்டியற் சீரும் ஒழித்து ஒழிந்த நேர் நேர், நிரை நேர், நிரை நிரை, நேர் நிரை, நேர் நேர்பு நேர் நிரைபு. நிரை நேர்பு, நிரை நிரைபு என்னுமியற்சீர் எட்டுமாம். அங்ஙனமாதல் ஒருமொழியகத்தேயுடைய என்பது.

ஆஅ எனத் தேமாவாயிற்று. கடாஅ எனப் புளிமாவாயிற்று யாஅது என ஈரெழுத்து ஞாயிறு ஆயிற்று; என்னை? கடாஅ என்புழி அளபெடையதாகாரம் பிரித்துக் குறினெடிலாயினாற் போல ஆகாரத்துப் பின்னின்ற அகரமுங் குற்றுகரமுங் குறிலிணை யெனப் பட்டமையினென்பது. ஒழிந்தனவற்றிற்கும் இஃதொக்கும். ஆஅழி என்பது மூவெழுத்துப் பாதிரி, வடாஅது என்பது நாலெழுத்துக் கணவிரியாம். ஆஅங்கு[1] என ஈரெழுத்துப் போரேறாம். ஆஅவது என மூவெழுத்துப் பூமருது புகாஅர்த்து என்பது கடியாறாம்.[2] பராஅயது என்பது மழகளிறாம்.[3] இவை ஒரே சொல்லாகி நின்று எட்டியற் சீரானும் அளபெடுத்தன.

"தேஎந் தேரும் பூஉம் புறவிற்
போஒரி துள்ளுஞ் சோஒரி நண்ணிக்
குராஅம் பிணையல் விராஅங் குஞ்சிக்
குடாஅரிக் கோவல ரடாஅரின் வைத்த
கானெறிச் சென்றனர் கொல்லோ
மேனெறிச் சென்று பொருள்படைப் போரே."

இதனுள் இயலசை மயங்கிய இயற்சீர் நான்கும் வந்தன. ஒழிந்த நான்கும் இவற்றுள் அடங்கும்.

இங்ஙனம் சீர்நிலையெய்திய வழக்கிற்கும் செயயுட்கும் பொதுவாயது இயற்கை யளபெடை என்றும், செய்யுட்குப் புலவர் ஓசை கருதிச் செய்து கொண்டது செயற்கை யளபெடை என்றுங் கொள்க; இவ்விதி கட்டளையடிக்கென்றுணர்க. இவை சீர்நிலை யடிக்காயிற் றனிநிலை, முதனிலை, இடைநிலை, இறுதிநிலை எனக் கொள்வர்.

'ஆஅ. வளிய வலவன்றன் பார்ப்பினொ
டிஇ ரிரையுங்கொண் டீரளைப் பள்ளியுட்
டூஉந் திரையலைப்பத் துஞ்சா திறைவன்றோண்
மேஎ வலைப்பட்ட நம்போ னறுநுதா
லோஒ வுழக்குந் துயர்."

'ஆஅ வளிய வலவன்' எனவும், 'ஏஎர் சிதைய வழாஅல் எல்லாநின், சேஎயரி சிந்திய கண்' எனவுமிவை நேர் நேரும் நிரைநேருமாக அலகிடுப.[4]

---

1. குற்றுகரத்துக்கு அலகு இல்லை. மெய்யெழுத்துப்போல.
2. மூவெழுத்துக் கடியாறாம் என்க.
3. நாலெழுத்து மழகளிறாம் என்க.
4. ஆஅ—நேர்நேர், வழாஅல்—நிரைநேர்.

இனி ஓசையாங்காற் செயற்கையளபெடை சீர்நிலையாதல் செய்யுட்கே யுரிவாதல் போல, இயற்கையளபெடை அசைநிலையாதல் செய்யுட்கேயுரியவாதலும், புணர்சசி வகையான் எழுத்துப் பேறாகிய அளபெடைகள் அசைநிலையாதலும், பொருள் புலப் பாட்டிற்குப் புலவர் செய்த செயற்கையளபெடையுட் சிலவும் அசைநிலையாதலுங் கொள்க.

(எ-டு) 'உப்போஒ[5] வெனவுரைத்து மீள்வாள்' என்புழிப் பண்டமாற்றின்கட் பகரவோகாரத்திற்குள்ள ஓரலகே பெறுதலின் ஓரசையாயிற்று. ''நூறோஒ நூறு'' என்பதும் அது.

இவை இயற்கையளபெடை யசைநிலையாயின.

'பலாஅக்கோட்டுத் தீங்கனிமேற் பாய்ந்த கடுவன்' என்புழிப் பலாஅ' எனப் புளிமாவாகாது. ஓரசையாய்க் கோடு என்பதுங் கூட்டிக் கணவிரியாக அலகு பெறும். 'குறியதன் முன்னரும்' (எழுத்-உயிர்மயங்-24) என்னுஞ் சூத்திரத்தாற் பெற்ற அகரமும் அளபெடைபோல் அசைநிலையாயிற்று.

'நிலம் பாஅய்ப்பா அய்ப் பட்டன்று நீணிலா மென்றோள்
காலம் போஒய்ப்போஒய்க் கெளவை செய'

எனப் போஒய்ப்போஒய் எனச் செய்கைக் குறிப்புப் புலப்படச் செய்யுள் செய்த வழியும் அசைநிலையாயிற்று.

இவை ஓசை சிதைத்தாற் செய்யுளின்பஞ் சிதையுமென்று அலகிருக்கைக்கட் சிதைத்தார்.

இவை அலகுபெறாவெனவே, நெடிலின் தன்மையேயாயிற்று. இதனானே குற்றிகரம்போல் எழுத்தாந்தன்மையும் பெற்றாம்.

இனி வாஅழ்க எனவும், தூஉமணி எனவும் மூவசைச் சீரானும் வருதல் உம்மையாற் சீர்நிலை யெய்துமென்றதனாற் பெறுதும்.[6]

அவை வெண்சீரும் வஞ்சிச் சீருமாம்.

---

5. உப்போ—இதில் 'ஒ'வுக்கு அலகில்லை. அதனால் 'உப்போ' என்பது நேர் நேராகக் கொள்ளப்படும். அலகுண்டென்றால் தேமாங்காய் எனப்பட்டு வரும் சீரின் முதலசையாகி 'என' என்பதுடன் பொருந்தாமல் கலித்தளையாகி வெண்பா இலக்கணம் தவறுபடும். 'ஒ'வுக்கு அலகில்லையென்றால் மாமுன் நிரையெனப்பட்டு இயற்சீர் வெண்டளையாகிப் பொருந்தும்.

6. வாஅழ்க—வா அழ் க எனப் பிரித்து, தேமாங்காய் என வெண்சீராகவும், தூஉமணி—தூ உ மணி எனப் பிரித்து தேமாங்கனி என வஞ்சிச்சீராகவும் கொள்ளலாம்,

## சிவலிங்கனார்

அளபெடை.......................உரித்தே.

இ-ள்: அளபெடை எழுத்து அசைநிலையாகலும் உரியது; ஆகாமையும் உரியது. எ-று.

உ-ம்: நற்றாள் தொழாஅ ரெனின்—இதில் அளபெடை அகரம் அசைநிலையாயிற்று.

"உப்போஒ எனவுரைத்து மீள்வாள் ஒளிமுறுவற்
கொப்போநீர் வேலி யுலகு" —இதில் உப்போஒ

என்பதன் ஒகரம் அசைநிலை பெறவில்லை.

326. ஒற்றள பெடுப்பினும் அற்றென மொழிப (17)

ஆ.மொ. இல.,

**Even if Consonant appears in Prolongation, it is said, it is in the same nature.**

## இளம்பூரணர்

326. ஒற்றள பெடுப்பினும்..............மொழிப.

என்—னின். ஒற்றளபெடைக் குரியதோர் மரபுணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) ஒற்று அளபெடுத்துவரினும் அசை நிலையாகலும் உரித்து என்றவாறு

மாட்டேற்று வகையான் ஆகாமை பெரும்பான்மை.

உதாரணம் :

"கண்ண்[1] டண்ண்ணெனக்[2] கண்டுங் கேட்டும்."
(மலைபடு-352)

எனவரும். (17)

---

1. கண்ண்— கண், ண் எனப் பிரிக்கப்பட்டுத் தேமா என்றாகும்.

2. டண்ண்ணென— 'டண்ண், ணென' எனப் பாதிரியாக்கப் படும். அளபெடுத்த அடையாள 'ண்' அலகு பெற வில்லை.

## பேராசிரியர்

330. ஒற்றள பெடுப்பினு......மொழிப.

இஃது, ஒற்றளபெடையும் உயிரளபெடைபோலச் சீர்நிலை யாதலேயன்றி அசைநிலையாகலும் உரித்தென மாட்டெறிந்த மையின் எய்தாதது எய்துவித்தது. இதனை அசைப்படுத்து எழுத்துநிலையும் வேண்டுமென்கின்றமையின் வழுவமைத்த தூஉமாம்.

இதன் பொருள்:- ஒற்றளபெடுத்தாலும் உயிரளபெடை போலச் சீர்நிலை யெய்தலும் ஓரசையாய் நிற்றலும் உரித்து என்றவாறு.

'ஒற்றளபெடுப்பினும்' எனவே, ஒற்றுக்கள் அளபெடுத்து நிற்றற்கு உரியன; உரியவழி எல்லாம் வரையாது[1] கொள்ளப் படும். அவை வழக்கினுள்ளுஞ் செய்யுள்ளும் இருவாற்றான் ஒரு சொற்கு உறுப்பாய் நின்ற ஒற்றே அளபெழினும், பின்தோன்றிக் கொள்ளப்பட்ட ஒற்றளபெழினுமென இருவகைப்படும்.

"அஃதிவ[2] ணுவலா தெழுந்துபுறத் திசைக்கும்."
(தொல்-எழுத்-102)

என்பது, சொற்குறுப்பாய் நின்றது.

"ஆனா நோயொடு கான லஃதே."[3]

(குறுந்-97)

என்பது, பின்றோன்றிக் கொண்ட புள்ளி யெனப்படும். 'அற்றென மொழிப' என்றதனான், ஒற்றளபெடையும் உயிரள பெடைபோலத் தானுந் தன்னையொற்றிய எழுத்துங்கூடி அளபெடை மொழியாகிச் சீர்நிலை யெய்தல் பெரும்பான்மையாக லானும், அவை இயற்கை யளபெடையாகிய வழி அசையாதல் சிறுபான்மை யென்பதூஉம், உயிரளபெடை முதற்கணின்ற

---

1. வரையாது—நீக்காது
2. அஃது என்பதில் ஆய்தம் சொற்கு உறுப்பாக வந்தது.
3. கான லஃதே என்பதில் ஆய்தம் தோற்றிக் கொள்ளப் பட்டது. கனலதே என்பதைச் செய்யுளின்பம் நோக்கி ஆய்தம் தோற்றுவித்துக் கானலஃதே என்றோதப் பட்டது.

நெட்டெழுத்துப் போல ஒற்றளபெடை முதற்கணின்ற குற்றெழுத்தும்.

''தனிக்குறின் முதலசை மொழிசிதைத் தாகாது.''
(319)

என்பதனான், விலக்குண்ணாது விட்டிசையாது முதற்கணின்று நேரசையாமென்பதூஉங் கூறியவாறு. வல்லெழுத்தாறும் ரகார ழகாரமும் ஒழித்து ஒழிந்த பதினோரொற்றுங் குறிற்கீழுங் குறிலிணைக்கீழும் அளபெய்தி நிற்கும் வழிச்சீர் நிலையாதலேயன்றி அசைநிலையாகலு முரித்துச் சிறுபான்மை யென்றவாறு அவை.

''கண்ண் டண்ண்ணெனக் கண்டுங் கேட்டும்.''
(மலைபடு-352)

என்றவழி, 'கண்ண்' என்பது. சீர்நிலையாகித் தேமாவாயிற்று. 'தண்ண்ணென' என்றவழித் தட்பத்துச் சிறப்பு உரைத்தற்கு ணகர வொற்றினை அளபேற்றிச் செய்யுள் செய்தான்; ஆண்டு அது மாசெல்சுர[4] மென்னும் வஞ்சியுரிச் சீராவதனையாகற்க: பாதிரி யென்னுஞ் சீரேயாமென வழுவமைத்தவாறு. குற்றுகரங் குறிலோடுகூடி நிரையாவதனைக் குறிலிணையெனக் குற்றெழுத்தாக்கி ஓதினான்; அதுபோல, ஒற்றளபெடையும் ஒரு மாத்திரையாவதனைக் குற்றெழுத்தென்று ஓதானோவெனின்,— அங்ஙனம் ஓதின் அவ்வளபெடை குறிலாகித் தன்முன் வந்த குறிலோடும் பின்வந்த குறிலோடும் நெடிலோடுங் கூடி நிரையசையாகுவதாவான் செல்லுமென[5] மறுக்க.

மற்று, 'அரங்ங்கம்' என்புழிப் புலிசெல்வாயென மூவசைச் சீருமாமாகலின்[6] இதனை மூவசைச் சீரின்பின் வைக்க வெனின்,— அற்றன்று; அவ்விரண்டற்கும் பொதுவகையாக இடை வைத்தானென்பது; அல்லதூஉம், ஈரசைச் சீராதலே பெரும்பான்மையாதலின் ஈண்டு ஈரசைச் சீர்ப்பின் வைத்தான் இவ்விரண்டளபெடையினையு மென்பது.

---

4. மாசெல் சுரம் என்பது தேமாங்கனி போலும் வாய்பாடு.
5. செல்லும், அவ்வாறு செல்லாமையான் என்று கூறி மறுக்க.
6. அரங்ங்கம்— அரங், ங், கம் என மூவசைச் சீராம். புலி செல்வாய் என்பது புளி மாங்காய் என்பது போலும் வாய்பாடு.

மற்று, வழக்கினுள் வரும் இயற்கையளபெடையன்றே அசை நிலையாவன, ஒற்றளபெடை வழக்கினுள் வருமோ வெனின்,— அவையுஞ் சிறுபான்மை வழக்கினுள் வருமென்பது. அவை 'சுள்ள் ளென்றது' 'புள்ள்ளென்றது; 'கள்ள்ளென்றது', 'துண்ண் ணென்றது.' 'திண்ண்ணென்றது' எனவரும். பிறவுமன்ன. இவை[7] செய்யுளகத்தல்லது பரவை வழக்கினுள்[8] வாராவென்பாரு முளர்; அவரறியார்; செய்யுட்குப் புலவர் செய்து கொண்ட அளபெடை பின்னர் அசைநிலையாதற்கு என்னை காரணமென மறுக்க[9] மற்று,

''அளபெடை யசைநிலை யாகலு முரித்தே.''

(329)

என வரையாது கூறவே இச்சூத்திரமும் அடங்குமாகலின் இது மிகையாம் பிறவெனின்,— அற்றன்று; எழுத்தோத்தினுள் ஒற்றளபெடுக்கு மென்பது கூறாமையின் வேறு கூறினான்; அல்லதூஉம், உயிரளபெடையின் வேறுபட்டதோர் இலக்கண முடைமையின் இதனை வேறு கூறினானென்பது; என்னை? 'பனாஅட்டு' என்றவழி உயிரளபெடை, கடியாறு என்னுஞ் சீராய வாறுபோலாகாது 'கொங்ங்கு குரங்ங்கு எஃஃகு மின்ன்னு' என அளபெழுந்த இருவகையுகரவீற்றுச் சொற்கள். போரேறு கடியாறு என்னுஞ் சீரானும், ஞாயிறு வலியது என்னுஞ் சீரானுமாகாது இருவகை யுகரமொடு இயைபின்றி[10] வருதலானும், அவை வண்டு வரகு என்னும் உரியசைச் சீர்ப்பாற்பட்டு அசையாகுமாத லானும்,[11] இருவகை யுகர மோடியையாதவழிக்,

''கண்ண் டண்ண்ணெனக் கண்டுங் கேட்டும்.''

(மலைபடு-352)

''கஃஃ றென்னுங் கல்லதர்.''

---

7. இவை—சுள்ள்ளென்றது முதலியன.

8. பரவை வழக்கு—உலக வழக்கு

9. செய்யுட்குப் புலவர் செய்து கொண்ட (ஒற்று) அளபெடை சீர்நிலையாதலேயன்றி அசை நிலையாகவும் ஆதல் அது உலக வழக்கினுள்ளும் அளபெடையாக வழங்கப் படுதலே காரணம் என்று கூறி மறுக்க.

10. குற்றுகர முற்றுகரங்களோடு அளபெடை எழுத்துக்குத் தொடர்பின்றி.

11. அசையாதல்—நேர்பசை நிரைபசையாதல்.

எனச் சீர்நிலை பெறுதலானுமென்பது. எனவே, இயற்கை யுயிரளபெடைபோலச் செயற்கை யொற்றளபெடையும் ஒரோவழி ஓசையுட் சிதைக்கப்படாதாயிற்று. இதனானே உயிரளபெடை போல ஒற்றளபெடை வருகின்ற எழுத்தோடு கூடி அசையாகா தென்பதாம்.[12] ஈர்க்கு பீர்க்கு என ஈரொற்று நின்றவழி வேறோரசை யாகாதவாறு போல[13] ஒற்றளபெடையும் ஒரோவழி அசைநிலை பெறாதென்பதூஉங் கூறினானாம்.

இனி, இயற்கையொற்றளபெடை சிறுபான்மை வருமாதலின் இஃது அசைநிலையாதலே பெரும்பான்மையாத னோக்கி மாட்டெறிந்தான் எனவும் அமையுமெனக் கொள்க. (18)

## நச்சினார்க்கினியர்

18. ஒற்றள பெடுப்பினும்.................மொழிப.

இஃது ஒற்றளபெடையும் சீர்நிலையாதலேயன்றி அசைநிலை யுமாமென எய்தாத தெய்துவித்தது

(இ-ள்) ஒற்று அளபு எடுப்பினும் அற்றென மொழிப-ஒற்று அளபெடுத்தாலும் உயிரளபெடைபோலச் சீர்நிலை எய்தலும் ஓரசையாய் நிற்றலும் உரித்து எ-று.

ஒற்றெனவே, 'ஙஞண நமன வயலள வாய்தம்' என்னும் பதினோரொற்றுங் குறிற்கீழும் குறிலிணைக் கீழும் அளபெடுத்தல் பெறுதும்.

மங்ங்கலம் எனவும், அரங்ங்கம் எனவும் வரும். ஏனையவற் றோடும் ஒட்டுக.

சீராமெனவே, ஈரசைச்சீரும் மூவசைச் சீருமாதல் பெறுதும். மேல் எழுவகைச்சீர்[1] கூறுதலின் இதனை ஈண்டு வைத்தார். ஓரசையாதல் சிறுபான்மை.

---

12. விராஅயது என்பதில் அளபெடை யடையாள எழுத் தாகிய 'அ' என்பது யகர உயிர்மெய்க் குறிலுடன் சேர்ந்து 'அய' என நிரையாயது போல 'அரங்ங்கு' என்பதிலுள்ள ஒற்றளபெடையின் அடையாள எழுத் தாகிய 'ங்' என்பது கு என்பதுடன் சேர்ந்து 'ங்கு' என நிரையசையாதல் இல்லை.

13. ஈர்க்கு—என்பதில் ஈர், க், கு எனப் பிரிக்கப்பட்டு 'க்' என்பது தனி அசையாதல் இல்லை.

1. மூவகைச்சீர் என்றிருத்தல் வேண்டும்.

(எ-டு) 'கண்ண் தண்ண் ணெனக் கண்டும் கேட்டும்' என்புழிக் 'கண்ண்'ணென்பது சீர்நிலையெய்தித் தேமாவாயிற்று. 'தண்ண் ணென' என்றவழித் தட்பத்திற் சிறப்புக் கூறுவற்காக இயற்சீர்க் கண் ணகரவொற்றினை மிகக்கொடுத்து அளபெடுத்துச் செய்யுள் செய்தான். அது, மாசெல்சுரம் என்னும் வஞ்சிச்சீராவதனை ஆகற்க, பாதிரி என முன்னின்ற இயற்சீரேயாக என வழுவமைத் தவாறு. இதுவும் ஓரசை சிதையாது நிற்கவும் அலகு பெறா தெனவே எழுத்தின்றன்மை எய்திற்று.

இது வழக்கிற்குஞ் செய்யுட்கும் உறுப்பாய் நின்றன அளபெழுதலும், தோற்றிக்கொண்டன அளபெழுதலுமாம். சுள்ள்ளென்றது, புள்ள்ளென்றது, நள்ள்ளென்றது, கிண்ண் ணென்றது—இவை வழக்கிற்குஞ் செய்யுட்குமுரிய. தோற்றினது- கண்ண்ணென முற்காட்டினாம்.[2]

இருவகை யுகரமீறாய்க் கொங்ங்கு, குரங்ங்கு, மின்ன்னு, எஃஃகு என்பன உயிரளபெடையின் வருமெழுத்தோடு கூடிப் பேரேறு, கடியாறெனை நிற்குமாறு போலாது[3] வண்டு வரகு என்னும் உரியசைப் பாற்படுதலின் உயிரளபெடையின் வேறாக வோதினார். இருவகை யுகரத்தோடியையாதவழிக் ''கண்ண டண்ண்ணென'' ''கஃஃறென்னுங் கல்லதரத்தம்'' எனத் தேமாவாக அலகு பெற்றன.

இனி, 'நீட்டம் வேண்டின்' (எழுத்-நூன்-6) என்னுஞ் சூத்திரத்துட் காட்டிய

'செய்யுட்க ளோசை சிதையுங்கா லீரளபு
மையப்பா டின்றி யணையுமா— மைதீரொற்
றின்றியுஞ் செய்யுட் கெடினாற்றை யுண்டாக்கு
குன்றுமே லொற்றளயுங் கொள்''

---

2. கண்ண் என்பது இயற்கையளபெடை 'தண்ண்ணென என்பது தோற்றிய செயற்கையளபெடை,

3. ''இரு வகையுகர......... போலாது'' இத்தொடர் பின் வருமாறு இருத்தல் வேண்டும். ''இருவகை யுகரம் ஈறாய்க் கொங்ங்கு, குரங்ங்கு, மின்ன்னு, எஃஃகு என்பன, உயிரளபெடையின் அளபெடையெழுத்துடன் கூடாதும் கூடியும் பேரேறு கடியாறு என்றோ பாதிரி கணவிரி என்றோ நிற்குமாறு போலாது''

என்னும் மாபுராணச் சூத்திரத்துள் 'மைதீரொற்று' என்றதனானே, சீர்வகை யடியோசை கெடின் ஒற்றில்லாத சொல்லிற் கோசை அவ்வொற்றை உண்டாக்கியு நிற்குமென்றும், 'குன்றுமே லொற்றளபுங் கொள்' என்றதனானே அவ்வொற்றானும் ஓசை நிறையாவிடின் அங்ஙனம் வருவித்த ஒற்றை அளபெடுத்துங் கொள்க வென்றுங்கூறிய விதியுங் கொள்க.

''அம்பொ ரைந்து டைய்ய காம னைய்ய னென்ன
வந்தனம்புநீர ரல்லர் நன்கு ரங்கு நீர ராயினுந்
தங்கு ரவ்வர் தாங்கொ டுப்பினெஞ்சு கொந்து
தாழ்வர்தாம்
பொங்க ரவ்வ வல்கு லாரெ னப்பு கன்று சொல்லினான்''
(சிந்தாமணி-சுரமஞ்-3)

இதனுள் யகர வகரவொற்றில்வழி ஓசை அவ்வொற்றை யுண்டாக்கிற்று.[4] அஃது அளபெடுத்தது வந்துழிக் காண்க.

(18)

## சிவலிங்கனார்

ஒற்றள........மொழிப.

இ-ள்: ஒற்றெழுத்து அளபெடுத்தாலும் உயிரளபெடை போல அசைநிலை ஆகலும் ஆகாமையும் உரித்து என மொழிப, எ-று.

உ-ம்: கண்ண் டண்ண்ணெனக் கண்டும் கேட்டும் (மலைபடு. 352) இதில் கண்ண் என்பது நேர் நேர் எனவும், டண்ண்ணென என்பது நேர் நிரை எனவும் அசைநிலை பெற்றும் பெறாதும் வந்தது காண்க.

---

4. உடைய, ஐயன் என்பனவற்றில் ஐகார ஓசை பின்வரும் யகரத்துக்கேற்ப ஐய்யன்எனவும் யகர ஒற்றை உண்டாக்கியது. குரவர், அரவ என்பனவற்றில் அகர ஓசை பின்வரும் வகரத்துக்கேற்ப குரவ்வர் எனவும் அரவ்வ எனவும் வகர ஒற்றை உண்டாக்கியது.

உடைய்ய, ஐய்யன் என அளபெடுத்துக் காண்க. ஆனால் இதற்கு உதாரணச் செய்யுள் கிடைக்கப் பெற வில்லை.

## வெண்பா வுரிச்சீர்

327. இயற்சீர் இறுதிமுன் நேரவண் நிற்பின்
உரிச்சீர் வெண்பா ஆகும் என்ப. (18)

ஆ. மொ. இல.,

if 'ner' appears at the end of 'iyal sir' it becomes the 'uricclr' of 'venba'

பி.இ.நூ.

யா.வி. 12
மூவசைச் சீர்உரிச் சீர்இரு நான்கினும்
நேர்இறு நான்கும் வெள்ளை

யா.கா. 6

வெண்பாவினவாம், நேரசையா லிற்ற மூவசைச் சீர்

இல.வி. 716

மூவசை கூடிய சீர்உரிச்சீர் அது
நாலிரண் டாகி நடைபெறும்; அவற்றுள்
நேர்இறு நான்கும் வெள்ளை.

மு.வீ.யா. 4

ஈரசை நாற்சீர் இற்றினுள் நேரசை
விளைந்து காய் எனவரல் வெண்பாக் குரிய

தொ.வி. 204

ஈரசை யியற்சீர் ஈரிரண்டு இவற்றொடு
இற்று நேர் நிரை இருநான்கு உரிச்சீர்
நேர்இறும் வெண்சீர்.

## இளம்பூரணர்

327. இயற்சீர் இறுதிமுன்.........என்ப.

என்-னின். வெண்பாவுரிச்சீர் ஆமாறுணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) மேற்சொல்லப்பட்ட ஈரசைச்சீர் பதினாறோடு நான்கசையுங் கூட்டியுறழ, அறுபத்து நான்கு மூவசைச் சீராம்.

அவற்றுள் இயற்சீர் நான்கின்பின் நேரசை வந்த மூவசைச்சீர் நான்கும் வெண்பாவுரிச்சீராம் என்றவாறு.

உதாரணம்

''மாவாழ்கான், மாவருகான், புலிவாழ்கான்,
புலிவருகான்.''

என்பன.* (19)

## பேராசிரியர்

331. இயற்சீ ரிறுதிமு..........................மென்ப.

இது, நிறுத்தமுறையானே ஈரசை கொண்டு சீரியைந்திறுவன உணர்த்தி இனி மூவசை கொண்டு முடிவன உணர்த்துவானெழுந்தான் அவற்றுள் இது வெண்பாவுரிச் சீருணர்த்துகின்றது.

இதன் பொருள் :- மேனின்ற அதிகாரத்து இயலசையானாகிய இயற்சீரிறுதிக்கண் நேரசை பெறுவன நான்கும் வெண்பாவுரிச் சீராமென்று சொல்லுவர் புலவர் என்றவாறு.

'உரிச்சீர் வெண்பா, வெண்பா வுரிச்சீராகுமென மொழி மாற்றியுரைக்க.

உதாரணம் :- நேர் நேர் நேர், நிரை நேர் நேர், நேர் நிரை நேர், நிரை நிரை நேர் என வரும். இவற்றை மாசெல்வாய், புலி செல்வாய், மாவருவாய், புலி வருவாய் எனவும், தேமாங்காய், புளி மாங்காய், கூவிளங்காய், கருவிளங்காய் எனவும் வேறு வேறுதாரணங்காட்டுப. பிறவும் அவ்வாறு வருவன அறிந்து கொள்க.

அவற்றுக்குச் செய்யுள்:

''காமன்கா ணென்று கருவூரார் பாராட்டத்
தாமந்தாழ் கோதை வருவானை-- யாமு
மிருகுடங்கை யானெதிரே கூப்பித் தொழக்கண்
டொருகுடங்கை யாயின கண்.''

(சிலப்-மேற்)

---

* இவை வாய்பாடுகள்.

மாவாழ்கான்—நேர் நேர் நேர், மாவருகான்— நேர் நிரை நேர்,

புலிவாழ்கான்— நிரை நேர் நேர், புலிவருகான்— நிரை நிரை நேர்,

இதனுட் 'காமன்காண்' எனவும் கருவூரார்' எனவும் 'இருகுடங்கை' எனவும் 'யானெதிரே' எனவும் நான்கு வெண்சீரும் வந்தன.[1] இதுவும் ஆட்சியுங் குணனுங் காரணமாகப் பெற்ற பெயர்; வெண்பாவிற்கும் அதன் பகுதியாகிய கலிப்பாவிற்கும் உரிமையாதலிற் குணங் காரணமாயிற்று; ஆட்சி:

> "வெண்பா வுரிச்சீ ராசிரிய வுரிச்சீ
> ரின்பா நேரடிக் கொருங்குநிலை யிலவே." (332)

எனவும் பிறாண்டும் ஆளுமென்பது. மற்று இயற்சீ ரென்ற வழிப் பத்து இயற்சீருங் கொள்ளாமோவெனின்,— அதற்கு விடை முன்னர்,

> "இயலசை மயக்கம்" (322)

என்புழிச் சொல்லிப் போந்தாம். "இயற்சீர்" எனப் பொது வகையான் ஓதியவழி இயற்சீர் பத்துங்[2] கொள்ளாது இயலசை

---

1. காமன்காண்— நேர் நேர் நேர், கருவூரார்— நிரை நேர் நேர்,

   இருகுடங்கை— நிரை நிரை நேர், யானெதிரே— நேர் நிரை நேர்.

2. இயற்சீர்பத்து:- நேர் நேர், நிரை நேர், நிரை நிரை, நேர் நிரை —4 இவை நான்கும்

| | |
|---|---|
| இயலசை மயக்கம் நேர்பு நேர் நிரைபு நேர் | —2 |
| நேர்நேர்பு, நிரைபு நேர், நிரை நேர்பு நிரை நிரைபு | —4 |
| | 10 |

ஆசிரியவுரிச்சீர் ஆறு:- நேர்பு நேர்பு, நிரைபு நேர்பு, நிரைபு நிரைபு, நேர்பு நிரைபு

| | |
|---|---|
| இவை நான்கும் உரியசை மயக்கம். | —4 |
| நேர்பு நிரை, நிரைபு நிரை— | —2 |
| | 6 |

மயக்கமாகிய நான்கனையுங் கோடலும், ஆசிரியவுரிச் சீரென்று பொதுவகையான் ஓதியவழி ஆறனையுங் கொள்ளாது உரியசை மயக்கமாகிய நான்கனையுமே கோடலும் வேண்டினானென்பது. அஃது இச்சூத்திரத்தானும்,

"வெண்பா வுரிச்சீ ராசிரிய வுரிச்சீர்." (335)

என்பதனானும் பெறுதும். (19)

**நச்சினார்க்கினியர்**

19 இயற்சீர் இறுதிமுன்...........மென்ப.

இது முறையானே மூவசைச் சீருணர்த்துதல் தொடங்கி, அவற்றுள் வெண்பாவுரிச்சீர் உணர்த்துகின்றார்.

(இ-ள்) அவண் இயற்சீரிறுதிமுன் நேர்நிற்பின்-அவ்விடத்திற் கூறிய இயலசையானாகிய இயற்சீரிறுதிக்கண் நேரசை வந்து நிற்பின்; வெண்பா வுரிச்சீராகு மென்ப— அந்நான்கும் வெண்பாவுரிச்சீராமென்று கூறுவர் புலவர், எ-று.

அவை:-

நேர் நேர் நேர், நிரை நிரை நேர்,
நேர் நிரை நேர், நிரை நேர் நேர்,

எனவரும்.

இவற்றை மாசெல்வாய், புலிவருவாய், மாவருவாய், புலிசெல்வாய் எனவும்; தேமாங்காய், கருவிளங்காய், கூவிளங்காய், புளிமாங்காய் எனவுங் காட்டுக

செய்யுள் :

"காமன்கா ணென்று கருவூரார் பாராட்டத்
தாமந்தாழ் கோதை வருவானை—யாமு
மிருகுடங்கை யானெதிரே கூப்பித் தொழக்கண்
டொருகுடங்கை யாயின கண்."

என நான்கு வெண்சீருங் காண்க.

இஃது ஆட்சியுங் குணமுங் காரணமாகப் பெற்ற பெயர்; வெண்பாவிற்கும் அதன் பகுதியாகிய கலிப்பாவிற்கு முரிமையின்.

இனிப் பொதுவாக இயற்சீரென்றால் இயலிசை மயக்கமாகிய இயற்சீர் நான்கினையும், பொதுவாக உரிச்சீரென்றால் உரியசை மயக்கமாகிய உரிச்சீர் நான்கினையுமே கோடல் வேண்டினார் இத்தொல்காப்பியனாரென்பது, இச்சூத்திரத்தானும் 'வெண்பா வுரிச்சீ ராசிரிய வுரிச்சீ, ரின்பா நேரடிக்' 'கென்பதனானும்' (செய்-23) பெறுதும்; இதனான் ஆட்சியும் பெற்றாம்.

இதுவுங் கட்டளை யடிக்குஞ் சீர்வகையடிக்குமுரித்து.

(19)

**சிவலிங்கனார்**

இயற்சீர்...............என்ப.

(இ-ள்) ஈரசைச் சீர்களாகிய தேமா புளிமா கூவிளம் கருவிளம் என்பனவற்றுமுன் நேர்வரின் அவை வெண்பா வுரிச்சீராம்.

வாய்பாடு: தேமாங்காய், புளிமாங்காய், கூவிளங்காய், கருவிளங்காய் எனக் கொள்க. காய்ச்சீர்கள யாவும் வெண்பாவுரிச் சீர்களாம்.

## வஞ்சிச் சீர்

328. வஞ்சிச் சீரென வகைபெற் றனவே
வெண்சீ ரல்லா[1] மூவசை என்ப. (19)

**ஆ.மொ.இல.,**

The 'Sir' ot three syllables Other than 'Vensir' are termed as 'Vanjiccir'

**பி.இ.நூ.**

**யா.வி. 12.**

மூவசைச் சீர்உரிச் சீர்இரு நான்கினும்
(நேர் இறு நான்கும் வெள்ளை) அல்லன
பாவினுள் வஞ்சியின் பாற்பட் டனவே.

---

1. மூவசை யான—பேரா. நச். பாடம்.

யா.கா. 6.

நிரையா லிறுப........ வஞ்சிக்குரிச்சீர்

இல.வி. 716.

மூவசை கூடிய சீர் உரிச்சீர்.........
(நேர்இறு நான்கும் வெள்ளை) அல்லன
பாவினுள் வஞ்சியின் பாற்பட் டிருதலும்.

தொ.வி. 204.

ஈரசையியற்சீர்........ நிரையிறும் வஞ்சிச்சீர்.

மு.வீ.யா. 4

நிரையசை யடைந்து கனியென நேர்வது
வஞ்சிக் குரியவாம்.

## இளம்பூரணர்

328. வஞ்சிச் சீரென.............. என்ப.

என்-னின். வஞ்சியுரிச்சீர் ஆமா றுணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) வஞ்சியுரிச்சீரெனப் பாகுபட்டன மேற்சொல்லப் பட்ட மூவசைச்சீர் அறுபத்து நான்கு சீரினும் வெண்சீரல்லாத அறுபது மென்றவாறு.

உதாரணம் :

(1)

1. நேர் நேர் நிரை — மா வாழ் நெறி*
2. நேர் நேர் நேர்பு — மா வாழ் காடு
3. நேர் நேர் நிரைபு — மா வாழ் பொருப்பு
4. நேர் நிரை நிரை — மா வரு நெறி
5. நேர் நிரை நேர்பு — மா வரு காடு

* 'இவ்வஞ்சிச் சீர்களுக்கு வாய்பாடுகள் புதியனவாகச் சேர்க்கப் பெற்றன' என்று சென்னை, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக வெளியீட்டில் (1953) காணப்படுகின்றது.

6. நேர் நிரை நிரைபு — மா வரு பொருப்பு
7. நேர் நேர்பு நேர் — மா போகு கான்
8. நேர் நேர்பு நிரை — மா போகு நெறி

9. நேர் நேர்பு நேர்பு — மா போகு காடு
10. நேர் நேர்பு நிரைபு — மா போகு பொருப்பு

11. நேர் நிரைபு நேர் — மா வழங்கு கான்
12. நேர் நிரைபு நிரை — மா வழங்கு நெறி
13. நேர் நிரைபு நேர்பு — மா வழங்கு காடு
14. நேர் நிரைபு நிரைபு — மா வழங்கு பொருப்பு

(2)

15. நிரை நேர் நிரை — புலி வாழ் நெறி
16. நிரை நேர் நேர்பு — புலி வாழ் காடு
17. நிரை நேர் நிரைபு — புலி வாழ் பொருப்பு

18. நிரை நிரை நிரை — புலி வரு நெறி
19. நிரை நிரை நேர்பு — புலி வரு காடு
20. நிரை நிரை நிரைபு — புலி வரு பொருப்பு

21. நிரை நேர்பு நேர் — புலி போகு கான்
22. நிரை நேர்பு நிரை — புலி போகு நெறி
23. நிரை நேர்பு நேர்பு — புலி போகு காடு
24. நிரை நேர்பு நிரைபு — புலி போகு பொருப்பு

25 நிரை நிரைபு நேர் — புலி வழங்கு கான்
26. நிரை நிரைபு நிரை — புலி வழங்கு நெறி
27. நிரை நிரைபு நேர்பு — புலி வழங்கு காடு
28. நிரை நிரைபு நிரைபு — புலி வழங்கு பொறுப்பு

(3)

29. நேர்பு நேர் நேர் — பாம்பு வாழ் கான்
30. நேர்பு நேர் நிரை — பாம்பு வாழ் நெறி
31. நேர்பு நேர் நேர்பு — பாம்பு வாழ் காடு
32. நேர்பு நேர் நிரைபு — பாம்பு வாழ் பொருப்பு

33. நேர்பு நிரை நேர் — பாம்பு வரு கான்
34. நேர்பு நிரை நிரை — பாம்பு வரு நெறி
35. நேர்பு நிரை நேர்பு — பாம்பு வரு காடு

36. நேர்பு நிரை நிரைபு — பாம்பு வரு பொருப்பு

37. நேர்பு நேர்பு நேர் — பாம்பு போகு கான்
38. நேர்பு நேர்பு நிரை — பாம்பு போகு நெறி
39. நேர்பு நேர்பு நேர்பு — பாம்பு போகு காடு
40. நேர்பு நேர்பு நிரைபு — பாம்பு போகு பொருப்பு

41. நேர்பு நிரைபு நேர் — பாம்பு வழங்கு கான்
42. நேர்பு நிரைபு நிரை — பாம்பு வழங்கு நெறி
43. நேர்பு நிரைபு நேர்பு — பாம்பு வழங்கு காடு
44. நேர்பு நிரைபு நிரைபு — பாம்பு வழங்கு பொருப்பு

(4)

45. நிரைபு நேர் நேர் — களிறு வாழ் கான்
46. நிரைபு நேர் நிரை — களிறு வாழ் நெறி
47. நிரைபு நேர் நேர்பு — களிறு வாழ் காடு
48. நிரைபு நேர் நிரைபு — களிறு வாழ் பொருப்பு

49. நிரைபு நிரை நேர் — களிறு வரு கான்
50. நிரைபு நிரை நிரை — களிறு வரு நெறி
51. நிரைபு நிரை நேர்பு — களிறு வரு காடு
52. நிரைபு நிரை நிரைபு — களிறு வரு பொருப்பு

53. நிரைபு நேர்பு நேர் — களிறு போகு கான்
54. நிரைபு நேர்பு நிரை — களிறு போகு நெறி
55. நிரைபு நேர்பு நேர்பு — களிறு போகு காடு
56. நிரைபு நேர்பு நிரைபு — களிறு போகு பொருப்பு

57. நிரைபு நிரைபு நேர் — களிறு வழங்கு கான்
58. நிரைபு நிரைபு நிரை — களிறு வழங்கு நெறி
59. நிரைபு நிரைபு நேர்பு — களிறு வழங்கு காடு
60. நிரைபு நிரைபு நிரைபு — களிறு வழங்கு பொருப்பு

ஆக அறுபதும் * (19)

* ஆக அறுபதாம் என்றிருத்தல் வேண்டும்.

## பேராசிரியர்

332. வஞ்சிச் சீரென..................யான

இஃது, ஒழிந்த மூவசைச்சீ ருணர்த்துகிறது.

இதன் பொருள் :- வஞ்சிச் சீரெனக் கூறுபடுக்கப்பட்டன மேற்கூறிய வெண்சீரல்லா மூவசைச் சீரெல்லாம் என்றவாறு.

நேர் நிரை நேர்பு நிரைபு என்னும் நான்கனையும் மூன்றுபடியான் இழிய வைத்து, முதற்கணின்ற நான்கசையும் இடைநின்ற நான்கனோடும் ஒரோவொன்று நான்காகக் கூட்டி, இறுதி நின்ற நான்கசையோடும் ஒரோவொன்றற்குப் பதினாறாக நாற்காலுறழ அறுபத்து நான்கு மூவசைச்சீர் பிறக்கும். அவற்றுள், இயலசை மருங்கின் நேரிறுவன நான்கு சீருள. அவை முன்னர் (331) வெண்சீர் நான்கெனக் கூறப்பட்டன. ஒழிந்த மூவசைச் சீர்களெல்லாம் வஞ்சியுரிச்சீ ரெனப்படும் என்றவாறு. அவை அறுபது வகைப்படும்.

உதாரணம் :

| | |
|---|---|
| நேர் நேர் நேர் | மாசேர்வாய்* |
| நேர் நிரை நேர் | மாவருவாய் |
| நேர் நேர்பு நேர் | மாபோகுவாய் |
| நேர் நிரைபு நேர் | மாவழங்குவாய் |

எனவும்,

| | |
|---|---|
| நிரை நேர் நேர் | புலிசேர்வாய் |
| நிரை நிரை நேர் | புலிவருவாய் |
| நிரை நேர்பு நேர் | புலிபோகுவாய் |
| நிரை நிரைபு நேர் | புலி வழங்குவாய் |

எனவும்,

| | |
|---|---|
| நேர்பு நேர் நேர் | பாம்பு சேர்வாய் |
| நேர்பு நிரை நேர் | பாம்பு வருவாய் |

---

* "இவ்வாய்பாடுகள் பிற நூல்களிலிருந்து படிப்பவர்களுக்குப் பயிற்சி யுண்டாகக் கொடுக்கப்பட்டவை. பேராசிரியர் எழுதியவல்ல என்று S. சனகசபைப் பிள்ளை பதிப்பில் (1935) காணப்படுகின்றது.

| | |
|---|---|
| நேர்பு நேர்பு நேர் | பாம்பு போகுவாய் |
| நேர்பு நிரைபு நேர் | பாம்பு வழங்குவாய் |

எனவும்,

| | |
|---|---|
| நிரைபு நேர் நேர் | களிறு சேர்வாய் |
| நிரைபு நிரை நேர் | களிறுவருவாய் |
| நிரைபு நேர்பு நேர் | களிறு போகுவாய் |
| நிரைபு நிரைபு நேர் | களிறு வழங்குவாய் |

எனவும் இவை நேரீற்று மூவசைச்சீர் மதினாறு. இவற்றுள் வெண்சீரென மேற்காட்டிய நான்கு மொழித்து ஒழிந்த பன்னிரண்டும் வஞ்சியுரிச்சீர்.

இனி, நிரையீற்று மூவகைச்சீர் பதினாறும் வருமாறு:

| | |
|---|---|
| நேர் நேர் நிரை | மாசேர் சுரம் |
| நேர் நிரை நிரை | மாவரு சுரம் |
| நேர் நேர்பு நிரை | மாபோகு சுரம் |
| நேர் நிரைபு நிரை | மாவழங்கு சுரம் |

எனவும்,

| | |
|---|---|
| நிரை நேர் நிரை | புலிசேர் சுரம் |
| நிரை நிரை நிரை | புலிவருசுரம் |
| நிரை நேர்பு நிரை | புலி போகு சுரம் |
| நிரை நிரைபு நிரை | புலி வழங்கு சுரம் |

எனவும்,

| | |
|---|---|
| நேர்பு நேர் நிரை | பாம்பு சேர்சுரம் |
| நேர்பு நிரை நிரை | பாம்பு வரு சுரம் |
| நேர்பு நேர்பு நிரை | பாம்பு போகு சுரம் |
| நேர்பு நிரைபு நிரை | பாம்பு வழங்கு சுரம் |

எனவும்,

| | |
|---|---|
| நிரைபு நேர் நிரை | களிறு சேர் சுரம் |
| நிரைபு நிரை நிரை | களிறு வரு சுரம். |
| நிரைபு நேர்பு நிரை | களிறு போகு சுரம் |
| நிரைபு நிரைபு நிரை | களிறு வழங்கு சுரம் |

எனவும், நிரையீற்று மூவசைச்சீர் பதினாறும் வந்தன.

| | |
|---|---|
| நேர் நேர் நேர்பு | மா சேர் காடு |
| நேர் நிரை நேர்பு | மா வருகாடு |
| நேர் நேர்பு நேர்பு | மா போகு காடு |
| நேர் நிரைபு நேர் | மா வழங்கு காடு |

எனவும்,

| | |
|---|---|
| நிரை நேர் நேர்பு | புலி சேர்காடு |
| நிரை நிரை நேர்பு | புலி வரு காடு |
| நிரை நேர்பு நேர்பு | புலி போகு காடு |
| நிரை நிரைபு நேர்பு | புலி வழங்கு காடு |

எனவும்,

| | |
|---|---|
| நேர்பு நேர் நேர்பு | பாம்பு சேர் காடு |
| நேர்பு நிரை நேர்பு | பாம்பு வரு காடு |
| நேர்பு நேர்பு நேர்பு | பாம்பு போகு காடு |
| நேர்பு நிரைபு நேர்பு | பாம்பு வழங்கு காடு |

எனவும்,

| | |
|---|---|
| நிரைபு நேர் நேர்பு | களிறு சேர் காடு |
| நிரைபு நிரை நேர்பு | களிறு வரு காடு |
| நிரை நேர்பு நேர்பு | களிறு போகு காடு |
| நிரைபு நிரைபு நேர்பு | களிறு வழங்கு காடு |

எனவும் இவை நேர்பீற்று மூவசைச்சீர் பதினாறும் வந்தன.

| | |
|---|---|
| நேர் நேர் நிரைபு | மாசேர் கடறு |
| நேர் நிரை நிரைபு | மாவரு கடறு |
| நேர் நேர்பு நிரைபு | மா போகு கடறு |
| நேர் நிரைபு நிரைபு | மா வழங்கு கடறு |

எனவும்,

| | |
|---|---|
| நிரை நேர் நிரைபு | புலி சேர் கடறு |
| நிரை நிரை நிரைபு | புலி வரு கடறு |
| நிரை நேர்பு நிரைபு | புலி போகு கடறு |
| நிரை நிரைபு நிரைபு | புலி வழங்கு கடறு |

எனவும்,

| | |
|---|---|
| நேர்பு நேர் நிரைபு | பாம்பு சேர் கடறு |
| நேர்பு நிரை நிரைபு | பாம்பு வரு கடறு |
| நேர்பு நேர்பு நிரைபு | பாம்பு போகு கடறு |
| நேர்பு நிரைபு நிரைபு | பாம்பு வழங்கு கடறு |

எனவும்,

| | |
|---|---|
| நிரைபு நேர் நிரைபு | களிறு சேர் கடறு |
| நிரைபு நிரை நிரைபு | களிறு வரு கடறு |
| நிரைபு நேர்பு நிரைபு | களிறு போகு கடறு |
| நிரைபு நிரைபு நிரைபு | களிறு வழங்கு கடறு |

எனவும் இவை நிரைபீற்று மூவசைச்சீர் பதினாறும் வந்தன.

நேரீற்று வஞ்சியுரிச்சீர் பன்னிரண்டும், நிரையீற்று வஞ்சியுரிச்சீர் பதினாறும், நேர்பீற்று வஞ்சியுரிச்சீர் பதினாறும், நிரைபீற்று வஞ்சியுரிச்சீர் பதினாறுமாக வஞ்சியுரிச்சீர் அறுபதும் வந்தன. அவற்றுக்குச் செய்யுள்:

''மேற்கோட்டுநீர் கீழ்ப்பரந்து தன்
விழுக்கோட்டுமெய் வியல்விசும்புதோய்ந்
தோங்குமுன்னர்க் காம்புகிழியப்
பாய்ந்து சென்றுசென் றாங்குநலிபுநின்
றெதிர்த்தூமீண்டாங் கதிர்த்துக்கரைகொன்
றலங்குகோட்டுமுத் திலங்குநிலவுச்செய்
தூர்திரைக் காவிரி பரக்குந் தண்டலை
மூதூ ரோனே பேரிசை வளவன்
சுரம்படர்ந்து வருந்துவ தெவனோ
நிரம்பா வாழ்க்கைப்பூபாணர் கடும்பே.''

இதனுள், நேரீற்று மூவசைச்சீர் பதினாறுள்ளும் வெண்பாவுரிச்சீர் நான்கு மொழித்து ஒழிந்த பன்னிரண்டு வஞ்சியுரிச்சீரும் முறையானே வந்தன.

''தண்டண்டலைத் தாதுறைத்தலின்
வண்டோட்டுவயல் வாய்புகை புகரந்
தயலாலையி னறைக்கடிகையின்
வழிப்போருவர மறித்துருபுகிளர்ந்
தோங்குசென்னிலை வாங்குகதிர்தரீஇப்
போதுதூங்குசிலை மீதுபுகுந்துபுகுந்
தொடுங்குசெய்தொழில் வழங்குகிளிக்குழாந்

திருந்து கோட்டுமிசைக் குரங்கு விருந்துகொளூ
நன்னர் நனனா டென்னா குவகொல்
பொன்னிநன் னாட்டுப் பொருந னெங்கோன்
றாடோய் தடக்கை மல்ல
னாடுகெழு திருவிற் பீடுகெழு வேந்தே.''

இதனுள், நிரையீற்று வஞ்சியுரிச்சீர் பதினாறும் வந்தன.[1]

''வான்பொய்யாது தீம்பெயல்பெய்து
மால்யாறு போந்து கால்சுரந்து பாய்ந்து
சுரைபொய்யாது நிறைவளஞ்சான்று
வரையாதுதந்து பலாப்பழுத்துதிரிந்து
பாம்புகொள்ளாது வீங்குசுடர்நீண்டு
வித்துநாறுவாய்த்து முத்துக்கரும்புபூத்து
வரம்புகொள்ளாது நிரம்புபெருங்கூட்டு
விசும்பு நீங்குமஞ்சு துயின்றுபெயர்ந்துபோந்து
வாழை யோங்கிய கோழிலைப் பரக்குந்
தண்டா யாணர்த் தென்ப வென்றும்
படுவது கூட்டுண்டு கடவது நோக்கிக்
குடிபுறந் தரூஉம் வேந்த
னெடுநிலைத் தண்குடை நிழற்று நாடே.''

இதனுள், நேர்பசையிறுதியாகிய பதினாறு வஞ்சியுரிச்சீரும் முறையானே வந்தன.

''சீற்றமிகுபு[2] செல்சினஞ்சிறந்து
கூற்றொத்துவிரைபு கோள்குறித்துமுயன்று
புலிப்போத்துலவு பொலங்கொடி யெடுத்துப்
புகலேற்றுமலைந்து பகையரசுதொலைத்து
வேம்புமிதணிபு போந்துபடத் தொடுத்து
வீற்றுவீற்றுப்புனைந்து வேற்றுச் சுரும்புகிளர்ந்து
களிறுகால்கிளர்ந்து குளிறுகுரல்படைத்துச்
செரிந்து தூங்குகடாத்து விரைந்துமலைந்து
தொலைந்து
மணங்கம ழாரமொடு தயங்கச் சூடிய

1. முறையானே வந்தன என்க.
2. சீற், ற, மிகுபு எனப் பிரித்து நேர் நேர் நிரைபு எனக் கொள்க. 'சீற்றம் மிகுபு' என நச்சினார்க்கினியர் கொண்ட பாடம் நன்று.

வென்வேற் சென்னி பொன்னியற் புனைகழல்
பாடுபெறு பாணினும் பலவே
பாடா தோடிய நாடுகெழு வேந்தே.''

இதனுள், நிரைபீற்று வஞ்சியுரிச்சீர் பதினாறும் முறையானே வந்தன. (20)

## நச்சினார்க்கினியர்

20. வஞ்சிச் சீரென ..............யான.

இஃது ஒழிந்த மூவசைச்சீர் கூறுகின்றது.

(இ-ள்) வஞ்சிச்சீரென்று கூறுபடுக்கப்பட்டன மேற் கூறிய வெண்சீரல்லா மூவசைச்சீரெல்லாம். எ-று.

அவை வருமாறு:- நேர், நிரை, நேர்பு, நிரைபு என நான்கனையும் நிறுத்தி. ஒருகால் நேர்முன்னாகவும், ஒருகால் நிரைபு முன்னாகவும் எடுத்து நேரீறாக முடிக்கப் பதினாறாம்; அவ்வாறெடுத்து நிரையீறாக முடிக்கப் பதினாறாம்; அவ்வாறெடுத்து நேர்பு ஈறாக முடிக்கப் பதினாறாம்; அவ்வாறெடுத்து நிரைபு ஈறாக முடிக்கப் பதினாறாம். ஆகவே, அறுபத்து நான்காயிற்று. அவ்வாறெடுத்து நான்கு முறைமைக்கு நடுவு நேரும் நிரையும் நேர்பும் நிரைபுமாக நிற்குமாறும் உணர்க.

| அவை | எடுத்துக்காட்டு |
|---|---|
| 1. நேர் நேர் நேர் | மா சேர் வாய் |
| 2. நேர் நிரை நேர் | மா வரு வாய் |
| 3. நேர் நேர்பு நேர் | மா போகு வாய் |
| 4. நேர் நிரைபு நேர் | மா வழங்கு வாய் |
| 5. நிரை நேர் நேர் | புலி சேர் வாய் |
| 6. நிரை நிரை நேர் | புலி வரு வாய் |
| 7. நிரை நேர்பு நேர் | புலி போகு வாய் |
| 8. நிரை நிரைபு நேர் | புலி வழங்கு வாய் |
| 9. நேர்பு நேர் நேர் | பாம்பு சேர் வாய் |
| 10. நேர்பு நிரை நேர் | பாம்பு வரு வாய் |
| 11. நேர்பு நேர்பு நேர் | பாம்பு போகு வாய் |
| 12. நேர்பு நிரைபு நேர் | பாம்பு வழங்கு வாய் |
| 13. நிரை நேர் நேர் | களிறு சேர் வாய் |

14. நிரைபு நிரை நேர் களிறு வருவாய்
15. நிரைபு நேர்பு நேர் களிறு போகுவாய்
16. நிரைபு நிரைபு நேர் களிறு வழங்குவாய்

எனவும் நேரீற்று மூவசைச்சீர் பதினாறும் வந்தன.

வெண்சீரென மேற்காட்டிய நான்கும் ஒழிந்தொழிந்த பன்னிரண்டும் வஞ்சியுரிச்சீர்,

17. நேர் நேர் நிரை மாசேர்சுரம்
18. நேர் நிரை நிரை மாவருசுரம்
19. நேர் நேர்பு நிரை மாபோகுசுரம்
20. நேர் நிரைபு நிரை மாவழங்குசுரம்
21. நிரை நேர் நிரை புலிசேர்சுரம்
22. நிரை நிரை நிரை புலிவருசுரம்
23, நிரை நேர்பு நிரை புலிபோகுசுரம்
24. நிரை நிரைபு நிரை புலிவழங்குசுரம்
25. நேர்பு நேர் நிரை பாம்பு சேர்சுரம்
26. நேர்பு நிரை நிரை பாம்பு வருசுரம்
27. நேர்பு நேர்பு நிரை பாம்பு போகுசுரம்
28. நேர்பு நிரைபு நிரை பாம்பு வழங்குசுரம்
29. நிரைபு நேர் நிரை களிறு சேர்சுரம்
30. நிரைபு நிரை நிரை களிறு வருசுரம்
31. நிரைபு நேர்பு நிரை களிறு போகுசுரம்
32 நிரைபு நிரை நிரை களிறு வழங்குசுரம்

எனவும் நிரையீற்று மூவசைச்சீர் பதினாறும் வந்தன.

33. நேர் நேர் நேர்பு மாசேர் காடு
34. நேர் நிரை நேர்பு மாவரு காடு
35. நேர் நேர்பு நேர்பு மாபோகு காடு
36. நேர் நிரைபு நேர்பு மா வழங்கு காடு
37. நிரை நேர் நேர்பு புலி சேர் காடு
38. நிரை நிரை நேர்பு புலி வரு காடு
39. நிரை நேர்பு நேர்பு புலி போகு காடு

| | | |
|---|---|---|
| 40. | நிரை நிரைபு நேர்பு | புலி வழங்கு காடு |
| 41. | நேர்பு நேர் நேர்பு | பாம்பு சேர் காடு |
| 42; | நேர்பு நிரை நேர்பு | பாம்பு வரு காடு |
| 43. | நேர்பு நேர்பு நேர்பு | பாம்பு போகு காடு |
| 44. | நேர்பு நிரைபு நேர்பு | பாம்பு வழங்கு காடு |
| 45. | நிரைபு நேர் நேர்பு | களிறு சேர் காடு |
| 46. | நிரைபு நிரை நேர்பு | களிறு வரு காடு |
| 47. | நிரைபு நேர்பு நேர்பு | களிறு போகு காடு |
| 48. | நிரைபு நிரைபு நேர்பு | களிறு வழங்கு காடு |

எனவும் நேர்பு ஈற்று மூவசைச்சீர் பதினாறும் வந்தன.

| | | |
|---|---|---|
| 49. | நேர் நேர் நிரைபு | மா சேர் கடறு |
| 50. | நேர் நிரை நிரைபு | மா வரு கடறு |
| 51. | நேர் நேர்பு நிரைபு | மா போகு கடறு |
| 52. | நேர் நிரைபு நிரைபு | மா வழங்கு கடறு |
| 53. | நிரை நேர் நிரைபு | புலி சேர் கடறு |
| 54. | நிரை நிரை நிரைபு | புலி வரு கடறு |
| 55. | நிரை நேர்பு நிரைபு | புலி போகு கடறு |
| 56. | நிரை நிரைபு நிரைபு | புலி வழங்கு கடறு |
| 57. | நேர்பு நேர் நிரைபு | பாம்பு சேர் கடறு |
| 58. | நேர்பு நிரை நிரைபு | பாம்பு வரு கடறு |
| 59. | நேர்பு நேர்பு நிரைபு | பாம்பு போகு கடறு |
| 60. | நேர்பு நிரைபு நிரைபு | பாம்பு வழங்கு கடறு |
| 61. | நிரைபு நேர் நிரைபு | களிறு சேர் கடறு |
| 62. | நிரைபு நிரை நிரைபு | களிறு வரு கடறு |
| 63. | நிரைபு நேர்பு நிரைபு | களிறு போகு கடறு |
| 64. | நிரைபு நிரைபு நிரைபு | களிறு வழங்கு கடறு |

எனவும் நிரைபு ஈற்று மூவசைச்சீர் பதினாறும் வந்தன.

இவை அறுபத்து நான்கினும், நான்கு நீக்கி, ஒழிந்த அறுபதும் வஞ்சியுரிச்சீராம். செய்யுள் :

'மேற்கோட்டுநீர் கீழ்ப்பரந்துதன்
விழுக்கோட்டுமெய் வியல்விசும்புதோய்ந்
தோங்குமுன்னர்க் காம்புகிழியப்

பாய்ந்துசென்றுசென் றாங்குநலிபுநின்
றெதிர்த்துமீண்டாங் கதிர்த்துக்கரைகொன்
றலங்குகோட்டுமுத் திலங்குநிலவுச்செய்
தூர்திரைக் காவிரி பரக்குந் தண்டலை
மூதூ ரோனே பெரிசை வளவன்
சுரம்படர்ந்து வருந்துவ தெவனோ
நிரம்பா வாழ்க்கைப் பாணர் கடும்பே'

இதனுள் நேரீற்று மூவசைச்சீர் பதினாறுள் வெண்சீர் நான்கு மொழித்து ஒழிந்த பன்னிரண்டு வஞ்சியுரிச்சீரும் முறையானே வந்தன.

"தண்டலைத் தாதுறைத்தலின்
வண்டோட்டுவயல் வாய்புகைபுகரந்
தயலாலையி னறைக் கடிகையின்
வழிபோகுவர மறித்துருபுகிளர்ந்
தோங்குசென்னிலை வாங்குகதிர்தரீஇப்
போதுதூங்குசிலை மீதுபுகுந்துபுகுந்
தொடுங்குசெய்தொழில் வழங்குகிளிக்குழாந்
திருந்துகோட்டுமிசைக் குரங்குவிருந்துகொளு
நன்னர் நன்னாட் டென்னா குங்கொல்
பொன்னிநன் னாட்டுப் பொருந னெங்கோன்
றாடோய் தடக்கை மல்லவ
னாடுகெழு திருவிற் பீடுகெழு வேந்தே"

இதனுள் நிரையீற்று வஞ்சிச்சீர் பதினாறும் வந்தன.

"வான்பொய்யாது தீம்பெயல்பெய்து
மால்யாறுபேர்ந்து கால்சுரந்துபாய்ந்து
சுரைபொய்யாது நிரைவளஞ்சான்று
வரையாதுதந்து பலாப்பழுத்துவீழ்ந்து
பாம்புகொள்ளாது வீங்குசுடர்நீண்டு
வித்துநாறுவாய்த்து முத்துக்கரும்புபூத்து
வரம்புகொள்ளாது நிரம்புபெருங்கூட்டு
விசும்புநீங்குமஞ்சு துயின்றுபெயர்ந்துபேர்ந்து
வாழை யோங்கிய கோழிலைப் பரக்குந்

தண்டா யாணர்த் தென்ப வென்றும்
படுவது கூட்டுண்டு கடவது நோக்கிக்
குடிபுறந் தரூஉம் வேந்த
னெடுநிலைத் தண்குடை நிழற்று நாடே''

இதனுள் நேர்பு ஈறாகிய வஞ்சிச்சீர் பதினாறும் முறையானே வந்தன.

'சீற்றம்மிகுபு செல்சினஞ்சிறந்து
கூற்றொத்துவிரைபு கோள்குறித்துமுயன்று
புலிப்போத்துலவும் பொலங்கொடியெடுத்துப்
புகலேற்றுமலைந்து பகையரசுதொலைத்து
வேம்புமீதணிபு போந்துபடத்தொடுத்து
வீற்றுவீற்றுப்புனைந்து வேற்றுச்சுரும்புகிளர்பு
களிறுகால்கிளர்ந்து குளிறுகுரல்படைத்துச்
சொரிந்துதூங்குகடாத்து விரைந்துமலைந்துதொலைத்து
மணங்கம ழாரமொடு தயங்கச் சூடிய
வென்வேற் சென்னி பொன்னியற் புனைகழல்
பாடுபெறு பாணினும் பலவே
பாடா தோடிய நாடுகெழு வேந்தே.'

இதனுள் நிரைபுஈற்று வஞ்சிச்சீர் பதினாறும் முறையானே வந்தன,

(20)

## சிவலிங்கனார்

வஞ்சிச்சீரென......................என்ப.

இ-ள் : வெண்பாவுரிச் சீராகிய காய்ச்சீரல்லாத நிரையிறுதி வந்த கனிச்சீர்கள் வஞ்சியுரிச்சீர் எனப்படும்.

தேமாங்கனி, புளிமாங்கனி, கூவிளங்கனி, கருவிளங்கனி எனக்கொள்க.

**329. தன்பா அல்வழித் தானடை வின்றே.**

(20)

ஆ.மொ.இல.,

It will not appear in verse other than its own.

## இளம்பூரணர்

329. தன்பா அல்வழித்........................இன்றே,

என்—எனின், வஞ்சியுரிச் சீர்க்குரிய மரபு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள் :) வஞ்சியுரிச்சீர் வஞ்சிப்பாவினுள் அல்லது நடை பெறாது என்றவாறு.

(20)

## பேராசிரியர்

333. தன்பா வல்வழித்........................யின்றே.

இஃது, அவற்றைப் பாவிற்குரிமை கூறுகின்றது.

இதன் பொருள்: இவ்வறுபது வஞ்சியுரிச்சீரும், தன் பாவி னுளல்லாத ஆசிரியம் வெண்பாக் கலியினுள் வாரா என்றவாறு.

சிறுபான்மையான் ஆவன[1] முன்னர்ச் சொல்லுதும். இவை[2] ஆசிரியவுரிச்சீர் தூங்கலோசை யாக்குமாறுபோல, ஆசிரிய வோசையும் ஆக்குங் கொல்லெனின்,—ஆக்காவென்பது இதனது பயன்,

(21)

## நச்சினார்க்கினியர்

21. தன்பா அல்வழித்........................வின்றே.

இஃது அவற்றைப் பாவிற்குரிமை கூறுகின்றது.

(இ-ள்) இவ்வறுபது வஞ்சிச்சீரும் தன்தன் பாவல்லா ஆசிரியம், வெண்பா, கலியுள் வாரா, எ-று.

எனவே, சிறுபான்மையான் ஆவன மேற்கூறுதும். உதாரணம் முற்கூறியவற்றுட் காண்க.

இதன் பயன் ஆசிரியவுரிச்சீர் தூங்கலோசையை ஆக்குமாறு போல, இஃது அகவலோசையை ஆக்காதென்பதாம்.

(21)

---

1. மற்றைப் பாக்களுக்கு ஆகிவருன.

2. இவை—மேற்சொன்ன வஞ்சியுரிச்சீர்கள்.

**சிவலிங்கனார்**

தன்பா அல்வழித்.............................வின்றே.

இ-ள்: வஞ்சியுரிச்சீர்கள் தமக்குரிய வஞ்சிப்பாவில் அல்லது வெண்பா ஆசிரியம் கலி என்பவற்றுள் வாராது, எ-று.

## வஞ்சிப்பாவில் பிறசீர்

330. வஞ்சி மருங்கி னெஞ்சிய வுரிய, (21)

ஆ.மொ.இல.,

The others (the 'sirs' of other verses) appear in 'Vanji'

**இளம்பூரணர்**

330. வஞ்சி மருங்கி.................வுரிய

என்-எனின், இது வஞ்சிப்பாவிற் குரியதோர் மரபு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்.) வஞ்சிப்பாவினுள் ஒழிந்த சீர்கள் வரப்பெறும் என்றவாறு, (21)

**பேராசிரியர்**

334. வஞ்சி மருங்கி...................வுரிய.

இது, மற்றைச்சீர் மயங்குமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்:- வஞ்சியுரிச்சீர் பிற பாக்களை ஆக்காதவாறு போலாது ஒழிந்த ஆசிரிய வுரிச்சீரும் வெண்பாவுரிச்சீரும் இவ்வஞ்சிப்பாவினை யாக்கும் என்றவாறு.

உரிச்சீர் மேலதிகாரமாகலான் 'எஞ்சிய' என இவ்விரண்டனையுமே கொண்டாமென்பது. வஞ்சியது பாவினை 'வஞ்சி' என்றான் ஆகுபெயரான்.[1] மற்றுச் சீர்கூறும் வழிப்பாக் கூறுவதென்னையெனின், — அப்பாவினை யாக்குவன சீராகலிற் சீரிலக்கணம்[2] எய்துமென்பது, அவையாமாறு.

---

1. வஞ்சி என்பது வஞ்சிச்சீரைக் குறிக்கும். அது இங்கு வஞ்சிப்பாவைக் குறித்தலின் ஆகுபெயர்.

2. வஞ்சிப்பாவுக்குரியது எது அது வஞ்சிச்சீர் என்றோ வஞ்சிச்சீரின் இலக்கணமாவது வஞ்சிப்பாவுக்குரியதாதல் என்றோ கூற வேண்டுதலின் சீர் இலக்கணம் எய்துவதாம்.

"வசையில்புகழ் வயங்குவெண்மீன்
றிசைதிரிந்து தெற்கேகினுந்
தற்பாடிய தளியுணவின்." (பட்டின—1—3)

எனத் தன் சீர்வரத் தூங்கலோசை பிறந்தது.

"தாழ்தாழைத் தண்டண்டலை." (பொருந-181)

"புட்டேம்பப் புயன்மாறி" (பட்டின-4)

என்பதும் வெண்பாவுரிச்சீரால் தூங்கலோசை பிறந்தது.

"புட்டேம்பப் புயன்மாறி." என்புழி.

"வசையில்புகழ் வயங்குவெண்மீன்."

எனத் தனது சீரானே தூங்கலோசை பிறந்தாங்குப் பிறந்தது.[3]

"திசைதிரிந்து[4] தெற்கேகினும்." என,
இயற்சீர்நிற்பத் தன்சீரானே தூங்கலோசை பிறந்தது.

"புள்ளுந்துயின்று புலம்புகூர்ந்து." என,
ஆசிரிய வுரிச்சீரான் வஞ்சித்தூக்காயிற்று.[5] பிறவும் அன்ன. (22)

## நச்சினார்க்கினியர்

22. வஞ்சி மருங்கி.................வுரிய.

இது மற்றைச்சீர்கள் வஞ்சியுள் மயங்குமாறு கூறுகின்றது.

(இ-ள்) கட்டளையல்லா வஞ்சிப்பாவின்கண் ஈரசைச்சீர் பதினாறும் மூவசைச்சீர் அறுபத்து நான்கும் உரிய, எ-று.

எனவே, கட்டளையிற் கூறுவாராயிற்று. 'வசையில்புகழ் வயங்கு வெண்மீன்' (பட்டினப்பாலை) எனத் தன் முன்னர்த்

---

3. புட்டேம்ப எனவும் புயன்மாறி எனவும் காய்ச்சீரான் வரினும் வசையில் புகழ் வயங்கு வெண்மீன் என வஞ்சிச் சீரான் வரும் தூங்கல் ஓசையைத் தோற்றுவித்ததாகும்.

4. திசை திரிந்து என்பது நிரை நிரைபு—இயற்சீர். இது முன்னர் நிற்க தெற்கேகினும் எனும் நேர் நேர் நிரை யாகிய வஞ்சியுரிச்சீர் வந்தமையால் (தன் சீர் வந்தமை யால்) தூங்கலோசையாயிற்று,

5. வஞ்சித்தூக்கு—வஞ்சிப்பாட்டு.

தான்வந்தும், 'திசை திரிந்து தெற்கேகினும்' (ஷை) என இயற்சீர் நிற்பத் தன்சீர் வந்தும், தற்பாடிய தளியுணவின்' (பட்டினப் பாலை) எனத் தன் முன்னர் வெண்சீர் வந்தும், 'புட்டேம்பப் புயன்மாறி' (ஷை) என இரண்டு வெண்சீர் வந்தும், 'புள்ளுந் துயின்று புலம்புங்கூர்ந்து' என ஆசிரியவுரிச்சீர் வந்தும் தூங்க லோசை பிறக்கும் என்று உணர்க.

(22)

## சிவலிங்கனார்

வஞ்சி மருங்கின்................உரிய.

இ-ள்: வஞ்சிப்பாவில் பிற எல்லாச் சீர்களும் வரப்பெறும், எ-று.

### புறனடை

331. வெண்பா உரிச்சீர் ஆசிரிய உரிச்சீர்
இன்பா நேரடிக் கொருங்குநிலை இலவே. (22)

ஆ.மொ.இல.,

The 'uriccir' of 'venba' and the 'uriccir' of 'asiriyam' will not appear jointly in the line of 'asiriyam.'

## இளம்பூரணர்

331. வெண்பா வுரிச்சீர்....................இலவே.

என்—எனின். வெண்பாவிற் குரியதோர் மரபு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) வெண்பாவுரிச்சீரும் ஆசிரியவுரிச்சீரும் வெண்பாவினது நேரடிக்கண் ஒருங்கு நிற்றலில்லை என்றவாறு*

---

* வெண்பாச்சீரும் ஆசிரியவுரிச்சீரும் வெண்பாவின் நேரடியில் (நாற்சீரடியில்) சேர்ந்து வருதல் இல்லை என்பது இளம்பூரணர் கருத்து. பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் வேறு கூறுவர். இளம்பூரணர் கருத்தே சிறக்கும்.

## பேராசிரியர்

335. வெண்பா.......................யிலவே.

இது கட்டளையாசிரியப்பாவினுள் அடியுறழப்படாத சீர் இவை யென்கின்றது.

இதன் பொருள் :- வெண்சீரும் ஆசிரியவுரிச்சீரும் ஆசிரியப் பாவிற்கு ஒப்பவரும் நிலை இல என்றவாறு

'இன்பா நேரடி' என்பது ஆசிரியவடியென்றவாறு. 'ஒருங்கு' என்றதனான் இயற்சீராகிய தன்சீரேபோல வெண்சீரும் வாரா தென்பதாம். இயலசை மயங்கினவே இயற்சீரெனப் படுவன எனவும், உரியசை மயங்கினவே ஆசிரியவுரிச் சீரெனப் படுவன எனவும் முன்னர்ச் சொல்லிப் போந்தானாகலின், ஈண்டு உரியசை மயக்கத்தினையே[1] ஆசிரியவுரிச்சீரென்றான். எனவே நீடுகொடி குளிறுபுலி என்னும் இரண்டு ஆசிரிய வுரிச்சீரும்[2] ஆசிரியத்து வந்து அடியுறழுமென்பது ஈண்டுக் கொள்ளப்படும்' அல்லது.

''முன்னிரை யுறினு மன்ன வாகும்.'' (326)

என்ற மாட்டேற்றான் இயற்சீர்த்தன்மை சிறுபான்மை வகையான் எய்துவித்ததூஉம் இப்பயனோக்கியாயிற்று. இக்கருத்து நோக்கிப் போலும்,

''கலித்தளை மருங்கிற் கடியவும் படாஅ.'' (336)

என்று உம்மை கூறி இறந்தது தழீஇயிற்றுமென்ப.[3]

---

1. நேர்பு நேர்பு, நேர்பு நிரைபு, நிரைபு நேர்பு, நிரைபு நிரைபு—இவை உரியசை மயக்கம்.

2. நீடுகொடி—நேர்பு நிரை. குளிறுபுலி—நிரைபு நிரை. இவை ஆசிரியத்துள் சேர்ந்து வரும், மேற்கூறிய நான்கும் இரண்டிரண்டாகச் சேர்ந்து வாரா.

3. ''அல்லது.........என்ப'' — விளக்கம்:— நேர்பு நிரைபு முன்னர் நிரை வந்து நேர்பு நிரை நிரைபு நிரை என வந்தாலும் அவ்விரண்டும் நேர்பு நேர்பு முதலிய நான்கு ஆசிரிய உரிச்சீர் என்றது போல இவ்விரண்டும் ஆசிரிய உரிச்சீர் எனப்படும் என்பது ''முன் நிரையுறினும் அன்னவாகும்'' என்னும் சூத்திரப் பொருள். இச்சூத்திரத் தின் முன் சூத்திரம் இயலசை மயக்கம் இயற்சீர் எனவும் உரியசை மயக்கம் ஆசிரியவுரிச்சீர் எனவும் கூறுகிறது.

இனி ஒரு சாரார், வெண்சீரும் ஆசிரியப்பாவினுள் வருங்கால்இயற்சீரிடையிட்டன்றி உடனியைந்து வாரா என்ப. அங்ஙனங்கொள்ளிற் கட்டளையடிக்கண்ணும் ஆசிரியவடியுள் வெண்சீரும் வந்து உறழப் பெறுமென்றானாம். அல்லாவடிக்காயின் அது போக்கி,

''இன்சீ ரியைய வருகுவ தாயின்
வெண்சீர் வரையா ராசிரிய வடிக்கே.'' (339)

என்புழிக் கூறப்படுமென்பது. ஈண்டு 'நேரடிக்கு' என்பது கட்டளையடிக் கென்றவாறு.*

---

அவ்விரண்டனுள் ஆசிரியவுரிச்சீரை மட்டும் 'முன்னிரை' எனும் சூத்திரத்து 'அன்ன' என்பது சுட்டும். ஆனால் முன்னிரை எனும் சூத்திரத்து அன்ன என்பது முதலில் உள்ள இயலசை மயக்கமாகிய இயற்சீரையும் சுட்டுவது போலவுளது. இப்படி அமைத்ததின் நோக்கம் கட்டளையாசிரியப்பாவில் இயற்சீர்கள் சேர்ந்து வருவது போல ஆசிரியவுரிச்சீர்களாகிய நேர்பு நிரை (நீடுகொடி) நிரைபு நிரை (குளிறுபுலி) என்பனவும் இயற்சீர்போலக் காணப் படுதலின் சேர்ந்து வரும் என்பதைத் தெரிவிக்கும் கருத்தாகும். இவ்விரண்டு சீரும் கலிப்பாவில் வரவும் பெறும் என்பது 'கலித்தளை' என்னும் சூத்திரம்.

* "இனி ஒரு சார்.........என்பது"—ஒரு சாரார் இச்சூத்திரத்தை ''ஆசிரியவுரிச்சீர் இன்பா நேரடிக்கு வெண்சீர் ஒருங்கு நிலையில்' எனக் கூட்டி,

''ஆசிரியவுரிச்சீரான் வரும் இன்பாவாகிய ஆசிரியப் பாவின்நேரடிக்கு (நாற்சீரடி) வெண்பாவுரிச்சீர் இரண்டு சேர்ந்து வருதல் இல்லை''

என்று பொருள் கூறுவர். அது பொருந்தாது. அப்படியானால் கட்டளை ஆசிரியப்பாவின் நேரடிக்கு வெண்சீரும் ஆசிரியவுரிச்சீரும் சேர்ந்து வரும் என்பது படும். அவ்வாறு சேர்ந்து வாராமையின் அவ்வுரை பொருந்தாது. கட்டளையாசிரியப்பா அல்லாத ஆசிரியப்பாவின் நேரடிக்கு வெண்சீர் வருவது ''இன்சீர் இயைய'' என்னும் சூத்திரத்திற் கூறப்படும்.

**நச்சினார்க்கினியர்**

23. வெண்பா வுரிச்சீர்....................யிலவே.

**இது கட்டளை ஆசிரியத்திற்கு அடியுறழப்படாத சீர்[1] இவை யென்கின்றது.**

**(இ-ள்) வெண்சீரும் ஆசிரியவுரிச்சீரும் கட்டளை ஆசிரியப் பாவில் வரும் அளவடிக்குப் பொருந்த நிற்றலின்று.[2] எ-று.**

எனவே, நீடுகொடி, உரறுபுலி என முன்னிரையீற்ற விரண்டும் உறழும் என்பது ஈண்டுக் கொள்க. கட்டளையடி இங்ஙனம் வருமெனவே சீர்வகை யடிக்கு வெண்சீரும் ஆசிரியவுரிச்சீரும் பொருந்தவரும்[3] என்றுணர்க. வெண்சீர் வந்தன மேற்கூறுப. 'வண்புகழ் நிறைந்து வசிந்து வாங்கு' (திருமுருகாற்றுப்படை) என ஆசிரியவுரிச்சீர் பொருந்த வந்தது.[4]

(23)

**சிவலிங்கனார்**

வெண்பாவுரிச்.......... ......இலவே.

இ-ள் : வெண்பாவுரிச் சீராகிய காய்ச்சீரும் ஆசிரியவுரிச்சீர்களும் வெண்பாவின் நேரடிக்கு ஒருங்கு சேர்ந்து நில்லா, எ-று.

பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் கட்டளை ஆசிரியத்துக்கு இல்லை என்பர். சூத்திரத்தில் அவ்வாறில்லாமையின் வெண்பாவுக்கில்லை என்பதே நன்று.

---

1. அடியுறழப்படாத சீர்—அடிக்கண் சேர்ந்து வராத சீர்.
2. பொருந்த நிற்றல்—சேர்ந்து நிற்றல்.

   நச்சினார்க்கினியர் ஒருங்கு என்பதற்கு இணைந்து எனக் கொள்ளாமல் உறழ்ந்து எனக் கொண்டார். உறழ்ந்து என்பதற்கு ஒன்று நிற்க வேண்டிய இடத்து அதற்கேற்ப வேறொன்று நிற்றல் என்பதாகும். (இது அல்லது அது என்பது போல).
3. பொருந்தவரும்—பொருத்தமாக யாதேனும் வரும்.
4. "வண்புகழ் நிறைந்து வசிந்துவாங்கு நிமிர்தோள்" என்பது நேரடி. இதில் வசிந்துவாங்கு என்பது நிரைபு நேர்பு என்னும் ஆசிரிய வுரிச்சீர்.

இன்பா என்பதற்கு வெண்பா என இளம்பூரணர் கொண்டதே ஏற்புடைத்து.

332. கலித்தளை மருங்கிற் கடியவும்[1] பெறாஅ.

(23)

ஆ.மொ.இல,,

It cannot be avoided in kaliththalai.

## இளம்பூரணர்

332. கலித்தளை..............பெறாஅ.

என்-னின். கலிப்பாவிற்குரியதோர் மரபு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) கலித்தளை வரும்வழி மேற்சொல்லப்பட்ட இரு வகைச்சீரு மொருங்கு[1] நிற்கவும் பெறும் என்றவாறு.

(23)

## பேராசிரியர்

336. கலித்தளை..............படாஅ.

இது, கலிப்பாவிற் சீர்மயங்குமாறுணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள் :- மேல் ஆசிரியவடி யுறழ்தற்கண் விலக்கப் படாத நிரையீற்றாசிரிய வுரிச்சீர் இரண்டுங் கலிப்பாவிடைக்குங் காற் கடிதலுமுடைய கொல்லெனின் ஆண்டும் அவை விலக்கப் கப்படா என்றவாறு.*

எனவே, நிரையீற்றாசிரியவுரிச்சீர் இரண்டுங் கலியடியுறழ் வனவாயின. 'கடியவும் படா' என்பது, இறந்தது தழீஇய எச்ச வும்மை; ஆசிரியத்திற் கடியப்படாவாதலேயன்றி ஈண்டுக் கடித லும் படா வென்றமையின். 'கலித்தளை மருங்கின்' என்பது,

---

1. படா—பேரா பாடம்; படாஅ—நச். பாடம்,

1. ஒருங்கு—இணைந்து.

* அவ்விரண்டு சீரும் (நேர்பு நிரை, நிரைபு நிரை) இணைந்து வரும் என்பதின்றித் தனித்து வருதலையே இங்குக் கொள்க.

வினைசெய்யிடத்துக்கண் ஏழாவது வந்தது;[1] 'தளைத்தல்' என்பது சீர்த்தொழிலாகலின்.[2] அல்லாக்கால் இருசீரானாகியதோர் தளையிடனாகப் பிறிதொருசீர் ஆண்டு வரல் வேண்டுமென மறுக்க. மற்றுக் கலித்தளை மருங்கின் வெண்சீர் வருக வென்னாரோவெனின்,—அது சொல்ல வேண்டுமோ? ஆசிரியத்துத் தன்சீர் வாராதன கூறுவதன்றி வருமென்பது கூறான், வெண்பாவிற்கும் அவ்வாறே வெண்சீர் வருமென விதந்தோதல் வேண்டுவதன்று; வஞ்சிப்பாவிற்குப் போல வேறு சீரின்மையினென்பது, அஃதேல்,

''வஞ்சி மருங்கி னெஞ்சிய வுரிய.'' (334)

என வஞ்சிப்பாவினுள் ஆசிரியவுரிச்சீர் வருமென்று கூறல் வேண்டாவெனின்,—வேண்டுமன்றே; வெண்சீர் வருமென விதந்தோதுவான் ஆசிரியவுரிச்சீர் ஆண்டு விலக்குண்ணுமாகலினென்பது.

அவற்றுக்குச் செய்யுள் :-

' ஓங்குதிரை யடுக்கும்பாய்ந் துயிர்செகுக்குந் துறைவகேள்.''

''விளங்குமணிப் பசும்பொன்னின் வியலறைமேல்
விளையாடி.''

என இவை நிரையிற்றாசிரியவுரிச்சீர்[3] கலிப்பாவினுள் வந்தன,

' வஞ்சியே னென்றவன்ற னூருரைத்தான் யானவனை.''

''அரிதாய வறனெய்தி யருளியோர்க் களித்தலும்.'' (கலி-11)

---

1. கலிக்கண் தளைக்குமிடத்து எனப் பொருள் கொள்க. சீரானது கலிப்பாவின்கண் தளை கொள்ளுமிடத்து எனத் தளைத்தலைச் சீரின் தொழிலாகக் கொள்ளின் ஏழாம் வேற்றுமையுருபு கண் என்பது வினை செய்யும் இடத்து வந்ததாம், நுனிக்கண் குறைத்தான் என்பதுபோல.

2. தளை கொள்ளுதல் சீரின் தொழில் ஆதலின்.

3. ஓங்குதிரை—நேர்பு நிரை, விளங்குமணி—நிரைபு நிரை.

என இவையிரண்டும்[4] வெண்பாவெனத் தொகுக்கப்படுத லின்[5] வெண்சீரென்னுஞ் சொல்லின் முடியுமிலக்கணத்தான் விதந் தோதாமேயும் அவ்விருபாவிற்கும் உரியவாயின.[6] மற்றுக் கலிமருங்கி னென்னாது 'தளைமருங்கின்' என்ற தென்னை யெனின்,—இவ்வாராய்ச்சியுடையன கட்டளையடி யென்றதென் பது; எனவே, தளையென்று ஓதுவனவெல்லாங் கட்டளையடியே நோக்குமென்பது பெற்றாம். இங்ஙனம் வரையறையுடையன கட்டளையடி யெனவே, அல்லாத அடிக்கண் ஒழிந்த ஆசிரியவுரிச் சீரும் வருமென்பது பெறுதுமென்பது. மற்றுக் கட்டளை யடியல் லாத ஆசிரியவடியுள் உரியசை மயங்கிய ஆசிரியவுரிச்சீரும் வருமென்பதூஉங் கூறுகவெனின்,— அவை விலக்குண்டது கட்டளையடிக்காதலின் விலக்காதவழித் தன்சீர் வருதல் விதந் தோதல் வேண்டாவென்பது முற்கூறியவாறே கொள்க.

(24)

## நச்சினார்க்கினியர்

24. கலித்தளை..............படாஅ.

இது கட்டளைக்கலிக்கட் சீர்மயங்குமாறு கூறுகின்றது.

(இ-ள்) கலித்தளையானாய கலிப்பாவில் வரும் நேரடி யிடத்து முற்கூறிய முன்னிரையீற்ற விரண்டுசீர் வருதலும் நீக்கப் படா, எ-று.

உம்மை இறந்தது தழீஇயிற்று.

'ஓங்குதிரை யடுக்கம்பாய்ந் துயிர்செகுக்குந் துறைவகேள்'
'விளங்கு மணிப் பசும்பொன்னின் வியலறைமேல் விளையாடி'
என வரும்.

---

4. மேற்காட்டிய வரிகள்.

5. 'வஞ்சியேன்' என்னும் பாட்டு வெண்பாவாகவும், 'அரிதாய' என்னும் பாட்டு வெண்கலிப்பாவாகவும் வெண்பா என்னும் பெயரால் தொகுக்கப்படுதலின்.

6. வெண்சீர் எனும் சொல்லே வெண்பாவுக்குரிய சீர் எனப் பொருள்படுதலின் அச்சொல்லின் பொருளே இலக்கணமாகக்கொண்டு வெண்பா எனத் தொகுக்கப்படும் வெண்பாவுக்கும் கலிப்பாவுக்கும் வெண்சீர்கள் வரும் என்க.

இவ்வாறு கூறவே சீர்வகைக் கலியடிக்கு இவையொழிந்த ஆசிரிய வுரிச்சீர்களும் ஏனைச் சீர்களும் வேண்டியவாறு வரப் பெறுமாயிற்று. (24)

## சிவலிங்கனார்

கலித்தளை..................படாஅ.

இ-ள் : கலித்தளையடிக்கும் அவ்விருசீரும் ஒருங்கு நிற்றல் கடியப்படும், எ-று. உம்மையால் கடியப்படா என்பதும் ஆம்.

**333. கலித்தளை யடிவயின் நேரீற் றியற்சீர்**
**நிலைக்குரித் தன்றே தெரியு மோர்க்கே. (24)**

ஆ. மொ. இல.,

The experts will know that 'iyal sir' having 'ner' at the end, will not appear in the line of 'kaliththalai'.

பி. இ. நூ.

யா. கா. 40

மாஞ்சீர் கலியுட் புகா.

இல. வி. 744.

கலிவயின், நேரீற்றியற்சீர் நிலவுதல் இன்மையும்.

மு. வீ. யா. ஒழிபியல்.

மாஞ்சீர் கலியுள் வரப்பெறா என்ப.

## இளம்பூரணர்

333. கலித்தளை யடிவயின்..............மோர்க்கே.

என்-னின். இதுவுமது.

(இ-ள்) கலிப்பாவிற்குரிய கலித்தளைக்கண் நேரீற்றியற் சீர்[1] நிற்றற்குரித் தன்று ஆராய்வார்க் கென்றவாறு. (24)

## பேராசிரியர்

337. கலித்தளை யடிவயி...................மோர்க்கே.

இதுவுங் கட்டளையடிக்கு எண்ணப்பட்டதோர் சீர்வரையறை.

---

1. நேர் நேர், நிரை நேர் பேரா, நச். உரை மாறுபாடு காண்க.

இதன் பொருள் :- கலித்தளை அடிவயின் என்றது, கலிப்பா வினது கட்டளையடிக்கண் என்றவாறு; நேரீற்றியற்சீர் நிலைக்கு உரித்தன்று எ-து. தேமா புளிமா என்னும் இரண்டியற்சீரும் வரப் பெறா எ-று; தெரியு மோர்க்கே எ-து, துள்ளலோசையைத் தெரி வார்க்கு என்றவாறு.

ஆகாவென்றவற்றைக் காட்டலாவதில்லை,[1] ஆகாவென்ப தல்லது. கட்டளையடிக்கண் வரைந்தோதவே, அல்லனவற்றுக் கண்[2] வருமென்பதாம்; அவை,

''பாஅ லஞ்செவிப் பணைத்தாண் மாநிரை.''[3] (கலி-5)

''உறுபுலி யுருவேய்ப்பப் பூத்த வேங்கையை.'' (கலி-38)

''காமர் கடும்புனல் கலந்தெம்மோ டாடுவாள்.'' (கலி-39)

எனக் கலியடியுள் வந்தன.[4] இயற்சீர் பத்துள்ளும் இவை யிரண்டனையுங் கலிக்கண் வாராவெனவே ஒழிந்த ஆசிரியத் துள்ளும் வெண்பாவுள்ளும் பத்து இயற்சீரும் வேறுவேறு வந்து அடியுறழுமென்பதூஉம், இதற்காயின் எட்டு இயற்சீர் அடியுறழு மென்பதூஉம் கூறினானாம். எனவே, ஆசிரியம், இயற்சீர் பத்தும் ஆசிரிய உரிச்சீரிரண்டுமெனப் பன்னிரண்டு சீர் பெறுவ தாயிற்று. வெண்பாவும் இயற்சீர் பத்தும் வெண்சீர் நான்கு மெனப் பதினான்கு சீர் பெறுவதாயிற்று. கலிப்பா வடிவின் இயற் சீரெட்டும் வெண்சீர் நான்கும் ஆசிரியவுரிச்சீரிரண்டுமெனப் பதினான்கு சீர் பெறுவதாயிற்று. அசைச் சீருளாவன முன்னர்ச் (339) சொல்லுதும். இனி, வஞ்சிப்பாவிற்கும்,

''வஞ்சி மருங்கி னெஞ்சிய வுரிய,'' (334)

என முற்கூறியவாற்றான் ஈரசைச்சீர் பதினாறும் மூவசைச்சீர் அறுபத்து நான்குமென எண்பது சீருங் கட்டளையடியல்வழி உரிய வென எய்துவித்ததாம். அவற்றுள் தேமா புளிமா வென்னும் இரண்டு சீரும் ஆகாத இடம் இனிச் சொல்லுகின்றான். (25)

---

1. உதாரணம் காட்டலாவதில்லை என்க.

2. அல்லனவற்றுக்கண்—சீரான் வரும் கலியடிக்கண்.

3. பாஅல்—நேர் நேர், பணைத்தாள்—நிரை நேர்.

4. இவ்வடி கட்டளையடியன்று ஆதலின் நேரீற்றியற்சீர் வந்தன. பாஅல், பூத்த, காமர் என்பன அச்சீர்கள்.

### நச்சினார்க்கினியர்

25. கலித்தளை யடிவயின்..............மோர்க்கே.

இதுவுங் கட்டளையடிக்கோர் சீர்வரையறை கூறுகின்றது.

(இ-ள்) கலித்தளையானாய கலிப்பாவில் வரும் நேரடியிடத்துத் தேமா புளிமா என்னும் நேரீற்றியற்சீரண்டும் நிற்றற்குரித்தன்று, துள்ளலோசையைத் தெரிவோர்க்கு. எ-று.

இங்ஙனம் வரைந்தோதவே, சீர்வகையடிக்கண் இவ்விரண்டியற் சீரும் வருதல் பெறுதும்.

(எ-டு) ''ஐயிரு தலையி ரைக்கர் கோமான்'' என வரும். எனவே, நேரீற்றியற்சீர் ஒழிந்த எட்டியற் சீரும் கலிக்கு வருதலும் ஆசிரியத்திற்கும் வெண்பாவிற்கும் ஒழிந்த பத்தியற்சீரும் வருதலும் பெற்றாம். (25)

### சிவலிங்கனார்

கலித்தளை.................மோர்க்கே.

இ-ள் : கலித்தளையால் வரும் கலிப்பாவின் நேரடியால் தேமா புளிமா என்னும் இயற்சீர்கள் நிற்றற்குரியவல்ல செய்யுள் ஓசை தெரியுமவர்க்கு, எ-று.

**334. வஞ்சி மருங்கினும் இறுதி[1] நில்லாது. (25)**
**ஆ.மொ.இல,**

They wil! not stand in 'Vanji' also.

### இளம்பூரணர்

334. வஞ்சி மருங்கினும்........... நில்லாது

என்-னின். வஞ்சிக்குரிய தோர் மரபு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) வஞ்சிப்பாவினும் அடியினீற்றின்கண் நில்லாது நேரீற்றியற்சீர் என்றவாறு. எனவே அடிமுதற்கண் நிற்கப் பெறும் என்றவாறாம். (25)

---

1. நில்லா—பேரா. நச். பாடம்.

## பேராசிரியர்

338. வஞ்சி மருங்கினு............நில்லா.

இது, வஞ்சிப்பாவினுள் வாரா இயற்சீர் கூறுகின்றது.

இதன் பொருள்:- வஞ்சி மருங்கினும்—மேற்கூறிய இயற்சீர் இரண்டும் வஞ்சிப்பாவினும்; வஞ்சித்தளை மருங்கி னென்னாது 'வஞ்சி மருங்கின்' என வாளாது கூறினான். அது கட்டளையடிக் கல்லாமையின். இறுதி நில்லா-ஈற்றில் நிலைமைப்படா என்றவாறு.

வஞ்சிப்பாவினுட் சீர் வருங்கால் ஒழிந்த பாவிற்குப் போலச் சீரியைந்திறுதன் மாத்திரையன்றிச் சீர்தோறுந் தம்முள் வேறு தோன்றத் தூக்கப்படும்; அவ்வாறு தூங்கலோசைப்பட நில்லா தேமா புளிமாவென்னும் இரண்டு சீருமென்ற வாறாம்.[1] உம்மை இறந்தது தழீஇயிற்று. 'இறுதிநில்லா' வென்பது இறுதலோடு நில்லா வென்றவாறு. எனவே, தூங்கலோசைப்பட முதற்கண் வாராவென்றவாறாம். என்னை? இருசீரினுள் வருஞ்சீரோடு தொடருங்கால் இறுதற்றொழில் பெறுவது நின்ற சீராகலி னென்பது. இதனானே ஒழிந்த இயற்சீரில் தூங்கலோசைப்பட நிற்குமென்றவாறாம்.

''கொற்றக் கொடியுயரிய.'' எனவும்,

''களிறு தேவெறிந்தன.''

எனவும் நேரீற்றியற்சீர் முதற்கண் தூங்காவாயின.[2]

''அகல்வயன் மலைவேலி
நிலவு மணல் வியன்கானல்.'' (புறம்-17)

---

1. வஞ்சிப்பாவினுள்..............என்றவாறாம்—பிற பாக்களில் சீர்கள் இயைந்து முடிதல் போலவே வஞ்சிப்பாவி லும் சீர்கள் இயைந்து முடிதல் மட்டுமல்லாமல் சீர் தோறும் தம்முள் ஓசை வேறுபாடு தோன்றத் தூங்கல் ஓசை சேர்க்கப்படும். தேமா புளிமா என்னும் இரண்டு சீரும் அவ்வாறு தூங்கலோசைப் பட நில்லா.

2. கொற்றக்—தேமா, களிறு—புளிமா—இரண்டும் அடி முதலில் தூங்கலோசை படாவாயின.

என ஒழிந்த இயற்சீர்[3] தூங்கினவென்பது, இவையுங் கட்டளையல்ல வென்பது.

"அசையுஞ் சீரும்." (323)

என்பதனான் அறிக. இறுதிக்கண் விலக்காமையின்,

"மண்டிணிந்த நிலனும்
நிலனேந்திய விசும்பும்," (புறம்-2)

என நேரீற்றியற்சீர் வந்தன.

இனி, ஈற்றுக்கண் வருதல் சிறுபான்மை யென்பாரும், யாண்டும் இறுதிக்கண் வாராவென்பாரும் இச்சூத்திரத்தை யுரைக்குமாறு; வஞ்சியடியிறுதிக்கண் இவை வாராவெனப் பெரும் பான்மை பற்றி ஓதினானெனவும், இஃதொருதலையாக விலக்கினானெனவுஞ் சொல்லுப. அவ்வாறு கூறின் முதற்கண் அவ்விருசீரும் வருதல் பெரும்பான்மையாதல் வேண்டுமென மறுக்க, என்றார்க்கு,

'தன்பால் வெங்கள்ளி
னொலிவே விலங்கு தடக்கை." எனவும்,

'புன்காற் புணர்மருதின்
போதப்பிய புனற்றாமரை." எனவும்,

'தேன்றாட் டங்கரும்பின்," எனவும்,

வந்தனவாலெனின்.— அங்ஙனம் நலிந்து காட்டினவை அளபெடை வெண்சீராம், அது செவிகருவியாக உணர்க; என்னை?[1]

---

3, அகல்வயல்—கருவிளம், நிலவு மணல்—நிரைபு நிரை. நிலவு மணல் என்பது நிரைபு நிரை என ஆசிரிய வுரிச்சீராயினும் ஈரசை என்பதைக் கொண்டு இங்கு இயற்சீர் என்றார் பேராசிரியர்.

1. தன்பால் எனத் தேமாவாக இருந்தாலும் பாடல் ஓசை கூட்டும்போது 'தன்பாஅல் என அளபெடுத்த நிலை யில் கூட்ட அது தேமாங்காய் என வெண்சீராம். இப்படியே புன்கால் என்பதைப் 'புன்காஅல்' எனவும், தேன்றாள் என்பதைத் 'தேன்றாஅள்' எனவும் அள பெடை போல ஓசையூட்டிச் செவி கருவியாக உணர்க, எழுத்து வடிவில் அளபெடையில்லை என்றாலும்.

"கொற்றக் கொடியுயரிய."

என அளபெழாதவழித் தூங்காமையின்,[2] அல்லதூஉம், நேரீற்றியற்சீர் இறுதிக்கண் நிற்றல் பெரும்பான்மை யெனப் படும்;

"மண்டிணிந்த நிலனும்
நிலனேந்திய விசும்பும்
விசும்பு தைவரு வளியும்
வளித்தலைஇய தீயுந்
தீமுரணிய நீரும்." (புறம்-2) எனவும்,

"ஆய்ந்துபட்ட கிடங்கி
னுயர்ந்தோங்கிய வாயில்."

எனவும், ஒரோ செய்யுட்கண்ணே பல வந்தமையினென்பது. 'மருங்கு' என்றதனாலே நேர்நிலை வஞ்சிப் பகுதிக்கே[3] இவ்வரையறை கொள்ளப்படும். கொள்ளவே, வியனிலை வஞ்சிக்கு[4] (358) இவ்வரையறையின்றென்பது. மற்று,

"மண்டிணிந்த நிலனும்." என்பது

நேர்நிலை வஞ்சியாகலின் அடிநிலையோடு அடிக் கூட்டத் துக்கண் அதற்குத் தூங்கலோசை கொள்ளுமாறென்னை யெனின்,[5]— அஃது இலக்கண அடியன்மையின் ஈண்டாராய்ச்சி

---

2. 'கொற்றக்' என்பதை அளபெடையாக ஓசையூட்ட இயலாது.

3 நேர்நிலை வஞ்சிப்பா—இருசீரடி வஞ்சிப்பா—இது சம நிலை எனவும் படும்.

4. வியனிலை வஞ்சிப்பா—முச்சீரடி வஞ்சிப்பா.

5. 'மண்டிணிந்த நிலனும்' என்பது இரு சீரடி வஞ்சிப்பா ஆதலின் அவ்வடியோடு 'நிலனேந்திய விசும்பும்' என்னும்அடியைக் கூட்டத் தூங்கலோசை கொள்ளுமாறு எப்படி எனின் கொள்ளுமாறில்லை. 'மண்டிணிந்த நிலனும்' என்னும் அடி நேர்நிலை வஞ்சியடியாயினும் வஞ்சியடிக்குரிய முழு இலக்கணம் உடையதன்று. இரண்டாம் சீரும் வஞ்சிச் சீராயிருப்பதே முழு இலக்கணம் உடைய அடியாகும். அதனால் அடியொடு அடி கூட்டும் வஞ்சியோசை பற்றி இங்கு ஆராய்ச்சி இல்லை.

யின்றென்பது. நேர்நிலை வஞ்சியுள் இலக்கண அடிக்கண் இயற்சீரெல்லாம் வாராவென்பது,

"குறளடி முதலா வளவடி காறும்." (369)

என்புழிச் சொல்லுதும். (26)

**நச்சினார்க்கினியர்**

26. வஞ்சி மருங்கினும்...............நில்லா.

இது கட்டளையல்லா வஞ்சிப்பாவில் வரப்பெறா இயற்சீர் கூறுகின்றது; வஞ்சித்தளை மருங்கினும் என்னாது வஞ்சிமருங்கினும் என வாளா கூறினமையின் கட்டளையன்மை பெறுதும்; தளைத்தற்றொழில் கட்டளையடிக் கண்ணதாகலின்.

(இ-ள்) வஞ்சிப்பாவிடத்தும் அசைச்சீர் இரண்டும் இறுதலோடு நில்லா முதற்சீர்க்கண் எ-று.

என்றது மற்றைப் பாக்களைப் போலச் சீரியைந்திறுதல் மாத்திரையன்றி முதற்சீர் தோறும் தம்முள் வேறுபாடு தோன்றத் தூக்கப்படும் ஓசை வஞ்சிக்கு வேண்டுதலின் அவ்வோசை படப் பெரும்பான்மை நில்லா தேமா, புளிமா என்னும் இரண்டும் எ-று; என்னை? முதற்சீர் வருஞ்சீரோடு தொடருங்கால் இறுதற்றொழில் பெறுவது நின்ற சீராகலின்; எனவே, நலிந்து கூறிய விடத்துச்[1] சிறுபான்மை தூக்கப்படுமோசை படவும் நிற்கும் என்றுணர்க. உம்மை இறந்தது தழீஇயிற்று.

(எ-டு) "கொற்றக் கொடியுயரிய" "களிறுங் கதவெறிந் தனவே" என நேரீற்றியற்சீர் முதற்கண் தூங்காவாயின. "அகல்வயன் மலைவேலி, நிலவு மணல் வியன்கானல்" (புறம்-17) எனவும், "மேதக மிகப் பொலிந்த, வோங்குநிலை வயக்களிறு" (மதுரைக் காஞ்சி) எனவும் ஒழிந்த இயற்சீர் முதற்கண் தூங்கின, இவை கட்டளையன்மை யுணர்க. "புன்காற் புணர்மருதின்" "தேன்றாட் டீங்கரும்பின்" என நலிந்து கூறிய வழித் தூங்கின.

---

1. நலிந்து கூறுதல்—மென்மையான ஓசைபட நீட்டிக் கூறுதல். அதாவது அளபெடை போலக் கூறுதல். (புன்கால்—புன்கா அல், தேன் தாள்—தேன் தா அள்)

இனி, ''மண்டிணிந்த நிலனும், நிலனேந்திய விசும்பும், விசும்பு தைவரு வளியும், வளித்தலைஇய தீயுந், தீமுரணிய நீரும்'' (புறம்-2) என ஈற்றுக்கண் வருதல் பெரும்பான்மை யாதலின், இறுதி நில்லா எனப் பொருள் கூறலாகாமை யுணர்க. வியனிலை வஞ்சிக்கு இன்றென உணர்க. (26)

## சிவலிங்கனார்

வஞ்சி.....................நில்லாது.

(இ-ள்): வஞ்சிப்பாவின் அடியிறுதிக்கண் நேரீற்றியற்சீர்கள் நில்லா, எ-று

### அசையும் சீராதல்

335 இசைநிலை நிறைய[1] நிற்குவ தாயின்
அசைநிலை வரையார் சீர்நிலை[2] பெறவே. (26)

ஆ. மொ. இல,,

If they stand being Completed in sound the syllables Cannot be prevented from being 'Sirs'

பி. இ. நூ.

யா. கா. 6.

ஓரசையே நின்றும் சீராம்.

மு. வீ. யாப்பு. 7

ஓரசை நின்றும் சீராகும்மே.

## இளம்பூரணர்

335. இசைநிலை நிறைய...........பெறவே.

என்-னின், ஓரசைச்சீ ராமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) இசை நிற்கின்ற நிலை நிரம்பா நிற்குமாயின்[1] அசையும் சீராந் தன்மைபோல வரையார் ஆசிரியர் என்றவாறு.

உதாரணம்

---

1. நிற்குவ வாயின்—பேரா, நச். பாடம்
2. பெறலே—பேரா, நச் பாடம்
1. நிரம்பாது நிற்குமாயின்

'நாள், மலர், காசு, பிறப்பு'[2]
எனவரும். (26)

## பேராசிரியர்

339. இசைநிலை நிறைய..............பெறலே.

இது, நான்கசையுஞ் சீராகும் இடனுமுடைய வென்கின்றது.

இதன் பொருள்:- ஓசைநிலைமையாற் சீர்த்தன்மைபட நிறைந்து நிற்குமாயின் அசை நிலைமைப்பட்ட சொற்களையெல் லாஞ் சீர்நிலை பெறுதற்கண் வரையார் என்றவாறு.

"கழறொழா மன்னவர்தங் கை."[1]
என்று நேரசை சீராயிற்று.

"புனனாடன் பேரே வரும்."[2]
என நிரையசை சீராயிற்று.

"எய்போற் கிடந்தானென் னேறு."[3] (பு-வெ-வாகை-22)
என நேர்பசை சீராயிற்று

"மேவாரை யட்ட களத்து."[4] (களவழி-25, 27, 36)
என நிரைபசை சீராயிற்று; பிறவுமன்ன. இவற்றை உண்மை வகையாற் சீராமென்றான் அல்லன்;

"தொடர்மொழி யெல்லா நெட்டெழுத் தியல."
(தொல்-எழுத்-50)

என்றாற்போலக் கூறினானென்பது[5] இவை இன்ன பாவினுள் வருமென்பது முன்னர்ச் (385) சொல்லுதும். இங்ஙனங் கூறாக்

---

2. நேர், நிரை, நேர்பு, நிரைபு.
1. கை என்பது சீர். நேரசை சீராயிற்று.
2. வரும்—நிரையசை
3. ஏறு—நேர்பு
4. களத்து—நிரைபு
5. எழுத்துகள் தொடர்ந்த மொழி எல்லாம் நெட்டெழுத்தின் தன்மைய என்றால், கா என்பது நெட்டெழுத்தாவது போல கடு என்பது இரண்டு மாத்திரையளவாகத தொடர்தலின் நெட்டெழுத்தின் இயல்புடையதாம் என்பது பெறப்படும். ஆனால் கடு என்பது நெட்டெழுத்தாகி விடாது. அதுபோல அசைகள் சீராம் என்பதாலேயே அவை சீராகிவிடா. ஒரோரிடத்துச் சீரின் தன்மையெய்தும் அவ்வளவே.

கால் வெண்பாவின் ஈற்றடியை முச்சீரடி யென்னுமாறு இல்லை யென்பது. (27)

### நச்சினார்க்கினியர்

27. இசைநிலை நிறைய.............. பெறலே.

இது நான்கசையுஞ் சீராம் இடனும் உடைய என்கின்றது.

(இ-ள்) இசைநிலை நிறைய நிற்குவ வாயின்- ஓசை நிலைமையால் சீர்த்தன்மைப்பட நிறைந்து நிற்குமாயின், அசைநிலை வரையார் சீர்நிலை பெறல்—அசைநிலைமைப்பட்ட சொற்களையெல்லாம் சீர்நிலை பெறுதற்கு வரையார், எ-று.

(எ-டு) 'கழல்தொழா மன்னவர்தங் கை' "அவிழ்ந்த துணி யசைக்கு மம்பலமுஞ் சீக்கு, மகிழ்ந்திடுவார் முன்ன மலருங் கவிழ்ந்து, நிழறுழா யானை நெடுமான்றேர்க் கிள்ளி, கழறொழா மன்னவர் தங் கை" 'புனனாடன் பேரே வரும்' "பொன்னார மார்பிற் புனைகழற்காற் கிள்ளிபே, ருன்னேனென் றூழுலக்கை பற்றினேற்—கன்னோ, மனனோடு வாயெல்லா மல்குநீர்க் கோழிப், புனனாடன் பேரே வரும்." "எய்போற் கிடந்தா னென்னேறு" (களவழி- 25, 27, 36) என நேரசையும், நிரையசையும் நேர்பசையும், நிரைபசையும் ஆயிற்று.*

இவை ஒரோவோ ரோசைக்குக் காட்டிற்றேனும் ஒழிந்த அசைகட்குங் கூறிக்கொள்க; இங்ஙனம் கூறாக்கால் "வெண் பாட்டு ஈற்றடி முச்சீர்த் தாகும்" (செய்-72) என்ற விதி ஆமாறின்று. (27)

### சிவலிங்கனார்

இசைநிலை...........பெறவே.

இ-ள்: நேர், நிரை, நேர்பு, நிரைபு எனும் அசைகள் செய்யுளில் இசை நிலையை நிறைக்க வேண்டி நிற்குமாயின் அவற்றையும் சீர்நிலை பெறும் என ஏற்பர், எ-று. அவை நாள், மலர், காசு, பிறப்பு எனும் வாய்பாட்டில் வரும்

"அரிமதர் மழைக் கண்ணால்"

---

* 'அவிழ்ந்து......கை' என்னும் பாடலும், 'பொன்னார...... வரும்' என்னும் பாடலும் அடிக்குறிப்பில் அமைந்தன வாதல் வேண்டும்.

"பெருமதி செய் தீமையால்"
—மழை என நிரையசை சீராயவாறும், செய் என நேரசை சீராய வாறும் காண்க.

வெண்பா வீற்றில் காசு பிறப்பு வரும்.

"புகழ் புரிந்தார் மாட்டு"
—மாட்டு காசு வாய்பாடு நேர்பசை

"முதற்றே யுலகு"
—பிறப்பு வாய்பாடு—நிரைபசை.

## அசைச்சீர் இயற்சீர் போறல்

336. இயற்சீர் பாற்படுத் தியற்றினர் கொளலே
தளைவகை சிதையாத் தன்மை யான. (27)

ஆ.மொ. இல,,

If 'thalai' is not in deformed state they can be made of 'iyal sir,'

## இளம்பூரணர்

336. இயற்சீர் பாற்படுத்...........யான.

என்-னின், அவ்வோரசைச் சீர் தளை யாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) ஓரசைச் சீரைத் தளைவகை சிதையாத் தன்மை வேண்டுமிடத்து இயற்சீர்போலக் கொள்க என்றவாறு. (27)

## பேராசிரியர்

340. இயற்சீர்ப் பாற்படுத்...........யான.

இஃது, எய்தியது ஒருமங்கு மறுத்தல் நுதலிற்று இயலசை யிரண்டுஞ் சீர்நிலை பெறினுந் தளைகொள்ளப்படா வென்றமை யின். இனி, எய்தாதது எய்துவித்ததூஉமாம்; என்னை? உரியசை யால் தளைகொள்ளுமாறு ணர்த்தினமையின்.

இதன் பொருள் :- இயற்சீர்க்கண்ணே கூறுபடுத்து இயற் றப்படும், அவை தளைவகை சிதையாத் தன்மைக்கண் என்றவாறு.

'பாற்படுத்து' எனவே அதிகாரத்தான் இறுதி நின்ற உரியசை யிரண்டும் (நேர்பு, நிரைபு) பகுத்துக் கொள்ளப்படும்.

நான்கியற்சீருள் இன்ன இயற்சீர்ப்பாற் படுமென்றானோ வெனின்,

''கலித்தளை யடிவயி னேரீற் றியற்சீர்,'' (தொல்-337)

என அதிகாரம் வருகின்றமையின் தேமா புளிமாவென்னுஞ் சீர்போல இரண்டசையுந் தளைகொள்ளு மென்றமையின் இயற்றுக வென்றானென்பது. தானாக இயல்வதன்மையின் 'இயற்றுக' எனப்பட்டது. 'தளைவகை சிதையாத் தன்மையான' என்று இடம் நியமித்த தென்னையெனின்,-சீர்வகையான் அசைச் சீரென வேறாய் நிற்றலுடைய, தளைவகை சிதையாத்தன்மை நோக்கியே இயற்சீர்ப்பாற்படுத்து இயற்றுகவென அடங்கக் கூறிற்றென அறிவித்தற்கெனவுணர்க.

எனவே என் சொல்லப்பட்டதாம்? இவ்வுரியசை யிரண்டுஞ் சீர்வகையான் வேறு வேறு எண்ணித் தொகை பெற்றுத் தமக்கு ஓதிய அடியுறமு மெனவும், அஃதெண்ணப்பட்ட தளைவகை நோக்குங்கால் வேறு வேறு எண்ணுத்தொகை பெற்று இயற் சீரெனவே யடங்குமெனவுங் கூறப்பட்டதாம். இன்னுந் தளை வகைக்கண்ணெனவே, கட்டளையடிக்கண்ணதே இவ்வரையறை யென்பதூஉம், அல்லாதவழி இந்நான்கசையும் வரையறையின் மையின் தளைகொள்ளப்படா தென்பதூஉங் கூறப்பட்டதாம்.

அஃது ஓரசைச் சீரல்லாத சீராயின் கட்டளையடியல்வழியுந் தளை கொள்பவோவெனின். தளைகொள்ளிற் கட்டளையடி யெனப்படு மாதலின் அல்லாத வழி வந்தசீர் தளைகொண்டன வென்றல் பயனில் கூற்றாமென மறுக்க.

''உலக முவப்ப வலனேர்பு திரிதரு.'' (முருகு-1)

என்றவழி. ஆசிரியத்துட் பிறதளை வந்ததென்று இலக்கணங் கூறி வழுவமைக்கல் வேண்டா: என்னை? அது பெரு வரவிற்றாக லின்: அதனான், வருஞ்சீர் வகையான் வந்ததென்று ஒழிதலே அமையும், வரையறை இல்லனவற்றுக்கு வரையறை கூறல் குற்ற மாகலினென்பது. மற்று இவ்வுரியசைச் சீரிரண்டும் வரையாது கூறினமையின் மூன்றுபாவிற்குஞ் செல்லும் பிறவெனின்,—

''கலித்தளை யடிவயி னேரீற் றியற்சீர்

நிலைக்குரித் தன்று.'' (337)

எனக்கூறி, ஈண்டு இவற்றை இயற்சீர்ப்பாற்படுமென்ற மையின் இவையுங் கலிப்பாவிற்கு விலக்குண்டன வென்பது. எனவே, ஆசிரியத்திற்கும் வெண்பாவிற்கும் உரியசைச்சீரிரண்டும் உரியவாயின. ஆசிரியத்திற்கு மேற்கூறிய (337) சீர் பன்னிரண்டும் இவை யிரண்டுமென அடியுறழுஞ்சீர் பதினான்காயின. வெண்பாவிற்கு முன்னரெய்தியசீர் பதினான்கும் இவையிரண்டு மாக அடியுறழுஞ்சீர் பதினாறாயின. கலிப்பாவிற்கு மேற்கூறிய சீர் பதினான்குமேயாயின. இங்ஙனம் வகுக்கப்பட்ட சீர் நாற்பத்து நான்கினையும் சீர்வகையான் உண்மை நோக்கித்தொகுப்ப இயற் சீர் பத்தும் ஆசிரியவுரிச் சீரிரண்டும் வெண்சீர் நான்கும் அசைச் சீரிரண்டுமெனப் பதினெட்டாம்.

மேல் (362) ஐவகை அடியெனப்பட்ட அறுநூற்றிருபத்தைந் தடியும் இச்சீர் பதினெட்டானுந் தோற்றிக் கொள்ளப்படும். இப் பதினெட்டுச் சீரும் இரு நிலைமை யெய்துவனவும் எய்தாதனவு மாகி முப்பத்தொன்றாகி விரியுமாறு முன்னர்,

''எழுத்தள வெஞ்சினும்.'' (355)

என்புழிச் சொல்லுதும். (28)

## நச்சினார்க்கினியர்

28. இயற்சீர்ப்................யான.

இஃது எய்தியது ஒரு மருங்கு மறுத்தது; இயலசையிரண்டுஞ் சீர்நிலை யெய்தியுந் தளைபடா என்றலின். உரியசை தட்கும் என்றலின் எய்தாதது எய்துவித்ததூஉமாம்.

(இ-ள்) இயற்சீர்ப் பாற்படுத்து-முன்னர்க் கூறிய உரியசை இரண்டும் இயற்சீர்க்கண்ணே கூறுபடுத்து, தளைவகை சிதையாத் தன்மையான—அவ்வியற்சீர்க்குக் கூறுந் தளைவகை கெடாத தன் மைக்கண்ணே, இயற்றினர் கொளல்-அவற்றையும் இயற்றிக் கொள்க. எ-று.

நேரீற்றியற்சீர் அதிகாரத்தால் தேமா புளிமாப்போலத் தட்டல் கொள்க. தளைவகை சிதையா என்றது எய்தியுந் தளையா என்று கொள்க. 'சிலைவிலங்கு நீள்புருவஞ் சென்றொசிய நோக்கி, முலைவிலங்கிற் றென்று முனிவாண்-மலைவிலங்கு, தார்மாலை மார்ப தனிமை பொறுக்குமோ, கார்மாலை கண்கூடும் போழ்து' நெய்த்தோர் நிறைத்துக் கணம்புகல்' என இரண்ட

சைச்சீரும் இயற்சீர் வெண்டளையாகத்[1] தட்டன. 'தளைவகை சிதையாத் தன்மையான' என இடம் நியமித்தது, சீர்வகையான் அசைச் சீரென வேறு நின்று அடியுறழ்ந்து எழுபது எனப்பட்ட தளைவகை நோக்குங்கால் வேறெண்ணுந்தொகை பெறாது இயற்சீர்க்கண் அடங்கும் என்றற்கு; எனவே, கட்டளையடிக்கே இவ்வரையறை; அல்லுழி வரையறையின்மையில் தளை கொள்ளப் படாதென்றுணர்க.

இக்காலத்தார் சீர்வகையடிக்குந் தளை கொள்வர். "தட மண்டு தாமரையின் றாதா டலவ, னிடமண்டிச் செல்வதனைக் கண்டு-பெடைஞெண்டு, பூழிக் கதவடைக்கும் புத்தூரே பொய் கடிந், தூழி நடாயினானூர்" என்ற வழிக் கண்டு என்பதனை இயற்சீர் வெண்டளை யென்பர்.[2]

இனிக் 'கலித்தளை யடிவயின்' (செய்-25) என்றதன் பின் இச் சூத்திரங் கூறுதலின், இவையுங் கலிக்கு விலக்குண்டு ஆசிரியத் திற்கும் வெண்பாவிற்கும் உரியவாயின; எனவே, ஆசிரியத்திற்கு இயலசை மயங்கிய இயற்சீர் நான்கும் உரியசை மயங்கிய இயற் சீர் ஆறும் ஆக இயற்சீர் பத்தும், முன்னிரை யீற்ற ஆசிரியவுரிச் சீர் இரண்டும் ஈண்டுக் கூறிய அசைச்சீர் இரண்டும் ஆகப் பதி னான்கும் அடியுறழுமாயிற்று. வெண்பாவிற்கு இருவகை இயற்சீர் பத்தும் வெண்சீர் நான்கும் அசைச்சீர் இரண்டும் எனப் பதினாறு சீரும் அடியுறழுமாயிற்று. கலிக்கு நேரீற்றியற்சீர் ஒழிந்த இயற் சீர் எட்டும் வெண்சீர் நான்கும் ஆசிரியவுரிச்சீர் இரண்டும் எனப் பதினான்கும் அடியுறழுமாயிற்று.

இனி நாற்பத்து நான்கும் உண்மை வகையால் இயற்சீர் பத்தும் ஆசிரியவுரிச்சீர் இரண்டும் வெண்சீர் நான்கும் அசைச்சீர் இரண்டும் எனப் பதினெட்டாயிற்று. இவற்றுள் இருநிலைமைப் படுவன பட்டு முப்பத்தொன்றாமாறு 'சீர்நிலைதானே' (செய்—41) என்னுஞ் சூத்திரத்துட் கூறுதும். (28)

---

1. றென்று—நேர்பு அசை. இது முனி எனவரும் சீர் நிரை யோடு சேர்ந்து இயற்சீர் வெண்டளையாக வந்தது.

   நிறைத்து—நிரைபு. 'நிறைத்துக் கணம்' என நிரைபு அசை இயற்சீர் வெண்டளையாக வந்தது.

2. கண்டு என்னும் நேர்பு அசை 'பெடை' எனும் நிரை யுடன் சேர்ந்து இயற்சீர் வெண்டளையாயிற்று.

## சிவலிங்கனார்

இயற்சீர்........தன்மையான.

இ—ள்: மேற்கூறிய அசைச்சீர்களைத் தளைவகை சிதை யாதபடி இயற்சீர்ப்பாற் படுத்துக, எ—று.

உ-ம்: 'அரிமதர் மழைக் கண்ணாள்' என்பதில் மழை என் னும் நிரையசையை நிரையிறுதி இயற்சீர் போலக் கொண்டு மழைக்கண் என்பதை இயற்சீர் வெண்டளையாகக் கொள்க.

'பெருமதி செய் தீமையால்' என்பதில் செய் என்னும் நேர சையை நேர் இறுதி இயற்சீர் போலக் கொண்டு செய்தீ என்பதை நேரொன்றாசிரியத் தளையாகக் கொள்க.

337. வெண்சீர் ஈற்றசை நிரையசை இயற்றே. (28)

ஆ, மொ. இல.,

The final syllabla of 'Vensir' is in the nature of 'nirai' syllable.

## இளம்பூரணர்

337. வெணசீர்................இயற்றே.

என்-னின். இதுவுந் தளைவழங்குந் திறன் உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) வெண்சீ ரீற்றசை தளைவழங்குமிடத்து இயற்சீரசை நிரையீறு போலும் என்றவாறு.

இயற்சீரென்பது அதிகாரத்தான் வந்தது * (28)

## பேராசிரியர்

341. வெண்சீ...........யியற்றே.

இது, வெண்சீராற் கலித்தளையாமா றுணர்த்துதல் நுதலிற்று.

"கலித்தளை மருங்கிற் கடியவும் படாஅ." (334)

* மற்றையோர் உரை சிறவாது.

என்புழி, அவ்வாசிரியவுரிச் சீராற் கலித்தளையாமென்றான்: அவ்வதிகாரம் இடையறாது நின்றமையின் இதுவுங் கலித்தளைக்கே இலக்கணமாயிற்று என்றார்க்கு,

"வஞ்சி மருங்கினும்" (338) எனவும்,

"இசைநிலை நிறைய" (339) எனவும்,

"இயற்சீர்ப் பாற்படுத்து." (340) எனவும்,

இம்மூன்று சூத்திரம் இடையிட்டனவாலெனின்; அற்றன்று; கலிப்பாவிற்கு விலக்கப்பட்ட நேரீற்றியற்சீர் அதிகாரம் பற்றி இடைபுகுந்ததல்லது கலித்தளையதிகாரம் விலக்கின வல்லவென்பது.

இதன் பொருள் :- வெண்சீர் பல தொடர்ந்து ஒரு கலியடியுள் நின்றவழி அவ்வெண்சீருள் ஈற்று நின்ற சீரின் முதல் வந்த நேரசை மற்றை நிரைமுதல் வெண்சீர் வந்து முன்னைய இரண்டுங் கலித்தளை யாயவாறு போலக் கலித்தளையாம் என்றவாறு.

மேனின்ற அதிகாரத்தால்,

"தளைவகை சிதையாத் தன்மைக்கண்." (340)

என்பது கூட்டியுரைக்க. எனவே, வெண்சீர்ப் பின்னர் நிரை வந்து தட்டலே சிறந்ததெனவும், நேர்வந்து தோன்றினும் அவ்வோசையே பயந்து ஒரு நிகர்த்தாமென்பதூஉங் கூறி அவ்வாறாங்காலும் இறுதிச் சீரின் முதலசையே[1] நிரையியற்றாவதெனவுங் கூறினானாம். இது,

"மொழிந்த பொருளோ டொன்ற வவ்வயின்
மொழியா ததனை முட்டின்றி முடித்தல்." (665)

என்னும் உத்திவகை[1]. 'வெண்சீரிறுதி' என்பது, ஏழாவதன் தொகை; என்னை? ஈறெனப் பட்டது சீராகலின்.[2] வெண்சீருள் ஈற்றுச்சீரெனவே வெண்சீர் பலவுந் தொடர்ந்து நிரைமுதல் வந்தவழி யன்றி இறுதிச்சீ ரொன்றியது நிரையசையியற்றாகா

---

1. மற்றை முதல் மூன்று சீர்களின் முதலசை நேரசையாயின் நிரையசை யியல்பிற்றாதல் இல்லை.

1. "எனவே... கூறினானாம்" — இக்கருத்து இவ்வுத்தி வகையைச் சாரும்.

2. வெண்சீர் இறுதி—கலியடியில் வரும் காய்ச்சீர்களுள் இறுதிச்சீர்.

தென்பதாம்.[3] இதனான் நிரைமுதல் வெண்சீர் வந்து நிரை தட்குங்கால் இயற்சீர் அடிமுதற்கண் வருமென்பதூஉங் கூறப்பட்டதாம். மற்று, ஈறென்றது ஈற்றுச்சீரினையாயின் அச்சீரினிடையும் இறுதியும் நின்ற அசையினை நிரையசையியற்றென்று கொள்வனெனின் — நின்றசீரின் ஈற்றசை வருஞ்சீரின் முதலசையோடு தட்பிற் றளையாவதன்றி ஒன்றிடையிட்ட அசையுஞ் சீரும்பற்றித் தளை கொள்வாரின்மையின் அது கடாவன்றென்பது.[4]

இனி வெண்சீரென்பது அஃறிணை யியற்பெயராகலானும் பன்மை வினை கொண்டு பால்அறிய வந்ததன்றாயினும் அதனை 'யானைக்கோடு' என்றாற்போல இறுதி யென்றமையானும் பன்மைப் பாற்பட உணர்க; என்னை? 'பின்னோன் முன்னோன்' என்றவழி அவர்க்கு முன்னும் பின்னும் வேறு சிலருளரென்பது உணர்த்துமாகலின் என்றார்க்கு, வெண்சீரிறுதி, நீடுகொடி குளிறுபுலி வந்தவழி அவற்று முன்னின்ற நேர்பசை நிரைபசைகளைக் கலிப்பாவினுள் கலித்தளையாக்குதற்கு 'நிரையசையியற்று' என்றா னென்னாமோவெனின், அற்றன்று; வெண்சீர்களின் இறுதியெனவே மூன்றாஞ் சீரும் நான்காஞ் சீரும் வெண்சீராகல் கூறி, நிரைமுதல் வெண்சீர் வந்து நிரை தட்டலெனவே இரண்டாஞ்சீரும் வெண்சீர்வரல் வேண்டுமெனக் கூறி, நிரை தட்டு மெனவே இயற்சீரானும் ஆசிரியவுரிச்சீரானும் நிரையீறாயினவெல்லாம் முதற்கண் நிற்குமெனவுங் கூறினான்; கூறவே, ஆசிரியவுரிச்சீர் இடை நில்லா வெனவும் அங்ஙனம் நிற்பிற் கலியோசையழியு மென்பதூஉமாம் இவர் கருத்தென்பது, அல்லதூஉம், வெண்சீர்க்கு உரியசையின்மையானும்[5] அற்றன் றென்பது எனவே, ஈற்றுச்சீர் நிரைமுத லியற்சீர்வரினும் ஆண்டுத் துள்ளலோசை ஒடுங்குமென்பதாம்.

"அரிதாய வறனெய்தி யருளியோர்க் களித்தலும்"

(கலி—11)

---

3. காய்ச்சீர்முன் நிரை முதலாகிய காய்ச்சீர் வரவேண்டும் என்பதாம்.

4. 'செல்வப்போர்க் கதக்கண்ணன்' — இச்சீர்களின் இறுதியும் முதலும் நோக்கித் தளை கொள்வதல்லது ஒரு சீரிலேயே அசைபிரித்துத் தளை கொள்வதில்லை என்பது கருத்து.

5. மூவகைச்சீராகிய காய்ச்சீரில் நேர்பு நிரைபு என்னும் உரியசைகள் வருதல் இன்மையானும்.

என்பது, வெண்சீரிறுதி நிரையொடுதட்ட கலித்தளை.[6]

"அடிதாங்கு மளவின்றி யழலன்ன வெம்மையான்."
(கலி—11)

என்பது, வெண்சீர்கள் பகைத்து வந்து[7] ஈற்றுச்சீரின் முதற்கணின்ற நேரசை[8] நிரையசை போலக் கலியோசை கொண்டமையின் அது கலித்தளையெனப்பட்டது. இனி, வெண்சீர் நான்கும் ஒன்றிவரினுங் கலித்தளையாகுமேனும், அது வெண்பாவடி யெனவும் பட்டுத் திரிபுபடுதலின் அதனைக் கட்டளையடி யென்னாது இறுதிக்கண் ஒரோவழி ஒருசீர் ஒன்றிவரினும் அதன் முதற்கட் பல வெண்சீர் வந்து பகைத்தலிற் கலியோசையே காட்டுமென்றானென்பது. அஃதேல்,

"பண்டரங்க மாடுங்கால் பணையெழி லணைமென்றோள்."
(கலி—கடவுள்)

என்றவழி, இடைநின்ற சீரின்[9] நேரசை நிரையசையியற் றென்னாமோ வெனின், — அது கட்டளையடியென்பது.

"அசையுஞ் சீரு மிசையொடு சேர்த்தி." (323)

என்பதனான் அறியப்படும். அல்லாதாரும்[10] இவை செவி கருவியாக உணர்தற்கு அருமைநோக்கி அடியறியுந் தன்மையிதென்று சொல்லுப. இனி, இயற்சீரானன்றித் தளைகொள்ளாமோ வென்பார்.

"தன்சீ ருள்வழித் தளைவகை வேண்டா." (367)

என்பதனான், வெண்சீர்க்குத் தளைவிலக்கல் வேண்டி அவ்வெண்சீரினையும் இயற்சீராக இயற்றிக் கொள்ளப்படு மென்றற்கு ஒருவெண்சீரின் ஈற்றசை நிரையசையியற் றென்றானெனக் கூறி, ஞாயிறென்னும் இயற்சீரினை மாசெல்வாயெனப் பின்னுமொருகால், திரிந்ததனையே திரியாமல் நிறுத்தி நிரைமுதல் வெண்சீர் வந்து நிரைதட்பினுங் கலியாமெனக் காட்டுப. அது ஞாயிறு புலிசெல்வாய் மாசெல்வாய் என வரும். இவ்வாறே,

6. அரிதாய வறனெய்தி என்பதும், வறனெய்தி யருளியோர் என்பதும் காய்முன் நிரைவந்த கலித்தளை. யருளியோர்க் களித்தலும் என்பது முன் காய்ச்சீரின்மையால் கலித்தளையில்லை; எனினும் கலியோசையுண்டு.
7. பகைத்து வந்ததாவது காய்முன் நேர்வராது நிரை வந்தது.
8. வெம்மையால் என்பதில் உள்ள வெம் என்பது நேரசை.
9. இடைநின்றசீர் என்றது 'ஆடுங்கால்' என்றதை.
10. அல்லாதார்— கலியிலக்கணம் அறியாதார்.

''கலித்தளை மருங்கிற் கடியவும் படா.'' (336)

என்று ஆசிரியவுரிச்சீர்க்குந் திரிபுகூறாரோ வெனின்,— அது நினைந்திலர் போலுமென்று இகழ்ந்துரைப்பாரவர். மற்று, வெண்சீரிறுதி நிரைவந்தாற் கலித்தளையாமென்பதற்கு ஒத்து வேண்டாயினன்றே நேரும் நிரையும் தட்டதனை நேரும் நிரையும் பகைத்ததெனவும் வேண்டுவதெனவும் அங்ஙனம் பொருளுரைப்பார்க்கு எவ்வாற்றாலும் இச்சூத்திரம் ஏலாதெனவும்,

''தன்சீர் வகையினுந் தளைநிலை வகையினும்.''

(362)

என்ற வழித் தன்சீரானுந் தளைகோடு மாகலானும் அது பொருந்தாதென மறுக்க. இனி, வெண்சீரின் ஈற்றசை யொன்றே யாகலான் 'இயற்று' என்று ஒருமை கூறினான். இடைநின்ற நேரும் நிரையுங் கோடுமென்னாமையின் இங்ஙனந் திரிந்த நிலைமை வஞ்சியுரிச்சீரெனப்படும். இனி வெண்சீரென்பது, எழுவாயின் ஈற்றசை நிரையென்பது இயற்சீரின் பெயராதல் வேண்டும. அங்ஙனங் கருதினும் அசையென்பதனை ஒருகாற் சொல்லி ஈற்றசை நிரையசை யெனலாகாதென்பது. அல்லதூஉம் வெண்சீரினை இயற்சீராக்கி அவ்வியற்சீரினை வெண்சீராக்குதல் வினையிலுழப்பாகி வரம்பிற்றாமென மறுக்க, என்றார்க்குத் 'தன்சீருள்வழித் தளை வகை வேண்டானேல்.''

''அரிதாய வறனெய்தி யருளியோர்க் களித்தலும்.''

(கலி-11)

என்பதூஉங் கலித்தளையன்றாகிய செல்லுமென்பது. கலிப்பாவிற்கு ஒன்றாது வருதல் உரிமையுடைய வெண்சீரெனவே வெண்பாவிற்கு ஒன்றாது வருதல் யாண்டுமில்லை. ஒன்றிவரினல்லதென்பது உடம்படப்பட்டது.* (29)

## நச்சினார்க்கினியர்

29. வெண்சீர்.............. யியற்றே.

இது வெண்சீராற் கலித்தளையாமாறுணர்த்திற்று. கலிக்கு விலக்கிய நேரீற்றியற்சீர் அதிகாரம் பற்றி இயற்சீர் கூறியதல்லது கலியதிகாரம விலக்காமை யுணர்க.

* பேராசிரியரின் தடைவிடைகளின் விளக்கத்தைப் பின் வரும் சிவ. விளக்கத்திற் காண்க.

(இ-ள்) வெண்சீீற்றசை-வெண்சீர்கள் பல தொடர்ந்து ஒரு கலியடியுள் நின்றவழி அவ்வெண்சீர்களுள் ஈற்று நின்ற சீரின் முதல் வந்த நேரசை; நிரையசையியற்று-மற்றை நிரைமுதல் வெண்சீர் வந்து கலித்தளை யாயவாறு போலக் கலித்தளையாம். (எ-று.)

என்றது, வெண்சீர்ப் பின்னர் நிரைவந்து தட்டலே சிறந்தது என்றார். அதுவுமன்றி வெண்சீர் நான்கும் ஒன்றினும்[1] அது வெள்ளோசையையுந் தருதலிற் கட்டளையாகாமை கருதி முன்னர் மூன்று சீரும் பகைத்தே வரல்[2] வேண்டும் என்றும், அவை தம்முட் பகைத்தலிற் பின்வருஞ் சீர் ஒன்றினும்[3] பகைத்த தன்மையே யாய்த் துள்ளலோசையே நிகழ்த்துமென்றுங் கூறினார்.

(எ-டு) "அடிதாங்கு மளவன்றி யழலன்ன வெம்மையால் (பாலைக் கலி-10) என இவ்வெண்சீர்கள் பகைத்து வந்து ஈற்றுச் சீரின் முதற்கணின்ற நேரசை நிரையசை போலத் துள்ளலோசை கோடலிற் கலித்தளையாயிற்று.

இது கட்டளைக்கே யென்பது 'தளைவகை சிதையாத் தன்மை யான' (செய்-28) என நின்ற அதிகாரத்தாற் கொள்க.

"அரிதாய வறனெய்தி யருளியோர்க் களித்தலும்' (பாலைக் கலி-10) என்புழி வெண்சீரிறுதி நிரைமுதலியசீர் தட்டலின் துள்ள லோசை சிறவாதாயிற்று, 'பண்டரங்க மாடுங்காற் பணையெழி லணைமென்றோள் (கலித்தொகை— கடவுள் வாழ்த்து) போன்று. (29)

## சிவலிங்கனார்

வெண்சீர் ............. இயற்றே.

இ-ள்: வெண்பாச் சீரின் இறுதியசை நிரையசை இயல் பினதாய் நிற்கும், எ-று.

இது வெண்பாவில் வரும் காய்ச்சீர் நிரையசையிறுதி போலக் கொண்டு அலகிடப்படும் என்கின்றது.

---

1. ஒன்றுதலாவது காய்முன் நேர் வந்து ஒன்றுதல்.
2. பகைத்தே வரல்—காய்முன் நிரை வருதல்
3. பின்வரும் சீர் ஒன்றுதல்—நின்ற காய்ச்சீரின் பின்வரும் சீர் நேரசையாக வருதல்.

நிரையசை முன் நேர்வருவது வெண்பாத் தளையாம். அவ்வாறே காய்ச்சீர் முன்னர் நேர்வருவதும் வெண்பாத் தளையாம். அதனால் காய்ச்சீர் நிரையசையிறுதியைப் போலும் என்க.

**338. இன்சீ ரியைய வருகுவ தாயின்**
**வெண்சீர் வரையார் ஆசிரிய அடிக்கே. (29)**

**ஆ மொ. இல.,**

**'The 'Vensir' Cannot be prevented in the line of 'asiriyam' if it appears in sweet sound.**

## இளம்பூரணர்

338. இன்சீ ரியைய..........அடிக்கே.

என்-னின். ஆசிரியப்பாவிற்கு[1] உரிய சீர் உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) இனி ஓசை பொருந்தி வருகுவதாயின் ஆசிரிய வடிக்கு வெண்பாவுரிச்சீர் வரையார் ஆசிரியர் என்றவாறு.

(29)

## பேராசிரியர்

342. இன்சீ ரியைய.......... வடிக்கே.

இது, கட்டளையடியல்லாத வழிச்சீர் மயங்குமாறுணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள் :- இன்னோசைத்தாகிய துணிவிற்றாகிவரின் ஆசிரியவடிக்கண் வெண்சீரும் வரப்பெறும் என்றவாறு.

''இமிழ்கடல் வளைஇய வீண்டகன் கிடக்கைத்
தமிழ்தலை மயங்கிய தலையாலங் கானத்து.''

(புறம்-19)

எனத் 'தலையாலம்' என்றவழி ஆசிரியவடியுள் இன்சீரியைய வெண்சீர் வந்தது. முன்னர் வெண்சீரினை,

''இன்பா நேரடிக் கொருங்கு நிலையில.'' (335)

---

1. கலிப்பாவில் வரும் ஆசிரிய அடிக்கு என்பர் பேராசிரியரும் நச்சினார்க்கினியரும்.

என விலக்கி, ஈண்டு 'வரையார்' என்றமையின், அது கட்டளையடிக் கென்பதூஉம் இது கட்டளையடிக்கு அன்றென்ப தூஉம் பெற்றாம். 'வருகுவதாயின்' என்று ஒருமை கூறினமை யானும் 'இயைய' என்றதனானும் ஓரடிக்கண் ஒன்றே யாண்டும் வருவதெனக் கொள்க. (30)

## நச்சினார்க்கினியர்

30. இன்சீர் இயைய........... வடிக்கே.

இது கட்டளை யல்லுழி வெண்சீர் மயங்குமாறு உணர்த் திற்று.

(இ-ள்) இனிய ஓசை பொருந்த வரும் ஆசிரிய வடிக்கண் வெண்சீரும் வரப்பெறும். (எ-று.)

(எ-டு) ''இமிழ்கடல் வளைஇய வீண்டகன் கிடக்கைத்
தமிழ்தலை மயங்கிய தலையாலங் கானத்து.''
(புறம்-19)

என்றவழித் தலையாலம் என ஆசிரியவடியுள் இன்சீர் இயைய வெண்சீர் வந்தது.

வருகுவதாயின் என்ற ஒருமையான் ஓரடிக்கண் ஒன்றே வருதல் சிறப்புடைத்து; பலவருதல் சிறப்பின்றாம். (30)

## சிவலிங்கனார்

இயற்சீர்...........வடிக்கே

இ-ள்: இனிய ஓசை பொருந்தவரும் ஆசிரியப்பா வடியில் வெண்சீராகிய காய்ச்சீரும் வரப் பெறும், எ-று.

உ-ம்: தமிழ்தலை மயங்கிய தலையாலங் கானத்து
(புறம் 19)

இஃது ஆசிரியவடி 'தலையாலங்' எனக் காய்ச்சீர் வந்தது.

339. **அந்நிலை மருங்கின் வஞ்சி உரிச்சீர்
ஒன்றுத லுடைய[1] ஒரோவொரு வழியே.** (30)

ஆ. மொ. இல.,

In Such Circumstances 'Vanji uriccIr' may appear at Sometimes.

---

1. ஒரோர்—பேரா. பாடம்; ஓரொரு—நச். பாடம்.

## இளம்பூரணர்

339. அந்நிலை மருங்கின்.........வழியே.

என்-னின், இதுவுமது.

(இ-ள்) இன்சீரியைய வருகுவதாயின் வஞ்சியுரிச்சீரும் ஒரோ வழி ஆசிரிய அடிக்கண்[1] வரும் என்றவாறு.

''ஈரசைக் கொண்டு'' (செய்யு-11) என்பது முதலாக இத் துணையுஞ் சொல்லப்பட்டது ஓரசைச்சீர் நான்கு, ஈரசைச்சீர் பதினாறு, மூவசைச்சீர் அறுபத்து நான்கு. ஆகச்சீர் எண்பத்து நான்கில் ஓர் அசைச்சீர் நான்கெனவும் அது தளைவழங்கும் வழி இயற்சீரொக்கு மெனவும், ஈரசைச்சீரர் பதினாறும் சிறப்புடைய இயற்சீர் நான்கும் சிறப்பிலியற்சீர் ஆறும் எனப் பத்தாம் எனவும் ஆசிரியவுரிச்சீர் ஆறு எனவும், மூவசைச்சீர் அறுபத்து நான்கில் வெண்பாவுரிச்சீர் நான்கெனவும் ஏனைய வஞ்சியுரிச்சீர் எனவும் கூறியவாறு (30)

## பேராசிரியர்

343. அந்நிலை மருங்கின்.........வழியே

இது, வஞ்சியுரிச்சீர் ஆசிரிய அடியுண் மயங்கு மாறுணர்த்து தல் நுதலிற்று.

இதன் பொருள் :- கட்டளையடியல்லாதவழி இன்சீரியைய வருகுவதாயின் வஞ்சியுரிச்சீர்களும் ஒரொருவழி ஆசிரியத்துள்[1] வரப்பெறும் என்றவாறு.

ஒருவழி யென்னாது 'ஒரொருவழி' என்றதென்னையெனின்,- அறுபது வஞ்சியுரிச்சீருள்ளும் பத்துச்சீரே வருமென்பதூஉம். அவை வருங்காலும் பயின்றுவாரா வென்பதூஉம் அறிவித்தற் கென்பது, அவை :

| | |
|---|---|
| மாசேர்சுரம் | புலிசெல்கடறு |
| புலிசேர்சுரம் | பாம்புசேர்வாய் |
| மாசெல் காடு | பாம்புவருவாய் |

---

1. ஆசிரிய அடிக்கண் - ஆசிரியப்பா அடிக்கண்

1. ஆசிரியப்பாவுள் கலிப்பாவில் வரும் ஆசிரிய அடியுள் என் னாதது முன் சூத்திரத்தில் கூறியதற்கு முரண்.

புலிசெல்காடு களிறுசேர்வாய்

மாசெல்கடறு களிறுவருவாய்—என்பன.

அவற்றுக்குச் செய்யுள் :

"மாரியொடு மலர்ந்த மாத்தாட் கொன்றை." (யா-வி-ப-79)

"குறிஞ்சியொடு கமழுங் குன்ற நாடன்." (யா-வி-ப-80)

என மாசேர்சுரம் புலிசேர்சுரம் என்பன அடிமுதற்கண் வந்தன.[2]

"முன்றிலாடு கஞ்ஞை மூதிலை கறிக்கும்."
என்பது மாசெல்காடு[3] வந்தது.

"அலரிநூறு துவர்வா யமர்த்த நோக்கின்." (யா-வி-ப-72)
எனப் புலிசெல்காடு[4] வந்தது.

"கண்போன் மலர்ந்த வண்டுமயங்கு தாமரை."
என மாசெல்கடறு வந்தது.[5]

"கரடிவழங்கு குன்று கன்று போகி."
எனப் புலிசெல்கடறு[6] வந்தது.

"காடுதேரா வுழிதரு கடுங்கண்யானை."
எனப் பாம்பு செல்வாய்[7] வந்தது.

---

2. மா ரி யொடு எனவும் குறிஞ்சி யொடு எனவும் பிரித்து மாசேர்சுரம் புலிசேர் சுரம் என்றார்.

3. மா செல் காடு — நேர் நேர் நேர்பு. முன் றி லாடு எனப் பிரித்தார்.

4. புலி செல் காடு — நிரை நேர் நேர்பு. அல ரி நாறு எனப் பிரித்தார்.

5. வண்டுமயங்கு - வண் டு மயங்கு எனப்பிரித்து மாசெல் கடறு என்றார். நேர்பு நிரைபு என்னலாமே?

6. கர டி வழங்கு — புலி செல் கடறு. நிரை நேர் நிரைபு.

7. காடு தே ரா — நேர்பு நேர் நேர் - பாம்பு செல்வாய்

"சந்து சிதைய வுழுத செங்குரற் சிறுதினை." (யா-வி-ப-72)
எனப் பாம்பு வருவாய்[8] வந்தது.

"மருந்து நாடாச் சிலம்பிற் சேக்கும்."
எனக்களிறு செல்வாய்[9] வந்தது.

"கடறுகவரா விழிந்து கான்யாறு வரிப்ப."

எனக் களிறுவருவாய்[10] வந்தது. பிறவு மன்ன. நேர் நிரையாகியும் நேர்பு நிரைபாகியும் ஈறுமுதல் பெறச்[11] சீர்வந்தது.
(31)

## நச்சினார்க்கினியர்

31. அந்நிலை மருங்கின்............வழியே.

இது வஞ்சிச்சீர் ஆசிரியத்துத் தூங்குமாறு கூறுகின்றது.

(இ-ள்) அந்நிலை மருங்கின் - கட்டளை யல்வழி இன்சீர் இயையவரின். வஞ்சி உரிச்சீர் ஓரொரு வழியே ஒன்றுதலுடைய- வஞ்சிச்சீர்களும் ஒரோ வோர்வழி ஆசிரியத்துடன் பொருந்துதல் உடைய எ-று.

ஒருவழி யென்னாது ஓரொருவழியென்றது அறுபது வஞ்சிச் சீரினும் பத்துச்சீரே வருதலும் அவை பயின்றுவாராமையும் அறிவித்தற்கு.

(எ-டு) மாசேர்சுரம், புலிசேர்சுரம், மாசெல்காடு, புலிசெல் காடு, மாசெல்கடறு, புலிசெல்கடறு, பாம்பு சேர்வாய், பாம்புவருவாய், களிறுசேர்வாய், களிறுவருவாய் என வரும்.

---

8. சந்து சிதை ய எனப் பிரித்துப் பாம்பு வருவாய் என்றார். நேர்பு நிரை நேர்.

9. மருந்து நா டா எனப்பிரித்துக் களிறு செல்வாய்என்றார்- நிரைபு நேர் நேர்

10. கடறு கவ ரா எனப் பிரித்துக் களிறு வருவாய் என்றார் நிரைபு நிரை நேர்.

11. சீரின் ஈற்றிலும் முதலிலும் அமைய

செய்யுள் :

''மாரியொடு மலர்ந்த மாத்தாட் கொன்றை
குறிஞ்சியொடு கமழுங் குன்ற நாடன்'
என மாசேர்சுரமும், புலிசேர்சுரமும் வந்தன.

''முன்றிலாடு மஞ்ஞை மூதிலை கறிக்கும்.
என மாசொல்காடு வந்தது.

''அலரிநாறு துவர்வா யமர்த்த நோக்கின்''
எனப் புலிசெல்காடு வந்தது.

''கண்போன் மலர்ந்த வண்டுமயங்கு தாமரை''
என மாசெல்கடறு வந்தது.

''கரடி வழங்கு குன்று கண்டு போகி''
எனப் புலிசெல்கடறு வந்தது.

''காடுதேரா வுழிதருங் கடுங்கண் யானை''
எனப் பாம்புசேர்வாய் வந்தது.

''சந்துசிதைய வுழுத செங்குரற் சிறுதினை''
எனப் பாம்பு வருவாய் வந்தது.

''மருந்துநாடாத் திருந்து சிலம்பிற் சேக்கும்.''
எனக் களிறு செல்வாய் வந்தது.

''கடறுகவரா விழிந்து கான்யாறு வரித்த''
எனக களிறுவருவாய் வந்தது.

பாம்பு வருவாய் களிறுவருவாய் என்ற இரண்டும் நேர்பும் நிரைபும் முன் வருதலின் நிரை நடுவாகிய வஞ்சி யுரிச்சீரெனப் படா.[1]

---

1. 'சந்து சிதைய' என்பதைச் சந் துசி தைய எனவும், 'கடறு கவரா என்பதைக் கட றுக வரா எனவும் பிரித்து நிரை நடுவாகிய வஞ்சியுரிச்சீர் எனப்படா; சந்து என்பது நேர்பாகவும் கடறு என்பது நிரைபாகவும் முன் வருதலால் என்க.

## சிவலிங்கனார்

அந்நிலை............வழியே.

இ-ள் : இன்சீர் பொருந்தவருமாயின் வஞ்சியுரிச்சீராகிய கனிச்சீரும் ஆசிரியவடியில் ஒரோ வோரிடத்து வரும், எ-று.

### அடி-அடியாமாறு

340, நாற்சீர் கொண்ட தடியெனப் படுமே. (31)

ஆ. மொ. இல.,

A line is said to have four feet (sirs)

பி. இ. நூ.

யா. வி. 24.

அளவடி...........நாற்சீர்

யா. கா. 12.

நாலொருசீர் அறைதருகாலை அளவொடுநேரடி.

இல.வி. 720

முத்தளை அளவடி.

வீர. 109.

நாற்சீரும்......... அளவு

மு. வீ. யா. 16

நாற்சீ ரான்வரல் அளவடி யாகும்.

## இளம்பூரணர்

340. நாற்சீர்............படுமே.

என்-னின் நிறுத்த முறையானே அடியாமாறு உணர்த்துதல் நுதலிற்று,

(இ-ள்) நான்குசீர் ஒருங்கு தொடுத்து வருவதனை அடி யென்று சொல்லப்படுமென்றவாறு.

இதன் வேறுபாடு முன்னர்க் கூறப்படும். (31)

## பேராசிரியர்

344. நாற்சீர்............படுமே.

இது, முதற் சூத்திரத்துள்,
''யாத்த சீரே யடியாப் பெனாஅ.'' (313)

என நிறுத்த முறையானே சீருணர்த்தி அடியுணர்த்திய வெழுந்தான் அவற்றுள் இது நாற்சீரடியுணர்த்துதல் நுதலிற்று.

இதன்பொருள் :- அடியென்று சிறப்பித்துச் சொல்லப்படுவன நாற்சீரடி என்றவாறு.

எனவே, இருசீரானும் முச்சீரானும் ஐஞ்சீரானும் அறுசீர் முதலியவற்றானும் வருமாயினும் அவை சிறப்பிலவென்றவாறாம். இருசீரான் வருவதனை என்ன அடியென்னுமோவெனின்,- அடிக்கெல்லாம் எழுத்து வகையானே மேற்பெயர்கூறும். அவ்வாறே சீர்வகையானுங் கொள்ளப்படுமென்பது. சுருங்கிய எழுத்தான் வருவன குறளடியென்றும், அவற்றின் ஏறிய எழுத்தான் வருவன சிந்தடியென்றும், இடை நின்றன[1] அளவடியென்றும், அவற்றின் நெடியென நெடிலடியென்றும், அவற்றினும் நெடியன கழிநெடிலடியென்றுங் கூறுமாகலான். அவ்வாறே இருசீரடி குறளடியென்றும், முச்சீரடி சிந்தடி யென்றும், நாற்சீரடி அளவடி யென்றும், ஐஞ்சீரடி நெடிலடியென்றும், அறுசீர் முதலியன கழிநெடிலடி யென்றுங் கோடுமென்பது. இவற்றினெல்லாம் நாற்சீரடி சிறந்ததென்றதென்னையெனின்,-அளவிற்பட் டமைந்தமையானும் அது பயின்று வருதலானுமென்பது. உதாரணம்:

''திருமழை தலைஇய விருணிற விசும்பின்.'' (மலைபடு-1)[2]

''அறுசுவை யுண்டி யமைந்தில்லா ளூட்ட.'' (நாலடி-1)[3]

''அரிதாய வறனெய்தி யருளியோர்க் களித்தலும்''
(கலி-11)[4]

என இவை மூன்று பாவினும் அளவடி வந்தவாறு, இவற்றது விகற்பமெல்லாம் முன்னர்ச் சொல்லுதும். (32)

---

1. இடைநின்றன-குறளடி சிந்தடிகளுக்கும் நெடிலடி கழிநெடிலடிகளுக்கும் இடைநின்றன.
2. இது ஆசிரியப்பாவடி.
3. இது வெண்பாவடி.
4. இது கலிப்பாவடி.

**நச்சினார்க்கினியர்**

32. நாற்சீர்...........படுமே.

இது நிறுத்தமுறையானே சீருணர்த்தி அடியுணர்த்துகின்றது.

(இ-ள்) நாற்சீர் கொண்ட அளவடியை அடியென்று சிறப்பித்துக் கூறப்படும். எ-று.

எனவே, ஒழிந்த நான்கடியும்[1] சிறப்பிலவாயிற்று.

''திருமழை தலைஇய விருணிற விசும்பின்' (மலைபடுகடாம்)

'அகர முதல வெழுத்தெல்லாம் ஆதி' (திருக்குறள்-1)

'அரிதாய வறனெய்தி யருளியோக் களித்தலும்'
(பாலைக்கலி-20)

என நாற்சீரடியாற் சான்றோர் மூன்று பாவுங் கூறியவாறுணர்க. குறளடியானும் சிந்தடியானும் சிறுபான்மை கூறினார்.[2]

**சிவலிங்கனார்**

நாற்சீர்.............படுமே.

இ-ள் நாற்சீர் கொண்டது அடி எனப்படும் - என்று சிறப்பித்துச் சொல்லப்படும். இதனால் இரண்டு மூன்று சீர்களானும் நாற்சீரின் மிக்க சீர்களானும் அடி வரப்பெறும் என்பதும் கூறப்பட்டதாம்.

## அடியில் தளை தொடை

341. அடியுள் ளனவே தளையொடு தொடையே. (32)

ஆ. மொ. இல.,

'Thalai' (Metrical link) and 'thodai' (rhyme) appear in the line.

---

1. குறளடி சிந்தடி நெடிலடி கழிநெடிலடிகள்.
2. வெண்பாவைத்தவிர ஆசிரியப்பாவிலும் கலிப்பாவிலும் குறளடியானும் சிந்தடியானும் இடையிடையே சிறுபான்மையாகக் கூறினர் புலவோர்.

## இளம்பூரணர்

341. அடியுள்..........தொடையே.

என்-எனின், தளைக்கும் தொடைக்கும் இடம் உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: தளையும் தொடையும் அடியின்கண்ண என்றவாறு.

## பேராசிரியர்

345. அடியுள் ளனவே..........தொடையே.

இதுவுமது. நாற்சீரடியது சிறப்புணர்த்துதல் நுதலிற்று. எதிரது நோக்கியதோர்[1] கருவியெனினும் அமையும்.

இதன் பொருள் :- முன்னர்க்கூறிய நாற்சீரடியுள் உள்ளனவே தளையுந் தொடையும் என்றவாறு.

மற்று, மாத்திரையும் எழுத்தும் அசையுஞ் சீரும் அவ்வடியுள்ளன அல்லவோவெனின்,-அற்றன்று; அவ்வடிக்கணுள்ளன வெல்லாங் கூறுகின்றானல்லன் இது வென்பது. என்னை? நாம் தளைப்பகுதியாற் கட்டளையடியென உறழ்வதூஉம், அறுநூற்றிருபத்தைந்தடியென வரையறை கூறுவதூஉம், அவ்வளவடியே என்றற்கு 'நாற்சீர்க்கண்ணது தளை' என்றானென்பது. முன்னுஞ் சீர்வகையான் வகுக்கும் அடியன்றிக் கட்டளையடியெல்லாந் தளைவகையுடையவென விதந்தோதி வந்ததனானே நாம் தளைகொள்வது நாற்சீரடிக்கணென்பான்' அடியுள்ளது தளை' என்றானென்பது. மற்றையடிக் கட்டளை கொள்ளின் அது வரையறையின்றென்னுமாகலின் ஈண்டு வரைந்தோதினானென்பது. அது தக்கது, மற்றுப் பொழிப்பும் ஒரூஉவும் போலாத மோனை முதலிய தொடையெல்லாம் அடியிரண்டியையத் தொடுக்கல் வேண்டுமன்றே? அவற்றை 'அடியுள்ளனவே தொடையும்' என்றதென்னையெனின்,-அற்றன்று; நாம் தொடையுறழச்சீர்கொள்வதூஉம் இவ்வளவடிக்கணென்பது கூறினான், ஆண்டுத் தொடை கூறும் வழி வரையாது கூறுமாகலினென்பது. எனவே, கட்டளைப்படுப்பதூஉந் தொடையுறழ்தற்கு இடனாவதூஉம் நேரடியேயெனச் சிறப்பித்தவாறு. (33)

---

1. பின்னர்க் கூறப்படும் அடியிலக்கணம் நோக்கியது.

## நச்சினார்க்கினியர்

33. அடியுள் எனவே............தொடையே.

இது நாற்சீரடியின் சிறப்புக் கூறுகின்றது.

(இ-ள்) அந்நாற்சீரடியான் வருங் கட்டளையடிக்கண் உள்ளனவே எழுபது தளையும் பத்தொன்பதினாயிரத் திருநூற்றுத் தொண்ணூற்றொரு தொடையும் என வரையறைப்படுவன. எ-று

எழுபது தலைப்பகுதியாற் கட்டளையடி யென வுறழ்வதூஉம் அறுநூற்றிருபத்தைந்தடியென வரையறைப் படுவதூஉம், பத்தொன்பதினாயிரத்திருநூற்றுத் தொண்ணூற்றொன்றென்னும் தொடைப் பகுதி கொள்ளப்படுவதூஉம் நாற்சீரடியே யாயிற்று; எனவே, நாற்சீரான் வருஞ்சீர் வகையடிக்குத் தளையுந் தொடையுங் கொள்ளின், அவை, வரையறையின்றென உணர்க.

அளவடி இரண்டியைந்தும் ஒன்று வந்துந் தொடை கோடலும், ஒழிந்தவடி[1] நான்கும் விகற்பத்தொடை கொள்ளாமையும் உணர்க. (33)

## சிவலிங்கனார்

அடியுள்............தொடையே.

இ-ள் : தளையும் தொடையும் கொள்ளப்படுவன நாற்சீரடிக் கண்ணேயாம், எ-று.

### புறனடை

342. அடி இறந்து வருதல் இல்லென மொழிப. (33)

ஆ. மொ. இல.,

They say that they do not appear beyond the line.

## இளம்பூரணர்

342 அடியிறந்து............மொழிப.

என்-எனின், மேலதற்கோர் புறனடை யுணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) தளையும் தொடையும் நான்குசீரடியின் வருதலன்றி யடியின் நீங்கி வருதல் இல்லை என்றவாறு.

---

1. அளவடி யொழிந்த குறளடி, சிந்தடி, நெடிலடிகழி நெடிலடி.

அடிவவரையறை யில்லாதனவற்றிற் கொள்ளப்படாது என்றவாறாம்.

## பேராசிரியர்

346. அடியிறந்து..........மொழிப.

இதுவும், கட்டளைப் பாட்டிற்கும் தொடைக்கும் ஆவதோர் கருவி யுணர்த்துதல் நுதலிற்று

இதன் பொருள் :- அறுநூற்றிருபத்தைந்து அடியுள்ளும் ஓரடியின் இறந்துவரா மேற்கூறிய தளையுந் தொடையும் என்றவாறு.

என்றது, மேற்கூறிய தளைவகையே யன்றி, அடியோடு அடிக்கூட்டத்துத் தளைகொள்ளுங்காலும் ஓரடிக்கண்ணே வழுவாமற் கோடல் வேண்டுமெனவும், அங்ஙனமே தொடை கொள்ளுங்காலும் வந்தவந்த அடியே[1] வரப்பெறுவழித்தெனவுங் கூறிய வாறு.

எனவே, தேமா தேமா தேமா தேமா வென்னும் அடிக்கண் தொடை கொள்ளுங்கால்,

'வாமா னேறி வந்தோன் மன்ற "

என முன்வந்த அடியே வரல்வேண்டுமென்பதூஉம்,[2] அன்றி,

"தேமாஞ் சோலைத் தீந்தே னுண்ட
காமர் தும்பி யாதல் கண்டது."[3]

எனவரில் தளைவழுவாகிப் பதின்மூவாயிரத்தெழு நூற் றெட்டெனப்பட்ட தொடைப்பகுதியுட் படாவென்பதூஉம் பெற் றாம்.

இனி, வெண்பாவினுள் அவை வருமாறு:

---

1. வந்த வந்தஅடி-ஒரே அளவான எழுத்தெண்ணிக்கை யுடையனவாய் வந்த வந்த அடி.
2. இதில் எட்டெழுத்துள்ளவாறே அடுத்துவரும் அடியும் எட்டெழுத்துள்ளதாக அமைதல் வேண்டும்.
3. இதில் முதல் வரியில் எட்டெழுத்தும் இரண்டாம் வரியில் ஒன்பது எழுத்தும் வந்து வழுவாயிற்று.

"சென்றே யெறிப வொருகால் சிறுவரை
நின்றே யெறிப பறையினை-நன்றே காண்." (நாலடி-24)

எனப் பன்னிரண்டெழுத்தடி ஒன்றினையும் இருகாற் சொல்லிக் கூட்டி எதுகைத்தொடை கொள்ளுங்கால் அடியோடு அடிக்கூட்டத்துத் தளைவகை சிதையாது வந்தமையின் அத்தொடை பதின்மூவாயிரத் தெழுநூற்றெட்டென வரையறைப்பட்ட தொடையுட் பட்டது.

"யானூடத் தானுணர்த்த யானுணரா விட்டதற்பின்
றானூட யானுணர்த்தத் தானுணர்ந்தான்-றேனூறு."
(முத்தொள்ளாயிரம் -104)

என்றவழி, பதினான்கெழுத்தடியே தொடுத்தமையின் அடியிறந்து வந்தன்றாயினும்[4] தளைவகை ஒன்றுதலின்[5] இது பதின்மூவாயிரத் தெழுநூற்றெட்டினுட் படாதாயிற்று,

"வண்டு வரகு வரகு வரகு."

என்கின்ற அடியினை மீட்டுத் தந்து தொடை கொள்ளுங்கால்

"வண்டு வரகு வரகு வரகு,"

என்றது, நேரொன்றாசிரியத்தளை தட்குமாதலான்[6] இது வழுவெனப்படுமென்பது. கலிப்பாவிற்கு அன்னதோர் வரையறை இல்லை? இருவாற்றானும் வருமென்பது, என்னை?

"வெண்சீ ரீற்றசை நிரையசை யியற்றே.' (341)

என்றா ராகலின் மேலைச்சூத்திரத்தானே தளைவகை சிதையாமல் அறுநூற்றிருபத்தைந்து வகைப்படுவது நாற்சீரடியே என்பதூஉங்கூறி, அந்நாற்சீரடியே நாம் முன்னர் வேண்டுந் தொடை விகற்பத்திற்குரியவென்பதூஉங் கூறினான். இச்சூத்திரத்தானே அத்தொடைகொள்வது தம்மின் வேறாகாத இரண்ட

---

4. அடிக்கண் எழுத்தெண்ணிக்கை மிகுந்து வந்ததன்றாயினும்.

5. சிதைந்து ஒன்றுதலின் என்பது கருத்து. விட்டபின் என்பது நேர்நிரையாகி (கூவிளம்) அடுத்த சீருடன் விள முன்நேராக இயற்சீர் வெண்டளையாயிற்று.

6. இயற்சீர் வெண்டளையாகித் தடைபடும்; ஆசிரியப்பாவிற்குரிய தன்மையின்.

டிக்கண்ணென்பதூஉம் அறுநூற்றிருபத்தைந்தடியுள் ஒன்றனை இருகாற்சொல்லித் தொடை கொள்ளப்படுமென்பதூஉம், அங்ஙனந் தொடுக்குங்காலும் அடியோடு அடிக்கூட்டத்தின் கண்ணுந் தளைவகை சிதையாமல் வேண்டுமென்பதூஉங் கூறியவாறாயிற்று இவற்றானெல்லாம் நாற்சீரடியே சிறப்புடைத்தென்பது பெற்றாம். இன்னும் அதன் சிறப்புடைமையே கூறுகின்றான்.

(34)

## நச்சினார்க்கினியர்

34. அடியிறந்து........... மொழிப.

இது கட்டளைப் பாட்டிற்குந் தொடைக்கும் ஓர் கருவி கூறுகின்றது.

(இ-ள்) அறுநூற்றிருபத்தைந் தடியுள்ளும் ஓரடி நின்றாங்கு வருகின்ற அடியும் முன்னின்றவடியை இறந்து வருதலில்லை என்று சொல்லுவர் ஆசிரியர், எ-று.

என்றது, முற்கூறிய தளைவகையே யன்றி, அடியோடு அடிக் கூட்டத்துத் தளைகொள்ளுங்காலும் வந்தவடியே வர வேண்டு மென்பதூஉம், தொடை கொள்ளுங்காலும் வந்த வடியே வடியே வரவேண்டு மென்பதூஉம் கூறியதாயிற்று; எனவே, தேமா தேமா தேமா தேமா என்னும் அடிக்கட்டொடை கொள்ளுங்கால் 'வாமா னேறி வந்தோன் மன்ற'' என வந்த அடியே வரல் வேண்டுமென்பதூஉம் ''தேமாஞ் சோலைத் தீந்தே னுண்ட, காமர் தும்பி யாகல் கண்டது.'' எனத் தளை வழுவாகித் தொடைப்பகுதியுட் படாதென்பதூஉம் கூறியவாறாயிற்று.

இனி வெண்பாவினுள்,

''சென்றே யெறிப வொருகால் சிறுவரை
நின்றே யெறிப பறையினை—நன்றே காண்.''

(நாலடி—34)

எனப் பன்னிரண்டெழுத்தடி யொன்றதனையும் இருகாற் சொல்லி எதுகை கொள்ளுங்கால் அடியோடடிக் கூட்டத்துத் தளைவகை சிதையாது தொடைப் பகுதியுட்பட்டவாறு காண்க. ''யானூடத் தானுணர்த்த யானுணரா விட்டதற்பின், றானூட யானுணர்த்தத் தானுணரான் றேனூறு, கொய்தார் வழுதி குளிர்சாந் தணியகல, மெய்தி யிராக்கழிந்த வாறு'' எனப் பதினான்கெழுத்தின் இகந்ததின்றேனும் தளைவகை யொன்றுதலிற் றொடைப் பகுதியுட் படாவாயிற்று. வண்டு வரகு வரகு

வரகுஎன நின்றவடியை மீண்டும் வண்டு வரகு வரகு வரகு எனத் தந்து தொடை கொள்ளுங்கால் ஆசிரியத்தளை தட்டு வழுவாயிற்று. கலிக்கு அன்னதோர் வரையறையின்று. அது ''வெண்சீரீற் றசை'' (செய்-29) என்னுஞ் சூத்திரத்தானும், ''தன்சீ ருள்வழித் தளைவகை வேண்டா'' (செய்-55) என்னுஞ் சூத்திரத்தானும் உணர்க. ஏனை அகவலும் வெள்ளையுமே வரையறைப்பட்டன. இதனானே, அறுநூற்றிருபத்தைந்தடியும் தம்முனனர்த் தாமே வந்து தளையுந் தொடையும் வழுப்படாமற் கொள்ளுமென்றவாறு.

## சிவலிங்கனார்

அடியிறந்து............ மொழிப

இ-ள் தளையும் தொடையும் நான்கு சீரடியில் வருவதல்லது அதனின் மிக்க சீரடிகளில் வருதலில்லை. எ-று

## அடியால் பாட்டு

343. அடியின் சிறப்பே பாட்டெனப் படுமே. (34)

ஆ. மொ. இல.,

It is aald that the excellence of line of four (sir's) is said to be that of the verse.

## இளம்பூரணர்

343. அடியின் சிறப்பே ............ படுமே.

என்-னின், இதுவும் அடியிற்குரியதோர் சிறப்புணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) அடியின் சிறப்பினானே பாட்டென்று சொல்லப் படுமென்றவாறு.

எனவே, பாட்டென்னுஞ் செய்யுட்கு அடி யின்றியமையாதென்று கொள்க. பாட்டாவன:-வெண்பா ஆசிரியம் கலி வஞ்சி என்பன.

இனி அவ்வடியினை எழுத்தளவினாற் குறியிடுகின்றார். (34)

**பேராசிரியர்**

347. அடியின் சிறப்பே..........படுமே.

இது; நாற்சீரடியே விசேடித்துக் கூறி, அதன் திட்பத் தானே பாட்டென்பதோர் முதற்பொருள் தோன்றுமென்ப துணர்த்திய வாறு. 'எனப்படும்' என்றதனான் இவ்வடிகளான் வந்த செய்யுளே சிறப்புடையன வென்பதூஉஞ் சொல்லியவாறு. மாத்திரை முதலிய வற்றை உறுப்புக்களான் இத்துணை மாத்திரை கொண்டது செய்யுளென்றானும், இத்துணை அசையுஞ் சீருந் தொடையுங் கொண்டது செய்யுளென்றானும் அளவியல் கூறிய உறுப்புக் களான் வரையறுக்கப்படா. அடியளவே கூறச் செய்யுட் புலப்பாடா மென்பது. 'எனப்படும்' என்றதனான், ஒழிந்த அடிகளாலும் அவ்வாறு வருமாயினும் அவை சிறப்பிலவென்பது,

இதன் பொருள் :- அடியின் சிறப்பென்பது-அடி இரண்டும் பலவும் அடுத்து வந்த தொடையே பாட்டு என்றவாறு

தலை இடைகடைச்சங்கத்தாரும் பிறசான்றோரும் நாற்சீரடி யான் வரும் ஆசிரியமும் வெண்பாவும் கலியுமே பெரும்பான் மையுஞ் செய்தார்; வஞ்சிப்பாச் சிறுவரவிற்றெனக் கொள்க.

''மாயோன் மார்பி லாரம் போல
மணிவரை யிழிதரு மணிகிள ரருவி
நன்பொன் வரன்று நாட
னன்புபெரி துடைய னின்சொல் லினனே.''

என நாற்சீரடியான் ஆசிரியம் வந்தவாறு.

''மலைமிசைத் தோன்று மதியம்போல் யானைத்
தலைமிசைக் கொண்ட குடையர்.''[1] (நாலடி-21)

என்பது அளவடியானே வந்த வெண்பா.

''அரிதாய வறனெய்தி யருளியோர்க் களித்தலும்.''
(கலி-11)

எனக் கலிப்பா அளவடியான் வந்தது. பிறவு மன்ன. (35)

**நச்சினார்க்கினியர்**

35. அடியின் சிறப்பே..........படுமே.

இதுவும் அந்நாற்சீரடியின் சிறப்புக் கூறுகின்றது.

---

1. இதில் தனிச் சொல்லையும் சேர்த்துக் கொள்ளுதல் வேண்டும், அப்போதுதான் அளவடியாகும்.

(இ-ள்) அடியின் பாட்டே—அந்நாற்சீரடியென்னும் உறுப்பான் வந்த பாட்டையே, சிறப்பெனப் படுமே- சிறப்புடைப் பாட்டென்று கூறப்படும், எ-று-

அடியினாற் செய்யுள் வரையறை கூறலின்றி மாத்திரை முதலிய உறுப்பான் இத்துணைப்படுஞ் செய்யுளென்று வரையறை கூறப்படாமையின் அடியான் வந்ததே பாட்டென்றார். அது மூவகைச் சங்கத்தாரும் பிற சான்றோரும் நாற்சீரடியானே மூன்று பாவும் வரப் பெரும்பான்மை செய்யுட் செய்து, வஞ்சிப்பா சிறுவரவிற்றாகச் செய்யுள் செய்த வாற்றானுணர்க,

**சிவலிங்கனார்**

அடியின்.........படுமே.

இ-ள் பாட்டு (செய்யுள்) என்பது அடியின் சிறப்பாலேயே கூறப்படுவதாம்.

பாட்டு: வெண்பா, ஆசிரியம், கலி, வஞ்சி என்பன.

## அடியின் எழுத்து வரையறை

### குறளடி

344. நாலெழுத் தாதி ஆக ஆறெழுத்
தேறிய நிலத்தே குறளடி யென்ப. (35)

ஆ. மொ. இல.

The ‘Kural’ line is said to have from four to six letters.

### சிந்தடி

345. ஏழெழுத் தென்ப சிந்தடிக் களவே
ஈரெழுத் தேற்றம் அல்வழி யான, (36)

ஆ. மொ. இல.,

The ‘Sindu’ line is said to have seven letters when the increase of two letters is not faken into consideration.

### நேரடி

346. பத்தெழுத் தென்ப நேரடிக் களவே
ஒத்த நாலெழுத் [1]தேற்றலங் கடையே. (37)

1. தெற்றலங்கடையே—நச். பாடம்

ஆ. மொ. இல.,

The 'ner' lina is said to have ten letters when the inerease of four letters is not counted.

## நெடிலடி

347. மூவைந் தெழுத்தே நெடிலடிக் களவே
ஈரெழுத்து மிகுதலும் இயல்பென மொழிப. (38)

ஆ. மொ. இல.,

The 'nedil' line is said to have fifteen letters
It is natural to have the increase of two letters.

## கழிநெடிலடி

348. மூவா றெழுத்தே கழிநெடிற் களவே
ஈரெழுத்து மிகுதலும்[1] இயல்பென மொழிப. (39)

ஆ. மொ. இல.,

The 'Kali nedil' line is Said to have eighteen letters,
The increase of two letters-they say-occurs here.

## இளம்பூரணர்

344. நாலெழுத் தாதி............... யென்ப.

என்-னின். குறளடி வரையறை உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) நாலெழுத்து முதலாக ஆறெழுத்தீறாக ஏறிய மூன்று நிலத்தை யுடைத்து குறளடியென்று சொல்லுவரென்றவாறு.

எனவே, குறளடிக்கு நிலம் நாலெழுத்தும் ஐந்தெழுத்தும் ஆறெழுத்துமாம். இதற்குரிய எழுத்து முன்னர்க் காட்டுதும். (35)

345. ஏழெழுத் தென்ப............... யான.

என்-னின். சிந்தடி யாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

---

1. இவட்பெறும் என்ப—பேரா-நச். பாடம்.

(இ-ள்) ஏழெழுத்தென்று சொல்லுவர் சிந்தடிக்கு அளவு; ஒன்பதெழுத்து ஏற்றம் அல்லாத விடத்தென்றவாறு.

எனவே ஏழும் எட்டும் ஒன்பதுமாகிய எழுத்தினாற் சிந்தடியாம் என்றவாறாம். (36)

346. பத்தெழுத் தென்ப.............. கடையே.

என்-னின். அளவடியாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) அளவடி யெனினும் நேரடி யெனினும் ஒக்கும். பத்தெழுத்து முதலாகப் பதினான்கெழுத்தளவும் அளவடியாம் என்றவாறு.

எனவே பத்தும் பதினொன்றும் பன்னிரண்டும் பதின்மூன்றும் பதினாலுமென ஐந்து நிலம் பெறும். (37)

347. மூவைந் தெழுத்தே.............. மொழிப.

என்-னின். நெடிலடி யாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) பதினைந்தும் பதினாறும் பதினேழும் என மூன்று நிலம் பெறும் என்றவாறாம். (38)

348. மூவா றெழுத்தே.............. மொழிப.

என்-னின். கழிநெடிலடி உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) பதினெட்டெழுத்து முதலாக இருபதெழுத்தளவுங் கழிநெடிலடியாம் என்றவாறு.

எனவே பதினெட்டும் பத்தொன்பதும் இருபதும் என மூன்று நிலம் பெறும். (39)

## பேராசிரியர்

348. நாலெழுத் தாதி.............. யென்ப. (36)

349. ஏழெழுத் தென்ப.............. யான. (37)

350. பத்தெழுத் தென்ப.............. கடையே (38)

351. மூவைந் தெழுத்தே........... மொழிப. (39)

352. மூவா றெழுத்தே.............. மென்ப. (40)

இவை ஐந்து சூத்திரமும் உரையியைபு நோக்கி உடனெழுதப்பட்டன. நாற்சீரடி இத்துணைப் பகுதிப்படுமென அவற்றது பெயரும் முறையும் தொகையுமுணர்த்துகின்றன.

இதன் பொருள் :- நாலெழுத்து முதலாக ஆறெழுத்தளவும் வந்த நிலம்[1] மூன்றுங் குறளடியெனவும், ஏழெழுத்து முதன் மூன்று நிலனுஞ் சிந்தடியெனவும், பத்தெழுத்து முதல் ஐந்து நிலனும் அளவடியெனவும், பதினைந்தெழுத்து முதன் மூன்று நிலனும் நெடிலடியெனவும் பதினெட்டெழுத்து முதல் இருப தெழுத்துவரை மூன்று நிலனுங் கழிநெடிலடியெனவுஞ் சொல்லுப ஆசிரியர் என்றவாறு.

குறளடி நிலங்களை வகுத்தொழியாது, ஒழிந்தனவும் வகுத்துரைத்தான், அவை முதல் இடை கடையென மூன்று கூற்றான் ஒன்றொன்றனிற் சிறப்பு இழிபுடையன வென்று கொள்ளினுங் கொள்ளலா மென்பது. அவற்றுக்குச் செய்யுள்:-

| | | | | |
|---|---|---|---|---|
| குறளடி | பேர்ந்து | சென்று | சார்ந்து | சார்ந்து |
| | தேர்ந்து | தேர்ந்து | மூசி | நேர்ந்து |
| | வண்டு | சூழ | விண்டு | வீங்கி |
| சிந்தடி | நீர்வாய் | கொண்டு | நீண்ட | நீல |
| | மூர்வா | யூதை | வீச | ஆர்வாய் |
| | மணியேர் | நுண்டோ | டொல்கி | மாலை |
| நேரடி | தன்மணங் | கமழும் | பன்னெல் | லூர |
| | வமையேர் | மென்றோ | ளம்பரி | நெடுங்க |
| | ணிணையீ | ரோதி | யேந்திள | வனமுலை |
| | யிரும்பன் | மலரிடை | யெழுந்தே | மாவி |
| | னறுந்தழை | துயல்வரூஉஞ் | செறிந்தேந் | தல்கு |
| நெடிலடி | லணிநடை | யசைஇய | வரியமைச் | சிலம்பின் |
| | மணிமருள் | வணர்குழல் | வளரிளம் | பிறைநுத |
| | லொளிநிலவு | வயங்கிழை | யுருவுடை | மகளிரொடு |
| கழி நெடில் | நளிமுழவு | முழங்கிய | வணிநிலவு | மணிநக |
| | ரிருந்தளவு | மலரளவு | கரும்புலவு | நறுந்தொடை |
| | கலனளவு | கலனளவு | நலனளவு | நலனளவு |

பெருமணம் புணர்ந்தனை யென்பவஃ

தொருநீ மறைப்பி னொழுகுவ தன்றே.

என இதனுட் பதினேழு நிலத்து ஐவகையடியும் முறையானே வந்தவாறு கண்டு கொள்க. குறளடி சிந்தடி அளவடி நெடிலடி கழிநெடிலடியென நாற்சீரடிதானே ஐவகைப்படுமென்று அவற்றது பெயரும் முறையுந் தொகையுங் கூறினான். தொகை

1. நிலம்—எழுத்திடம்

பதினேழ் நிலத்து ஐவகையடியென்பது, எண்ணிப் பார்க்க இப்பெயரெல்லாங் காரணப் பெயர். மக்களுள் தீரக் குறியானைக் குறளனென்றும், அவனினெடியானைச் சிந்தனென்றும், ஒப்பமைந் தானை அளவிற்பட்டானென்றும், அவனினெடியானை நெடியா னென்றும், அவனினெடியானைக் கழியநெடியானென்றுஞ் சொல்லுப. அவைபோற் கொள்க இப்பெயரென்பது. (40)

## நச்சினார்க்கினியர்

36. நாலெழுத் தாதி........... யென்ப.

37. ஏழெழுத் தென்ப........... யான.

38. பத்தெழுத் தென்ப........... கடையே.

38. மூவைந் தெழுத்தே........... மொழிப.

40 மூவா றெழுத்தே........... என்ப.

இவை ஐந்து சூத்திரமும் உதாரணச் சுருக்கமும் உரையினை யும் நோக்கி உடனெழுதப்பட்டன. இவை நாற்சீரடி இத்துணைப் பகுதிப் படுமென அவற்றது பெயரும் முறையுந் தொகையுங் கூறுகின்றன.

(இ-ள்) நாலெழுத்து முதலாக ஆறெழுத்துக்காறும் ஏறிய மூன்று நிலத்தையுமுடைத்து குறளடி, எ-று.

(இ-ள்) சிந்தடிக்கெல்லை ஏழெழுத்தொன்றுமே என்று கூறுவர், எட்டு மொன்பதும் இரண்டுமல்லாதவிடத்து, எ-று.

(இ-ள்) அளவடிக்கெல்லை பத்தெழுத்தொன்றுமே என்று கூறுவர், அதனோடொத்த பதினொன்றும் பன்னிரண்டும் பதின் மூன்றும் பதினான்குமாகிய நான்கெழுத்தானாகிய நான்கு நிலனும் ஏற்றமாய் வாராதவழி, எ-று.

(இ-ள்) நெடிலடிக்கெல்லை பதினெட்டெழுத்தாமென்று கூறுவர், அதற்குப் பத்தொன்பதும் இருபதுமாகிய இரண் டெழுத்தும் மிக்குவரு நிலமிரண்டையும் இவ்விடத்தே பெறு மென்று சொல்லுவர், எ-று.

குறளடி யொழிந்தனவற்றை இங்ஙனம் வகுத்துரைத்தார். தலையிடை கடை யென்னும் மூன்று கூற்றான் ஒன்றற்கொன்று சிறப்புமிழிபு முடைமையின்.

(எ-டு)

பேர்ந்து பேர்ந்து சார்ந்து சார்ந்து
தேர்ந்து தேர்ந்து மூசி நேர்ந்து
வண்டு சூழ விண்டு நீங்கி
நீர்வாய்க் கொண்ட நீல மூர்வா
யூதை வீச வூர வாய
மதியேர் நுண்டோ டொல்கி மாலை
நன்மணங் கமழும் பன்னல் லூர
வமையேர் வளைத்தோ ளம்பரி நெடுங்க
ணிணையீ ரோதி யேந்திள வனமுலை
யிரும்பன் மலரிடை யெழுந்த மாவி
னறுந்தழை துயல்வருஞ் செறிந்தேந் தல்கு
லணிநகை நசைஇய வரியமர் சிலம்பின்
மணிமருள் வார்குழல் வளரிளம் பிறைநுத
லொளிநிலவு வயங்கிழை யுருவுடை மகளிரொடு
நளிமுழவு முழங்கிய வணிநிலவு மணிநக
ரிருந்தளவு மலரளவு சுரும்புலவு நறுந்தொடையலள்
கலனளவு கலனளவு நலனளவு நலனளவு
பெருமணம் புணர்ந்தனை யென்பவஃ
தொருநீ மறைப்ப மொழிகுவ தன்றே.

இதனுள் நாற்சீரடிக்கட் பதினேழு நிலத்து ஐவகையடியும் முறையானே வந்தவாறு காண்க.

மக்களுள் தீரக்குறியானைக் குறளனென்றும், அவனிற் சிறிது நெடியானைச் சிந்தனென்றும், ஒப்பவமைந்தானை அளவிற்பட்டானென்றும், அவனிற் சிறிது நெடியானை நெடியானென்றும், அவனின் மிக நெடியானைக் கழிய நெடியானென்றும் கூறுபவாகலின் அவைபோலக் கொள்க, இப்பெயர்.

இவை சீர்வகை யடிக்கும் ஒக்கும். என்னை? சுருங்கிய வெழுத்தானும் இருசீரானும் வருவன குறளடி எனவும், ஏறிய வெழுத்தானும் முச்சீரானும் வருவன சிந்தடி எனவும் இடை நிகரான வெழுத்தானும் நாற்சீரானும் வருவன அளவடி எனவும், மிக்க வெழுத்தானும் ஐஞ்சீரானும் வருவன நெடிலடி எனவும், அவற்றின் மிக்க வெழுத்தானும் அறுசீர் முதலிய சீரானும்

வருவன கழிநெடிலடியெனவும் இங்ஙனம் இருவகையடிக்கும்[1] ஒரு பெயரே கொள்க.

அவை,

'ஓங்குதலை வியன்பரப்பின்' (மதுரைக்காஞ்சி)

'வலமாதிரத்தான் வளிகொட்ப' (மதுரைக் காஞ்சி)

'சிறியகட் பெறினே யெமக்கீயு மன்னே' (புறம்-235)

'சிறுசோற் றானு நனிபல கலத்தன் மன்னே' (புறம்-235)

'நெறியறி செறிகுறி புரிதிரி பிரியா வறிவனை முந்துறீஇ (குறிஞ்சிக்கலி-3)

'கவிரிதழ் கதுவிய துவரித ழரிவையர்
கலிமயிற் கணத்தொடு விளையாட'

''மூவடிவி னாலிரண்டு சூழ்சுடரு நாண
முழுதுலகு மூடி முளைவயிர நாறித்
தூவடிவி னாலிலங்கு வெண்குடையி னீழற்
சுடரோய்நின் னடிபோற்றிச்சொல்லுவ தொன்றுண்டாற்
சேவடிக டாமரையின் சேயிதழ்க டண்டச்
சிவந்தனவோ சேவடியின் செங்கதிர்கள் பாயப்
பூவடிவு கொண்டனவோ பொங்கொளிகள் சூழ்ந்து
புலன்கொளர் வாலெமக்கெம் புண்ணியர்தங் கோவே.'

என இவற்றை முறையானே குறளடி, சிந்தடி, அளவடி, நெடிலடி, கழிநெடிலடி எனப் பெயர் கூறுப; எண்சீரின் மிக்கன சிறப்பில. (36-40)

## சிவலிங்கனார்

''நாலெழுத்...........தென்ப''

''ஏழுஎழுத்.............யான''

''பத்தெழுத்...........கடையே''

''மூவைந்தெழுத்தே...........மொழிப''

''மூவாறெழுத்தே...........மொழிப''

இ-ள்: நான்கெழுத்து முதலாக ஆறெழுத்தின்காறும் உள்ள மூன்று நிலம் உடையது குறளடி எனப்படும்.

---

1. கட்டளையடி, சீர்வகையடி.

ஏழெழுத்து முதல் ஒன்பதெழுத்து முதல் வரையுள்ள மூன்று நிலம் உள்ளது சிந்தடி எனப்படும்.

பத்தெழுத்துமுதல் பதினான்கெழுத்து வரையுள்ள ஐந்து நிலம் உடையது நேரடி எனப்படும்.

பதினெந்தெழுத்து முதலாகப் பதினேழ் எழுத்தீறாகவுள்ள மூன்று நிலம் உடையது நெடிலடி எனப்படும்.

பதினெட்டெழுத்து முதலாக இருபது எழுத்தீறாகவுள்ள மூன்று நிலம் உடையது கழி நெடிலடி எனப்படும்.

எழுத்தெண்ணுங்கால் ஒற்றும் குற்றியலுகரமும் குற்றியலிகரமும் ஆய்தமும் நீக்கி எண்ணுதல் வேண்டும்.

உ-ம் : போந்து போந்து சார்ந்து சார்ந்து — இது நாலெழுத்து.

தேர்ந்து தேர்ந்து மூசி நேர்ந்து — இது ஐந்தெழுத்து.

இப்படியே பிறவரினும் கொள்க.

எழுத்தால் அடிவரையறை கூறியதுபோலச் சீராலும் அடிவரையறை கூறுதல் உண்டு.

இரண்டு சீர் கொண்டது குறளடி.

மூன்று சீர் கொண்டது சிந்தடி.

நான்குசீர் கொண்டது நேரடி அல்லது அளவடி.

ஐந்து சீர்கொண்டது நெடிலடி.

ஆறுசீர்க்கு மேற்பட்டன கழிநெடிலடி. அறுசீர்க் கழி நெடிலடி முதலியவாகப் பெயர் பெறும்.

## சீருக்கு எழுத்து வரையறை

349. சீர்நிலை தானே ஐந்தெழுத் திறவாது
[1]நேர்நிறை வஞ்சிக் காறும் ஆகும். (40)

ஆ. மொ. இல.,

The metrical foot (sir) will not exceed the limit of five letters.

It will have even six letters in 'nernilral' vanji.

---

1. நேர்நிலை—பேரா. நச். பாடம்.

## இளம்பூரணர்

349 சீர்நிலை தானே.........ஆகும்.

என்-னின். சீர்க்கு எழுத்து வரையறை உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) சீர்நிலை ஐந்தெழுத்தின் மிகாது நேர் இறுதியாங் காலத்து; நிரையீறாகிய வஞ்சியுரிச்சீர்க்கு ஆறெழுத்தும் ஆகும் என்றவாறு.

எனவே இருபதெழுத்தின் மிக்க நாற்சீரடி யில்லை யென்றவாறாம், வஞ்சிச்சீர் முச்சீரடியின்கண் வருதலின். (40)

## பேராசிரியர்

353. சீர்நிலை தானே.........திறவாது.

இது, மேலெழுத்தெண்ணி அடி வகுக்கப்பட்ட ஐவகை யடிக்குஞ் சீரும் எழுத்தெண்ணியே வகுக்கின்றது.

இதன் பொருள்: சீரது நிலைமைதான் ஐந்தெழுத்து இறந்து வாராது என்றவாறு.

பெருமைக்கு எல்லை கூறி வரையறுக்கவே, சிறுமைக்கு எல்லை வரையறைப்படாது ஒன்று முதலாக வருமென்பதாம். சீர்நிலைதானே யென்பது பிரிநிலையேகாரம். அதனை அசைநிலையிற் பிரித்துக் கூறியவாறு. அதனை அவ்வாறு பிரித்துக் கூறவே அசை சீராயவழி ஐந்தெழுத்திறவாமை அவற்றுக் கில்லையென்பது கொள்ளப்படும். அஃதேல், அவற்றுக்கெல்லை கூறானோவெனின், - அவை மூன்றெழுத்தினிறவாதென்பது உரையிற் கொள்ள, தானென்பதனை இலேசுபடுத்துக் கொள்ளினும் அமையும்[1]. மற்றிவற்றையுஞ் சீர்நிலை பெறுமென்பவாதலாற் சீரென அடக்கானோவெனின்,-அடக்கானன்றே; அவை சீர்நிலையெய்திய வழியும் அசையிரண்டாகா மையினென்பது.[2]

---

1. உரையிற் கோடலான் என்பதனாற் கொள்ளாது தான் என்னும் இலேசின் பாற்படுத்திக் கொள்ளினும் அமையும்.

2. நேர்பு நிரைபு என்பன சீர்நிலை எய்தினும் இரண்டசை கூடிய சீர் அல்ல; தனி அசைகளே என்பது கருத்து.

"தாளைவகை சிதையாத் தன்மை யான." (340)

என்று ஆண்டுவரைந்தமையின் அதனைச் சீர்நிலையென வாளாது பொதுவகையா னோதான். அதுவே கருத்தாயின், அவற்றை நேர்பசை நிரைபசையெனக் கூறியதனானும், அவற்றை.

"ஈரசை கொண்டு மூவசை புணர்ந்துஞ்
சீரியைந் திற்றது சீரெனப் படுமே." (321)

என்றதனானும் பயந்ததென்னையென மறுக்க; அல்லதூஉம் "இயற்சீர்ப் பாற்படுத் தியற்றுக" எனவே இவைதாமியற்சீரல்ல, அஃற்றது செய்கை இவற்றானுங் கொள்க வென்றதுணையே ஆண்டுக் கூறியதென்பது; அல்லதூஉம், தேவரும் நரகரும் மக்கட் பாற் படுத்துத் (588) திணை கொள்ளப்படுமென்ற துணை யானே பிறப்பானும் பெற்றியானும் மக்களென வழங்கார்; அது போல, அசைநிலைத்தளையும் சீர்நிலைத்தளையும் ஒக்குமென்ற துணையானே அவை அசைச்சீரெனவே' அடையடுத்தே சொல்ல வேண்டுவனவற்றையும் வாளாதே சீரெனப்படுவனவற்றையும் ஒருவகையானே சீர்நிலையென மயங்கக்கூறல் (663) குற்றமா மென்பது. மயங்கக் கூறல் குற்றமன்றென்பாரும் உளராயின், அவர் கருத்தினான் அதுவும் அமையுமென்பது. ஒருசாதியல்லன வற்றைச் சாதிப்பெயரொன்றெனவும் புகலார்; அதுபோலச் சீரி லக்கணமுடைய இயற்சீர் உரிச்சீர்களைச் சீரெனக் கூறி அவ்வி னத்தவல்லாத அசைச்சீரை இலேசினாற் கொண்டாமென்பது.

ஓரெழுத்துச்சீர் நுந்தையென ஒன்றேயாம்; இதனோடு வண்டு என்னும் அசைச்சீர்கூட்ட இரண்டாம்.[3]

ஈரெழுத்துச் சீர்நான்கு; அவை: தேமா ஞாயிறு போதுபூ போரேறு என வரும், மின்னு வரகு என்னும் அசைச்சீரிரண்ட னோடுங் கூட்ட ஆறாம்.[4]

மூவெழுத்துச்சீர் பத்து: புளிமா பாதிரி வலியது மேவுசீர் நன்னாணு பூமருது கடியாறு விறகுதீ மாசெல்வாய் நீடுகொடி என விவை. அரவு என்னும் உரியசைச் சீரோடுங் கூட்டப் பதினொன்றாம்.

---

3. நுந்தை என்பதில் குற்றியலுகரத்தை நீக்கின் தைஎன்ற ஓரெழுத்தேயுண்டு நுந்தை வண்டு எனின் தை, வ என இரண்டெழுத்தாம்.

4. குற்றியலுகரங்களை விலக்குக.

நாலெழுத்துச் சீர் ஒன்பது; அவை: கணவிரி காருருமு பொரு நாணு உருமுத்தீ மழகளிறு மாவருவாய் புலிசெல்வாய் நாணுத் தளை உரறுபுலி என விவை.

ஐந்தெழுத்துச்சீர் மூன்று; அவை: நரையுருமு புலிவருவாய் விரவுகொடி எனவரும். இக் கூறுபட்டனவெல்லாம் ஈண்டுக்காட்டு வாமாயிற்று.

''எழுத்தள வெஞ்சினுஞ் சீர்நிலை தானே
குன்றலு மிகுதலு மில்லென மொழிப.'' (355)

என வருகின்ற சூத்திரத்தினை நோக்கியென்பது. 'முடவு மருது' என்பதனைக் குற்றுகரங் களைந்து ஐந்தெழுத்துச்சீ ரென்று காட்டுவாருமுளர்; அஃது உரியசை மயக்கமாகிய ஆசிரிய வுரிச்சீராகலின்,

''இன்பா நேரடிக் கொருங்குநிலை யிலவே.'' (335)

என்பதனான் விலக்கப்பட்டதென்பது. இனி, நுந்தை யென் பதனை ஈரெழுத்துச் சீரென்பாருமுளர்; அங்ஙனங் கூறின்,

''இரண்டு தலையிட்ட முதலா கிருபஃது.'' (தொல்-எழுத் -103)

என்னும் எழுத்தோத்தினொடு மாறுகொள்ளுமென்பது. அது வழக்கிற்குக் கூறியது; செய்யுட்காயினவாறு கொள்ளாமோ வெனின்,—கொள்ளாம்; செய்யுட் கண்ணுமதனை வேறெழுத் தென்று வேண்டுமாகலின்; என்னை?

''முற்றிய லுகர மொழிசிதைத்துக் கொளாஅல்.'' (321)

எனக் குற்றியலுகரமும் வருமொழியைச் சிதைத்துக் கொள் எப்படாவென்பது கூறினானாகலினென்பது (41)

## நச்சினார்க்கினியர்

41. சீர்நிலை தானே............... திறவாது.

இது மேல் எழுத்தெண்ணி அடி வகுத்த கட்டளையடிக்குச் சீரும் எழுத்தெண்ணி வகுக்கின்றது.

(இ-ள்) ஒருசீரினது நிலைமைதான் ஐந்தெழுத்து இறந்து வராது, எ-று

பெருமைக்கு எல்லை கூறி வரையறுப்பவே, சிறுமைக்கு எல்லை வரையறைப்படாது; ஒனறு முதலாக வருதல் பெற்றாம்.

அசை நிலையிற் பிரித்து நிற்றலிற் றானே யென்பது பிரி நிலை யேகாரம்,

அவற்றையுஞ் சீரென அடக்குக எனின்; அவை இயற்சீர்ப் பாற்படுத்து இயற்றவேண்டா; இங்ஙனம் பாற்படுவனவற்றைச் சேரக் கூறலின் மயங்கக் கூறலென்னுங் குற்றமாம். இனி அவை மூன்றெழுத்தினிகவாமை உரையிற் கொள்க.

அச்சீர்கள் வருமாறு :

நுந்தையும் வண்டும் ஓரெழுத்துச் சீரென்ப.

தேமா, ஞாயிறு, போதுபு, போரேறு, மின்னு, வரகு என இயைந்த ஆறும் ஈரெழுந்துச் சீராகும் என்ப.

புளிமா, பாதிரி, வலியது, மேவுசீர், நன்னாணு, பூமருது, கடியாறு, விறகுதீ, மாசெல்வாய், நீடுகொடி, அரவெடுகூட மூவெழுத்துச்சீர் பதினொன்றாகும்.

கணவிரி, பெருநாணு, காருருமு, உருமுத்தி, மழகளிறு, மாவருவாய், புலிசெல்வாய், நாணுத்தளை, உரறுபுலியொடு ஒன்பதுசீரும் நாலெழுத்துச் சீராகு மென்ப.

நரையுருமு, புலிவருவாய், விரவுகொடி, மூன்றும் ஐயெழுத்துச் சீராகு மென்ப.

'எழுத்தள வெஞ்சினும்' (செய்-43) என்னுஞ் சூத்திரத்தான் இங்ஙனம் காட்டினாம்.

ஆகச்சீர் முப்பத்தொன்றாம்.

**பேராசிரியர்**

354. நேர்நிலை.............. மாகும்.

இஃது, ஒழிந்த வஞ்சிப்பாவினுள் வருஞ்சீர் இத்துணை யெழுத்து இறவாதென்கின்றது. நேர்நிலை வஞ்சியென்பது, சமநிலை வஞ்சி; அஃது இருசீரான் வருதலிற் சமநிலை வஞ்சி யெனப்பட்டது. முச்சீரான் வருவதனை வியநிலை வஞ்சி (338) யென்பவாகலின்.

இதன் பொருள் :- இருசீரடி வஞ்சியுள் ஒருசீர் ஆறெழுத் தாகவும் பெறும் என்றவாறு.

இதற்கு, மேனின்ற அதிகாத்தாற் பெருக்கத்திற்கு எல்லை கூறினான். சுருக்கத்திற்கும் வரையறையுடைமையின் அது

மூன்னர்ச் (353) சொல்லுதும். எனவே, அறுபது வஞ்சியுரிச் சீருள்ளும் ஆறெழுத்தான் வருஞ்சீருங் கட்டளையடியாய் வரப் பெறுமென்றவாறு, உம்மை இறந்தது தழீஇயிற்று.

"தன்சீ ரெழுத்தின் சின்மை மூன்றே." (358)

என்றதனான், ஒன்றும் இரண்டும் எழுத்தான் வருதலொ ழித்து; ஒழிந்த எழுத்தான் ஆறெழுத்தளவும் வஞ்சியுரிச்சீர் வருமென்பது கொள்ளப்படும் இதனை எச்சவும்மை யென்பார் ஏழெழுத்தானும் வஞ்சியுரிச்சீர் வருமென்ப; அங்ஙனம்கொள்ளின் இரண்டு சீராற் பதினான்கெழுத்துளவாகிய செல்லும்; செல்லவே

"குறளடி முதலா வளவடி காறு
முறழ்நிலை யிலவே வஞ்சிக் கென்ப." (364)

என்பதனொடு மாறுகொள்ளு மென்பது.

"தன்சீ ரெழுத்தின் சின்மை மூன்றே." (358)

என்புழி, இவற்றிற்கு உதாரணங் காட்டுதும். (42)

## நச்சினார்க்கினியர்

42, நேர்நிலை................மாகும்.

இது வஞ்சிப் பாவினுள் வருஞ்சீர்க்கு எழுத்துவகை கூறுகின்றது.

(இ-ள்) சமநிலை வஞ்சிக்கு ஆறெழுத்துமாம் எ-று.

அஃது இருசீரான் வரும்; முச்சீரான் வருவது வியநிலை வஞ்சி.

இறுதி யதிகாரத்தாற் பெருமைக்கெல்லை கூறினார். சிறுமைக் கெல்லை மேற்கூறுப. எனவே. ஆறெழுத்தினிகந்தன கட்டளையடிக் காகாவென உணர்க.

உம்மை இறந்தது தழீஇயிற்று, ஐந்தேயன்றி ஆறுமா மென்றலின், அவை முற்கூறிய உதாரணங்களுட் காண்க. (42)

## சிவலிங்கனார்

சீர்நிலை தானே................ ஆறும் ஆகும்.

(இ-ள்) சீர்நிலைக்குரிய எழுத்து ஐந்தெழுத்தின் மிகாது; இது நேர் இறுதியாவதாம். நிரையிறுதியாகவரின் அது வஞ்சிச்

சீர்க்காம். எனவே மற்றைப் பாடல்களுக்கு ஐந்தெழுத்துச் சீரேயுரியவாம்.

எனவே இருபது எழுத்தே நாற்சீரடிக்கு எல்லை. வஞ்சியடி முச்சீரே எல்லையாக வருதலின் பதினெட்டெழுத்தளவில் ஆம். இருசீரடியாயின் பன்னிரண்டெழுத்து வஞ்சிக்கு எல்லையாம்.

### சீர்மரபு

350. எழுத்தள வெஞ்சினுஞ் சீர்நிலை தானே
குன்றலும் மிகுதலும் இல்லென மொழிப. (41)

ஆ. மொ. இல.,

Even when the limit of letters is exceeded they say - the number of feet (sirs) is neither increased nor decreased.

## இளம்பூரணர்

350. எழுத்தள வெஞ்சினுஞ்............மொழிப.

இதுவுஞ் சீர்க்குரியதோர் மரபு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) ஈண்டோதப்பட்ட அடிகள் பலதொடுக்கும் வழி ஓரடிக் கோரடி எழுத்தளவு குறைந்துவரினுஞ் சீர்நிலை நான்கின் இழிதலும் மிகுதலு மில்லை என்றவாறு. (41)

## பேராசிரியர்

355. எழுத்தள வெஞ்சினுஞ்........... மொழிப.

இது, மேற்கூறிய சீரெல்லாவற்றிற்கும் பொதுவிதி.

இதன் பொருள் :- ஒரு சீர் இரண்டு முதற் பதினெட்டு ஈறாகப் பல நிலைமைப்பட்டுப் பல் சீராகிச் செய்யுளுள் வருமாற் றாற் றத்தமெழுத்துக் குறைந்தும் மிகுந்தும் அளவிறப்பினும் அவ்வச்சீரெனப்பட்டுச் செய்யுளுள் ஒத்தவோசை இருவகையும் ஒரு தன்மையவேயாகச் சுருங்கிற்றும் பெருகிற்றுமில்லை என்றவாறு.

எனவே, அவை எழுத்தெண்ணி அடிவகுக்கு மாற்றான் இரு நிலைமையும், இரண்டிறந்த பல நிலைமையும் படுவனபடும். அவ்விடத்து எழுத்திற்கல்லது சுருக்கப் பெருக்கமில்லையென்பதூஉங் கூறியவாறாயிற்று. 'தான்' என மிகுத்துச்

சொல்லியவதனான், அசைச்சீர்க்கும் அவ்வாறே கொள்ளப்படும். 'தளைவகைக்குரிய' என மேலோதி வந்த சீர்பதினாறும் அசைச் சீரிரண்டுமெனப் பதினெட்டினுள்ளும் இயற்சீர் பத்தினுட் புளிமா வும் வெண்சீர் நான்குமென ஐந்தும் ஒரு நிலைமையவேயாம். ஒழிந்த சீர் பதின்மூன்றும் இருநிலைமையெய்தி இருபத்தாறாம். ஆகச் சீர் முப்பத்தொன்றாமென்பது. அவற்றுக்குதாரணம்:

நுந்தை, தேமா; ஞாயிறு, பாதிரி; வலியது, கணவிரி; போதுபூ, மேவுசீர்; போரேறு, நன்னாணு; பூமருது, காருருமு; கடியாறு, பெருநாணு; விறகுதீ, உருமுத்தீ; மழகளிறு, நரையுருமு என ஒன்பதியற்சீரும் இருநிலைமையாற் பதினெட்டாயின. புளிமா வென்னும் இயற்சீர் ஒருநிலைமைத்தேயாம். அல்லாதார் வரகு என்பதனுட் குற்றுகரங் களைந்து புளிமாவிற்கு இரு நிலைமை காட்டுப; அங்ஙனங் காட்டின் வரகென்பது போலப் புளிமாவும் ஓரசையாகவானும், புளிமாவென்பது போல வரகு என்பது இரண்டசையாகவானுங் கோடல் வேண்டும்; கொள்ளவே இச்சூத்திரத்தினொடு மாறுகோளா மென்பது; என்னை?

"எழுத்தள வெஞ்சினுஞ் சீர்நிலை தானே
குன்றலு மிகுதலு மில்லென மொழிப." (355)

என்றானாகலின் என்பது.

நீடுகொடி நாணுத்தளை எனவும், உரறுபுலி விரவுகொடி எனவும் நிரையீற்றாசிரியவுரிச்சீ ரிரண்டும் இவ்விரண்டாகி இரு நிலைமை யெய்தியவாறு[1]

இனி, வெண்சீர் நான்கும் ஒருநிலைமையவேயாம்.

வண்டு, மின்னு, வரகு, அரவு என அசைச்சீரிரண்டும் நான்காய் இருநிலைமையவேயாம்.

இவ்வாற்றான் இவையெல்லாந் தொகுப்ப, இயற்சீர் பத்தொன்பதும், ஆசிரியவுரிச்சீர் நான்கும், அசைச்சீர் நான்கும், வெண்சீர் நான்கும் என முப்பத்தொன்றாயின வென்றார்க்கு,

"மாவருவாய், புலிவருவாய்" என்பவற்றையும்.

---

1. நீடு-நேர்பு. குற்றுகரம். நாணு - நேர்பு-முற்றுகரம். உரறு-நிரைபு-குற்றுகரம்; விரவு-நிரைபு-முற்றுகரம்.

''ஞாயிறுகொல், வலியதுகொல்.''

எனக் குற்றுகரம்பெய்து இருநிலைமை கொள்ளாமோ வெனில்,— கொள்ளாம்; அவை,

''எல்லா விறுதியு முகர நிறையும்.''

(தொல்-எழுத்-408)

என்பதனான் முற்றுகரமேயாமென்பது. இனி, முதற்கணின்ற குற்றுகரமுங் கொண்டு இருநிலைமை கொள்ளாம்; என்னை? நுந்தையென்பது ஈரசையாகலானும் அதனை நீ நுந்தையென வேறோர் சொற்பெய்து வெண்சீரெனக் காட்டின், அது 'வந்து நின்றது' என்றதுபோலச் சீர்வகையான் வேறோர் சொல்லா மாகவே அது முற்றுகரமாகலானுமென விடுக்க வென்றார்க்குப் போதுபூ என்பதூஉம் இருநிலைமைத் தாகாதாம் பிறவெனின்,— அற்றன்று;

'சேற்றுக்கால், யாட்டுத்தாள், வட்டுப்போர்.'

எனப் பலவும் வருமாகலின் அஃது இருநிலைமைத்தேயா மென்பது. இனி, வஞ்சியுரிச்சீர்க்கும் இடைநின்ற குற்றுகரங் களை வன்றொடராக வருவித்துக்கொள்க. இனிச், சீரிறுதிக் குற்றுகரங்கள் நிறையாது நிற்றலும் உடையவென்பது,

''சீரியைந் திற்றது சீரெனப் படுமே.'' (324)
என்றவழிக் கூறியவாற்றா னறிக.

இனிச் சூத்திரம் வரையாது கூறினமையின் அறுபது வஞ்சி யுரிச்சீருள்ளும் இருபத்து நான்குசீர் இருநிலைமையாகவும், இருபத்தெட்டுச்சீர் நான்கு நிலைமையாகவும், எட்டுச்சீர் எட்டு நிலைமையாகவுங் கொள்ளப்படும்; அலற்றுள்,

இருநிலைமைப்படுவன நேரீற்றுச்சீரெட்டு, நிரையீற்றுச் சீரெட்டு, நேர்பீற்றுச்சீர் நான்கு, நிரைபீற்றுச்சீர் நான்கு என இருபத்து நான்கு வஞ்சியுரிச்சீராம்.

அவை:-

| | | |
|---|---|---|
| மாபோகுவாய் | புலிபோகுவாய் | |
| மாவழங்குவாய் | புலிவருவாய் | |
| பாம்பு சேர்வாய் | களிறு சேர்வாய் | |
| பாம்பு வருவாய் | களிறு வருவாய் | எ-ம். |
| மாசேர்சுரம் | புலிசேர்சுரம் | |
| மாவருசுரம் | புலிவரு சுரம் | |

| | | |
|---|---|---|
| மாபோகுசுரம் | புலிபோகுசுரம் | |
| மாவழங்குசுரம் | புலிவழங்குசுரம் | எ-ம், |
| மாசேர்காடு | புலிசேர்காடு | |
| மாவருகாடு | புலிவருகாடு | எ-ம், |
| மாசேர் கடறு | புலிசேர்கடறு | |
| மாவருகடறு | புலிவருகடறு எனவும் வரும். | |

இவ்விருபத்து நான்கும் இருநிலைமையால் நாற்பத்தெட்டாமென்பது.

இனி, நான்கு நிலைமைப்படுஞ்சீர் இருபத்தெட்டும் வருமாறு:

| | | |
|---|---|---|
| பாம்புபோகுவாய் | களிறுபோகுவாய் | |
| பாம்பு வழங்குவாய் | களிறு வழங்குவாய் | எ-ம், |
| பாம்பு சேர் சுரம் | பாம்பு போகுசுரம் | |
| பாம்பு வருசுரம் | பாம்பு வழங்குசுரம் | எ-ம், |
| களிறு சேர்சுரம் | களிறு போகுசுரம் | |
| களிறு வரு சுரம் | களிறு வழங்குசுரம் | எ-ம், |
| மாபோகுகாடு | புலி போகுகாடு | |
| மா வழங்குகாடு | புலி வழங்குகாடு | எ-ம், |
| பாம்பு சேர்காடு | களிறு சேர்காடு | |
| பாம்பு வருகாடு | களிறு வருகாடு | எ-ம், |
| மாபோகு கடறு | புலி போகுகடறு | |
| மாவழங்கு கடறு | புலி வழங்குகடறு | எ-ம், |
| பாம்பு சேர் கடறு | களிறுசேர்கடறு | |
| பாம்பு வரு கடறு | களிறுவருகடறு | எ-ம் வரும். |

இவற்றை,

"பாம்பு போகுவாய், பாம்பு மன்னுவாய்.
மின்னுப் போகுவாய், மின்னுக்கோலுவாய்."

என, ஒன்று நான்காக வாய்பாடு கொடுத்து ஒட்டியுணர்க.

இவற்றுள், உரியசை முதற்கணின்ற நிரையீற்று நான்கனையும் ஒன்று நான்கு செய்யுங்கால்,

"பாம்பு சேர்சுரம், பாம்பு சேர்வது,
மின்னுச் சேர்சுரம், மின்னுச்சேர்வது."

என்றாற்போல வெவ்வேறு வாய்பாடு கொடுத்துரைக்க இவை யிருபத்தெட்டும் விரிப்ப நூற்றொருபத்திரண்டு வஞ்சியுரிச் சீராம்.

இனி, எட்டு நிலைமைப்படுஞ்சீர் எட்டுமாவன:

| | | |
|---|---|---|
| பாம்பு போகுகாடு | களிறு போகுகாடு | |
| பாம்பு வழங்குகாடு | களிறு வழங்கு காடு | எ-ம், |
| பாம்பு போகுகடறு | களிறு போகுகடறு | |
| பாம்பு வழங்குகடறு | களிறு வழங்குகடறு. | |

எனவும் வரும்.

இவை மும்மூன்று உரியசையுடைமையின் முதற்கணின்ற உரியசையிரண்டும் நான்கு நிலைமை எய்தும், பின்னர் நின்ற உரியசையொன்றனை இருநிலைமை யாக்கி அவற்றோடு முன்னர் நின்ற நான்கினையும் வேறு வேறு கூட்ட எட்டாமென்பது. உதாரணம்:

| | |
|---|---|
| பாம்பு போகுகாடு | பாம்பு போகுகாவு |
| மின்னுப் போகுகாடு | மின்னுப் போகுகாவு |
| பாம்பு மன்னுகாடு | பாம்பு மன்னுகாவு |
| மின்னு மன்னுகாடு | மின்னு மன்னுகாவு |

என வரும், இவ்வாறே ஒழிந்தசீர் ஏழனையும் வெவ்வேறு வாய்பாடு கொடுத்துரைக்க அறுபத்து நான்கு வஞ்சியுரிச்சீராம்.

இவ்வாற்றான் இருநிலைமையும் நான்கு நிலைமையும் எட்டு நிலைமையும்பட்ட சீரெல்லாந் தொகுப்ப வஞ்சியுரிச்சீர் இருநூற்றிருபத்து நான்கெனப்படும். இவற்றுள் ஏழெழுத்தும் எட்டெழுத்தும் ஒன்பதெழுத்தும் பெற்றசீர் இருபத்து மூன்றுள. அவை நேர்நிலை வஞ்சிக்காகாவென்பது.

"உறழ்நிலை யிலவே வஞ்சிக்கு." (369)

என்புழிச் சொல்லுதும்.

இனி, ஆசிரியவுரிச்சீர் நான்கும் ஒன்று நான்கு நிலைமைப் படுமென்பதூஉம் ஈண்டடங்கும். நீடு கொடி குளிறு புலி என்பன இருநிலைமைப்படும் என்பது கூறினாமென்றார்க்கு அவற்றை

இருநிலைமை யென்பதென்னை? நீடு கொடி நீடுவது எனவும், நாணுத்தளை நாணுவது எனவும் ஒன்று நான்காம் பிறவெனின், - அற்றன்று; நீடுவது (213) என்பதனை அலகு வைக்குங்கால்

''அசையுஞ் சீரு மிசையொடு சேர்த்தி.'' (321)

என்பதனான், அவ்வச்சீராய் இசையாவாகலிற் பூமருது (257) என்னுஞ் சீராக வைக்கப்படுமாகலானென்பது. (43)

## நச்சினார்க்கினியர்

43. எழுத்தள (வு)........ மொழிப.

இது முதற்கூறிய சீர்கட்கெல்லாம் பொதுவிதி.

(இ-ள்) எழுத்தளவு எஞ்சினும்—முற்கூறிய சீர்களெல்லாம் கட்டளையடிக்குத் தத்தம் எழுத்துக் குறைந்தும் மிக்கும் தம் அளவு இறந்துவரினும், சீர்நிலைதானே குன்றலும் மிகுதியும் இல்லென மொழிப- அவை அவ்வச் சீரெனவேபட்டுச்செய்யுளுள் அவ்வப் பாக்களின் ஓசையை உணர்த்தி, ஒரு தன்மையவாயே நிற்கும், சுருக்கப்பெருக்கம் இன்றென்று கூறுவர் ஆசிரியர் எ-று,

எனவே, அவை கட்டளையடிக்கு எழுத்தெண்ணி அடி வகுக்குமாற்றான், இயற்சீரும் உரிச்சீரும் ஒருநிலைமைப்படுதலும். வஞ்சிச்சீர் பலநிலைமைப்படுதலும் உடையவேனும், அவ்வெழுத்திற்கல்லது சீர்க்குச் சுருக்கம் பெருக்கமின்றென்று கூறியவாறாயிற்று.

தானே என்றதனான் அசைச் சீர்க்கும் இருநிலைமை கொள்க.

அவை இருநிலைமைப்படுமாறு:-

''இயலசை மயங்கிய வியற்சீர் நான்கனுட்
புளிமா வொழிந்த வியற்சீர் மூன்று
நுந்தை தேமா ஞாயிறு பாதிரி
வலியது கணவிரி யெனவிரு வகையா
யிருமூன் றாக வியம்பினர் புலவர்.''

நுந்தை—ஓரெழுத்துத் தேமா, ஞாயிறு—ஈரெழுத்துப் பாதிரி, வலியது—மூவெழுத்துக் கணவிரி; இவற்றுட் குற்றுகரம் எழுத்தெண்ணப் பெறாமையான் அலகு பெறுதலின், இருநிலைமை எய்திற்று.

உரியசை மயங்கின இயற்சீராறும், போதுபூ, மேவுசீர், விறகுதீ உருமுத்தீ, போரேறு, நன்னாணு, பூமருது, காருருமு, மழகளிறு, நரையுருமு, கடியாறு, பெருநாண் என்று ஈருகரத்தான் ஈராறாகும். இவை குற்றுகர முற்றுகரங்களான் இருநிலைமை எய்தின.

இருவகை இயற்சீராய பதினெட்டு, புளிமாவோடு பத்தொன்ப தாகும்; ஆக இயற்சீர் பத்தொன்பது. இவற்றுள்,

'நுந்தை தேமா புளிமா நேரீறு
மன்றி வந்த ஈரென் சீராய்ப்
பாதிரி கணவிரி யாகிநின் றவையு
ளொன்றி வந்தன வாசிரி யத்தளை
யொன்றா தனவே வெண்டளை யாகும்.'

'முன்னிரை யீற்ற வாசிரிய வுரிச்சீர்
நீடு கொடியே நாணுத் தளையே
உரறு புலியே விரவு கொடியென
ஈருக ரத்தா னீரிரண் டாகிப்
பாதிரி கணவிரி போலத் தட்கும்.'

என உரிச்சீர்கள் இருநிலைமை எய்தின.

'வண்டு மின்னும் வரகு மாவுமெனக்
கண்டஈ ருகர வசைச்சீர் நான்குந்
தேமா புளியா வாகித் தட்கும்.'

என அசைச்சீரும் இருநிலைமை எய்தின. வெண்சீர் நான்கும் ஒருநிலைமையவேயாம்.

'வெண்சீர் நான்குந் தம்முள் தாம்வந்து
தட்ட வெண்டளை கட்டளைக் காகா
சீர்வகை யான்வருங் கலிக்கும் வெள்ளைக்கு
மாகு மென்ப வறிந்திசி னோரே.'

'வெண்சீர் தம்முண் மாறாங் கலித்தளை
கட்டளைக் கலிக்கென் றொட்டிய தாகு
மதனோ டியற்சீர் ஒன்றி வரினது
கட்டளை வெள்ளைக் காகு மென்ப.'

'இயற்சீ ரசைச்சீ ருரிச்சீர்வெண் சீரென
மயக்கற வகுத்த சீர்க ளெல்லா

மொன்றுதலை யிட்ட வொருமுப் பஃதே.'
ஆக நால்வகைச் சீரும் முப்பத்தொன்று.

இனி, வஞ்சியுரிச்சீர் பல நிலைமைப்படுமாறு 'குறளடி முதலா (57) என்னுஞ் சூத்திரத்துட் காட்டுதும். (43)

## சிவலிங்கனார்

எழுத்தளவெஞ்................ மொழிப

(இ-ள்) பாக்களில் அடிகள் பல தொடுக்கும் வழி ஓரடிக்கு ஓரடி எழுத்துகள் குறையினும் (உம்மையால் மிகுமாயினும்) சீர்நிலை குறைதலும் மிகுதலும் இல்லை என மொழிப, எ-று,

உ-ம் . போந்து போந்து சார்ந்து சார்ந்து
தேர்ந்து தேர்ந்து மூசி நேர்ந்து

இவ்வடிகளில் முதலடியை நோக்கப் பின்னடி எழுத் தெண்ணிக்கையில் மிக்கதாயினும் சீர்நிலையில் நான்கேயாவது காண்க. இப்படியே பிறவும்.

### எண்ணப்படா எழுத்து

351. உயிரில் லெழுத்தும் எண்ணப் படாஅ
உயிர்த்திறம் இயக்கம் இன்மை யான (42)

ஆ. மொ. இல.,

The letter that has no life (Consonant) is not counted for it has no movement of action.

## இளம்பூரணர்

351. உயிரில் லெழுத்தும்.............. யான

என்-னின், மேற் சொல்லப்பட்ட அடிக்குரிய எழுத்து வரையறை உணர்த்துதல் நுதலிற்று.

(இ ள்) உயிரில்லாத எழுத்தும் எண்ணப்படா, உயிர்போல இயக்க மின்மையான் என்றவாறு.

உம்மை எச்சவும்மை யாதலாற் குறுகிய வுயிர்த்தாகிய குற்றியலிகரமும் குற்றியலுகரமும் எண்ணப்படா என்று கொள்க.

எனவே எண்ணப்படுவன உயிரும் உயிர்மெய்யுமாகி ஒரு மாத்திரையிற் குறையாதன என்று கொள்ளப்படும்[1] (42)

## பேராசிரியர்

356. உயிரில் லெழுத்து............. யான.

இது, மேல் எழுத்தெண்ணிச் சீர்வகுத்த முறையானே ஒற்றும் ஆய்தமுங் ஒருங்கெண்ணப்படுதலெய்தினவற்றை விலக்கினவாறு.

(இ-ள்): உயிரில் எழுத்தும் எண்ணப்படா அ-தத்தம் ஓசை இனிது விளங்கத் தத்தந் தன்மையான் ஒலித் தற்றொழிலில்லாத எழுத்துக்கள் ஈண்டு எண்ணப்படா; உயிர்த்திறம் இயக்கம் இன்மையான-அங்ஙனம் எண்ணப்படாதவும் எழுத்தெனப் படுதலிற் சிறிது நாப்புடை பெயருந் துணையான் ஒலித்தலும் மொழிசார்ந்து ஒலித்தலும் உடையவன்றே? அங்ஙனம் ஒருவாற்றான் உயிருக்குந் திறமுடையவாயினும் அவ்வுயிர்க்குந் திறம் ஈண்டுச் செய்யுட்பாற் படுங்கால் உபகாரப்பட இயங்கு மாறிலவாகலின் எண்ணப்படா என்றவாறு.

மேற் சீர்தளை இருநிலைமைப்படுத்த அதிகாரத்தான் ஒற்றொடு குற்றுகரமுமே ஈண்டு விலக்கினானென்பது இச் சூத்திரம் வலித்ததாயிற்று;[1]

"ஒற்றெழுத் தியற்றே குற்றிய லிகரம்." (320)

என மேற்கூறினானாதலினென்பது.[2]

"பேர்ந்து சென்று சார்ந்து சார்ந்து." (ப.-997)

என ஒற்றுங் குற்றுகரமும் ஒழித்து எண்ணப்பட்டமையினால் எழுத்தடிவாயிற்று.[3] பிறவும் அன்ன. (44)

---

1. ஆய்தம் மெய்யெனப்படுமாதலின் அதுவும் எண்ணப் படாது எனக்கொள்க. நச்சினார்க்கினியர் உரை பார்க்க.

1, வலித்தாயிற்று-வற்புறுத்தியதாயிற்று.

2, குற்றியலிகரம் மேல் ஒற்றெழுத்தியற்றே எனக் கூறி னான் ஆதலின் இச்சூத்திரம் ஒற்றும் குற்றுகரமுமே விலக்கினான் என்பது.

3, போ. சே. சா. சா. என நாலெழுத்து வந்தன.

**நச்சினார்க்கினியர்**

44. உயிரில் லெழுத்தும்............. யான.

இஃது எய்தியது விலக்கிற்று.

(இ-ள்): உயிரில் எழுத்தும் எண்ணப்படாஅ - ஒற்றும் ஆய்தமும் குற்றுகரமும் எழுத்தெனப் பெயர் கூறினாரேனும் எழுத்தாக எண்ணப்படா; என்னை? உயிர்த்திறம் இயக்கம் இன்மையான-அவை தத்தம் ஓசை இனிது விளங்க ஒலித்தற்குக் கூறிய எண்வகை நிலத்தினும் விளங்க இயங்காமையின் எ-று.

என்றது, எழுத்தெண்ணுமிடத்து அவை ஒழித்தெண்ணுக என்றவாறு. இது கட்டளையடிக்கு 'பேர்ந்து... சென்று' என்பத னுள் அவையொழித்து எண்ணப்பட்டது. பின்னுள்ளோர் கொண்ட கட்டளைக் கலித்துறை, சந்தம் தாண்டகங்கட்கும் இவ்வாறெழுத்தெண்ணுதல் வேண்டுமென்றுணர்க. (44)

**சிவலிங்கனார்**

உயிரில்............. யான.

இ-ள்): உயிரும் உயிரேறிய ஒற்றும் (உயிர்மெய்யும்) அல்லாத எழுத்துகளான மெய்யெழுத்தும், குற்றியலிகரமும் குற்றியலுகரமும் ஆய்தமும் ஆகிய எழுத்துகள் அடிவரையில் எண்ணப்படா, எ-று.

## வஞ்சியடி

352. வஞ்சி அடியே இருசீர்த் தாகும். (43)

ஆ. மொ. இல..

The line of 'Vanji' is of two feet (Sirs)

பி. இ. நூ,

யா. வி. 26

குறளடி.........வஞ்சி நடக்கும்.

யா. கா. 22.

வஞ்சியென்னும் ஒண்பா அடி குறள்.

இல. வி. 721.

வஞ்சி குறள் கடியும்.

## இளம்பூரணர்

352. வஞ்சி அடியே........தாகும்.

என்-னின். வெண்பா ஆசிரியங் கலிக்குரித்தாகிய அடியிலக் கணம் கூறினார். இனி வஞ்சிப்பாவிற் குரிய அடிவரையறை உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) வஞ்சிப்பாவிற்குரிய அடி இரண்டு சீரையுடைத்து என்றவாறு. (43)

## பேராசிரியர்

357. வஞ்சி யடியே........தாகும்.

இது.

''நேர்நிலை வஞ்சிக் காறு மாகும்.'' (354) எனவும்.

''தன்சீ ரெழுத்தின் சின்மை மூன்றே.'' (358) எனவும்

எழுத்தெண்ணி வரையறுக்கப்பட்ட சீர் இரண்டு கொண்டது வஞ்சியடி யென்பதுணர்த்துதல் நுதலிற்று,

இதன்பொருள் : குறளடியே வரையறையுடைய வஞ்சியடி யெனப்படுவது என்றவாறு

ஏகாரம், பிரிநிலை; என்னை? சிறப்புடை வஞ்சியடியைப் பிரித்து வாங்கிக் கொண்டமையின்; எனவே, முச்சீரான்வரும் வஞ்சியடியும் உள; அவை. கட்டளையடியல்லவென்றானாயிற்று. இங்ஙனங் கூறவே வஞ்சியடியும் ஒருவாற்றான் உறழ்ந்து கொள்ள வழிகாட்டியவாறு. இவ்வாறு கூறாக்கால்[1] மூன்று பாவிற்குங் கூறினான் இதற்குக் கூறியதிலனெனக் குன்றக்கூற (663) லென்னுங் குற்றமாமென்பது; இதனை மேல்,

''குறளடி முதலா வளவடி காறு
முறழ்நிலை யிலவே வஞ்சிக் கென்ப.'' (369)

என உறழ்நிலை ஒருவாற்றானே கூறுமென்பது. அச்சூத்திரத்தான் முச்சீரும் உறழ்பவென்று கொள்பவெனின் - அஃதே கருத்தாயின் இருசீரும் முச்சீரும் வஞ்சிக் கென்பவென்று உடனோதுவான்மன் ஆசிரியனென் மறுக்க. (45)

---

1. இங்ஙனம் கூறவே.........வழிகாட்டியவாறு என்று கூறவே.

## நச்சினார்க்கினியர்

45. வஞ்சி யடியே.........தாகும்.

இஃது அதிகாரத்தான் நின்ற வஞ்சியடியாமாறு கூறு கின்றது.

(இ-ள்) முற்கூறிய சமநிலை வஞ்சியினடி இருசீரை யுடைத் தாகி வரும் எ-று.

ஏகாரம் பிரிநிலை, சிறப்பில்லா வியநிலை வஞ்சியினின்றும்[1] பிரித்தலின். வியநிலை வஞ்சிக்குக் கட்டளை யின்று. இங்ஙனம் கூறவே, வஞ்சியடியும் ஒருவாற்றான் உறழப்படுமாயிற்று. அது 'குறளடி முதலா' (57) என்பதனுட் காட்டுதும். இங்ஙனம் வஞ்சி யுறழாவிடிற் 'குன்றக் கூறலென்னும்' குற்றந் தங்கும், (45)

## சிவலிங்கனார்

வஞ்சியடி.........சீர்த்தாகும்.

இ-ள் : வஞ்சியடி இருசீரடியாகும், எ-று.

முச்சீரான்வரும் என்பது பின்னர்க் கூறப்படும்.

### வஞ்சியடிச்சீரின் சிறுமை

353. தன்சீர் எழுத்தின் சிறுமை மூன்றே. (44)

ஆ. மொ. இல.,

The lower limit of number of letters in it is three.

## இளம்பூரணர்

353. தனசீர் எழுத்தின்....... மூன்றே

என்-னின். வஞ்சியுரிச்சீர் குறைந்தநிலை உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) வஞ்சியுரிச்சீரின் சிறுமை மூன்றெழுத்தென்று கொள்ளப்படும்.

---

1. வியநிலை வஞ்சி—முச்சீர் அடியான் வரும் வஞ்சிப்பா.

1. சின்மை — பேரா. நச். பாடம்,

எனவே, மூன்றெழுத்தும் நான்கெழுத்தும் ஐந்தெழுத்தும் ஆறெழுத்தும் வஞ்சியுரிச்சீ ரெழுத்தென்றவாறாம். (44)

## பேராசிரியர்

358. தன்சீ ரெழுத்தின்.........மூன்றே.

இது மேற்கூறிய வஞ்சியடிக்கண்வரும் இருசீர்க்கும் பெருமைக்கெல்லை.

''நேர்நிலை வஞ்சிக் காறு மாகும்.'' (354)

என்று கூறினான்; ஈண்டு அவை மூன்றெழுத்திற் சுருங்காவெனச் சுருக்கத்திற்கு எல்லையுணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்:- வஞ்சியடிச்சீர் மூன்றெழுத்துச் சிறுமைபெறும் என்றவாறு.

சிறுமைக்கெல்லை வஞ்சிச்சீர்க்கல்லது இன்மையின்இதனை,

''வஞ்சி யடியே யிருசீர்த் தாகும்.'' (357)

என்றதன்பின் வைத்தானென்பது. இது முச்சீர்க்குரித்தன்மையானும் மூன்றெழுத்தி னிழிந்துவரும் வஞ்சியுரிச்சீர் பெரும்பான்மையும் முச்சீரடிக்கு உரிமையானும்[1] இதன் பின்,

''முச்சீ ரானும் வருமிட னுடைத்து.'' (359)

என்றானென்பது.

''கொன்று கோடுநீடு
கொலைக் களிறுகடாம்''

என்புழி, இருசீரடி முதற்கண்[2] மூவெழுத்தான் வஞ்சி யுரிச்சீர் வந்தது. பிறவும் அன்ன. 'நுந்தை காடு' என ஈரெழுத்தானும் வஞ்சியுரிச்சீர் வந்தவாறு. (46)

---

1. இரு சீரடிவஞ்சிக்கு மூன்றெழுத்தின் குறைந்து வருதல் இல்லை.

2. கொன்றுகோடு நீடு — இதுமுதலடி கொலைக்களிறு கடாம்-இது இரண்டாமடி.

## நச்சினார்க்கினியர்

46. தன்சீ ரெழுத்தின்.........மூன்றே.

இது முன்னர்ச் சமநிலை வஞ்சிக்குப் பெருமைக் கெல்லை கூறினமையின் ஈண்டுச் சிறுமைக்கெல்லை கூறுகின்றது.

(இ-ள்) அவ்வஞ்சிச் சீருக்கு எழுத்தின் சிறுமை மூன்றே எ-று.

'தன்' என்றது முற்கூறிய வஞ்சியை.

எ-டு: 'கொண்டு கோடு நீடு, கொலைக்களிறு கடாஅய்' எனவரும்,

ஏகாரத்தானே மேல் வருகின்ற வியநிலை வஞ்சிக்காயின் மூவெழுத்தினிழிந்து ஈரெழுத்தானும் வருமென்று கொள்க; நுந்தைகாடு[1] என வரும். (46)

## சிவலிங்கனார்

தன்சீர்.........மூன்றே.

இ-ள்: வஞ்சிச்சீர்க்கு எழுத்தின் சிறுமை மூன்றே, எ-று.

இது குற்றியலுகரம் வரும்சீர் எனக் கோடல் சிறந்ததாம்.

உ-ம்: ''கொன்றுகோடு நீடு' கொலைக்களிறு கடாஅய்''.

இது முச்சீர் வஞ்சியடி. முதற்சீரில் குற்றுகரங்களையும் ஒற்றுக் களையும் நீக்கின் மூன்றெழுத்தேயுண்மை காண்க.

354. முச்சீ ரானும் வரும்இடன் உடைத்தே. (45)

ஆ. மொ இல.,

There is place where it will have three feet.

பி. இ. நூ.

யா. வி. 26.

சிந்தடி.........வஞ்சிநடக்கும்.

யா. கா-22.

வஞ்சியென்னும் ஒண்பாஅடி.........சிந்து என்றுரைப்ப.

---

1. தை, கா என இரண்டெழுத்து வந்தன. 'நு' குற்றிய லுகரம்

இல. வி. 721.

வஞ்சி........சிந்து அடியும்.

## இளம்பூரணர்

354. முச்சீரானும்..........உடைத்தே.

என்-னின். இதுவும் வஞ்சியடி யாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) வஞ்சியடி மூன்று சீரானும் வரும் இடனுடைத்து என்றவாறு.

எனவே வஞ்சியடி இருசீரடியானு முச்சீரடியானும் வரும் என்றவாறாம்.

உதாரணம்

'தூங்குகையான் ஓங்குநடைய
உறழ்மணியான் உயர்மருப்பின.' (புறம்-22)

இதனுள் மூன்றெழுத்து முதலாக ஆறெழுத்துக் காறுஞ்[1] சீர் வந்த வாறும் இருசீரடி யாயினவாறுங் காண்க.

'தொன்னலத்தின் புலம்பலைப்பத் தொடித்தோள்மேல்.'[2]
(யாப். வி. பக்-108)

எனவும் வரும். (45)

## பேராசிரியர்

359. முச்சீரானும்...........னுடைத்தே

இஃது, ஒழிந்த வியநிலை வஞ்சி கூறுகின்றது.

இதன்பொருள் :- வஞ்சியடி முச்சீரானும் வரப்பெறும் என்றவாறு.

'இடனுடைத்து' என்றதனான் இஃது உறழும் அடிக்கண்ணதன் றென்றவாறு. மற்று இருசீரடி வஞ்சிக்கும் இத்துணையென

---

1. தூ கையா, ஓநடைய, உறமணியா, உய மரு பின என எழுத்து மூன்று முதலாக வந்தமை காண்க.

2. இது முச்சீரடி.

அடிவிரியுமாறு கூறியதிலனாகலின் இதற்கே வரையறையின் றென்றது என்னையெனின், - இருசீரடிக்காயின் ஒருவாற்றான் உறழ்ச்சி கூறி வரையறுப்பதோராறு கூறினான், இதற்கு அன்னதூஉம் இன்றென்பது. மற்று உறழுமடி இல்வழி வஞ்சியடி இருசீர்த்தாகப் பெறாதோவெனின், - அதற்கன்றே முச்சீரானும் வருமென்று உம்மைகூறி இருசீரடியுந் தழீஇக்கொண்டு 'இடனு டைத்து' என வேறுபடுப்பானாயிற்றென்பது. இவ்விரண்டனையும் வஞ்சியடியென வரையாது கூறவே, அவற்றான் வேறுவேறு வருதலும் அவை மயங்கி வருதலுமுடைத்து வஞ்சிப் பாட்டென்ப தும் பெறுதும்.[1] இக்கருத்தானே அவற்றைக் குறளடி வஞ்சியென வும் சிந்தடி வஞ்சியெனவும் மயக்கடி வஞ்சியெனவுஞ் சொல்லுப. சிந்தடியான் வருதல் சிறுபான்மையெனக் கொள்க. (47)

## நச்சினார்க்கினியர்

47. முச்சீ ரானும்................ னுடைத்தே.

இஃது ஒழிந்த வியநிலை வஞ்சி கூறுகின்றது.

(இ-ள்) : வஞ்சியடி இருசீரானன்றிச் சிறுபான்மை முச் சீரானும் வரப்பெறும் எ-று.

'உடைத்து' என்றதனான் இது கட்டளையன்மையும் சான்றோர் செய்யுளுட் பயிலாமையும் பெறுதும். இரண்டனையும் வஞ்சியடி என வரையாது கூறவே இரண்டடியும் மயங்கிவந்த பாட்டை மயக்கடி வஞ்சியெனவும் வேறுவேறு வந்தனவற்றைக் குறளடி வஞ்சி, சிந்தடி வஞ்சியெனவுங் கூறிக் கொள்க.

(எ-டு): ''தோல்[1] துவைத்ம்பில் துளை தோன்றுவ.''

எனவும், (புறம்-4)

''நிலைக்கொராஅ இலக்கம் போன்றன.'' (ஷை; ஷை)

எனவும், குறளடியும் சிந்தடியும் வந்தமையான் இப்பாட்டு[2] மயக்கடி வஞ்சியாம்.

---

1. வேறு வேறாக வருதல் - இரு சீரடியானே வருதல், முச் சீரடியானே வருதல், இரண்டும் கலந்து வருதல் மயங்கி வருதலாம்.

1. தோல் என்பது அசை கூனாக வந்தது. அடுத்த சூத்திரம் பார்க்க.

2. இவை வந்த புறப்பாட்டு.

## சிவலிங்கனார்

முச்சீ ரானும்.............. உடைத்தே.

(இ-ள்): வஞ்சியடி இருசீரான் வருவதேயன்றி முச்சீரானும் வரும் இடம் உடையதாம், எ-று.

உ-ம்: முன்னர்க் காட்டப்பட்டது.

### அசை கூன் ஆதல்

355. அசை கூன் ஆகும் அவ்வயின் ஆன. (46)

ஆ. மொ. இல.

There the syllable will stand as 'kun' (detached foot).

பி, சி. நா.

யா. வி. 94.

அடிமுதல் பொருள் பெற வருவது தனிச் சொல்

வீ. 120.

பொருளோடு அடிமுதல் நிற்பது கூன்

இல. வி. 751.

அடிமுதற் பொருள்உற வருவது கூன்.

மு. வீ. யா. ஒழிபியல் 21.

அடிமுதற் கட்பாப் பொருளைத் தழுவி
தனியே நிற்பது கூனாம்.

## இளம்பூரணர்

355. அசை கூன்.............. ஆன.

என்-னின். மேற் சொல்லப்பட்ட வஞ்சியடிக்குரியதோர் மரபு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்): மேற் சொல்லப்பட்ட இருவகையடியினும் அசை கூனாகி வரும் என்றவாறு, (46)

பேராசிரியர்

360. அசைகூ................ வான.

இதுவும், அதற்கெய்தியதோர் விதி.

(இ-ள்): மேற்கூறிய வஞ்சியடி இரண்டன் கண்ணும் நான்கசையுங் கூனாகி வரப்பெறும் என்றவாறு.

எனவே, அடியெனப்பட்ட இருசீர்க்கும் முச்சீர்க்கும் அசை கூட்டிக் கொண்டு சொல்லப்படா வென்றவாறு. அவை:

''வாள் வலந்தர மறுப்பட்டன
செவ்வானத்து வனப்புப் போன்றன.'' (புறம்-4) எ-ம்,

''அடி அதர்சேர்தலி னகஞ்சிவந்தன.'' எனவும்,

''வண்டு, மலர்சேர்ந்து வரிபாடின.'' எனவும்,

''களிறு. கதவெறியாச் சிவந்துராய்
நுதிமழுங்கிய வெண்கோட்டா
னுயிருண்ணுங் கூற்றுப் போன்றன.'' (புறம்-4)

எனவும் முறையே நான்கசையுங் கூனாயின.[1]

இனி இடையும் இறுதியுங் கூனாமென்பொருமுளர். அது வஞ்சித்தூக்கு இரண்டு கொள்ள[2] வருமாயின் அமையுமென்பது. என்றார்க்கு, 'வாள் வலந்தர' என்பதனை ஒரு சீராகக் கோடுமெனின்,—'யாத்தசீர்' என்றதனான், வலந்தருதல் வாண் மேற் சென்று, வருகின்ற பயனிலை நின்று வற்றுமென்பது.[3] (47)

---

1. வாள், அடி, வண்டு, களிறு-இவை கூன் நேர், நிரை, நேர்பு, நிரைபு வாய்பாடுகள்.

2. வஞ்சித் தூக்கு இரண்டு-வஞ்சிச் சீர் ஓசையைத் தனித் தனியாகக் கொள்ளுதல்.

3. ''வாள்கள், போரில் வெற்றி தருமாறு குருதி படிந்தன வெல்லாம் செவ்வானத்தின் அழகு போன்றன.'' என்றால் வாள் எழுவாயாகவும் அதற்கேற்ப வனப்புப் போன்றன என்பது பயனிலையாகவும் அமையும். வாள் வலந்தர எனச் சேர்த்து விட்டால் அதாவது வாள்கள் போரில் வெற்றி தருமாறு என்றால் மாறுபட்டன யாவை என விளங்காமையான் வனப்புப் போன்றன யாவை என்பதும் விளங்காமல் எழுவாய் பயனிலை அமைய வில்லை.

## நச்சினார்க்கினியர்

48. அசைகூ னாகும்............... னான.

இதுவும் அதற்கெய்தியதோர் விதி.

(இ-ள்) அவ்விரண்டடியின் கண்ணும் நான்கசையும் கூனாய் வரப்பெறும் எ-று.

(எ-று) 'வாள், வலந்தர மறுப்பட்டன' (புறம்-4) இதனை வாள் வலந்தர என ஒருசீர் 'யாத்தசீர்' (செய்-1) என்றதனான் வலந்தருதல் வாள்மேற் சென்று மறுப்பட்டன என்னும் பயனிலை நின்று வற்றுதலின் வாள் என நேரசை கூனாயிற்று. 'அடி, யதர்சேறலி னகஞ்சி வந்தன' வண்டு. மலர் தேர்ந்து வரிபாடின' "களிறே, கதவெறியாச் சிவந்துராஅய்" (புறம்-4)என நான்கசை கூனாயிற்று; களிறே என்ற ஏகாரம் அசையாதலிற் பொருளின்றி நின்றது.[1]

இனி இச் சூத்திரம் பொதுவாய் நிற்றலின் தூக்கிரண்டு பட இடையினுங் கடையினுங் கூனாய் நிற்பனவுங் கொள்க.

(எ-டு) "கலங்கழா அலிற், றுறை, கலக்கா னாதே"

எனத் துறையென இடைக்கண் நிரையசை கூனாயிற்று.

"மாவழங்கலின் மயக்குற்றன, வழி"

இதனுள் வழியென இறுதிக் கண் நிரையசை கூனாயிற்று.

"தேரோடத் துகள் கெழுமின, தெருவு"

என இறுதிக் கண் நிரையசை கூனாயிற்று. ஒழிந்தன வந்துழிக் காண்க. (48)

## சிவலிங்கனார்

அசைகூ................ னான

இ-ள்: வஞ்சியின் இருவகையடிகளிலும் அசை கூனாக வருதலும் உண்டு, எ-று.

---

1. களிறு என்ற பாடமே நன்று. களிறே என்பது நிரைபு அசையாகாது.

உ-ம்: 'அடி, அதர்சேறலின் அகம்சிவந்தன'' அடிமுதலில் அடி எனும அசை கூனாயிற்று.

''கலங்கழா அலிற், றுறை, கலக்கா னாதே' — துறை' என்பது அடியிடையில் கூனாயிற்று.

''மாவழங்கலின் மயக்குற்றன, வழி''—வழி அடியிறுதியில் கூனாயிற்று.

## சீர் கூன் ஆதல்

356. சீர்கூன் ஆதல் நேரடிக் குரித்தே. (47)

ஆ. மொ. இல.,

The 'sir' (foot) will stand as 'kun' in the 'ner' line (of four feet).

## இளம்பூரணர்

356. சீர்கூன் ஆதல்............குரித்தே.

என்-னின். இதுவுங் கூனாகுமிடன் உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) சீர்முழுதுங் கூனாகிவருதல் அளவடிக் குரித்து என்றவாறு.

நேரடி என்றதனான் வெண்பாவினும் ஆசிரியத்தினுங் கலியினுங் கொள்ளப்படும்.

அவரே,

கேடில் விழுப்பொருள் தருமார் பாசிலை
வாடா வள்ளியங் காடிறந் தோரே.'' (குறுந்-216)

இது ஆசிரியத்திற் கூன்

''உதுக்காண், சுரந்தானா வண்மைச் சுவர்ணமாப் பூதன்
பரந்தானாப் பல்புகழ் பாடி - இரந்தான்மாட்
டின்மை அகல்வது போல இருள்நீங்க
மன்னும் அளிதேர் மழை.''

இது வெண்பாவிற்கூன்.

"நீயே வினைமாண் காழகம் வீங்கக் கட்டிப்
புனைமாண் வரீஇய அம்பு தெரிதியே," (கலித்-7)

இது கலிப்பாவிற் கூன். (47)

## பேராசிரியர்

901. சீர்கூனாத.............. குரித்தே

இஃது எய்தாதது எய்துவித்தது.

(இ-ள்): தளை வகையானும் சீர்வகையானும் நின்ற நேரடிக்காயின் அசை கூனாகாது சீர்கூனாகும் என்றவாறு,

"அவரே, கேடில் விழுப்பொரு டருமார் பாசிலை
வாடா வள்ளியங் காடிறந் தோரே." (குறுந்-216)

"உதுக்காண், சுரந்தானா வண்கைச் சுவரன்மாப் பூதன்"

எனவும்,

"அவனுந்தா, னேன லிதணத் தகிற்புகை யுண்டி யங்கும்." (கலி-39)

எனவும் இவை மூன்று பாவினும் அளவடிக்கட் சீர்கூனாயின வாறுஎன்றார்க்கு, நேர்பசை நிரைபசைகளையுஞ் சீர் நிலைபெறு மென்றானாகலின் அவற்றையும்,

---

1. அசைச்சீர் என்றே கூறுவன் என்பது.

2. உதாரணம்;

'உலகே,
முற்கொடுத்தார் பிற்கொளவும்
பிற்கொடுத்தார் முற்கொளவும்
உறுதிவழி யொழுகும்மே
அதனால்
நற்றிறம் நாடுக நன்மை
பற்றற யாவையும் பரிவறத் துறந்தே'

உலகே என்பது சீர்கூனாக வந்தது.

"சீர்கூனாத னேரடிக் குரித்தே."

என்றதனானே கொள்வலெனின், அசைச்சீரினை வாளாது சீரென்னானென்பது,

"சீர்நிலை தானே யைந்தெழுத் திறவாது." (353)

என்றவழிக் கூறியவதனான் அறிக. அசைச்சீரினை வாளாது சீரென்னாமைக்கு மேலைச் சூத்திரமும் இச்சூத்திரமுந்தாமே கரியாயின வென்பது. என்றார்க்கு, இவற்றையும் முதற் கண்ணே காட்டிய தென்னை? சூத்திரத்துள் அவ்வாறு வைத் துரைத்த தில்லையாலெனின்.-ஏற்புழிக் கோடலென்பதனான் 'முதற்கணின்று' என்பது கொள்ளப்படும். இக்கருத்தானே வஞ்சிப்பாவிற்கும் அவ்வாறு கொள்க. (49)

## நச்சினார்க்கினியர்

49. சீர்கூனாதல்............ குரித்தே.

இது மூன்று பாவிற்கும் உரிய அளவடிக்கு எய்தாதது எய்துவிக்கின்றது.

(இ-ள்) அளவடிக்குச் சீர் கூனாதல் உரித்து எ-று, இஃது இருவகையடிக்கும்[1] உரித்து:

(எ-டு) அவரே,

கேடில் விழுப்பொருள் தருமார் பாசிலை
வாடா வள்ளியங் காடிறந் தோரா," (குறு ந்-216)

'உதுக்காண்,

சுரந்தானா வண்கைச் சுவணமாப் பூதன்' (வெண்பா)

'உலகினுட்,

பெருந்தகையார் பெருந்தகைமை பிறழாவே பிறழினும்'

(கலிப்பா)

என்று மூன்று பாவினும் வந்தன.

---

1. இருவகையடி - கட்டளையடி, சீர்வகையடி.

ஏற்புழிக்கோடல் என்பதனால் அடிமுதற்கட் கோடும். தன்னினமுடித்தல் என்பதனான் வஞ்சிக்குங் கொள்க.

'உலகே, முதற்கொடுத்தார் பிற்கொளவும்' (வஞ்சிப்பா) எனவரும். (49)

**சிவலிங்கனார்**

சீர்கூன்............குரித்தே.

இ-ள் : சீர்கூனாக வருதல் நேரடிக்கேயுரித்தாம், எ-று

உ-ம் : உவக்காண்,

சுரந்தா னா வண்கைச் சுவணமாப் பூதன்''

(செய்யுளியல் உரைவளம் முற்றும்)

# சூத்திர நுவல்பொருள்

310. மாத்திரை முதலாகத்தோல் ஈறாகச் சொல்லப்பட்ட முப்பத்து நான்கு செய்யுள் உறுப்புகளைத் தொகுத்துக் கூறுகிறது.

311. மாத்திரை வகையும், எழுத்தியல் வகையும் பற்றிக் கூறுகிறது.

312. நேர், நிரைக்குரிய அசைகளைப் பற்றிக் கூறுகிறது.

313. நேர்பு, நிரைபு பற்றிக் கூறுகிறது.

314. இயலசை, உரியசை பற்றிக் கூறுகிறது.

315. தொடர்மொழிக்கண் மொழிசிதைந்தால் தனிக்குறில் நேரசை ஆகாது என்று கூறுகிறது.

316. குற்றியலிகரம் ஒற்றெழுத்து பற்றிக் கூறுகிறது.

317. முற்றியலுகரம் மொழிசிதைந்து நேர்பசை, நிரைபசை ஏற்காது என்று கூறுகிறது.

318. இருவகை உகரமும் ஒற்றோடு தோன்றித் தனியசையாகி நிற்கும் என்பதைக் கூறுகிறது.

319. அசையும், சீரையும் ஓசையோடு சேர்த்தலைக் கூறுகிறது.

320. ஈரசை, மூவசை சீர்களைப் பற்றிக் கூறுகிறது.

321. இயலசை மயக்கம், உரியசை மயக்கம் பற்றிக் கூறுகிறது.

322. நேர்பசை, நிரைபசை பின் நிரை இறுதியும் ஆசிரியவுரிச் சீராகும் என்று கூறுகிறது.

323. உரியசைப் பின்னர் நேரசை வரின் இயற்சீர் என்று கூறுகிறது.

324. இயலசை பின்னர் உரியசை வரின் நிரையசை வரும் என்று கூறுகிறது.

325. அளபெடை அசையாக நிற்கவும் பெறும் என்று கூறுகிறது,

326. ஒற்று அளபெடுத்துவரினும் அசை நிலையாக வரும் என்று கூறுகிறது.

327. வெண்பா உரிச்சீர் பற்றிக் கூறுகிறது.

328. வஞ்சிச்சீர் உரிச்சீர் பற்றிக் கூறுகிறது.

329. வஞ்சி உரிச்சீர்க்குரிய மரபு கூறுகிறது.

330. வஞ்சிப்பாவினுள் ஒழிந்த சீர்கள் வரும் என்று கூறுகிறது

331. வெண்பா உரிச்சீர்முன் ஆசிரிய உரிச்சீர் வெண்பா நிரை நில்லாது என்று கூறுகிறது.

332. கலிப்பாவிற்குரிய மரபை உணர்த்துகிறது.

333. கலிப்பாவிற்குரிய நேரீற்றியற்சீர் பற்றிக் கூறுகிறது.

334. வஞ்சிப்பாவிற்குரிய மரபைக் கூறுகிறது.

335. இசைநிலை, அசைநிலை எவ்வாறு சீர்நிலை பெறும் என்று கூறுகிறது.

336. ஓரசைச்சீர் தளையாமாறு உணர்த்துதல் கூறுகிறது.

337. வெண்சீரீற்றசை இயற்சீரசை நிரையீறு வரும் என்று கூறுகிறது.

338. ஆசிரியவடிக்கு வெண்பாவுரிச்சீர் என்று கூறுகிறது.

339. வஞ்சியுரிச்சீர் ஆசிரிய அடியுள் மயங்குதல் கூறுகிறது.

340. நான்கு சீர்களைக் கொண்டது அடி என்று கூறுகிறது

341. அடியென்று சொல்லப்படுவது தளையும் தொடையும் என்று கூறுகிறது:

342. அடிவரையறை இல்லாதவற்றை அசை என்று கொள்ளக் கூடாது என்று கூறுகிறது.

343. அடியின் சிறப்பைப் பாட்டு என்று கூறுகிறது.

344. குறளடி நாலெழுத்து முதல் ஆறெழுத்து வரை

345. சிந்தடி ஏழெழுத்து முதல் ஒன்பதெழுத்து வரை

346. அளவடி பத்தெழுத்து முதலாகப் பதினான்கெழுத்து வரை அளவு கூறுகிறது.

347. நெடிலடி பதினைந்தெழுத்து முதல் பதினேழெழுத்து வரை அளவு கூறுகிறது.

348. கழிநெடிலடி பதினெட்டெழுத்து முதல் இருபது வரை கூறுகிறது.

349. சீர்நிலை ஐந்தெழுத்திற்கு மேல் மிகாது நேர் இறுதி பெற்ற காலத்து என்றும் நிரையீற்று வஞ்சியுரிச்சீர் ஆறெழுத்து ஆகும் என்றும் கூறுகிறது.

350. எழுத்தளவு குன்றலும், மிகுதலும் பற்றிக் கூறுகிறது.

351. உயிரில்லாத எழுத்து எண்ணப்படா என்று கூறுகிறது.

352. வஞ்சிப்பா இரண்டு அடிச் சீர்களைக் கூறுகிறது.

353. வஞ்சியுரிச்சீரின் சிறுமை பற்றிக் கூறுகிறது

354. வஞ்சியடியைப்பற்றிக் கூறுகிறது.

355. வஞ்சிக்குரிய மரபு அசைகூன் பற்றிக் கூறுகிறது.

356. சீர் கூன் நேரடிக்கு உரியது என்று கூறுகிறது.

# சூத்திர முதற் குறிப்பு அகராதி


| | | எண் பக்க எண் |
|---|---|---|
| அசைகூன் ஆகும் | — | 216 |
| அசையுஞ்சீரும் | — | 77 |
| அடி இறந்து வருதல் | — | 181 |
| அடியின் சிறப்பே | — | 185 |
| அடியுள் ளளவே தளையோடு | — | 179 |
| அந்நிலை மருங்கின் | — | 172 |
| அவற்றுள் மாத்திரை | — | 28 |
| அளபெடை அசைநிலை | — | 106 |
| இசைநிலை நிறைய | — | 158 |
| இயலசை ஈற்றுமுன் | — | 103 |
| இயலசை மயக்கம் | — | 91 |
| இயலசை முதலியன | — | 56 |
| இயற்சீர் பாற்படுத் | — | 161 |
| இருவகை உகரமோ | — | 45 |
| இறுதிசீர் இறுதிமுன் | — | 123 |
| இன்சீ ரியைய வருகுவ | — | 171 |
| ஈரசை கொண்டு | — | 85 |
| உயிரில் லெழுத்தும் | — | 207 |
| எழுத்தள வெஞ்சினுஞ் | — | 200 |
| ஏழெழுத் தென்ப | — | 187 |
| ஒற்றள பெடுப்பினும் | — | 116 |
| ஒற்றெழுத்தியற்றே | — | 62 |
| கலித்தளை மருங்கிற் | — | 148 |
| கலித்தளை யடிவயின் | — | 151 |
| குற்றிய லுகரமும் | — | 74 |
| குறிலே நெடிலே | — | 39 |
| சீர்கூன் ஆதல் | — | 219 |
| சீர் நிலை தானே | — | 194 |
| தன்சீர் எழுத்தின் | — | 211 |
| தன்பா அல்வழித் | — | 140 |
| தனிக்குறில் முதலசை | — | 58 |
| நாலெழுத் தாதி | — | 187 |
| நாற்சீர் கொண்ட | — | 177 |
| நேரவண் நிற்பின் | — | 100 |
| பத்தெழுத் தென்ப | — | 187 |
| மாத்திரை யெழுத்தியல் | — | 9 |
| முச்சீரானும் வரும் | — | 213 |
| முற்றியலுகரமும் | — | 67 |
| முன்நிரை இறினும் | — | 97 |
| மூவாறெழுத்தே | — | 188 |
| மூவைந்தெழுத்தே | — | 188 |
| வஞ்சி அடியே | — | 209 |
| வஞ்சிச் சீரென | — | 127 |
| வஞ்சி மருங்கி | — | 142 |
| வஞ்சி மருங்கினும் | — | 153 |
| வெண்சீர் ஈற்றசை | — | 165 |
| வெண்பா உரிச்சீர் | — | 144 |

# சொல்லகராதி

## எண்-பாடல் எண்


அ

அசை — 310, 319
அசைகூடன் — 355
அசை நிலை — 325, 335
அடி — 310, 343, 352 338, 340, 341
அடி இறந்து — 342
அம்மை — 310
அல்வழி — 313, 329, 345
அழகு — 310
அளபெடை — 325

ஆ

ஆசிரிய உரிச்சீர் — 321, 331
ஆறு — 310
ஆறெழுத்து — 344

இ

இசை — 319
இசை நிலை — 335
இயக்கம் — 351
இயலசை — 314, 321, 324
இயற்சீர் — 323, 327, 333, 336
இயைபு — 310
இருசீர் — 352
இருவகை — 313
இழைபு — 310
இறந்து — 342
இறுதி — 327, 334,
இன்மை — 351

ஈ

ஈரசை — 320
ஈரெழுத்து — 345,347, 348
ஈற்றசை — 337
ஈற்றடி — 317
ஈற்று — 324

உ

உகரம் — 313
உயிர்த்திறம் — 351
உரிச்சீர் — 321. 327, 331, 339
உரியசை — 314, 321, 324
உறுப்பு — 310

எ

எச்சம் — 310
எட்டு — 310
எழுத்து — 310, 311

ஏ

ஏழு — 345

ஐ

ஐந்தெழுத்து — 349

ஒ

ஒருங்கு — 331
ஒற்றளபெடை — 326
ஒற்றெழுத்து — 316
ஒன்று — 339
ஒன்றுதல் — 339

க

கடை — 346
கலித்தளை — 332, 333
கழிநெடில் — 348

கா

காலம் — 310

கு

குற்றியலிகரம் — 316
குற்றியலுகரம் — 318
குறளடி — 344
குறில் — 312
குறில் நெடில் — 312
குறிலிணை — 312, 313
குன்றல் — 350

கூ

கூன் — 355

கை

கைகோள் — 310

சி

சிந்தடி — 345
சிறப்பு — 343
சிறுமை — 353

சீ

சீர் — 310, 319, 320
சீர் கூன் — 356
சீர்நிலை — 35, 349, 350

செ

செய்யுள் — 310

த

தளை — 336, 341
தன்மை — 336
தனிக்குறில் — 315

தி

திணை — 310

து

துறை — 310

தூ

தூக்கு — 310

தே

தேற்றம் — 345

தொ

தொடை — 310, 341
தொன்மை — 310

தோ

தோல் — 310

ந

நல்லிசை — 310

ஞா

நாலெழுத்து — 344, 346
நாற்சீர் — 340

நி

நிரை — 312
நிரைபு — 313
நிரையசை — 324, 337
நிலை — 339
நிற்றல் — 317

நெ

நெடில் — 312
நெடிலடி — 347

நே

நேர் — 312, 323
நேர்நிரை — 349
நேர்பு — 313
நேரடி — 331, 346 356,

நோ

நோக்கு — 310

ப

பத்தெழுத்து — 346

பா

பா — 310
பாட்டு — 343

பு

புலவர் — 310, 311
புலன் — 310

பொ

பொருள் — 310

# உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

தரமணி அஞ்சல், சென்னை-600 113

## அண்மை வெளியீடுகள்

| | | |
|---|---|---|
| A Grammar of Contemporary Literary Tamil | 80 | 00 |
| Cilappatikaram | 100 | 00 |
| காதம்பரி மூலமும் வசனமும் | 125 | 00 |
| Tani Pacura Togai | 30 | 00 |
| Dedication | 25 | 00 |
| Temple Chimes | 20 | 00 |
| Nalavanba | 45 | 00 |
| Tamil Heroic Poems | 40 | 00 |
| Six Long Poems from Sangam Tamil | 30 | 00 |
| Kurincippattu - Muttolayiram | 40 | 00 |
| Kuruntokai | 110 | 00 |
| Landscape and Poetry | 50 | 00 |
| Tamil cultre and Civilization | 60 | 00 |
| Tolkayplyam and Astadhyayi | 110 | 00 |
| தமிழக மகளிர் தொடக்ககாலம் முதல் ஆறாம் நூற்றாண்டு வரை | 50 | 00 |
| தடிவீர சுவாமி கதை, வன்னியராயன் கதை | 55 | 00 |
| சடத்தலம் | 40 | 00 |
| காத்தவராய நாடகம் | 30 | 00 |
| மதங்க சூளாமணி | 40 | 00 |
| பண்டைத் தமிழ் எழுத்துக்கள் | 32 | 00 |
| தமிழில் நவீன நாடகம் | 70 | 00 |
| இலக்கியத்தில் சோதிடம் | 65 | 00 |
| சங்கத்தமிழரின் வழிபாடும் சடங்குகளும் | 80 | 00 |
| தொல்காப்பியம்-புறத்திணையின் பகுதி 1 | 50 | 00 |
| ,, ,, பகுதி 2 | 65 | 00 |
| சோதிடவியல் | 70 | 00 |